வெளியீடு : 25 - 2 - 2004 Issued : 25 - 2 - 2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25, 2003 – தொகுதி 45 – எண் 1

**Friday the 25th April, 2003 – Volume 45 – No. 1**


...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ive Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009


[Price Rs. 3.00

25-4-2003

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Governor and Council of Ministers | vii-x |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xi-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 18) | 38-72 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) கோவை மாநகர், கணபதி பகுதி இரட்டைக் கொலைகள் | 72-73 |
| (ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் | 73-76 |
| (இ) ஸ்ரீவைகுண்டம்-விவசாய சங்கத் தலைவர் கொலை | 76 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| கடலூர் சிப்காட் வளாகம், இரசாயனத் தொழிற் சாலைகள் கழிவுகளால் மக்கள் பாதிப்பு | 77-81 |
| **4. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 82 |

பக்கங்கள்

5. **அரசினர் தீர்மானங்கள்**—

குழுக்களுக்குத் தேர்தல்—

| | |
|---|---|
| (அ) மதிப்பீட்டுக் குழு | 82 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 82-83 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு | 83-84 |
| (ஈ) உரிமைக் குழு | 84 |

6. **அறிவிப்பு**—

| | |
|---|---|
| குழுக்களுக்குத் தேர்தல்-கால அட்டவணை | 84-85 |

7. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| கோரிக்கை எண் 43 — சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 85-196 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 85-86,95-96 150-191 |
| திரு. என்.ஆர் ரங்கராஜன் | 96-103 |
| திரு. ப. ஆண்டிவேல் | 103-109 |
| திருமதி காசாம்பு பூமா... | 111-116 |
| *திருமதி செ. சுந்தரா...பாள் | 116-122 |
| செல்வி க. பாலபார... | 122-133 |
| *திரு. வே. கிருஷ்ணமூர்த்தி | 133-141 |
| திரு. எச். ராஜா | 141-150 |

8. **விதி 110-ன்கீழ் அறிக்கை**—

| | |
|---|---|
| தொழில் வளர்ச்சிக்கான முதலீட்டில் தமிழ்நாடு முதலிடம்—இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின் (C.M.I.E.) ஆய்வு அறிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 109-111 |

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 196-197

185-079
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

| | |
|---|---|
| 5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள். |
| 6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர். |
| 7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன். |
| 8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு. |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு. |
| 10. சமூக நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம். |
| 11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன். |
| 12. போக்குவரத்துத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள். |
| 13. மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல். |
| 14. வணிக வரித் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** வணிக வரிகள். |
| 15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:** கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல். |
| 16. உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடை பராமரிப்பு. |

| | |
|---|---|
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம். |
| 19. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு. |
| 20. வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டு வசதி, வீட்டுவசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 21. பால் வளத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு.எஸ். இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |
| 22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| 24. மீன்வளத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு.எம். ராதாகிருஷ்ணன்:** மீன்வளம். |
| 25. சுற்றுலாத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—*THIRU* P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. Minister for Finance | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Law and Information Technology | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | |
|---|---|
| 6. **Minister for Health and Education** | .. **The Hon. Thiru S. Semmalai:** Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare Archaeology. Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| 7. **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru A. Papasundaram:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| 8. **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| 9. **Minister for Agriculture** | .. **The Hon. Thiru R. Jeevanantham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 10. **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 11. **Minister for Adi-Dravidar Welfare** | .. **The Hon. Thiru C. Karuppasamy:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | |
|---|---|
| 12. **Minister for Transport** | .. **The Hon. Thiru R. Viswanathan:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| 13. **Minister for Electricity and Industries** | .. **The Hon. Thiru Nainar Nagenthran:** Electricity, Non-Conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| 14. **Minister for Commercial Taxes** | .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:** Commercial Taxes. |
| 15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** | .. **The Hon. Thiru P. Mohan:** Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| 16. **Minister for Local Administration** | .. **The Hon. Thiru M.C. Sampath:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 17. **Minister for Animal Husbandry** | .. **The Hon. Thiru P.V. Damodaran:** Animal Husbandry. |
| 18. **Minister for Rural Industries** | .. **The Hon. Thiru R. Vadivel:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 19. **Minister for Forests and Environment** | .. **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |

20. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

21. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

25. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள்*

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய, பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீராசுவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் (பொறுப்பு) |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) (தி) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் (சுயே) |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி (பாஜ) |
| 8. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி (சுயே) |
| 10. அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் (தி) |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் (தி) |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 (தி) |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு (பா) |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர் (தி)

23 ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்

24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி (பா)

25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்

26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி (கம்யூ)

27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை (காங்)

28 இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி

29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்

30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம் (காங்)

31. இராமச்சந்திரன், திரு.
கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர் (தி)

32. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை(செ.வ.)

33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.) (காங்)

34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)

35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)

36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர் (பா)

37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்

38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்

39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர் (பாஜ)

40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்

41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)

42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. இரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ) (த)

44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி (தி)

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர் (தி)

46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்

47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு (பா)

48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி

49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)

50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி (பா)

51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)(கம்யூ)

53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்

54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.) (காங்)

55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர் (மா)

56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம் (தி)

57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி

59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)

60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

61. கனகதாரா, செல்வி. சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)

62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)

63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம் (பா)

64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம் (பா)

65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2 (பா)
66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம் (பேத)
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.) (கம்யூ)
68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.) (பா)
69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர் (த)
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம் (பா)
71. கோதண்டராமன், திரு. ஜி. .. முதையூர்
72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர் (காங்)
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம் (பா)
74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.) (காங்)
76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம் (தி)
78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி (பா)
81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி (அஇபாபி)
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை



87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம் (தி)
89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். .. மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில் (தி)
92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.) (பா)
94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர் (காங்)
97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி (கம்யூ)
98. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம் (காங்)
100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர் (காங்)
104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர் (தி)
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர் (காங்)
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.) (த)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர் (காங்)
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி (காங்)
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.) (தி)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி (தி)



132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி (பா)
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராசன், திரு. வ.து. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு (மா)
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
144. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம் (தி)
145. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
146. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1 (தி)
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.) (தி)
149. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) (கம்யூ)
152. பழனிப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி (தி)

154. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
155. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
156. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
157. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.) (காங்)
158. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி (பா)
159. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி (காங்)
160. பாலசுப்ரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர் (காங்)
161. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
162. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல் (மா)
163. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
164. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
165. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை (தி)
166. புகழேந்தி, திரு. இ. .. கடலூர் (தி)
167. பூபதி, மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
168. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
169. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம் (தி)
171. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
172. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
173. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.) (காங்)
174. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)



175. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.) (மா)
176. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு (காங்)
177. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம் (தி)
178. மணி, திரு. டி. .. விளவங்கோடு (மா)
179. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம் (பா)
180. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை (பா)
181. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
182. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
183. மில்லர், திரு. அ. .. கூடலூர்
184. முரளிதரன், திரு. கே.வி. .. தளி (பாஜ)
185. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.) (பா)
186. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
187. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை (தி)
189. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
190 யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) (காங்)
191. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம் (தி)
192. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை (காங்)
193. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
194. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
195. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை

196. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்

197. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம் (காங்)

198. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி (காங்)

199. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். .. காரைக்குடி (பாஜ)

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம் (காங்)

203. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு (காங்)

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார் கோவில் (செ.வ.) (தி)

211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்

214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர் (காங்)

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி



217. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை (பாஜ)

218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்-1

220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம் (தி)

221. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு (தி)

223. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி (பா)

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம் (தி)

225. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. .. ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.) (காங்)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு (தி)

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி (த)

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு (மா)

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

(பே.த) .. பேரவைத் தலைவர்

(செ.வ) .. செட்யூல்டு வகுப்பு

| | | |
|---|---|---|
| (ஆவா.) | .. | ஆதிவாசி |
| (தி) | .. | திராவிட முன்னேற்றக் கழகம் |
| (காங்) | .. | இந்திய தேசிய காங்கிரஸ் |
| (பா) | .. | பாட்டாளி மக்கள் கட்சி |
| (மா) | .. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) |
| (கம்யூ) | .. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி |
| (பாஜ) | .. | பாரதிய ஜனதா கட்சி |
| (த) | .. | தமிழ் மாநில காமராஜர் காங்கிரஸ் |
| (அஇபாபி) | .. | அகில இந்திய பார்வர்ட் பிளாக் |
| (சுயே) | .. | சுயேட்சை |

ஏனையோர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாவர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 12, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

பசியைப் பொறுத்துக்கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**321—**

**நீர்த்தேக்கம்**

***9811—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு ஏரி அமைக்கும் பணி திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். தமிழக மக்களின் நலனைக் காக்கும் அம்மா அவர்கள் ஆட்சியில் எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில், கடவூர் ஒன்றியத்தில் மயிலம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுப்படுத்தி கூடுதல் படுக்கை வசதிகளுடன் ஸ்கேன் வசதி, எக்ஸ்ரே வசதி செய்து கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது கிருஷ்ணராயபுரம் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வால்மீகி அம்பேத்கர் திட்டத்தின் மூலம் 134 வீடுகள் கட்டிக் கொடுத்த அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடவூர் ஒன்றியத்தில் எந்தவொரு ஆற்றுப் பாசனமும் இல்லாமல் வானம் பார்த்த பூமியாக உள்ளது. ஆகையால் அங்கு வசிக்கும் மக்கள் மழை நீரை நம்பித்தான் வாழ்கின்றனர். கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களின் அரசு சுமார் 200 கிராமங்களில் வசிக்கும் மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கவும், 1,500 ஏக்கர் விவசாய விளை நிலங்களில் பயிர் செய்யும் வகையிலும் நடப்பு ஆண்டிலேயே இத்திட்டத்தை நிறைவேற்ற ஆணையிடுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் தொகுதி, பாலவிடுதி கிராமத்தில் செந்தலைவாழ்கரடு ஏரி அமைக்கும் பணி ரூபாய் 28.46 இலட்சத்திற்கு 1990-91 ஆம் ஆண்டு



2003 ஏப்ரல் 25]

மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நில நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 2.20 ஏக்கர் வன நிலங்கள், 8.62 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 2.36 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய உள்ளது. சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை, பொதுப் பணித் துறைக்கு குத்தகை அடிப்படையில் வன நிலங்களை ஆர்ஜிதம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்ட மதிப்பீடு 2002-2003 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூபாய் 86 இலட்சமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 82.56 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைக்கேற்ப இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சசிகலா.

**திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 322, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**322—**

## ஏரியைத் தூர்வாருதல்

**•17791—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஊராட்சிக்குட்பட்ட பெரிய ஏரியைத் தூர்வார அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 25

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், ஊராட்சிக்குட்பட்ட பெரிய ஏரியை தூர்வார கருத்துரு தற்போது அரசின் ஆய்வில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குள் இருக்கிற கூவம் பெரிய ஏரி என்பது சுமார் 2,325 ஏக்கர் அளவு பாசனத்திற்குப் பயன்படக்கூடிய ஒரு முக்கிய ஏரியாகும். இந்த ஏரி இந்தப் பகுதியிலே உள்ள கூவம், கூவம் பள்ளக்காலனி, மேட்டுக்காலனி, குமாரச்சேரி, குறுக்கம்பேடு, ஏலம்பாக்கம், கள்ளம்பேடு, பிள்ளையார்குப்பம், கீழச்சேரி போன்ற கிராம விவசாயிகள் பயனடையக்கூடிய ஒரு மிக முக்கிய ஏரியாகும். இந்த ஏரியினுடைய கரை மட்டும் சுமார் 5 கி.மீ. தூரம் உள்ளது. 12 மதகுகள் இருக்கக்கூடிய ஒரு பெரிய ஏரி. தற்போது மதகுகளும் உடைந்து, ஏரியினுடைய கரைகளும் உடைந்து தூர்ந்துவிட்ட நிலையிலே இருக்கக்கூடிய இந்த ஏரியை இந்த நிதியாண்டிலேயே, அப்பகுதியினுடைய விவசாயிகளுடைய பல்லாண்டுகால கோரிக்கைக்கு ஏற்ப தூர்வாருவதற்கும், செப்பனிடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன். பல ஏரிகள் தமிழ்நாட்டிலே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மழை பெய்கிறபோது அந்தத் தண்ணீரை தேக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, தண்ணீர் இருக்கக்கூடிய நீர்ப்பிடிப்பு பகுதிகளில், அந்த ஏரிகளிலே விஸ்தீரணமாக உள்ள இடங்களிலே சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக பல மரங்களை நட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கூவம் பெரிய ஏரி பாசனப் பரப்பு 930 ஹெக்டேர் ஆகும். ஏரிக் கரையின் நீளம் 5,029 மீட்டர். ஏரியில் 12 மதகுகள் மற்றும் 4 கலிங்கல்கள் உள்ளன. ஏரியின் மொத்த நீர்ப்பிடிப்பு பரப்பளவு 11.40 சதுர கி.மீ. ஆகும். வரும் நிதியாண்டில் இந்த ஏரியைத் தூர் வாரும் பணி நிதிநிலைக்கு ஏற்ப எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்



2003 ஏப்ரல் 25]

பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏரியின் ஆக்கிரமிப்பினை அகற்றி, அங்கே நீர்ப்பிடிப்பு இருக்கின்ற பகுதிகளில் மரங்கள் நடுகின்ற திட்டத்தினைப் பற்றிச் சொன்னார்கள். அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 323, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**323—**

## தார்ச் சாலை

**•3736—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரையுள்ள பகுதியை தார்ச் சாலையாக மாற்றும் பணியை வருங்காலத்தில் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

[2003 ஏப்ரல் 25

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு ஏறத்தாழ 2 வருடங்கள் ஆகின்றன. இந்த 2 வருட காலத்தில் செய்து முடிக்கப்படவில்லை. இப்போது 2003-2004ஆம் ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சாலையைப் போடாததால், மிகவும் பழுதடைந்துள்ள காரணத்தினால், அந்தக் கரிமாரஹட்டி கிராமத்திற்கு பேருந்துகள் போவதில்லை. பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள். எனவே அரசு, இந்த அவசரத் தேவையைக் கருதி, அந்தக் கிராமத்து மக்களுக்கு பேருந்து வசதி கிடைத்திட, இந்தச் சாலையை உடனடியாக அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கு மக்களின் தேவை என்ன என்பது--ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், டவுன் பஞ்சாயத்து, நகராட்சி ஆகிய பகுதிகளில் சாலை, தேவையைப் பொறுத்தவரைக்கும் Institute of Remote sensing, Anna University-யும், அதைப்போலவே பெங்களூரில் இருக்கிற Indian Space Research Organisation மூலமாகவும், Remote sensing மூலமாகவும் ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் அந்த முடிவு மேற்கொள்ளப்படுகிறது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டினுடைய குறிப்பில் இது சேர்க்கப்படாத ஒரு நிலை இருக்கிறது. எனவேதான் வரும் ஆண்டிலே இந்தத் திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் கூறியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது. ஏன் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது என்று அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் இறுதி அனுமதியைப் பெறுவதற்கு டெல்லிக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது மீண்டும் டெல்லியினுடைய அனுமதியைப் பெற வேண்டுமா என்று அமைச்சர் விளக்குவாரா? நான் சொல்லுகின்ற அந்தச் சாலையில் அந்தக் கிராமத்திற்குமேல் பேருந்துகள் போவதில்லை. அந்தக் கிராமத்திற்கு பேருந்து சென்று மீண்டும் திரும்பி வந்துவிடுகிறது. ஆனால், திரும்புகின்ற இடத்திலே கால்வாய்கள் எல்லாம் உடைந்து, பேருந்து போகமுடியாத ஒரு கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்த அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, உடனடியாக இந்தச் சாலையைச் சீர் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.



2003 ஏப்ரல் 25]

முற்பகல் 10—10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் மைய அரசு 90 சதவீதம் மானியமாகக் கொடுக்கிறது. மாநில அரசினுடைய பங்கு 10 சதவீதம்தான். எனவே, மைய அரசினுடைய ஒப்புதல் தேவை. 2001-2002 ஆம் ஆண்டிற்காக சாலை மேம்பாடுகளுக்கு ரூபாய் 138.70 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டங்களும் மைய அரசாங்கத்திற்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டு, வரப்பெற்று அது முடிகின்ற நிலையிலே தற்போது இருக்கின்றது. நடப்பு ஆண்டுக்கு ரூபாய் 215.16 இலட்சம் செலவிலே, மற்ற பல பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையைப் பொறுத்தவரைக்கும் Remote sensing மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலே, ஆங்கு குன்னூர் நகராட்சிப் பகுதி மற்றும் அங்கு இருக்கின்ற ஊராட்சிச் சாலை ஆகியவற்றை ஆய்வு செய்து, ஊராட்சிச் சாலை நல்ல முறையில் இருப்பதாகவும், குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மட்டும் சாலை சரியாக இல்லையென்றும் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையொட்டி, நகராட்சி ஆணையரிடமும் இதுகுறித்து நாம் தகவலைக் கேட்டிருக்கிறோம். அந்தத் தகவலும் வரும். மாநில அரசினுடைய நிதியை இதற்காக அரசு தயாராக வைத்து இருக்கிறது. முடிந்தால் இந்த ஆண்டிலேயே இதை மேற்கொள்வதற்கு நாங்கள் முயற்சியினை மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்திற்கு வருடந்தோறும் 25 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய சர்க்காரிடமிருந்து பணம் வந்துகொண்டிருக்கிறது. 1991-96-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அந்த மாவட்டத்தினுடைய மக்களுடைய முன்னேற்றத்திற்காக சில இடங்களில், அரசு நிறுவனங்கள், சாலைகள்

[2003 ஏப்ரல் 25

போன்றவை எல்லாம் இடிந்து விழுந்தபோது அவற்றுக்கெல்லாம் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கெல்லாம் உத்தரவிடப்பட்டு, பணிகள் நடந்து கொண்டிருந்தன. ஆனால், கடந்த ஆட்சியிலே அந்தத் தடுப்புச்சுவர்கள் கட்டும் பணிகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த H.A.D.P. பற்றி நீலகிரி மாவட்டத்திலே சொன்னால், அதை Rivetment Department என்றுதான் சொல்வார்கள். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நீலகிரியிலுள்ள சாலைகள் எல்லாம் மழைக் காலங்களிலே மிகவும் மோசமாக இருப்பதனால், அதிக அளவிலே சாலைகளுக்கு இந்த நிதியை ஒதுக்குவதுடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்ட தடுப்புச் சுவர்கள் கட்டும் பணிகளுக்கும்-அரசு அலுவலகங்கள் சில இடியும் நிலைமையிலே இருக்கின்றன—அந்த இடத்திற்கும், பொது இடங்களுக்கும் கண்டிப்பாக இந்த நிதியை அதிக அளவில் ஒதுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேம்பாட்டுப் பணிகளில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணியும் உள்ளடங்கியிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தகவல் தாருங்கள். நாங்களும் துறை அதிகாரிகள் மூலமாகத் தகவலைப் பெறுகிறோம். கட்டாயம் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு முக்கியத்துவம் தரப்படும்; நிதி ஒதுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *324*, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**324—**

**கணினிப் பயிற்சி மையங்களை முறைப்படுத்துதல்**

***2241—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருகி வரும் கணினிப் பயிற்சி மையங்களைக் கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்த அரசு முயற்சி செய்யுமா?



2003 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாநிலத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கணினிப் பொறி பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. நாளடைவில் தனியார் கணினிப் பயிற்சி மையங்களைக் கணிசமாகக் கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்த இயலுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்ற ஆண்டு நான் கேட்ட கேள்வி. தற்போது சரியான நேரத்தில் இந்தக் கேள்வியை அனுமதித்த பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது அல்லும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதிலே ஒன்றுதான், இப்போது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே கணினிப் பயிற்சி பெற வேண்டும் என்று உத்தரவிட்டு, இப்போது ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதற்காக தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதன்படி, இப்போது நான்கு நாட்களாக கணினிப் பயிற்சி வகுப்பிற்கு நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம். இந்த நான்கு நாட்களில் பல விஷயங்களை எல்லாம் நாங்கள் கற்றுக்கொண்டிருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதிக்காக சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் ஒரு கணினி சென்ற ஆண்டு வாங்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஒரு இலட்சம் ரூபாய் செலவிலே கணினி எல்லாம் வாங்கப்பட்டு, அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியிலே அப்படியே பாதுகாத்து வைத்திருக்கின்றோம். அதை எப்படிச் செயல்படுத்துவது என்று எங்களுக்குத் தெரியாத காரணத்தினால் நாங்கள் தடுமாறிக்கொண்டிருந்தோம்.

[2003 ஏப்ரல் 25

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தற்போது அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாகச் சிறந்த முறையிலே நாங்கள் எல்லாம் பயின்று தொகுதிக்குச் சென்று, கூட்டத் தொடர் முடிவில் சிறப்பான முறையிலே தொகுதி மக்களுக்குப் பணியாற்றுவோம். ஆனால் பல தனியார் நிறுவனங்கள்—இப்பொழுது சொல்கின்ற S.S.I.-லே மிகச் சிறப்பாக சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆனால், நான் சென்ற முறை ஒரு தனியார் நிறுவனத்தில் சென்று பயின்றபொழுது 30 நாட்களானாலும் சரி ஒன்றுமே புரியவில்லை. இப்படி அவர்கள் வியாபார நோக்கோடு, மக்களை சுரண்டுகிற விதத்தில்தான் செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஆகவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்கிறேன், இதை எல்லாம் வரன்முறைப்படுத்தி, தகவல் தொழில்நுட்பம் துறை மூலமாக அவர்கள் ஒரு லைசென்சை பெற்று சிறந்த முறையில் குறைந்த செலவிலேயே அவர்களுக்கு அந்தப் பாடத்தை கற்றுத் தருவதற்கு நீங்கள் முன்வருவீர்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல பல கருத்துகளை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய I.T. - Information Technology துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்று அம்மா அவர்களுடைய அறிவாற்றல், அவர்களுடைய சிந்தனையில் உதித்த பல்வேறு கருத்துகளின் அடிப்படையில், இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு முன்னோடியான—முதன்மையான—துறையாக மாறிக் கொண்டிருக்கிறது என்பது நிச்சயமாக உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். எனவே, அடிப்படை ஒன்று கணினிப் பயிற்சி எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்பது. ஏனென்றால் if you ignore the Computer, the Computer will ignore you. என்று சொல்வார்கள். கம்ப்யூட்டரை நீங்கள் புறக்கணித்தால் கம்ப்யூட்டர் உங்களைப் புறக்கணிக்கும் என்கிற அடிப்படையிலே வரும் காலங்களிலே எல்லோரும் கம்ப்யூட்டர், கணினிப் பயிற்சி பெற்றவராக இருக்கவேண்டும் என்கிற ஒரு மனப்பான்மையோடுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வளருகின்ற நம்முடைய இளைய சமுதாயம்



2003 ஏப்ரல் 25]

அந்தக் கணினி பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்கின்ற முயற்சியில் கிட்டத்தட்ட 189,73,00,000 ரூபாய்—அதாவது பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 மாணவர்கள், ஆண்கள் என்று சொன்னால் 42,115, பெண்கள் 32,439. கிட்டத்தட்ட 70,000-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு ரூபாய் 189,73,00,000 ரூபாய செலவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே தமிழ்நாடு முழுவதும் நம்முடைய மாணவ மாணவியர்கள் எல்லாம் கணினிப் பயிற்சியை பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள். இதிலே தனியார் என்று சொல்லும் பொழுது நாம் விழிப்பாக இருக்க வேண்டும். பொதுவாகவே இன்றைக்கு தமிழ்நாட்டிலே நான்கு கணினிப் பயிற்சி கற்றுக் கொடுக்கின்ற பெரிய நிறுவனங்கள் இருக்கின்றன. N.I.I.T., S.S.I., Aptech., C.S.C. அதனுடைய மையங்கள் என்று பார்த்தால் N.I.I.T.-க்கு 70., S.S.I.-85, Aptech-45, C.S.C.-200. ஆகவே, இப்படிப்பட்ட கணினிப் பயிற்சி மையங்களிலே பயின்றால் நல்ல ஒரு அறிவைப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அதை விட்டு வேறு இடங்களில் சிலபேர் பயிற்சி பெறுகின்ற வகையில் அவர்களை அணுகுவதன் மூலம் அவர்கள் யாராவது நன்றாக பயிற்சி பெறவில்லையென்றால் அதை வைத்து அவர்கள் மாணவர்களை ஏமாற்றுகிறார்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தால் நிச்சயமாக அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாம் கணினி யுகத்தில் இருக்கின்றோம். கணினி என்பது ஒரு பெரிய கடலைப் போன்றது. அந்தக் கடலைக் கடப்பதற்கு நீண்ட நெடிய நாட்களாகும். எங்களுக்கு 15 நாட்கள், தினம் இரண்டு மணி நேரம் வீதம் முப்பது மணி நேரம் நீங்கள் அந்தப் பயிற்சி கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்து ஊருக்கு நாங்கள் சென்றுவிட்டால் மறந்து விடுவோம். ஆகவே, அதைத் தொடர்ந்து கொடுப்பதற்கு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே செல்லும்பொழுது அல்லது வேறு வகையிலோ அங்கே அவர்கள் விரும்புகிற நேரத்தில் அந்தக் கணினிப் பயிற்சி பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிறப்பாகப் பயிற்சி செய்துகொண்டிருக்கிறீர்களே!

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோல இங்கே தலைமைச் செயலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் வரும்பொழுது அந்த நேரத்தில் தயவுசெய்து ஓர் அறையை ஒதுக்கி அவர்கள் வருகின்ற நேரத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள், நாங்கள் பயின்று கொண்டிருக்கிறோம், நாங்கள் பயிற்சி பெற்று விடுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு முழுமையாக இருக்கிறது. நாங்கள் தேர்ச்சி பெற்று விடுவோம். நாங்கள் அந்தப் பயிற்சி பெறும்பொழுது அமைச்சர்களும் அந்தப் பயிற்சி பெற்றால் வசதியாக இருக்கும். ஆகவே, அமைச்சர்களும் அந்தப் பயிற்சி பெறுவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணினி துறையைப் பொறுத்த அளவிலே ஒரு பெருங்கடல் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு இன்றைக்கு — ஏழு கடல் தாண்டி திருப்பாற்கடல் என்று சொல்லுவார்கள், — திருப்பாற்கடலுக்கு வந்துவிட்டோம். இனி ஒரு முன்னோடி தமிழ்நாடு என்கின்ற வகையிலே ஒரு சரித்திரம் படைக்கின்ற அரசாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு விளங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து, எப்படி ஓர் செல்லுமிட தொலைபேசி, Cellular phone இருக்கின்றதோ, அதேபோன்று அவர்கள் செல்லுமிடம் எல்லாம் பயிற்சியை எடுக்க வேண்டும் என்று கணினிப் பயிற்சியிலே மிகுந்த ஆர்வத்தை, ஒரு அன்பை அவர்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். எனவே, அவருடைய கருத்தை ஏற்று, தமிழ்நாடு முழுவதும் SSI சென்டர்கள் 85 இருக்கின்றன; எப்போது வேண்டுமானாலும் நீங்கள் சென்று அங்கே பயிற்சி பெறலாம். அதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு. அதேநேரத்தில் தலைமைச் செயலகத்திலே நீங்கள் பயிற்சி பெற வேண்டும் என்றாலும்கூட அதற்காக இங்கே தலைமைச் செயலகத்திலே NIC இருக்கிறது. அதாவது National Informatics Centre. அந்தப் பயிற்சி மையத்தின் மூலமாகக்கூட உங்களுக்கு நாங்கள் பயிற்சி அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறோம், வேறு



2003 ஏப்ரல் 25]

எப்படிப்பட்ட பயிற்சிகள் என்றாலும் நீங்கள் கம்ப்யூட்டர் அறிவு பெற்று சிறந்த அறிவாளிகளாக வேண்டும் என்பதுதான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய விருப்பம். அந்த விருப்பத்தின் அடிப்படையிலே எப்படிப்பட்ட உதவி கேட்டாலும் நிச்சயமாக இந்த அரசு செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். மாண்புமிகு அமைச்சர்களுக்குப் பயிற்சி கொடுப்பது பற்றிச் சொன்னார்கள். இன்றைக்குதான் அதற்குரிய அந்தக் கடிதம் எல்லாம் அமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வருகின்ற *28-4-2003* முதல் *21-5-2003* வரை அரசு வேலை நாட்களில் மட்டும் மொத்தம் *30* மணி நேரம் தலைமைச் செயலகத்தில் உள்ள, நாமக்கல் கவிஞர் மாளிகையில் *5*-வது தளத்தில் உள்ள பொதுப் பணித் துறை கூட்ட அரங்கில் மதியம் 2½ மணி முதல் மாலை 4½ வரை பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனுமதி பெறாத கணினிப் பயிற்சி நிறுவனங்களிலே பயிலும் மாணவர்களுக்கு வெளிநாடுகளிலே வேலை வாய்ப்பு செய்து தருவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு இந்திய தண்டனைச் சட்டத்தில் வழிவகை இருந்தாலும், Cyber crimes மற்றும் கணினி சம்பந்தப்பட்ட வழக்குகளை, Information Technology Act 2000-ன்கீழ் செய்யப்படுவது போலவே, அனுமதியில்லாமல் மாணவர்களையும், பொதுமக்களையும் மோசடி செய்யும் நிறுவனங்கள்மீது Information Technology Act, 2000-ன்கீழ் நடவடிக்கை எடுக்க Information Technology Act, 2000-ல் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, அதற்கு மத்திய அரசின் ஒப்புதலையும் பெற்று நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பவியல் துறையைப் பொறுத்தவரையில் சில கட்டுப்பாடுகளை விதித்தாக வேண்டும். வளர்கின்ற தொழில் என்பதால் ஆரம்பத்திலே இதில் நாம் கட்டுப்பாடுகள் கொண்டு வந்தால் நிச்சயமாக இந்தத் தொழில் வளர்வதற்கு அது ஒரு தடையாக இருக்கும் என்கின்ற சூழ்நிலையில், ஒட்டுமொத்தமாக அகில இந்திய ரீதியில், ஒரு Central Act, மத்தியிலே ஒரு சட்டத்தை இயற்றி இருக்கின்றார்கள். மத்திய அரசாங்கம் இயற்றுகின்ற அந்தச் சட்டத்திற்கு எந்த ஒரு மாநிலமும் சட்டத் திருத்தத்தை Amendment கொண்டு வரலாம். அந்த திருத்தம், Amendment கொண்டு வரும்போது மத்திய அரசினுடைய ஒப்புதல்—concurrence பெற்றுதான் திருத்தப்பட வேண்டும். எனவே, அதில் சில பிரச்சினைகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்தை ஏற்று, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று, சட்டத்தைத் திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்ப்யூட்டர் யுகத்தில் நல்ல வளர்ச்சி இருக்கிறது என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதேநேரத்தில் இப்போது Browsing Centre-ல் பார்த்தோம் என்று சொன்னால் பல இளைஞர்கள் அங்கே சென்று எதைக் கற்க வேண்டுமோ அதைக் கற்காமல் அவர்கள் செக்ஸ் போன்ற காட்சிகளிலே மட்டுமே தங்களை முழுமையாக இணைத்துக்கொண்டு, இளசுகள்தான் இப்படி என்று சொன்னால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இன்றுவரை கணினிப் பயிற்சிக்கு வரவே இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாம் என்றுதான் பார்த்தேன். இப்போது இளசுகள் இப்படிப் போய் கெட்டுவிடுகிறது. அதேபோல பெருசுகளும் இப்படிப்பட்ட காட்சிகளில்தான் அதிகமாக நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அதை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்பதை இந்த அரசு அலசிப் பார்த்ததா? வெளிநாடுகளிலிருந்து Website-லிலே இப்படிப்பட்ட காட்சிகளை அங்கே இருப்பதை இங்கே download செய்து எப்படியாவது இளைஞர்களும், அதேபோல பெருசுகளும்





கெட்டுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? அதற்காக என்ன உபாயத்தை அவர்கள் கடைப்பிடித்து, அதை முழுமையாக நம்முடைய தமிழகத்தில் எவ்வாறு நிறுத்தப்போகிறார் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

*முற்பகல் 10.25*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Dot com நிறைய பார்ப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்குமுன்பு அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். ஒரு இளைய தலைமுறையினரை பாதிக்கக்கூடிய ஒரு விஷயத்தை மாண்புமிகு உறுப்பினர் சொல்லிருக்கிறார். நல்ல கருத்து இது. SETS-Society for Electronic Transaction and Security பற்றி ஏற்கெனவே மானியக் கோரிக்கையிலே நான் அறிவித்திருக்கின்றேன். அந்த SETS வந்தால் அகில இந்திய ரீதியிலே எந்த மாநிலத்திலே நிறுவுவது என்ற போட்டி. அந்தப் போட்டியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக நம்முடைய சென்னையிலே அந்த SETS அமைய இருக்கிறது. எப்படி ஒரு satellite அளவில் அந்த website-ல் வராத அளவிற்கு தடுக்கக்கூடிய ஆராய்ச்சிகள் எல்லாம் நிச்சயமாக மேற்கொள்வதன் மூலம் வருங்காலத்திலே நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அது வழிவகையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெருகி வரும் கணினிப் பயிற்சி மையங்களை நம்முடைய அரசாங்கம் வரன்முறைப்படுத்த வேண்டும். அவை அதிக அளவிலே சிறு தொழிலாக பல்வேறு நகரங்களிலும் வளர்ந்து வருகிற நகரப் பகுதிகளிலும் இருக்கின்றன. அந்தக் கணினி மையங்களிலே, தனியார் மையங்களிலே பயிற்சி அளிப்பவர்களுக்கு ஏதாவது தகுதிகளை நிர்ணயம் செய்து, அதே சமயத்திலே அதிகமாக

[2003 ஏப்ரல் 25

கட்டணம் வசூலிப்பவர்கள் என்றால் இவ்வளவுதான் வாங்க வேண்டும் ஒரு கோர்ஸ்க்கு என்று ஒரு கட்டணத்தை நிர்ணயித்து, ஏதாவது ஒரு சட்டத்தை, வரன்முறையை நம்முடைய அரசாங்கம் அறிவித்தால், அது ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதை நம்முடைய அரசாங்கம் கட்டுப்படுத்துவதற்கு முன்வருமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் ஏற்கெனவே சொன்னபடி கணினியைப் பொறுத்தவரையிலே தகவல் தொழில்நுட்பவியல், ஒரு வளர்கின்ற துறை. இதற்கு ஆரம்பத்திலேயே நாம் கட்டுப்பாடுகள் நிறைய விதிக்கும்போது, அந்தத் துறை வளராது தடுக்கின்ற சூழ்நிலை உருவாகின்ற ஒரு நிலைமை ஏற்படும். எனவே, எந்த மையத்திலாவது, அதாவது அதை துஷ்பிரயோகம் செய்து மக்களிடம் அதிகமான கட்டணம் வாங்குவதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணினிப் பயிற்சியைப் பற்றி நல்ல விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பயிற்சி. அடுத்து நமது அமைச்சர் பெருமக்களுக்கும் பயிற்சி என்ற முறையிலே இந்தத் திட்டத்தை நம்முடைய தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சருக்கு நன்றியைச் சொல்லிவிடுங்கள் 'அப்படியே. கணினிப் பயிற்சி என்பது கனவாக இருந்தது. நாம் இப்பொழுது கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு நன்றியைச் சொல்லிவிடுங்கள் முதலமைச்சருக்கு.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நல்ல திட்டத்தை எப்பொழுதுமே வரவேற்போம், நன்றி தெரிவிப்போம், பாராட்டுவோம், கவலைப்பட வேண்டியதில்லை. நாங்களும் இந்தப் பயிற்சிக்குச் சென்று வருகிறோம் என்ற காரணத்தினாலே, இது பயனுள்ள வகையில் இருக்கிறது. குறிப்பாக இங்கே திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். 15 தினங்கள் போதுமானதாக இருக்காது, ஊருக்குச்



2003 ஏப்ரல் 25]

சென்றால் மறந்துவிடுவோம் என்று. இதற்குதான் அப்பொழுதே அப்பா, அம்மா அவர்கள் கண்டித்துப் படிக்கச் சொன்னபோது ஒழுங்காகப் படித்து இருந்தால் சரியாக இருந்திருக்கும். (சிரிப்பு) மறந்துவிடுவேன் என்று சொன்னால் திரும்பவும் படிக்க வேண்டிய அவசியம்தான் ஏற்படும், ஆகவே, இந்தப் பயிற்சி சிறப்புக்குரியதாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வயது அப்படி! (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே, இது நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய பயிற்சியாக இருக்கிறது. இதை முறைப்படுத்திக்கொண்டால் தேவையான அளவிற்கு உதவிகரமாக இருக்கும் என்ற அடிப்படையில் இந்தப் பயிற்சியை. மேலும் ஊக்கப்படுத்துவதற்கான வழிவகையைக் காண வேண்டும். அதில் ஒன்று, பயிற்சி தொடங்குகிறபோது எழுத்துப் பயிற்சி என்ற Painting System என்று சொல்லுகிறபோது, அவர் அம்மா என்றுதான் தொடங்கி சொல்லிக் கொடுக்கிறார், அங்கேயிருக்கிற பயிற்சியாளர். அதன் காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் இரட்டை இலையை வரைந்து கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் அரிவாள் சுத்தியல் சின்னத்தையும், அரிவாள் சுத்தியல் நட்சத்திர சின்னத்தையும் வரைந்து பார்த்தோம். ஆகவே, அவரவர்களும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'சிவ, சிவ' என்று எழுதியிருந்ததை நான் பார்த்தேன் உங்களுடையதிலே. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆமாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எல்லாம் இப்படி இருக்கிறதே, என்று சிவனிடம் சொல்வதற்காக 'சிவ, சிவ' என்று நான் எழுதிப் பார்த்தேன். ஆகவே, இப்படிப் பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் அம்மா என்று எழுதுவதிலே என்ன தவறு இருக்கிறது? தாய் இல்லாமல் நான் இல்லை. தாய் இல்லாமல் எவரும் இல்லை. எனவே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தானே எவரும் பிறந்ததில்லை.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** எல்லோரும் தாயை நம்பித்தான் இருக்கிறோம். எனவே, அம்மா என்று எழுதுவதிலே தவறு இல்லை. அதனால் நீங்களும் தாராளமாக அம்மா என்று எழுதுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றுதான் நமது தமிழ்ப் புலவர்கள்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். தந்தையைக் காட்டிலும் தாய்க்குத்தான் முதல் இடம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. அதோடு இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் குறிப்பிடும்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்தக் கணினிப் பயிற்சியில் கற்றுத் தேர்ந்துவிடுவோம் என்று சொன்னார்கள். அவருடைய தேர்ச்சியைப் பார்ப்பதற்கு ஒரு பரிட்சை வைத்து *(சிரிப்பு)* இதிலே நல்ல மதிப்பெண்கள் பெறுகிறவர்களுக்குப் பரிசு கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ready என்றால் நாங்களும் ready. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, 'பெருகிவரும் கணினிப் பயிற்சி மையங்களைக் கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்த அரசு முயற்சி செய்யுமா' என்பதாகும். நல்ல கேள்வி. ஒரு வருடத்திற்கு முன்னாலேயே மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் கேட்டதாகச் சொன்னார்கள். வளர்ந்து வருகிற நிலையில் இதற்குக் கட்டுப்பாடு அதிகம் விதிக்கக்கூடாது, ஆகவே, கொஞ்சம் தாராளமாக விட்டுவிட்டு அப்புறம் கட்டுப்படுத்தலாம் என்கிற மாதிரி வணக்கத்திற்குரிய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போதே பல இடங்களில் இதிலே பலவிதமான பிரச்சினைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அதிலே ஒன்று, இந்த 'டேட்டா சிஸ்டம்' என்கிற பெயரிலே ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடியதிலே தவறுகள் நடந்து, பல



2003 ஏப்ரல் 25]

இலட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்ததாக வழக்குகள் பதிவாகி, ஒன்றிரண்டு பிரச்சினையிலே இருக்கின்றன. இது வளர்ந்துவரும் நிலையில் இருப்பதனாலே புதிய நிறுவனங்கள் ஏராளமாக உருவாகின்றன. இங்கு அமைச்சரின் கவனத்திற்கு, பெயரை இப்போது நான் சொல்லவில்லை. தேவைப்பட்டால் தனியாக எழுதித் தருகிறேன் நான். ஆனால், ஒரு குறிப்பிட்ட நிறுவனம் ஆயிரக்கணக்கான B.E. மற்றும் பொறியியல் படித்த மாணவர்களுக்கு இந்தப் பயிற்சி தந்து வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி மாணவர்களைச் சேர்க்கிறது. அப்படிச் சேர்க்கிறபோது 90,000 ரூபாய் ஒரு மாணவனிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. 500-லிருந்து ஆயிரம் பேர் வரைக்கும் மாணவர்கள் அதிலே படிக்கிறார்கள். எவ்வளவு தொகை ஆயிற்று என்று நீங்கள் பாருங்கள். 6 மாதங்கள், 7 மாதங்களுக்குப் பிறகு Multi-National Corporation-னோடு தொடர்பு வைத்துக்கொண்டு அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, சிலபேருக்கு முப்பது, நாற்பது பேர்களுக்கு அவ்வாறு செய்கிறது. எஞ்சியுள்ளவர்களை அவர்கள் நிறுவனத்திலேயே வைத்துக்கொண்டு, எந்தவிதமான சட்டப் பாதுகாப்பும் அவர்களுக்குக் கொடுக்காமல், படித்த அந்தப் பட்டதாரி இளைஞர்களுக்கு, பயிற்சி பெற்றவர்களுக்கு, எந்தவிதமான P.F., Gratuity கிடையாது. அவர்களுக்குச் சட்டரீதியான எந்தப் பாதுகாப்பும் கிடையாது. ஒரு கன்சாலிடேட் சம்பளம் என்கிற முறையிலே 5 ஆயிரத்திலிருந்து, 6 ஆயிரத்திற்குள்ளே கொடுக்கிறார்கள்.

அதேபோல, Medical transcription என்பது அதிலே முக்கியமாக கையாளப்படுகிறது. இதிலேகூட 9,000 ரூபாய், 10,000 ரூபாய் வரைக்கும்தான் கொடுக்கிறார்கள். இதே வேலைக்கு, பெங்களூர், ஹைதராபாத் போன்ற இடங்களில் 40,000 ரூபாய் வரை ஊதியம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே ஒரு கொள்ளையடிக்கும் நிலையில் நடந்துகொண்டிருக்கக்கூடிய இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்தத் தொழில் வளருவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அது வளர்க்கப்பட வேண்டியது. அரசே ஏற்று நடத்துவதற்கும், புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்குவதற்குமான முறையில் இது இருந்தால் அரசுக்கும் இலாபம் கிடைக்கும். ஏராளமான இளைஞர்கள் அதிலே பயன் பெறுவார்கள், பிரயோஜனம் இருக்கும். தனியார் கொள்ளையடிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கும், முறைப்படுத்துவதற்கும், நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத்தான் நான் இதிலே கேட்க விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணினி சார்ந்த அந்தக் குற்றங்களை விசாரித்து உரிய நியாயம் வழங்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Cyber crimes என்ற ஒரு Cell-ஐ ஆரம்பிப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, கணினி சார்ந்த குற்றங்களை அதிலே விசாரிப்பதற்கு அதிகாரம் உண்டு.

அதே நேரத்திலே, நம்முடைய இளைஞர்கள், படித்து முடித்துவிட்ட இளைஞர்கள் இன்று வேலைவாய்ப்புக்காக எந்த அளவிற்கு ஏமாற்றப்படுகிறார்கள் என்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். அதிலே இந்த I.P.C., Cr.P.C. ஆகிய இரண்டிலுமே இதற்கு Provisions இருக்கின்றன. நடவடிக்கை நிச்சயமாக இருக்கும். யார் ஏமாற்றினாலும், அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தாலும்கூட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

ஒரு புள்ளிவிவரம், இந்தியாவிலே 8 இலட்சம் பேர் பொறியியல் படித்த வல்லுநர்கள் உருவாகிறார்கள். South India-விலே மட்டும், தென்னிந்தியாவிலே மட்டும் கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர். அதிலே தமிழ்நாட்டிலே 2 இலட்சம் பேர். எனவே, அந்த இரண்டு இலட்சம் பேருக்கும்கூட வருங்காலத்திலே நம்முடைய தமிழ்நாட்டிலேயே வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். அதற்குத்தான் எல்லா infrastructure-களையும் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். உதாரணத்திற்கு BPO-Business Process Outsourcing. வெளிநாட்டிலே ஒரு நிறுவனத்திற்கு அங்கேயுள்ள அந்த நிறுவனத்தினுடைய கணக்கு வழக்குகள், அன்றாடப் பிரச்சினைகளுக்கெல்லாம்கூட இங்கிருந்து Satellite, செயற்கைக்கோள் மூலமாக அவர்களுக்குத் தேவையான அந்த டேட்டாஸ், புள்ளிவிவரங்களையும் நாம் அனுப்பக்கூடிய வகையில் அந்த மையங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே வருங்காலங்களில் வருவதன் மூலம் நிச்சயமாக நம்முடைய பொறியியல் படித்த, கம்ப்யூட்டர் படித்த அந்த இளைஞர்கள் வெளியிலே போய் வேலை தேட வேண்டிய அவசியம் இருக்காது. ஏனென்றால் நம்முடைய தமிழ்நாட்டிலேயே ஒரு வருடத்திற்கு இரண்டு இலட்சம் பேர், உருவாகின்ற அந்தப் பொறியியல் படித்த, கம்ப்யூட்டர் படித்த இன்ஜினியர்கள், அறிவியல் தெரிந்தவர்களாக ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களுக்கு நிச்சயம் நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. என். நன்மாறன்.



2003 ஏப்ரல் 25]

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Typewriting, Short hand அதாவது தட்டச்சு, சுருக்கெழுத்து பயிலக்கூடிய மாணவர்கள், நகரம், கிராமம், குக்கிராமம் உட்பட, பயிற்சி நிலையங்களில் படிக்கிறார்கள். தேர்வு நடத்தும்போது அரசு ஒரு பொதுத் தேர்வு நடத்தி சான்றிதழ்கள் வழங்குகிறார்கள். இதன்மூலம் ஒரு ஏற்றத்தாழ்வற்ற நிலைமை மாணவர்களிடத்திலே நிலவுகிறது. கணினி பயிலக்கூடிய மாணவர்களுக்கும் அதேபோன்றதொரு தேர்வை நடத்துவதற்கு இந்தத் துறை அரசுத் தேர்வாணையத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 325. திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**325—**

**நீதிமன்றம்**

**•13127—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி. இருக்கையில் இல்லை.

[2003 ஏப்ரல் 25

வினா எண் 326. திரு. கோவை தங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**326—**

## அன்னதானம்

**•25561—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்திற்கென போதிய நிரந்தர வருவாய் இல்லாததால், அன்னதானத் திட்டம் தற்போதைக்கு நடைமுறைப்படுத்த இயலாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வால்பாறை மேல் பகுதியில் அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், வால்பாறை மேல் பகுதியில் உள்ள ஒரே பெரிய கோயில் ஆகும். இந்தக் கோயில் 20 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டிருக்கிறது. வருடா வருடம் மிகவும் சிறப்பான முறையிலே கோயில் விழாக்கள் நடைப்பெற்று வருகின்றன. விழா அன்று சுமார் 7,000 பேர்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கோயிலுக்கு என்று சொந்தமாக கட்டடங்கள் இருக்கின்றன. அதிலிருந்து வாடகை சுமார் 10,000 முதல் 15,000 ரூபாய் வரை வருகிறது. அதுபோக, நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி கும்பிட்டுச் செல்கிறார்கள். அர்ச்சனை சீட்டுகள் மற்றும் இதர வருமானங்கள் கோயிலுக்கு உண்டு. உண்டியல் வருமானமும் இருக்கிறது. கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் திருமணம்



2003 ஏப்ரல் 25]

நடைபெறுவதில்லை. காரணம், திருமண மண்டபத்தில் சமையல் அறைகள், கழிப்பறை வசதிகள், மண்டபத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் போன்றவை இல்லாததால், அந்த மண்டபத்தில் திருமணம் நடைபெறுவதில்லை. ஆகவே, கோயிலுக்கு வருமானத்தைப் பெருக்கி, அன்னதானத் திட்டத்தில் சேர்த்து, அன்னதானம் வழங்குவதற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்கு பொள்ளாச்சி வட்டம் மற்றும் நகர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் தக்காராக இப்போது செயல்பட்டு வருகிறார். இத்திருக்கோயிலின் பசலி 1412-ன் உதவித் தொகை நிர்ணய வருமானம் ஆண்டொன்றுக்கு 1,34,904 ரூபாய் ஆகும். இத்திருக்கோயில் வால்பாறை எஸ்டேட் பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு இதைச் சுற்றியுள்ள எஸ்டேட் தொழிலாளர்களே அதிக அளவில் வந்து வழிபடுகின்றார்கள். உண்டியல் மற்றும் கட்டணச் சீட்டு விற்பனை ஆகியவை மூலம் குறைந்த வருவாயே இந்த ஆலயத்திற்குக் கிடைக்கிறது. இத்திருக்கோயிலுக்கு வெளியூர்களிலிருந்தோ அல்லது வெளி மாநிலங்களிலிருந்தோ பக்தர்கள் வருவதில்லை என்பதாலும், மேற்காணும் வருவாயைத் தவிர நிரந்தர வருவாய் இல்லாத நிலையில் மேற்படி திருக்கோயிலுக்கு வருவாய் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அன்னதானத் திட்டத்தை தற்சமயம் விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பில்லை. அங்கே இருக்கின்ற திருமண மண்டபங்கள் சரியில்லை என்று சொன்னார்கள். அங்கே இருக்கின்ற திருமண மண்டபங்களைப் பார்த்து ஆய்வு செய்து உடனடியாகப் புதுப்பிப்பதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நன்றி சொல்லி, முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருமண மண்டபத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, உடனடியாக திருமண விழாக்கள் நடைபெற உரிய நடவடிக்கை எடுப்பேன் என்று கூறியதற்கு நன்றி. மேலும், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் அலுவலகம் இல்லை. அலுவலகம் இல்லாததால், அந்தச் செயல்

[2003 ஏப்ரல் 25

அலுவலர் அங்கு நாள்தோறும் வருவது கிடையாது. ஆகவே, திருக்கோயிலில் அலுவலகம் ஒன்றைக் கட்டி, செயல் அலுவலர் நாள்தோறும் அந்தக் கோயிலுக்கு வந்திருந்து பணியாற்றி அந்தத் திருக்கோயில் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதற்கு மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து ஆலயங்களுக்கும் செயல் அலுவலர் போட இயலாத சூழ்நிலை. காரணம் அங்கே போதிய வருவாய் இல்லாத காரணத்தால், 2,4,5,10 ஆலயங்களுக்குக்கூட, சிறிய ஆலயங்களுக்கு, ஒரு செயல் அலுவலர் நியமிக்கக்கூடிய அளவிற்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், அங்கே செயல் அலுவலர், தினந்தோறும் சென்று பார்த்து, ஆலயத்திற்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத் துறை செய்யும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க, 162 ஆலயங்களிலே சிறப்பான முறையிலே அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த ஆலயங்களில் எல்லாம் அன்னதானம் வழங்குவதற்கு என்று தனியாக, ஒவ்வொரு ஆலயத்திலேயும் போதிய கட்டட வசதி செய்து கொடுப்பதற்கு நம் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க, முயற்சி ஏதாவது இருக்கிறதா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில், பேரூர் ஆலயத்திலே போதிய இடமிருக்கிறது. சட்டமன்ற



2003 ஏப்ரல் 25]

உறுப்பினரின் தொகுதி நிதியிலிருந்து, உறுப்பினர் நிதியைக் கொடுப்பாரேயானால் இந்த ஆண்டே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 327, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**327—**

## கோயில் காணிக்கை

***35799—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் விலை உயர்வுமிக்க புடவைகள் எந்த வகை உபயோகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருக்கோயில்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் விலை உயர்வுமிக்க புடவைகள் விசேட தினங்களில் மட்டும் சுவாமி அலங்காரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படுகின்ற புடவைகள் விசேட தினங்களில் சுவாமிக்கு அலங்காரத்திற்குப் பயன்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சுவாமிக்கு காணிக்கையாக வருகின்ற புடவைகள் மாதா மாதம் அந்தந்தத் திருக்கோயில்களில் ஏலத்தில் விடுவது நடைமுறையாக இருந்து வந்தது, தற்போது நிறுத்தப்பட்டு விட்டதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களுக்கு வரக்கூடிய பட்டுச் சேலைகள் எல்லாம் தமிழகத்திலே இருக்கின்ற வசதியில்லாத ஆலயங்களுக்கு, அந்தப் பட்டுச் சேலைகளைக் கொடுக்க வேண்டுமென்கிற அடிப்படையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, திருக்கோயில்களுக்கு காணிக்கையாகச் செலுத்தப்படும் பரிவட்டங்களில் உபரியாக உள்ள பரிவட்டங்கள், நிதி வசதியில்லாத, தேவைப்படும் திருக்கோயில்களுக்கு உபயமாக வழங்கப்படுகின்றன. கீழ்க்கண்ட திருவிழாக்களுக்கு 15 தினங்களுக்கு முன்னதாகவே தேவைப்படும் திருக்கோயில்களுக்கு பரிவட்டங்கள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆடிப் பூரம், தீபாவளி, வைகுண்ட ஏகாதசி, பொங்கல், தமிழ் வருடப் பிறப்பு. அதனுடைய அடிப்படையில் 10 இணை ஆணையப் பிரிவுகளிலும் கீழ்க்கண்ட விவரப்படி. 28-2-2003 முடிய பரிவட்டங்கள் நிதி வசதியில்லாத திருக்கோயில்களுக்கு உபயமாக வழங்கப்பட்டுள்ளன.

பரிவட்டங்கள் உபரியாக உள்ள திருக்கோயில்கள் 84. பரிவட்டங்கள் வழங்கப்பட்ட திருக்கோயில்கள் 6,174. வழங்கப்பட்ட சேலைகள் 20,107. இவை தவிர 82,629 பரிவட்டங்கள் உபரியாக தற்சமயம் உள்ளன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்தெந்த ஆலயங்களுக்கு வேண்டுமென்று சொன்னால் இந்த உபரியாக உள்ள பட்டுச் சேலைகளைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இன்னொரு துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வசதியில்லாத ஆலயங்களுக்கு, விசேட காலங்களில்,



2003 ஏப்ரல் 25]

இந்துக்களின் பண்டிகை தினங்களில் அந்த ஆலயங்களுக்கு இப்படி காணிக்கையாக வருகின்ற துணிகளை அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர் கூறிய கணக்குப்படி பார்த்தால்கூட, 82,629 துணிகள் இன்னும் மிச்சம் இருப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். காணிக்கையாக தெய்வத்திற்கு வருகின்ற துணிகளைச் சாத்துகிறபோது, எண்ணெய், குங்குமம், மஞ்சள் போன்ற பூசைப் பொருட்கள் படுவதால், அப்படியே அவற்றை அதிக நாட்கள் வைத்துவிட்டால் சிதைந்துவிடும் நிலை உள்ளதாலும், ஏலத்தில் விடுகின்ற துணிகளை தாய்மார்கள் அதிகமாக விரும்பி ஏலத்தில் எடுக்கிறார்கள் என்பதாலும், இப்படி ஏலத்தில் எடுக்கின்ற துணிகளை தங்கள் இல்லங்களில் நடக்கும் பூசைகள், திருவிழாக்களில், அந்தத் துணிகளை அணிந்து மகிழ்கிறார்கள் என்பதாலும், அதோடு திருக்கோயில்களுக்கு வரும் துணிகளை ஏலம் விடுவதன் மூலம் வருடத்திற்கு 2 கோடியிலிருந்து 3 கோடி ரூபாய் வரையில் வருமானம் கிடைத்திடும் நிலை உள்ளதாலும், இப்படி எல்லா வகைகளிலும் பயன்படுகின்ற, சுவாமிக்கு காணிக்கையாக வருகின்ற துணிகளை மீண்டும் அந்தந்த திருக்கோயில்களில் நலிந்த, கோயில்களுக்குத் தருகின்ற துணிகளைத் தவிர்த்து, மீதம் இருக்கின்ற துணிகளை ஏலத்தில் விடுவதற்கு, ஏல நடைமுறையைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏலம் விடுவதற்கு இனி இடமே இல்லை. ஆண்டவனுக்காக கொடுக்கப்படுகின்ற துணியை, பட்டுச் சேலையை ஆண்டவனுக்கே படைக்க வேண்டும் என்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்ற அடிப்படையில், இங்கே மட்டுமல்ல, தமிழகத்தில் ஏழை எளிய மக்களுடைய ஆலயங்கள் பட்டுச் சேலை இல்லாமல் இன்னும் எங்கெங்கே இருக்கின்றன என்று சொல்வீர்களேயானால், அங்கெல்லாம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் மீண்டும் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. கோவிலுக்குச் செல்கின்ற பக்தர்கள் எல்லாம் தங்களின் காணிக்கைகளை உண்டியலில் செலுத்துகிறார்கள். உண்டியலில் செலுத்தப்பட்ட காணிக்கைகளை உணடியல் திறந்து எண்ணுகின்றபோது, தவறு ஏற்படாதவண்ணம் தடுப்பதற்காக, அந்த உண்டியல் திறக்கின்ற காலக் கட்டங்களில், அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் அல்லது அந்தக் கோவில் சார்ந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள், கிராம நிர்வாக அதிகாரி, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து உண்டியலைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அல்லது அந்த உண்டியல் திறக்கின்றபோது எந்த நடைமுறையைப் பின்பற்றி உண்டியல் திறப்பு விழா செய்கின்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னதானத்திற்காக இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கின்ற 162 ஆலயங்களிலேயும் வாரம் ஒரு முறை திறப்பதாக இருந்தது. இப்பொழுது மாதம் ஒரு முறை திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பல்வேறு ஆலயங்களிலேயெல்லாம் ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். 3 மாதங்களுக்கு ஒரு முறை, 2 மாதங்களுக்கு ஒரு முறை, எப்பொழுது உண்டியல் நிரம்புமோ, அதைக் கணக்கு வைத்து, அந்த அடிப்படையிலே இப்பொழுது உண்டியல் திறக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பது ஒரு பாதுகாப்பாக இருக்கும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக இருந்தாலும் சரி, உண்டியல் எண்ணுவதற்கு நீங்கள் பாதுகாப்பு கொடுப்பீர்களேயானால், யார் வேண்டுமானாலும் அங்கே இருந்து உண்டியல் எண்ணுவதில் எந்தவிதமான தவறும் கிடையாது. உறுப்பினர் சொல்லிய கருத்து ஏற்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 328, திரு. ஜி. கோதண்டராமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 25]

**328—**

### பள்ளி தரம் உயர்த்துதல்

**•19105—திரு. ஜி. கோதண்டராமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, ஒதியத்தூர் ஆரம்பப் பாடசாலையினை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி என்ற மைய மாநில அரசின் திட்டத்தின்கீழ், 2002-2003 ஆம் ஆண்டில், 479 ஆரம்பப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாணையின்படி, முகையூர் தொகுதி, ஒதியத்தூர் ஆரம்பப் பள்ளியும் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. மேலும் இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 304 தொடக்கப் பள்ளிகள் 29 மாவட்டங்களிலும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

**திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதியத்தூர் கிராம பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, ஆரம்பப் பாடசாலையை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஒதியத்தூர் கிராம மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 329, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 25

**329—**

**மாணவர் விடுதி**

**•32735—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஒன்றியம், ஒலக்கூர் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக விடுதிகள் தொடங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. செஞ்சி தொகுதியில், ஒலக்கூர் ஒன்றியத்தில் வாழ்கின்ற மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள். இந்தப் பள்ளியில் மொத்தம் 1,599 மாணவ மாணவியர்கள் படிக்கிறார்கள். இவர்களில் 586 மாணவ மாணவியர்கள் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சார்ந்தவர்கள். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் சுமார் 25 கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள கோனேரிகுப்பம், நல்லாத்தூர், பள்ளிப்பாக்கம், நங்குணம், பாங்கொளத்தூர், பனையூர், கம்பூர் அன்னம்பாக்கம், கடவம்பாக்கம், நாவல்பாக்கம், மண்ணூர், நொளம்பூர், ஆட்சிப்பாக்கம், கூடலூர், மேல்பேட்டை, பாஞ்சாலம், கீழ் ஆகனூர், கூச்சிக் கொளத்தூர், பாதிரி, சாரம், ஏவலூர், புறங்கரை, கீழ் கரணை ஆகிய கிராமங்களிலிருந்து வந்து படிக்கின்றார்கள். மேலும், இந்தப் பள்ளி தனியார் பள்ளிக்கு ஈடாக பொது மக்களின் ஈடுபாட்டோடு கட்டமைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற அக்கறை கொண்டு, தாழ்த்தப்பட்ட



2003 ஏப்ரல் 25]

மாணவியருக்கு இலவச சைக்கிள், பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு, 5 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் சுகாதார வளாகம், தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகளின் மேல்படிப்புக்கு கடனுக்குப் பதிலாக மானியம் வழங்கி வருகிறார்கள். அம்மா அவர்களின் ஆட்சியில் கருணையோடு, வரும் நிதியாண்டில் இந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவிகளின் நலனைக் கருதி மாணவிகள் விடுதி அமைக்க பரிசீலிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். இருந்தாலும், நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில மாணவர் விடுதிகளில் 10 அல்லது 15 மாணவர்கள் அங்கு தங்கிப் படிக்கிறார்கள். அந்த 10, 15 மாணவர்களுக்கு ஒரு வார்டனும், ஒரு சமையலரும், ஒரு காவலாளியும் உள்ளார்கள். ஆனால், சில பகுதிகளிலே தனியார் பள்ளிகளிலே, நூற்றுக்கணக்கான மாணவர்கள் தனியார் விடுதிகளிலே தங்கிப் பயின்று வருகிறார்கள். அங்குள்ள அந்தத் தொகையை அவர்கள் கட்டமுடியாத ஒரு சூழ்நிலைகூட ஏற்படுகிறது. ஆகையால்தான், அந்த 10 மாணவர்கள் படிக்கும் அந்த மாணவர் விடுதியை, பக்கத்திலுள்ள மாணவர் விடுதிக்கு மாற்றி, அந்த நூற்றுக்கணக்கான தனியார் விடுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அங்கு ஒரு விடுதியை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே கொல்லங்கிணறு என்ற இடத்தில் ஒரு அரசு மாணவர் இல்லம் இருக்கிறது. அங்கு 10 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். அந்த மாணவர் விடுதியை மாற்றி நூற்றுக்கணக்கானவர்கள் பயிலும் கீழாம்புடிமான்-புடியவலன் மேல்நிலைப் பள்ளியிலுள்ளவர்களுக்கு ஒரு அரசு மாணவர் விடுதியை

அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதியில் 10 மாணவர்கள்தான் தங்கிப் படிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, முறையாகத் தகவல் கொடுத்தால் கண்டிப்பாக நம்முடைய புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். குறைவாகத் தங்கிப் படிக்கின்ற விடுதிகளில், அதிகமான எண்ணிக்கை வரக்கூடிய விடுதிகளுக்கு ஈடுசெய்வது போலத்தான், நம்முடைய அரசு அனைத்து மாணவர்களும் தங்கிப் படிக்கின்றவகையில், விரும்பி வருகின்ற மாணவர்களைச் சேர்த்துக்கொண்டுதான், இப்போது தங்கிப் படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை தனியாக அனுப்பி வைத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 330, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**330—**

**மின் வசதி**

***19029—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரப் பகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் ஏற்கெனவே மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோன்று அனைத்துப் பகுதிகளுக்கும் மின் விளக்கு வசதி அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், திருவொற்றியூர் தொகுதியிலே பல்வேறு இடங்களிலே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தால், குறைவாக இருக்கின்ற பகுதிகளான திருவொற்றியூர் மேற்குப் பகுதி 41-வது வட்டத்திலிருந்து, 47-வது வட்டம், இராஜா சண்முகம் நகர், டாக்டர் ஜெ.ஜெ. நகர், டாக்டர் அம்பேத்கர் நகர் மற்றும் மணலி பேரூராட்சிப் பகுதிகளிலே இருக்கின்ற 16-வது வட்டத்திலிருந்து, 18-வது வட்டம், ஆமுலவாயல் 1-வது பகுதி, 2-வது பகுதி, வைக்காடு கிராமம் மற்றும் புழல் ஒன்றியத்திலுள்ள மாத்தூர் 1-ஆம் பகுதி, 2-ஆம் பகுதி, சின்னசேக்காடு பேரூராட்சியில் இருக்கின்ற 10-வது வட்டத்திலிருந்து, 15-வது வட்டம் வரையில் இருக்கின்ற பகுதிகளில் குறைந்தழுத்த மின்சாரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. கிராமப்புறம் மற்றும் குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதிகளிலே 100 கிலோ வாட் ஆர்ம்ஸ் உள்ள டிரான்ஸ்பார்மர் அமைந்திருக்கிறது. அவற்றிலே சுமார் 200, 250 மின் இணைப்புகள் இருக்கின்றன. அதேபோன்று 250 கிலோ வாட் ஆர்ம்ஸ் இருக்கின்ற டிரான்ஸ்பார்மரில் 400-க்கும் மேற்பட்டு, 500 இணைப்புகள் வரை இருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்து இருக்கிற காரணத்தால் அடிக்கடி low-voltage ஏற்பட்டு, அதன்மூலமாக அந்த டிரான்ஸ்பார்மரில் உள்ள காயில் பழுதடைந்து மற்றும் அதனுடைய oil dry ஆகி, டிரான்ஸ்பார்மரே சிதைகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்த நிலை தமிழகத்தில் அனைத்துக் கிராமப் பகுதிகளிலும் இருக்கின்ற ஒரு நிலை. எனவே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற நிலைமையிலிருந்து குறைந்தது 150 இணைப்புகள் உள்ள பகுதிகளுக்கு 250 கிலோ வோல்ட் டிரான்ஸ்பார்மர் பொருத்துவதோடு மட்டுமல்லாமல் 400 இணைப்புகள் உள்ள பகுதிகளுக்கு 500 கிலோ வோல்ட் டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தி...

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. த. ஆறுமுகம்:** இந்தப் பகுதிகளுக்குத் தடையின்றி மின்சாரம் தருவதற்கான சூழ்நிலையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் மின் அழுத்தக் குறைவுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்களோ, அந்த பகுதிகளில் மின்னழுத்தக் குறைவினை சரி செய்வதற்கு மின்மாற்றிகள் அமைத்து மின் அழுத்தக் குறைவினை சீர் செய்து, சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 331, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**331—**

**புனல் மின் நிலையங்கள்**

***19838—திரு. கா.பூ. முனுசாமி:**

*மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புனல் மின் நிலையங்களிலுள்ள இயந்திரங்கள் தற்போதைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டுள்ளதா?*

*(ஆ) அவ்வாறு மாற்றாமல் இருந்தால் அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடந்த 10 ஆண்டுகளில் கட்டப்பட்டுள்ள புனல் மின் நிலையங்களில் நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு சாதனங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்போது கட்டுமான நிலையில் இருக்கும் புனல் மின் நிலையங்களிலும் இத்தகைய சாதனங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

(ஆ) மின் கட்டமைப்பின் தேவையையும் நிதி ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு நவீனமயமாக்கும் பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 25]

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங்களில் இருந்து எடுக்கப்படும் மின்சாரத்திற்கு அதிகமாகச் செலவாவதைப்போல அல்லாமல் புனல் மின் நிலையங்களுக்கு குறைந்த செலவாகிறது. உதாரணத்திற்கு மேட்டூர் அணையிலே இருக்கின்ற புனல் மின்சார நிலையத்தில் 4x50 மெகா வாட் கொண்ட ஒரு அமைப்பும், அதுபோல 4x10 மெகா வாட் கொண்ட அமைப்பும் அதுபோல காவிரி படுகையில் நீர்மின் திட்டம் கிட்டத்தட்ட 4 இருக்கின்றன. அதை errection செய்கின்றபோதுதான் செலவு ஏற்படுகிறது. ஒரு பத்தாண்டு காலத்திற்குள்ளாக அதனுடைய முதலீட்டை மீண்டும் அரசு பெற்றுவிடுகிறது. எனவே, இந்த நீர் மின் நிலையங்களை மேம்படுத்தி புதிய தொழில் நுட்பத்தோடு கொண்டு வருவோம் என்று சொன்னால், கூடுதலான மின்சாரம் கிடைக்கும். எனவே, இதுபோன்ற புனல் மின் நிலையங்கள் தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன அவற்றில் எத்தனை இப்போது புதிய நீர் மின் நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 31 புனல் மின் நிலையங்கள் இயங்கி வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மேட்டூர் புனல் மின் நிலையத்தினுடைய பழைய இயந்திரங்களை சீர் செய்கின்ற வகையில் நவீனமயமாக்கும்பொருட்டு. இப்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனா ஜப்பான் போன்ற நாடுகளில் ஆற்றிலே குறுக்கே அணை கட்டி பல்க் டர்பைன் என்கின்ற சிறுசிறு மின் சக்திகளை உருவாக்கி அந்த நாடுகளினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். அதுபோல நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற காவிரிப் படுகையான தருமபுரி மாவட்டத்திலே உள்ள ஒகேனக்கல் நீர் வீழ்ச்சியில் கிட்டத்தட்ட 800 மெகா வாட் மின்சாரத்தை எடுக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பு உள்ள இந்த புனல் மின் திட்டத்தை, கர்நாடகா எல்லையிலே இருக்கிற காரணத்தினால் கர்நாடகாவோடு பேசி, தமிழகத்தில் அந்தப் புனல் மின் திட்டத்தை கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுக்கின்றபட்சத்தில், வளர்ந்து வருகிற

[2003 ஏப்ரல் 25

தருமபுரி மாவட்டம்· பல்வேறு தொழில் துறையில் முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, இந்தத் திட்டம் கொண்டு வரப்படுமா என்பதையும் காவிரி படுகையில் ஏற்கெனவே இருக்கின்ற நீர்மின் திட்டத்தைப்போல இந்தப் படுகையில் மேலும் புதியதாக திட்டம் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். காவிரி படுகையில் பவானி கட்டளை என்கின்ற இடத்தில் மூன்று அணைக்கட்டுகள் இப்போது கட்ட திட்டமிடப்பட்டு, அதில் பவானி கட்டளை நம்பர்-1, இதற்கு பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதனை கிட்டத்தட்ட 196 கோடி ரூபாய் செலவிலே கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதுமாதிரி, பவானி கட்டளை-2-க்கு 138 கோடியே, 40 இலட்சம் ரூபாய் செலவிலே திட்டமிடப்பட்டு, பவானி கட்டளை-3 என்கிற திட்டத்திற்கு 141 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, இப்போது அந்த இரண்டும், பவானி கட்டளை-2-ம், 3-ம் பத்தாவது ஐந்தாண்டுகாலத் திட்டத்தின்கீழ் கட்டி முடிப்பதற்கு.....

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) மணி, ஏதேனும் கேட்க வேண்டுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று National Hydro Power Corporation-னோடு இணைந்து, தமிழ்நாட்டினுடைய எல்லையில் இரண்டு இடங்களிலும், கர்நாடக மாநிலத்தில் இரண்டு இடங்களிலும் அணைகள் கட்டி, அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்துகொண்டிருக்கின்றன. இதைத் துரிதப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், அம்மா அவர்கள் 7-9-2001 அன்று கர்நாடக முதல்வர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அதனை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் பகுதியிலே காவிரி ஆற்றின் குறுக்கே புனல் மின் நிலையம் அமைப்பதற்கு பல்வேறு காலகட்டங்களிலே முயற்சிகள் எடுத்தும்கூட, இதுவரையிலே நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களிடத்திலே பேசி, கர்நாடக முதலமைச்சரிடத்திலும், அந்தத் துறையினுடைய கர்நாடக அமைச்சரிடத்திலும் பேசி, அதற்குண்டான நல்ல திட்டங்கள் எல்லாம் முடிவிற்கு வரும் நிலையிலே அவர் இறந்துவிட்டார். நான்கூட, கர்நாடக அமைச்சர், என்னுடைய நண்பர் என்ற காரணத்தினாலே, அவரிடத்திலே சமீபத்திலேகூட பேசினேன். எங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நீங்கள் தயாராக இருப்பீர்கள் என்று சொன்னால், நாங்கள் ஒப்பந்தத்திலே கையெழுத்து இடுவதற்குத் தயாராக இருப்பதாக அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே அங்கே மின் உற்பத்தி கூடுதலாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நீங்கள் நண்பர் என்கிற முறையிலே பேசிப் பிரயோசனம் இல்லை. அரசுக்கு அந்த மாதிரி......

**திரு. ஜி.கே. மணி:** அரசுக்குத்தான்; அதனால்தான் அரசுக்குக் கோரிக்கை வைக்கிறேன். அவர் சொல்லிவிட்டார். அதற்காக அரசுக்குக் கோரிக்கை வைக்கிறேன். ஆகவே, அந்தவகையிலே கர்நாடக அரசு தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு அந்த ஒப்பந்தத்தை விரைந்து முடிப்பதற்கு முன்வருமா? அதேநேரத்திலே மேட்டூர் அணைக்குக் கீழே தடுப்பு அணைகள் மூலமாக மின்சார உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நவீன தொழில் நுட்ப வசதியுடன் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. புதிதாகவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இங்கே பல்வேறு இடங்களிலே தடுப்பு அணைகள் கட்டினால், அதன் மூலம் மின் உற்பத்தி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலே, மேலும் அதிலே தடுப்பு அணைகளைக் கட்டி, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுவரைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 7-9-2001 அன்றே கர்நாடக முதல்வருக்குக் கடிதம் மூலம் எழுதி, நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். இன்னும் கர்நாடக மாநிலத்திலிருந்து அதற்கான பதில் வரவில்லை. அதேநேரத்தில், தமிழ்நாடு எல்லைக்குள் இரண்டு இடங்களிலும், கர்நாடக மாநிலத்தில் இரண்டு இடங்களிலும் போடுவதற்காக National Hydro Power Corporation என்பதுடன் இணைந்துதான் செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்நாடகத்தில் தேர்வு செய்யப்பட்ட இரண்டு இடங்களும் வனப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தால் Forest permission இன்னும் கிடைக்கவில்லை. கர்நாடக மாநிலத்தில் இருக்கின்ற அந்த வனப் பகுதியில் Forest permission கிடைத்தவுடனே, இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படும். விரைவிலே இதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல் 18)

1—

**பனை மரங்களை அகற்றுதல்**

**வினா 8649—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திருசெந்தூர்-கன்னியாகுமரி கடற்கரை நெடுஞ்சாலையில் கரைச்சுத்து உவரி அருகில் சாலையின் இருபுறமும் ஆபத்தை விளைவிக்கும் நிலையில் உள்ள பனை மரங்களை அகற்றிட அரசு முன்வருமா?



2003 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள திருச்செந்தூர் - கன்னியாகுமரி கடற்கரை நெடுஞ்சாலையில் கரைச்சுத்து உவரி அருகில் சாலையின் இருபுறமும் உள்ள ஆபத்தை விளைவிக்கும் பனை மரங்களை அகற்ற இராதாபுரம் வட்டாட்சியர் மூலம் ஏலம் விடப்பட்டு பனை மரங்களை அகற்ற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

**வழக்குகள்**

**வினா 29839—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் விரைவு நீதிமன்றம் அமைக்கப்பட்ட பிறகு முடிக்கப்பட்ட வழக்குகள் விவரம் என்ன?

(ஆ) நிலுவையில் உள்ள வழக்குகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள விரைவு நீதிமன்றம் 24-11-2001 முதல் செயல்பட்டு வருகிறது. ஜனவரி திங்கள் 2003 நிலவரப்படி இந்த விரைவு நீதிமன்றத்தால் 147 வழக்குகள் முடிக்கப்பட்டன. 815 வழக்குகள் நிலுவையில் உள்ளன.*

3—

**உதவித் தொகை**

**வினா 12500—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் 2000-2001 ஆம் ஆண்டில் கோயில்களில் முறைப்படி பூஜை செய்ய உதவித்தொகை கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

*(ஆ)* அவற்றில் உதவித் தொகை வழங்கப்பட்ட மனுக்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாட்டில் 2000-2001ஆம் ஆண்டில் கோயில்களில் முறைப்படி பூஜை செய்ய உதவித் தொகை கோரி வந்த மனுக்கள்:32.

*(ஆ)* உதவித் தொகை வழங்கப்பட்ட மனுக்கள்: 32.

**4—**

**ஓய்வூதியம்**

**வினா 20293—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு இந்து சமய (மற்றும்) அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகரில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்கள் எத்தனை உள்ளன?

*(ஆ)* இந்தத் திருக்கோயில்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு கிராம பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகரத்தில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்கள் 22. அத்திருக்கோயில்களில்



20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் எவரும் கிராம பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கிட விண்ணப்பிக்கவில்லை. மேற்படி திருக்கோயில்கள் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாததால் பணிபுரிந்தவர்கள் பற்றிய விவரங்கள் இல்லை.

**5—**

**ஆசிரியர் பணி**

**வினா 15025—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் கடந்த காலத்தில் முறைசாராக் கல்வி திட்டத்தின்கீழ் பணியாற்றிய பி.எட். பட்டதாரி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பணி வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் துறையின்கீழ் செயல்படுத்தப்பட்ட தொடர்கல்வி நிலையங்களில் பள்ளி இறுதி வகுப்பு படித்தவர்கள் பட்டப் படிப்பு மற்றும் ஆசிரியர் பயிற்சி பட்டப்படிப்பு போன்ற பல்வேறு கல்வித் தகுதி படைத்தவர்கள் தொடர்பாளர்களாகப் பணியாற்றி வந்தனர். இவர்களின் பணி முற்றிலும் தற்காலிகமானது. இத்திட்டம் நிலையான திட்டமன்று. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தொடங்கி முடிக்கப்பட்ட திட்டம். தொடர்கல்வி நிலையங்கள், மைய அரசு நிதியுடன் செயல்பட்டு வந்தன. 31-3-1996-வுடன் இத்திட்டம் முடித்துக்கொள்ளப்பட்டு, இதில் பணியாற்றிய தொடர்பாளர்கள் அனைவரும் திட்டப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். எனவே, இவர்களுக்கு ஆசிரியர் பணியிடம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

6—

**விளையாட்டு மைதானம்**

**வினா 16495—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துத் தருவது சார்பாக அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

7—

**நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா 20637—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, கீழ்காயம்பட்டியிலுள்ள துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் பஞ்சாயத்து, கீழ்காயம்பட்டியில் உள்ள துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி அரசாணை எண்.135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

8—

**நடுநிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 20639—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்கொண்டான் விடுதி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்கொண்டான் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை எண்.135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

9—

## நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா 20641—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், குப்பையன்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வி (SSA) என்னும் மைய, மாநில அரசு திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை ஒன்றியம், குப்பையன்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை எண் 135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

10—

## பணி வழங்குதல்

**வினா 22321—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முறைசாரா மற்றும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் தொடர்கல்வி நிலையத் தொடர்பாளர்களுக்கு மதிப்பூதியம் நிர்ணயித்து மீண்டும் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வந்த தொடர்கல்வி நிலையங்கள் மைய அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தன. இத்திட்டம் நிலையான திட்டமன்று. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தொடங்கி முடிக்கப்பட்ட திட்டம். எனவே, இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட தொடர்பாளர்கள் அனைவரும் முழுவதும் தற்காலிக அடிப்படையிலும், எந்நேரத்திலும் முன்னறிவிப்பின்றி பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்ற அடிப்படையிலும் பணியமர்த்தப்பட்டவர்கள். 31-8-1996 உடன் இத்திட்டம் முடித்துக்கொள்ளப்பட்டு, இதில் பணியாற்றிய தொடர்பாளர்கள் அனைவரும் திட்டப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். எனவே, இவர்களுக்கு மீண்டும் பணி வழங்க இயலாது. எனினும், தற்போது மைய அரசு முழு உதவியுடன் நடைபெற்று வரும் வளர்கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படும் வளர்கல்வி மையங்களில் மையப் பொறுப்பாளர்கள் மற்றும் உதவி மையப் பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்படும்போது ஏற்கெனவே அறிவொளி திட்டத்தின்கீழ் செயல்பட்டு வந்த முழு எழுத்தறிவுத் திட்டம், தொடர்கல்வித் திட்டம் மற்றும் மைய அரசின் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவந்த ஜனசிக்ஷா நிலையங்களில் (JSN) பணிபுரிந்தவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11—

## நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்

**வினா 24291—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் அள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை அரசு நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, மஞ்ச நாயக்கன் அள்ளி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

12—

**நடுநிலைப் பள்ளி**

**வினா 24292—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டயன அள்ளி ஊராட்சியில் புதியதாக நடுநிலைப் பள்ளி துவங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, கெண்டயன அள்ளி ஊராட்சியில் புதிய நடுநிலைப் பள்ளி துவங்கிட அரசாணை (நிலை) எண் 135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



13—

**காளான் சாகுபடி**

**வினா 28854—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் காளான் சாகுபடி மற்றும் பயிற்சி செயல் முறை விளக்கம் அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் தோட்டக்கலைத் துறை மூலமாக மைய அரசின் காளான் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் (2002-2003ல்) 600 விவசாயிகளுக்கு ரூ.6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் காளான் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2001-2002-ல் 500 விவசாயிகளுக்கு காளான் சாகுபடி பயிற்சிக்கு ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

14—

**கட்டடம்**

**வினா 767—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து தாதம்பட்டிக்கு ஊட்டச் சத்துணவு மையம் மற்றும் கட்டடம கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், நடுப்பட்டி பஞ்சாயத்து தாதம்பட்டிக்கு ஊட்டச் சத்துணவு மையக் கட்டடம் கட்டுவதற்கு உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணி-3, திட்டத்தில் மத்திய அரசின் அனுமதியோ, நிதி ஒதுக்கீடோ இல்லை என்றாலும், மத்திய, மாநில அரசு அல்லாத மற்ற நிதி நிறுவனங்களின் கடன் உதவியில் மையக் கட்டடங்கள் கட்டுமானப் பணி மேற்கொள்ளும்போது இக்கருத்துரு கவனத்தில் கொள்ளப்படும்.

**15—**

### அங்கன்வாடி மையம்

**வினா 6982—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதியில், முத்துக்கொண்டாபுரம் மற்றும் பல்வேறு அங்கன்வாடி மையங்கள் போதிய பராமரிப்பு இன்றி உள்ளதால் அவற்றை சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு வட்டாரம், முத்துக்கொண்டாபுரம் அங்கன்வாடி மையம் மற்றும் பல மையங்கள் நடப்பு ஆண்டான 2002-2003-ல் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பழுதுபார்க்கும் பணிக்கு ரூ.18.545 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**16—**

### முதியோர் ஓய்வூதியம்

**வினா 10113—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் முதியோர் விண்ணப்பித்த மனுக்கள் சுமார் 500-க்கு மேல் உள்ளன என்பதை அரசு அறியுமா? அதை வழங்குவதற்கு அரசு வழிவகை செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் முதியோர் ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பித்த மனுக்கள் அனைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு முறையே பைசல் செய்யப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவரால் பிரதிமாதம் அனைத்து வறியோர் நிவாரணத் திட்ட வட்டாட்சியர்களைக் கொண்டும், மாதமிருமுறை தனித் துணை ஆட்சியர் உள்ளிட்ட மண்டல அலுவலர்களைக் கொண்டும் கூட்டங்கள் நடத்தப்பட்டு, ஓய்வூதியம் கோரி பெறப்படும் மனுக்கள் அனைத்தும் 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்டும் வருகின்றன. எனவே, வினாவில் கூறியதுபோல் 500-க்கு மேற்பட்ட மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**17—**

### குழந்தைகள் காப்பகக் கட்டடம்

**வினா 10186—திரு பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் முழுக்குத்துறை எம்.ஜி.ஆர். திட்டு கிராமங்களில் குழந்தைகள் காப்பகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில், எம்.ஜி.ஆர். திட்டு கிராமத்தில் உள்ள சமுதாய ஊட்டச்சத்து மையம் நல்ல நிலையில் உள்ள அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. முழுக்குத்துறையில் உள்ள மையத்திற்கு அரசுக் கட்டடம் இல்லாததால் ஊராட்சி ஒன்றிய

[2003 ஏப்ரல் 25

பள்ளியின் ஒரு பகுதியில் வாடகை இல்லாமல் இயங்கி வருகிறது. உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள் 3-வது திட்டத்தில் மையக் கட்டடங்கள் கட்டுவதற்கென, மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு இல்லாத நிலையில், அரசு சாரா மற்ற நிதி நிறுவனங்களில் கடன் உதவியில் கட்டுமானப் பணி மேற்கொள்ளும்போது இக்கருத்துருவும் பரிசீலிக்கப்படும்.

**18—**

**கழிப்பிட வசதி**

**வினா 10651—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், மே. காளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவுக் கட்டடம் பழுது அடைந்துள்ளதால், இதை இந்நிதியாண்டில் அரசு புதுப்பித்து, கழிப்பிட வசதி செய்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், மே. காளிப்பட்டி துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தை 2001-2002-ல் 11-வது நிதி குழு மானிய நிதி ரூ.15,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்பட்டு மையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**19—**

**பாலர் பள்ளி**

**வினா 10769—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 25]

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒ.ஜி. அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டியில் பாலர் பள்ளி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஒ.ஜி. அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டியின் அருகில் 1 கிலோ மீட்டர் தொலைவிலேயே வேலம்பட்டி பிரதான அங்கன்வாடி சத்துணவு மையம் செயல்பட்டு வருவதால், மேற்படி வேலம்பட்டி பிரதான மையத்தின் துணை கிராமமாக தட்டாரப்பட்டி கிராமத்தினை பாவித்து 1-12-2002 முதல் சம்பந்தப்பட்ட பிரதான மையத்தின் சத்துணவு உதவியாளர் மூலம் இணை உணவு 35 குழந்தைகளுக்கும், மதிய உணவு 14 குழந்தைகளுக்கும் சமைத்து எடுத்துச் சென்று வழங்கப்பட்டு வருகிறது.

**20—**

**கட்டடம்**

**வினா 14705—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, வார்டு எண்.13 மற்றும் 14 சத்துணவுக் கூடத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி எல்லையில் வார்டு எண்.13 மேட்டுத்தெரு சத்துணவு மையம் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. வார்டு எண்.14-ல் சத்துணவு மையம் எதுவும் இல்லை. வார்டு எண்.13-ல் நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லாத காரணத்தால் வார்டு எண்.14-ல் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சட்டமன்ற

[2003 ஏப்ரல் 25

உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புதியதாக சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு 23-6-1999 முதல் மையம் செயல்பட்டு வருகிறது.

21—

**இலவச அரிசி**

**வினா 21010—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகை பெறுகின்றவர்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மாதம் எத்தனை கிலோ அரிசி வழங்கப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) முதியோர் உதவித் தொகை பெறுகின்றவர்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது.

(ஆ) மதிய உணவு திட்டத்தில் பங்கெடுப்போருக்கு மாதத்திற்கு 2 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது. மதிய உணவுத் திட்டத்தில் பங்கெடுக்காதவர்களுக்கு மாதத்திற்கு 4 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

22—

**கடனுதவி**

**வினா 24294—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சியில் 20-க்கும் மேற்பட்ட மகளிர் குழுக்கள் இருப்பதால் மகளிர் சுய உதவித் திட்டத்தின்கீழ் சுயதொழில் செய்ய கடன் உதவி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகமரை ஊராட்சியில் 31-12-2002 முடிய 104 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 93 சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு (credit linked) கடன் வழங்கப்படுகிறது. திட்ட நடைமுறைப்படி சுய உதவிக் குழுக்கள் துவங்கி 6 மாதம் முடிவடைந்த சுய உதவிக் குழுக்களுக்குத்தான் கடன் தொடர்பு ஏற்படுத்தி கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனவே குழுக்கள் துவங்கி இன்னும் 6 மாதங்கள் முடிவடையாத மீதமுள்ள 11 சுய உதவிக் குழுக்களுக்கு தொண்டு நிறுவனம் மூலம் கடன் தொடர்பு ஏற்படுத்தி கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

23—

**தையல் இயந்திரம்**

**வினா 25639—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலத் துறையின்கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் செயல்பாட்டில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 2001-2002-ல் சேலம் மாவட்டத்தில் எவ்வளவு நபர்கள் பயனடைந்தார்கள்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக நலத் துறையின்கீழ் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் அரசின் செயல்பாட்டில் உள்ளது.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டிற்கு எந்த மாவட்டத்திற்குமே தையல் இயந்திரங்கள் வழங்கப்படவில்லை. ஏனெனில், அரசு ஆணையின்படி 2001-2002 ஆம் ஆண்டிற்கான தையல் இயந்திரங்கள் வாங்குவதற்கு நடத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பங்கு பெற்ற ஒரு ஒப்பந்தக்காரரால் தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளதால், 2001-2002

[2003 ஏப்ரல் 25

ஆம் ஆண்டுக்கான ஒப்பந்தப்புள்ளி இன்று வரை முடிவு செய்யப்படவில்லை.

எனினும், 2000-2001 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு 649 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**24—**

### உதவித் தொகை

**வினா 26932—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஊனமுற்றோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை எவ்வளவு நபர்கள் மொத்தம் பெறுகிறார்கள்?

(ஆ) இதில் மத்திய அரசு பங்கு எவ்வளவு, மாநில அரசு பங்குத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 30-10-2002 வரை பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| (1) ஆதரவற்ற ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர்கள். | .. | 48,504 |
| (2) ஆதரவற்ற விதவைகள் உதவித் தொகை பெறுபவர்கள். | .. | 4,96,614 |
| (3) ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களில் உதவித் தொகை பெறுபவர்கள். | .. | 82,874 |
| (4) ஆதரவற்ற முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள். | .. | 4,91,641 |
| (5) ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித் தொகை பெறுபவர்கள் | .. | 1,01,467 |
| மொத்தம் | .. | 12,21,100 |



2003 ஏப்ரல் 25]

(ஆ) ஆதரவற்ற முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் (65 வயதுக்கு மேற்பட்ட முதியோர், விதவைகள், ஊனமுற்றவர்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விவசாயக் கூலிகள்) போன்றவர்களில் மத்திய அரசால் வரையறுக்கப்பட்ட 4,30,300 நபர்களுக்கு மட்டும் மத்திய அரசு பங்குத் தொகையாக ரூ.75/-ம், மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.125/-ம், சேர்த்து நபர் ஒருவருக்கு மொத்தம் ரூ.200/- மாதம் ஒன்றுக்கு முதியோர் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய நபர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் வழங்கப்படும் முதியோர் உதவித் தொகை முழுவதும் மாநில அரசின் செலவினத்தைச் சார்ந்ததாகும்.

**25—**

### கடனுதவி

**வினா 26946—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார்கோயில் ஒன்றியத்திலுள்ள ஏழை பெண்களுக்கு சிறுதொழில் தொடங்கவும், தையல் இயந்திரம் வழங்கவும், வங்கியின் மூலம் கடனுதவி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார்கோயில் ஒன்றியத்தில், மகளிர் திட்டத்தின் மூலம் 284 சுய உதவிக் குழுக்கள் (4,634 ஏழைப் பெண் உறுப்பினர்கள்) ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்குப் பலவிதமான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 268 சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சியும், 284 குழு உறுப்பினர்களுக்கு சுய உதவிக் குழு பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 25

மேலும் (1) தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி 563 நபர்களுக்கும்,

(2) சுயமாக தொழில் துவங்க தொழில் பயிற்சி 38 நபர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. தரம் பிரிக்கப்பட்ட 276 சுய உதவிக் குழுக்களிலிருந்து 197 குழுக்களுக்கு பல அரசு திட்டங்கள் மூலம் ரூ. 47.17 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட கடனிலிருந்து பல ஏழைப் பெண்கள் சிறு தொழில் தொடங்கி உள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர் அவர்களுக்கு மேலும் கேட்கின்ற தொழிலில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்களிடம் அதற்கான திட்ட அறிக்கையை பெறப்பட்டு தேவையான கடன் வங்கி மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மகளிர் திட்டத்தில் அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களும் தையல் இயந்திரம் வழங்குவதற்கு என்று தனியாக திட்டம் எதுவும் இல்லை. உறுப்பினர்கள் தையல் தொழில் செய்ய விரும்பி கேட்டிருந்தால்/கேட்டால் அவர்களுக்கு வங்கி மூலம் தையல் இயந்திரம் கடன் வழங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. தையல் இயந்திரம் வாங்குவதற்கென தனியாக திட்டம் எதுவும் இல்லை.

**26—**

## கட்டடம்

**வினா 27122—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூடி பேசுவதற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு ஊராட்சி அலுவலகத்திலும் தனி அறை கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் கூடிப் பேசுவதற்கு ஏதுவாக கூட்டம் போடவும், கலந்துரையாடவும் தங்கள் பகுதியிலுள்ள அரசு கட்டடங்களான அங்கன்வாடி மையங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசு ஆணை (நிலை) எண் 33, சமூக நலம் மற்றும்



2003 ஏப்ரல் 25]

சத்துணவுத் திட்டத் துறை, நாள்: 8-3-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் சுய உதவிக் குழுமங்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ரூ. 1 இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

**27—**

## சத்துணவுக் கட்டடம்

**வினா 29030—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியில் உள்ள எல்லனூர், அக்கரைப்பட்டி, வெள்ளாலபுரம் ஆகிய பகுதிகளுக்கு சத்துணவு மையக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியில் உள்ள எல்லனூரில் புதியதாக பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு, பள்ளிக்கூடம், வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பள்ளிக்கு புதியதாக கட்டடம் கட்டித்தரும்போது சத்துணவு மையத்திற்கும் புதிய சத்துணவுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

அக்கரைப்பட்டி மற்றும் வெள்ளாலபுரம் ஆகிய சத்துணவு மையங்களில் சத்துணவு மையக் கட்டடம் கட்டப்பட்டு, நல்ல நிலையில் செயல்பாட்டில் உள்ளது.

[2003 ஏப்ரல் 25

**28—**

### கொத்தடிமைகள்

**வினா 27435—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலிருந்து மீட்டு வரப்பட்ட கொத்தடிமைகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அரசு என்னென்ன உதவிகள் அளித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆந்திர மாநிலத்திலிருந்து கொத்தடிமைத் தளையிலிருந்து 103 பேர்கள் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டு அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு அந்தந்த மாவட்ட நிர்வாகம் மூலம் ரூ.1,000/- உடனடி நிதியுதவியாகவும், பின்பு ரூ.19,000/-க்கு மறுவாழ்வு உதவிகளாகவும் வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**29—**

### நியாயவிலைக் கடைக்கு கட்டடம்

**வினா 6465—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, பொழிக்கரை கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையை அபிவிருத்தி செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி கூட்டுறவு பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் செயல்படும் சேரன்மகாதேவி நியாயவிலைக் கடை எண்.2 இல் இருந்து பொழிக்கரையில் ஒரு பகுதிநேரக் கடை ஊராட்சிக்கு சொந்தமான வானொலி அறையில் இயங்கி வருகிறது. அரசாணை வரையறைகளின்படி பகுதிநேர நியாயவிலைக் கடைக்கு ஊர்ப் பொதுமக்களே இலவச கட்டட வசதி செய்து கொடுக்க வேண்டும். எனவே, அரசு திட்டங்களின் கீழ் பகுதிநேரக் கடைகளுக்கு கட்டட வசதி செய்து கொடுக்க வாய்ப்பில்லை.

**30—**

### நியாயவிலைக் கடை

**வினா 25139—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நார்த்தம்பட்டி நியாயவிலைக் கடையில் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் சீராக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், நார்த்தம்பட்டி நியாயவிலைக் கடை மூலம் அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய பொருட்கள் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என அறியப்படுகிறது.

31—

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 26475—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதிக்குட்பட்ட வேலம்பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து தட்டாரப்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, வேலம்பட்டி நியாயவிலைக் கடையில் 411 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையை சேர்ந்த தட்டாரப்பட்டி பகுதியில் 91 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகளும் மற்றும் பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க்கடையில் 500-க்கு குறையாத குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்ற வரையறைகள் பொருந்தாததால் தட்டாரப்பட்டியில் பகுதிநேரக் கடை திறக்க வாய்ப்பில்லை.

32—

### நியாயவிலைக் கடை

**வினா 28515—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், கன்னியாங்குப்பம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு முயற்சி மேற்கொள்ளுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கோ. பவழங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டில் உள்ள புலியூர் நியாயவிலைக் கடையில் 623 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. புலியூர் நியாயவிலைக் கடையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கன்னியாங்குப்பத்தில் 122 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரையறை பொருந்தாததால் கன்னியாங்குப்பத்தில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

33—

### பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா 28952—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியிலுள்ள முழுநேர நியாயவிலைக் கடைகள் எவ்வளவு? மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் எண்ணிக்கை விவரம் என்ன?

(ஆ) வாடகைக் கட்டடத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதியில் 84 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 20 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

[2003 ஏப்ரல் 25

(ஆ) 80 நியாயவிலைக் கடைகள் வாடகை கட்டடங்களில் செயல்படுகின்றன.

34-

## நியாயவிலைக் கிளைக் கடை

**வினா 30314—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் ஊராட்சி, வடிவம்மன்பட்டி நியாயவிலைக் கிளைக்கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நாங்குநேரி-இராதாபுரம் தாலுகா விற்பனைச் சங்கம் நடத்தும் கோட்டைக் கருங்குளம் நியாயவிலைக் கடையில் 496 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். இவற்றில் 260 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள வடிவம்மன்பட்டி கோட்டைக்கருங்குளம் தாய்க்கடையிலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இரண்டு நியாயவிலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவும், தாய்க்கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் நிறைவு பெறாததால் வடிவம்மன்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.



2003 ஏப்ரல் 25]

35—

## நியாயவிலைக் கடைகள்

**வினா 30321—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் எத்தனை நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகிறது?

(ஆ) இதில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதியில் 95 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 27 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

36—

## பகுதிநேர நியாயவிலைக் கடை

**வினா 30838—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கானங்குப்பம் கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

[2003 ஏப்ரல் 25

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பெரிய புறங்கேணிதாய் நியாய விலைக்கடை 432 குடும்ப அட்டைகளுடன் இயங்குகிறது. கானங்குப்பம் பகுதியில் 146 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும். மற்றும் பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க்கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்கிற வரையறைகள் நிறைவு பெறாததால் கானங்குப்பம் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**37—**

## கடன் முறையில் மளிகைப் பொருட்கள்

**வினா 31195—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் மளிகைப் பொருட்கள் கடன் முறையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடைகளில் மளிகைப் பொருட்கள் கடன் முறையில் வழங்கப்படுவது இல்லை. அரசு ஊழியர்களுக்கு மட்டும் கடன் முறையில் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டால் பல்வேறு நடைமுறை சிக்கலுக்கு வழிவகுப்பதுடன் மற்றவர்களும் இதேச் சலுகையினைக் கோர வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே, அரசு ஊழியர்களுக்கு கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் மளிகைப் பொருட்கள் கடன் முறையில் வழங்க வாய்ப்பில்லை.



2003 ஏப்ரல் 25]

**38—**

## தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுதுபார்த்தல்

**வினா 7573—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் பல ஊர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படாமலும், வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் பழுதடைந்து இருப்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதுபட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை ஊராட்சி நிதியிலிருந்து ஊராட்சி மன்றத் தலைவர்களே சரிசெய்துக் கொள்ளலாம். ஊராட்சி நிதிநிலையைப் பொறுத்து தொலைக்காட்சிப் பெட்டிகளை நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு வாங்கிக் கொள்ளலாம்.

**39—**

## குடிநீர் வசதி

**வினா 10518—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், பழைய கொண்டாஞ்சேரியில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வசதி செய்தும் கிடைக்கவில்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்?

[2003 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம் பழைய கொண்டாஞ்சேரியில் தற்போது குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**40—**

**குடிநீர்**

**வினா 10543—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வே. சத்திரம் கிராம மக்கள் குடிநீர் பற்றாக்குறையினால் மிகவும் அவதியுறுவதால், குடிநீர் வசதி செய்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட வே. சத்திரம் கிராம மக்களுக்கு இராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்கீழ் பொதுமக்கள் 10% பங்குத் தொகை செலுத்தினால் 90% அரசு நிதியுடன் ஊராட்சி மன்றத் தலைவரோ குடிநீர் வசதி செய்துகொள்ளலாம்.

**41—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா 11821—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி, வீரவநல்லூர் பேரூராட்சி, செண்பகவல்லியம்மன் கோவில் கீழத் தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?



2003 ஏப்ரல் 25]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வீரவல்லூர் பேரூராட்சி, செண்பகவல்லி அம்மன் கோவில் கிழக்குத்தெருவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. எனவே ஆழ்துளைக் கிணறு அமைக்கத் தேவையில்லை.

**42—**

**சாலை அமைத்தல்**

**வினா 11886—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட அனவரதநல்லூர் தெருவிற்கு திண்காரை (சிமெண்ட்) சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி, அனவரதநல்லூர் தெருவில் திண்காரை சாலை அமைக்க இயலாது. தற்போது பேரூராட்சிப் பகுதிகளில் திண்காரை சாலை அமைக்க அனுமதி இல்லை. போதுமான நிதியும் இல்லை. எனவே, இப்பணி செய்ய இயலாது.

**43—**

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 11910—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட கீழச்செவல் (காந்தி தெரு முதல் கீழச்செவல் பாலம் முடிய) தார்ச்சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

[2003 ஏப்ரல் 25

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட கீழச்செவல் (காந்தி தெரு முதல் கீழச்செவல் பாலம் முடிய) 0.100 கி.மீ. சாலையை அபிவிருத்தி செய்ய பேரூராட்சியில் நிதி வசதி இல்லை. எனவே, இப்பணி செய்ய இயலாது.

**44—**

### நவீன கழிப்பிட வசதி

**வினா 11923—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி. மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட நேசமாணிக்கம் சன்னதி தெருவில் நவீன கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதியில் மேலச்செவல் பேரூராட்சிக்கு உட்பட்ட நேசமாணிக்கம் சன்னதி தெருவில் நவீனக் கழிப்பிடம் கட்ட பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. போதுமான இட வசதியும் இல்லை. எனவே. இப்பணி செய்ய இயலாது.

**45—**

### குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா 12013—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, திரு. வி.க. தெரு, ஆலடிமணி நகர். கீழ் 1-ஆம் தெரு பகுதிகளில் பொது குடிநீர்க் குழாய் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2003 ஏப்ரல் 25]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி திரு. வி.க. தெரு, ஆலடிமணி நகர் கீழ் 4-ஆம் தெருவில் 2 ஆழ்குழாய்க் கிணறும், 3 பொது நல்லியும் உள்ளது. கோரிக்கை பெறப்படும்பட்சத்தில் கூடுதல் குடிநீர்க் குழாய் அமைக்கப்படும்.

**46—**

### சாலை செப்பனிடல்

**வினா 13341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பிஎன்பட்டி பேரூராட்சி, கருமலைக்கூடல்-புதுப்பட்டி சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என். பட்டி பேரூராட்சி, கருமலைக்கூடல்—புதுப்பட்டி சாலை தற்போது ஒத்தையடிப் பாதையாக உள்ளது. இதன் நீளம் 1.00 கி.மீ. இப்பாதையை கப்பிச் சாலையாக மாற்றி பிறகு தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூபாய் 6.00 இலட்சம் தேவைப்படுகிறது. இதற்குப் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை என்பதால் மேற்காண் பணி செயல்படுத்த இயலாது.

**47—**

### தெரு விளக்கு வசதி

**வினா 13762—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 25

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, பட்டக்காரன்கொட்டாய் அரசு மேல்நிலைப்பள்ளியுள்ள பகுதியில் குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, பட்டக்காரன் கொட்டாய் அரசு மேல்நிலைப்பள்ளி பகுதியில் ஏற்கெனவே ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இப்பகுதியில் தெருவிளக்கு ஒன்றும் நல்ல நிலையில் எரிகிறது.

**48—**

**குடிநீர் வசதி**

**வினா 14854—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, தளவாய் அள்ளியை அடுத்த சிறுகளூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்குச் சமையற்கூடம் அமைத்து, குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002ஆம் ஆண்டிற்கான சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் பென்னாகரம் தொகுதி, தளவாய் அள்ளியை அடுத்த சிறுகளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சமையற்கூடம் கட்டும் பணி மேற்கொள்ள மன்ற அங்கீகாரம்



2003 ஏப்ரல் 25]

வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது. பள்ளியின் அருகில் 100 மீட்டர் தூரத்தில் குடிநீர் பெற ஆழ்துளைக் கிணறு அமைந்துள்ளது.

**49—**

**நோயாளி ஊர்தி வண்டி**

**வினா 16121—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் நோயாளி ஊர்தி வண்டி (ஆம்புலன்ஸ்) ஓட்டுநர் பதவியை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மண்டலம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் நோயாளி ஊர்தி (ஆம்புலன்ஸ்) ஓட்டுநர் பணியிடம் ஏதும் தோற்றுவிக்கப்படவில்லை. மேலும், நோயாளி ஊர்தி வண்டி வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

**50—**

**இலாபம்**

**வினா 16592—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001ஆம் ஆண்டில் தமிழகத்தில் வீட்டுவசதி வாரியம் எவ்வளவு இலாபம் ஈட்டித் தந்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

[2003 ஏப்ரல் 25

2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ.1.06 கோடி நட்டத்தில் இயங்கி உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) கோவை மாநகர், கணபதி பகுதி இரட்டைக் கொலைகள்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகர், கணபதி பகுதியிலே இரட்டைக் கொலைகள் நடைபெற்று இன்று ஆறாவது நாள். ஞாயிற்றுக்கிழமை மாலையிலே கொலைகள் நடைபெற்றன. மிகவும் மர்மமான முறையிலே அந்தக் கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் புலன் விசாரணையிலே எந்தவிதமான முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுகுறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம் உங்களிடத்திலே கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்பதைச் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஐந்து நாட்களாகிவிட்டன, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; அரசுக்குத் தகவல் வருவது என்பது, ஒரு புலன் விசாரணை சம்பந்தமாக, தொடர்புடைய முழுமையான விளக்கங்கள் வந்ததற்குப் பிறகுதான் அரசுக்குத் தகவல் வரும். அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்.



2003 ஏப்ரல் 25]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஐந்து நாட்கள் கழித்தும்கூட, எடுத்துக்கொள்ளவில்லையென்று சொன்னால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கே பொருள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; என் ஆய்வில் இருக்கிறது. எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான். இது உங்கள் தொகுதி சம்பந்தப்பட்டது என்கிற காரணத்தால் நீங்கள் எழுப்புகிறீர்கள். எல்லாப் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினைகள்தான்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தொகுதி மட்டும் அல்ல. கோவை நகரத்திலே பீதி நிலவுகிறது. அந்த அளவிற்கு அங்கே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாட்டில் எத்தனையோ முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. அது என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ள முடியும் என்று பிறகு சொல்கிறேன்.

### (ஆ) அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில் இன்று பயின்று கொண்டிருக்கக்கூடிய மாணவர்களும், அதேபோலப் பயிற்சி டாக்டர்களும் போராட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; பத்திரிகைகளிலேயெல்லாம் பார்த்தோம். அமைச்சர் அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; இப்போது எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் ஏதோ பேசிக்கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமாக

ஏதாவது சொல்ல முடிந்தால் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை; ஒன்றும் எடுக்கவில்லை இப்போது. அமைச்சர் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இரண்டு விஷயங்கள். அதையும் சேர்த்துச் சொல்லிவிட்டால், அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; சேர்த்தெல்லாம் சொல்வதற்கு இல்லை. இப்போது பிரச்சினையை எடுக்கவில்லை.

*முற்பகல் 11-05*

**திரு. ஐ. கணேசன்:** அதனை நாங்கள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், அறையிலே வந்து பேசி அதைப்பற்றி முடிவு பண்ணித்தான் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்கள், மருத்துவப் பட்டப் படிப்பு பயிற்சி மாணவர்கள் சில கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பொழுது போராட்டம் என்ற அளவிற்குத் தொடர்ந்து மருத்துவமனைகளையும், வகுப்புகளையும் புறக்கணித்து வருகிறார்கள். அவர்களேகூட, பலமுறை என்னை நேரிலே வந்து சந்தித்தார்கள். அவர்களுடைய சந்தேகங்களுக்கெல்லாம் நான் விளக்கம் அளித்திருக்கிறேன். ஆனால், திடீரென்று எந்தவித முன்னறிவிப்புமின்றி, அவர்கள் அரசுக்குக்கூட தகவல் கொடுக்காமல், திடீரென்று வகுப்புகளையும், மருத்துவமனைகளில் பயிற்சி எடுத்துக்கொள்ளாமலும் புறக்கணித்து வருகிறார்கள். இருந்தாலும், அதிகாரிகள் மட்டத்தில், அதாவது மருத்துவக் கல்லூரி இயக்குநர் அவர்கள், அவர்களோடு பேசி, போராட்ட அறிவிப்பை கைவிட்டுவிட்டு, நீங்கள் அரசோடு பேசுவதற்கு வாருங்கள் என்று நேற்றையதினம் அவர்கள் அழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இனி மாணவ மாணவிகள்தான்—அந்தப் பயிற்சி மருத்துவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள்தான் அரசோடு பேசுவதற்குத் தயாராக இருந்தால் அவர்கள்தான்—முடிவு எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட போராட்ட அறிவிப்பை அவர்கள் கைவிட்டு, அரசோடு அல்லது துறை அதிகாரிகளோடு பேச வந்தால்



நாங்கள் அவர்களுடைய கோரிக்கைகளை நிச்சயமாகப் பரிசீலித்து, அதற்கு நல்ல முடிவு எடுக்கிறோம். இருந்தாலும், அவர்களைப் பாதிக்கின்ற வகையிலே எந்த முடிவையும் இந்த அரசு எடுத்துவிடவில்லை. எனவே, நான் இந்த மன்றத்தின் வாயிலாக பயிற்சி மாணவர்களையும், பட்டமேற்படிப்பு மாணவர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, அவர்கள் பயிற்சியிலே அக்கறை கொள்ளவேண்டுமென்று நான் அவர்களை இந்த மன்றத்தின் வாயிலாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுடைய மகன்—ஒரே மகன் என்று நினைக்கிறேன்—அவர்கூட, சென்னை மருத்துவக் கல்லூரியிலே பயிற்சி மருத்துவராகத்தான் இருக்கிறார். எனவே, அவரும் பெற்றோர்கள் சார்பிலே மாணவர்களுக்கு ஓர் அறிவுரையாகச் சொல்லி, மாணவர்கள் இந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு, பயிற்சியிலே அக்கறைக் கொள்ளவேண்டும். காரணம், அவர்கள் எல்லாம் சிறந்த மருத்துவர்களாக வரவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. அவர்களுக்காக இலட்சக்கணக்கிலே, கோடிக்கணக்கிலே அரசு செலவு செய்துகொண்டு இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் நீங்கள் வேண்டுகோள் வைக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுகுறித்து மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பிரச்சினையே எடுத்துக்கொள்ளவில்லை. ஞானசேகரன் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய காரணத்தினால் உங்களை பதில் சொல்லச் சொன்னேன். ஞானசேகரன் பெயர் பத்திரிகையிலே வரும்போது, ஜி.கே. மணி பெயரையும் சேர்த்துப் போடுங்கள். கணேசன் பெயரையும் சேர்த்துப் போடுங்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,...

**திரு. ஜி. பழனிசாமி:** தலைவர் அவர்களே,...

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே,...

[2003 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** இதே போன்று கோரிக்கைகளை வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம், ஐ. கணேசன் இன்னும் நன்மாறன் போன்றவர்களும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து அவர்களும் மாணவர்களுக்கு நல்ல அறிவுரை வழங்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளாதபோது இப்படிக் குறுக்கு வழியிலே புகுவது நல்லதல்ல.

**(இ) ஸ்ரீ வைகுண்டம்-விவசாயச் சங்கத் தலைவர் கொலை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தூத்துக்குடி மாவட்டத்தில், ஸ்ரீ வைகுண்டம் என்ற இடத்திலே 22ஆம் தேதி இரவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தாலுகா விவசாய சங்கத்தினுடைய தலைவர் மகாலிங்கம் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதுசம்பந்தமாக நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறோம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை இன்றைக்குத்தான் நீங்கள் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, மணி.

**திரு. ஜி.கே. மணி:** கல்வி அமைச்சர் சொன்னார்களே, அதிலே ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; அந்தப் பிரச்சினையை இப்போது எடுக்கவில்லை.



2003 ஏப்ரல் 25]

## 3. கவன ஈர்ப்பு

### கடலூர் சிப்காட் வளாகம், இரசாயனத் தொழிற்சாலைகள் கழிவுகளால் மக்கள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தி. வேல் முருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் சிப்காட் வளாகத்திலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் பல நோய்கள் மக்களிடையே பரவுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

கடலூர் மாவட்டம், குடிக்காடு கிராமத்தில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகம் 1984ஆம் ஆண்டு தமிழக அரசால் இரசாயனத் தொழிற்சாலைகளுக்கென அமைக்கப்பட்டது. இத்தொழில் வளாகத்தில் தற்போது 29 தொழிற்சாலைகள் இயக்கத்தில் உள்ளன. இத்தொழிற்சாலைகள் அனைத்தும் தனித்தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து கழிவுநீரைச் சுத்திகரித்து வருகின்றன.

முன்பு, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீர் சிப்காட் வடிகால் வழியாகவும், உப்பனாற்றிலும், ஆவியாக்குதல் மூலமும், தொழிற்சாலையில் உள்ள தோட்டங்களிலும் வெளியேற்றப்பட்டு வந்ததால் நிலத்தடிநீர் மாசு ஏற்படுவதாகப் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தன. கடலூர் சமூக நீதிப் பிரிவு கொடுத்த மனுவின் மீது மாநில மனித உரிமை ஆணையம் அக்டோபர் 1998ஆம் ஆண்டு சிப்காட் வளாகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும்

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2003 ஏப்ரல் 25

பார்வையிட்டு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை பாதுகாப்பான முறையில் குழாயின் மூலம் எடுத்துச் சென்று கடலில் விடவேண்டும் என்று பரிந்துரை செய்தது. அதன்படி, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை, கடலில் வெளியேற்றுவதற்காக திருவாளர்கள் கடலூர் சிப்காட் தொழிற்சாலைகள் பொது உபயோக நிறுவனம் (M/s. Cuddalore Sipcot Industries Common Utilities Ltd.) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம், கோவாவில் உள்ள தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் (National Institute of Oceanography) மூலம் ஆய்வு மேற்கொண்டு, அதன் பரிந்துரைப்படி சிப்காட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குழாய் மூலம் எடுத்துச் சென்று கடலில் கலக்கச் செய்கின்றது. இத்திட்டம் மார்ச் 2000-த்திலிருந்து செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் தரத்தையும், இறுதியாகக் கடலில் வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தையும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகின்றது. மேலும், சிப்காட் வளாகத்தைச் சுற்றி 3 இடங்களில் நிலத்தடிநீரின் தன்மையும் மற்றும் உப்பனாற்றின் நீரின் தன்மையும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அவற்றின் தரம் வாரியம் நிர்ணயித்துள்ள தர அளவுக்குப் பொதுவாக உட்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் ஏற்படும் திடக்கழிவுகள் முறையே அந்தந்த தொழிற்சாலைகள் வளாகத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அனைத்து தொழிற்சாலைகளும் காற்று மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை அமைத்து இயக்கி வருகின்றன. சிப்காட் வளாகச் சுற்றுச் சூழல் காற்றின் தன்மையைத் தொடர்ந்து கண்காணிக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர் கண்காணிப்பு கருவியை அமைத்து (Continuous Ambient Air Quality Monitoring Station) இயக்கி வருகின்றது.

மாசுக் கட்டுப்பாடு சாதனங்களைச் சரிவர இயக்காத சில தொழிற்சாலைகள் மீது வாரியம் முகாந்திர அறிக்கை கொடுத்தும், மூடுதல் உத்தரவு கொடுத்தும் மற்றும் மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் திறனை மேம்படுத்தக் கோரியும் ஆணையிட்டது. அதன்படி தொழிற்சாலைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இப்பகுதி மக்களிடையே மர்மநோய் ஏதும் உருவாகியுள்ளதா என்பது குறித்து அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையிடம் விபரங்கள் கோரி இதுகுறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆய்வு செய்யும். சிப்காட் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.



2003 ஏப்ரல் 25]

*முற்பகல் 11-10*

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் நன்கு படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே, தொழிற்சாலைகள் அனைத்தும் தனித் தனியாக, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்து, கழிவுநீரை வெளியேற்றுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி தனித் தனியாக கழிவுநீரை ஆலைகள் வெளியேற்றவில்லை, கழிவுநீரை வெளியேற்றுவதற்கு தேசிய கடலாராய்ச்சி நிறுவனம் ஒரு குறிப்பிட்ட எல்லையை நிர்ணயித்திருக்கிறது; அப்படி அந்தக் குறிப்பிட்ட எல்லையை நிர்ணயிப்பின்பேரில்தான், தேசிய கடலாராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டலின் பேரில்தான், சிப்காட் வளாகத்திலே இருக்கக்கூடிய இரசாயனத் தொழிற்சாலைகள், கழிவுநீரை வெளியேற்றுகின்றனவா? அப்படி வெளியேற்றுகின்ற அந்தக் கழிவுநீரினால், அப்பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற மக்களுடைய பிரச்சினைகளை—கடந்த மாதம்கூட அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் தலைமையில் நாங்கள் சென்றிருந்தபோதுகூட, அப்பகுதி மக்களிடத்திலே, உயிருக்கு ஆபத்தான மிகப் பெரிய அவலநிலை அங்கே ஏற்பட்டிருந்ததை நாங்கள் கண்கூடாகக் கண்டோம். இன்னும் சொல்லப்போனால், கடலூர் சிப்காட்டிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பார்த்தது, பேசியது எல்லாம் சொல்லக்கூடாது; ஒரு கேள்விதான் கேட்கலாம்.

**திரு. தி. வேல் முருகன்:** கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' நோய் போன்ற மிகப் பெரிய ஒரு நோய் அப்பகுதியிலே பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன், நல்லதையே நினையுங்கள்; ஏற்கெனவே பீதியிலே இருக்கும்போது பயமுறுத்தாதீர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பயமுறுத்தவில்லை. நான் உங்களிடத்திலே அனுமதி பெற்றிருக்கிறேன். கடந்த மாதம் 'தினமலர்' பத்திரிகையிலே, ஒருபக்கச் செய்தி...

*(உறுப்பினர் பத்திரிகையை அவைக்குக் காண்பித்தார்.)*

காற்றிலே கலக்கும் கழிவுகள் மற்றும் கழிவு நீர் போன்றவற்றால், 'சிப்காட்' பகுதி மக்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படும் அபாயம் இருக்கிறது என்று பல்வேறு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. நான் இங்கு கேள்வி கேட்க விரும்புவது, கடந்த 2002-2003 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே, அதிக அளவில் மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ், 175 பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படித் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் கடலூர் சிப்காட்டிலேயுள்ள தொழிற்சாலைகள் வருகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல, அபாயகாமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்; அப்படி 180 தொழிற்சாலைகளை, நம்முடைய அரசும், நம்முடைய மாசுக் கட்டுப்பாடு வாரியமும் கண்டறிந்துள்ளன. அப்படிக் கண்டறியப்பட்ட 180 தொழிற்சாலைகளில், கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற சிப்காட் வளாகத்தினுடைய இரசாயனத் தொழிற்சாலைகளும் வருகின்றனவா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் சிப்காட் வளாகத்தில், 12 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கு 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்டு, இன்னின்ன சாதனங்கள் பொருத்த வேண்டும்; காற்றுத் தடுப்புச் சாதனம் மற்றும் நீர்த் தடுப்புச் சாதனம் பொருத்த வேண்டுமென்று 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் கொடுத்த 'நோட்டீஸ்'-க்கு அவர்கள் தக்க மாற்று வேலைகளைச் செய்து இன்றைக்கு அந்த 12 தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. அருமை உறுப்பினர் அவர்கள், அந்தத் தொழிற்சாலைகளால் மர்ம நோய் அங்கு பரவுவதாகச் சொன்னார்கள். மாசுக் கட்டுப்பாடு வாரியம், 4-4-2003 அன்று குடும்ப நலத் துறை மற்றும் சுகாதாரத் துறைகளிடத்தில், அந்தப் பகுதி மக்களிடையே Health study செய்யச் சொல்லி கோரிக்கை வைத்துள்ளது. அந்த ஆய்வு அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கையை மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுக்கும் என்று உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினராகப்





பொறுப்பேற்றதிலிருந்து, மூன்றாவது முறையாக, சிப்காட் வளாகத்தைப் பற்றி, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன். மூன்று சுற்றுச்சூழல் அமைச்சர்களும் மாறியிருக்கிறார்கள். இன்றைக்கு மூன்றாவது அமைச்சர் இதற்கு பதிலளித்திருக்கிறார். தொடர்ந்து, இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது; அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று பதில் வருகிறதே தவிர, அங்கிருக்கக்கூடிய மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் சரியான எந்தச் செயலையுமே செய்யவில்லை. இப்போது மிகப் பெரிய அபாயகரமான ஆலைக் கழிவுகள், அமெரிக்கா, ஐரோப்பாவில் தடை செய்யப்பட்டிருக்கின்ற ஹைட்ரோ ஆசிட் மற்றும் பல்வேறு ஆசிட் வகைகள் எல்லாம் அங்கு தயார் செய்யப்படுகின்றன. ஒரு நாளைக்கு ஆயிரம் மெட்ரிக் டன் ஆசிட் வகைகள் கையாளப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** அந்தவகையில், அங்கு மிகப் பெரிய ஒரு சுற்றுச்சூழல் பாதிப்பும், குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்பட்டு, அப்பகுதிமக்களினுடைய வாழ்க்கை, இன்றைக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அப்பகுதி மக்களினுடைய வாழ்வியல் உரிமையைப் பாதுகாக்கின்ற வகையில், தேசிய மனித உரிமை ஆணையம் வலியுறுத்தியதைப்போல, அப்பகுதி மக்களுடைய சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் சிறப்பாக மாசுக் கட்டுப்பாடு வாரியம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு எவ்வளவு அக்கறை பொதுமக்களிடம் இருக்கிறதோ, அதைவிட அக்கறை தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சுகாதாரத் துறை, குடும்ப நலத் துறைகளின் ஆய்வு அறிக்கை வந்தவுடன், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 23 முதல் 26 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானங்கள்

### குழுக்களுக்குத் தேர்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவிற்கு





பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன்கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 25

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**(ஈ) உரிமைக் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2003-2004 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அறிவிப்பு

**குழுக்களுக்குத் தேர்தல்-கால அட்டவணை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்.



2003 ஏப்ரல் 25] [பேரவைத் தலைவர்]

விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத்தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

வேட்புத்தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**கோரிக்கை எண் 43-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 43, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திருமதி பா. வளர்மதி] [2003 ஏப்ரல் 25

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.444,82,78,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 733, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4667, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5228, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6536, திரு. அ.இரா. மலையப்பசாமி.



2003 ஏப்ரல் 25]

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7111, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7414, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7534, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2003 ஏப்ரல் 25

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7972, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8135, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8457, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8834, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4277, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6012, திரு. வை. சிவபுண்ணியம்.



2003 ஏப்ரல் 25]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4822, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6845, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7066, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7467, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5742, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6184, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கிட அரசு ஒரு சிறப்பு நிதியை திருவள்ளூர் மாவட்டத்திற்கு ஒதுக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7858, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள உடல்



ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வாகனம் வழங்கிட அரசு ஒரு சிறப்பு நிதியை திருப்பத்தூர் தொகுதிக்கு ஒதுக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5819, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5030, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முதியோர், ஊனமுற்றோர் உதவித் தொகை கேட்டு விண்ணப்பம் செய்தவர்களுக்கு தாமதமின்றி உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6890, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி தொகுதியில் முதியோர், ஆதரவற்றோர் உதவித் தொகைகளை வழங்குவதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5335, செல்வி க. பாலபாரதி:

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விதவைப் பெண்கள், முதியவர்கள், ஊனமுற்றவர்கள் உதவித் தொகை பெறுவதற்கான விதிமுறைகளை தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7693, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் உள்ளவர்களுக்கு அரசு தரும் நிதியுதவியைப் பெறுவதில் ஏற்படும் இடையூறுகளைக் களைய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1286, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று இன்னும் வழங்கப்படாத முதியோர் ஓய்வூதியம் வழங்குவதுடன், வட்டாட்சியர் மூலம் பொதுமக்களிடம் முதியோர் ஓய்வூதிய விண்ணப்பங்கள் கேட்டுப்பெற வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6976, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதரவற்ற முதியோர்களுக்கு, மகன் இருந்தாலும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6290, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த விதவைகள், முதியோர் உதவித் தொகைகள் வழங்குவது பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளது.

அவர்களுக்கு மீண்டும் உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4726, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெண் சிசு கொலைகள் நடைபெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4563, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பள்ளி குழந்தைகளுக்கு அளிக்கப்படும் சத்துணவின் தரம் உயர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6125, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4719, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



'சத்துணவுத் திட்டத்தில் மீண்டும் முட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4698, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சத்துணவுக்கூடங்களில் பொருள்கள் வாங்க முன்பணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.444,82,78,000/-ல் ரூ.100/-. குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6322, திரு. கே.வி. முரளிதரன்.

**THIRU K.V. MURALIDHARAN:** Hon. Speaker Sir, 'To discuss the need to regulate the employees of Noon Meal Programme as State Government employees', I move—

"that the sum of Rs. 444,82,78,000/- allocated under Revenue account under Demand No.43 Social Welfare and Nutritious Meal Programme Department be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும்

[திருமதி பா. வளர்மதி] [2003 ஏப்ரல் 25

அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையில் என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார உயர்வு தாழ்வுகளையும், சமுதாய உயர்வு தாழ்வுகளையும் நீக்கி சமதர்ம சமுதாயத்தைப் படைப்பதுதான் சமூக நலத் துறையின் அடிப்படை நோக்கமாக உள்ளது. இதன் காரணமாகத்தான் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மகளிர், ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களுக்கான பல்வேறு நலத் திட்டங்கள் இத்துறையால் அறிவிக்கப்பட்டுள்ளன.

எளியவர்களுக்குச் செய்யக்கூடிய உதவி, இறைவனுக்குச் செய்யக்கூடிய காணிக்கை என்று சொல்வார்கள். சிறப்பான பல திட்டங்கள் கொள்கையாக அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, திட்டங்கள் முறையாக காலத்தில் சரியாக அதிகாரிகளால் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக பெண் குழந்தைகளுக்கான திட்டத்தில், 1998-99ஆம் வருடம் முதல் தஞ்சை மாவட்டத்தில் பல விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளதாகத் தெரிகிறது. ஆனால் இந்த வருடம் இதற்கு, நிலுவையில் உள்ளதற்கும் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். அது முறையாக காலத்திலே சென்றுவிடும் என்று நம்புகிறேன்.

---

@ 199 முதல் 284 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2003 ஏப்ரல் 25] [திரு. என்.ஆர். ரங்கராஜன்]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறநிலையத் துறை மூலமாக ஏழை தம்பதியர்கள் 1008 பேர்களுக்கு இலவசத் திருமணம் செய்து வைத்து, மஞ்சள் தாலி ஆட வேண்டிய கழுத்திலே தங்கத் தாலியை ஆட வைத்துள்ளார்கள். தங்கத்தையும் இரண்டு கிராமிலிருந்து நான்கு கிராம் உயர்த்தி, உயர்ந்த நோக்கத்தோடு அதை அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

முற்பகல் 11-25

அரசால் நடத்தப்படக்கூடிய பல்வேறு திருமண உதவித் திட்டங்கள் நிறைய இருக்கின்றன. அவை அந்தந்தப் பயனாளிகளுக்கு காலத்திலே சென்று அடைய வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களுடைய திட்டங்களைப் பொறுத்த அளவிலே வருங்காலங்களிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து—கணக்கெடுப்பில் நேற்று நீங்கள் கூறியவாறு சுமார் 10 இலட்சம் ஊனமுற்றவர்கள் இருக்கின்றார்கள் என்று கூறியிருந்தீர்கள்—அந்தப் பத்து இலட்சம் பேரும் முழுமையாக பயன் அடையக் கூடிய வகையிலே, அவர்களுக்கான உதவித் தொகைகள், உபகரணங்கள், ஆகியவற்றை வழங்கி முழுமையான பயனை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதையும் என்னுடைய கோரிக்கையாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையைப் பொறுத்தவரையிலே பல இளைஞர்கள் விபத்துகளால் பாதிக்கப்பட்டு முதுகுத் தண்டு பாதிப்பினால் வாழ்க்கையை இழந்துள்ளார்கள். அவர்களுக்காக வரக்கூடிய காலங்களில் சிறப்பானத் திட்டங்களை வகுத்து, அவர்களுடைய சிகிச்சைக்காகவும், சிகிச்சை பலனின்றி கால், கை முடக்கப்பட்டு இருப்பவர்களுக்கு, உதவித் தொகை வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரையிலே, சிறப்பாக பென்ஷன் நீண்ட நாட்களாக கொடுக்கப்பட்டு வந்தாலும்கூட, மகன் இருப்பவர்களுக்கு கிடையாது என்ற ஒரு நிபந்தனை இருக்கிறது. இன்று பலர் தனிக் குடித்தனம் சென்றுவிட்டக் காரணத்தாலே—குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கூட்டுக் குடும்ப வாழ்க்கை

[திரு. என்.ஆர் ரங்கராஜன்] [2003 ஏப்ரல் 25

என்பது, மிகக் குறைந்துகொண்டு இருக்கிறது. தனிக் குடித்தனம் அதிகமாகி விட்டன எத்தனையோ பேர் தனிக் குடுத்தனங்கள் சென்று விட்ட பிறகு, அந்தத் தாய் தந்தையர் ஆதாரவற்று இருக்கின்றனர். எனவே, 65 வயதிற்கு மேற்பட்டவர்கள்—அவர்கள் எல்லாம் எத்தனை நாட்கள் இருந்துவிடப் போகிறார்கள்? எனவே, அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு 65 வயதிற்கு மேற்பட்ட ஆதாரவற்றோருக்கு எந்தவிதமான நிபந்தனையுமின்றி நீங்கள் உதவித் தொகை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்கு பொறுப்புணர்ச்சி வரவேண்டும், தங்களுடைய பெற்றோரை மிகவும் அன்போடு கவனித்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட ஒரு விதிமுறையையே அரசு விதித்திருக்கிறது. பெரும்பாலும் பெண் பிள்ளைகள் இருக்கிற வீட்டில்தான் பெற்றோரை மிகவும் பரிவோடு கவனித்துக்கொள்கிறார்கள்—ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய ஆண்களுக்கெல்லாம் இதுபோல அறிவுறுத்தி, அரசினுடைய கொள்கையை அவர்களுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. யதார்த்த வாழ்க்கையைப் பொறுத்தவரையிலே எந்த அளவுக்கு நீங்கள் சொல்லக்கூடியது இருக்கிறது என்று தெரியவில்லை. இருந்தாலும், நாங்கள் எல்லாம் முயற்சிக்கிறோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே விதவை திருமணங்களைப் பொறுத்தவரையில் இந்தச் சமுதாயத்தால் இன்னும் முழுவதுமாக மனரீதியாக அங்கீகரிக்கப்படவில்லை. அதைப் பொறுத்தவரையில், அரசு விதவைத் திருமணங்களுக்கு செய்யக்கூடிய உதவிகளைப் பற்றி, அதிகமான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த, விளம்பரங்களைச் செய்து, அந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையிலே, மறுமணத்தை ஊக்குவிக்க உதவித் தொகையை உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 25] [திரு. என்.ஆர். ரங்கராஜன்]

அதைப்போலவே மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டம் மகளிர் சுயநிதிக் குழுக்கள். கிராமப்புறங்களிலிருந்த இந்தத் திட்டம் இன்று நகர்ப்புறங்களிலும், நல்ல முறையிலே நடைபெற்று வருகின்றது. ஆனால் நாம் எந்த அளவிற்கு பரிந்துரை செய்தாலும்கூட, வங்கிகளைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு உதவித் தொகையைக் கொடுப்பதிலே அவர்கள் இழுத்தடிக்கிறார்கள். அதை அரசு அவர்களிடம் பேசி, நல்லமுறையிலே தீர்வு காண வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொதுத் துறையில், தனியார் துறையிலே, எல்லாம் V.R.S. கொடுத்து, ஆட்குறைப்பு செய்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே....

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளோடு தொடர்பு வைத்து, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் தொண்டு நிறுவனங்களை அவர்களோடு இணைத்து இருக்கிறோம். தொண்டு நிறுவனங்கள் மூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், எந்த அளவிலே போய் கடன் பெறுவது என்கிற வழிமுறைகளை, அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும், அவர்களுக்குத் துணையாக இருப்பதற்காகவும்தான் அரசாங்கத்திலே அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனங்களை அவர்களோடு இணைத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** தொண்டு நிறுவனங்கள் சொல்லியும்கூட வங்கி அதிகாரிகள் கேட்பதில்லை என்கின்ற புகார் இருப்பதினால் கூறுகின்றேன். அதற்காக ஆவன செய்ய அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பொதுத் துறை, தனியார் துறைகளில் எல்லாம், V.R.S. கொடுத்து ஆட்குறைப்பு செய்கின்ற நேரத்திலே, இன்று வருடா வருடம் படித்துவிட்டு வேலையில்லாப் பட்டதாரிகள் அதிகரித்துக் கொண்டு உள்ளார்கள். அவர்களுக்கு வழிகாட்ட வேண்டியது நமது அரசினுடைய கடமை. மகளிர் சுய உதவிக் குழுவைப்போல படித்த இளைஞர்களுக்கும் ஓர் இளைஞர் கூட்டமைப்பு ஏற்படுத்தி அவர்கள் தொழில்புரிய கடன் உதவி அளித்து, ஆண்களுக்கான கூட்டமைப்பையும் ஏற்படுத்திய மாண்புமிகு பெண் முதல்வர் என்ற சிறப்பினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெறவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

அதைப்போலவே, சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே அந்தப் பணியாளர்களுடைய சில கோரிக்கைகளைத் தங்கள் முன்பாக நான் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்துவிட்டு, வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற நோக்கத்திலும், தருமபுரி போன்ற மாவட்டங்களில் ஏழ்மையின் காரணமாக கிராமப் பகுதிகளில் வாழும் ஆண்கள், இளைஞர்கள், தீவிரவாத அமைப்புகளுடன் போய்ச் சேரும் சூழ்நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவும், ஆண்கள் அடங்கிய சுய உதவிக் குழுக்களையும் இந்த அரசு ஏற்கெனவே அமைத்துள்ளது. இதுவும் இப்போது பெருமளவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதிலுரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாளர்கள் சிலருடைய கோரிக்கைகளை இந்த நேரத்தில் உங்கள் முன்னாலே நான் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். தமிழக அரசைப் பொறுத்தவரையிலே 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரக்கூடிய சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் திட்டம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே சத்துணவுப் பணியாளர்களுக்குப் பொது வருங்கால வைப்புத் திட்டம் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளி சத்துணவு மையத்திலும், அங்கன்வாடி மையங்களிலும் சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு இரண்டுவிதமான ஊதியங்கள் வழங்கப்படுகின்றன. அதைச் சமமான ஊதியமாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக் கொடைத் தொகையை ஓய்வுபெற்ற உடனேயே வழங்குவதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு



கேட்டுக்கொண்டு, வால்பாறை பகுதியிலே தொடர்ந்து சத்துணவுக் கூடங்களை யானைகள் இடித்துத் தள்ளி வரக்கூடிய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன; ஆகையால், சத்துணவுக் கூடங்களை உறுதியான நிலையிலே உள்ள கட்டடங்களாக அந்தப் பகுதியிலே கட்டித் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் தங்கள் முன்னால் வைத்துவிட்டு, எனது தொகுதிப் பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

பட்டுக்கோட்டை நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவர கடந்த வருடம் மானியக் கோரிக்கையில் கேட்டிருந்தேன். தற்போது அதற்கான ஆய்வுப் பணிகள் சம்பந்தப்பட்ட துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்காக தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகரிலே இருக்கக்கூடிய அதிகமான ஜனத்தொகையைக் கணக்கில் எடுத்து, பட்டுக்கோட்டை நகரில் ஒரு தாலுகா காவல் நிலையம் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய கோரிக்கை. வெண்டாக்கோட்டை என்ற அணைக்கட்டு ஒன்று இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய shutters எல்லாம் மிகவும் பழுதடைந்து மிக மோசமான நிலையிலே இருக்கிறது. அதன் வழியாக தண்ணீர் leak ஆகி, வீணாகக் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதை, வரக்கூடிய ஜூன் மாதத்திற்குள் தாங்கள் பழுது நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று பட்டுக்கோட்டை மக்கள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய கோரிக்கை. மதுக்கூரில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் மிக மோசமாக இருக்கிறது என்று அவர்களிடம் நான் நேரில் கூறியிருந்தேன். அதை 30 அல்லது 32 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகரில் அதிக வாகனங்கள் உள்ளதைக் கருத்தில்கொண்டு மண்டலப் போக்குவரத்து அலுவலகத்தினுடைய கிளை [illegible] வேண்டுமென்று

185079

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதிராம்பட்டினம் மீனவர்கள் கடலுக்குச் செல்லக்கூடிய சாலை மிகப் பழுதடைந்து, மீனவர்கள் மழைக்காலங்களில் அங்கே சென்று வர முடியாத சூழ்நிலை உள்ளது. இதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நீண்ட நாட்களாக செயல்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதைச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை—மதுக்கூர்—மன்னார்குடி நெடுஞ்சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து, மதுக்கூர், பாடிக்காடு துணை மின்நிலையம் 110 KVA-ஆக ஆகி, வேலை நடைபெற்று வருகிறது. அதை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் அளிக்கப்படவில்லை. ஆகவே இவ்வாணையத்திற்கு அதிக அதிகாரம் அளித்து, மகளிருக்கு உதவுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, எனக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளித்த மாண்புமிகு...

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் ஆணையத்திற்கு முழு அதிகாரம் தந்திருக்கிற ஒரே தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர், பெண் முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அம்மா அவர்கள்தான். ஆகவே, நீங்கள் பத்திரிகைகளில்கூட பார்த்திருக்கக்கூடும். தமிழ்நாட்டில் பல பகுதிகளிலே பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களையெல்லாம், அந்த மகளிர் ஆணையத்தினுடைய தலைவியே எங்களுடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்ற குழு உறுப்பினர்களோடு கூட்டம் நடத்தி, பல்வேறு புகார் மனுக்களையெல்லாம், புகார் கொடுத்திருக்கின்ற சம்பந்தப்பட்ட அனைவரையும் ஓர் இடத்திற்கு வரவழைத்து, அந்தப் புகாரின்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, உத்தரவிட்டு, பல்வேறு துறைகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதிகாரம் என்று சொன்னால் அது எந்தவகையிலே? அவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைத்து, துறையின் பதிலைப் பெற்றதற்குப் பிறகுதான், நடவடிக்கை என்பது விசாரணையின்போது தெளிவாக வரும். ஆகவே, அதுவரை அதிகாரம் என்று உறுப்பினர் எதைச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை, ஒரு Recommendatory Body-ஆக இருக்கிறது என்றுதான் சொன்னார்கள். அதற்குத்தான் இதைக் கூறினேன். உங்களுடைய பதிலுக்கு நன்றி. மேலும், இந்த மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ஆண்டிவேல்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றாத நெஞ்சுறுதி, குலையாத கொள்கை உள்ளம் கொண்ட மாதர்குல மாணிக்கமே! எண்ணியதை முடிக்கும் எழுச்சியின் உருவமே! இருளினை விரட்டும் இலட்சிய தீபமே! தீவிரவாதத்தை ஒடுக்க சிறப்புத் திட்டங்கள் மூலம் மக்களை ஒருங்கிணைக்கும் மகா சக்தியே! சீறிவரும் தடைகளை சிதறடிக்கும் சிங்கநிகர் தலைவியே! நலிந்தோரை நாடிச் சென்று நல உதவிகள் வழங்கிடும் நன்மணியே! நீதியின் நிழல் பூமியில் சஞ்சரிப்பதற்காக தர்மத்தின் கருவறையில் பிரசவித்த சத்ய ஜோதியே! கல்லாமையே இல்லை எனும் தமிழகத்தை உருவாக்க உழைக்கும் தலைவாணியே! இல்லாமையே இல்லை எனும் தமிழகத்தைக் காண உழைக்கும் தமிழ் அன்னையே! வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலாரைப் போன்று பக்தர்களுக்கு ஆலயந்தோறும் அன்னதானத் திட்டம் வழங்கிய அன்னமிட்ட தாயே! அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் கணினிமயமாக்கி கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்குச் சிறப்பான வழிமுறை கண்டு, சட்டமன்ற உறுப்பினர்களான எங்களுக்கும் கணினிப் பயிற்சி வழங்கிட்ட காவியத் தலைவியே! என்னைப் பெற்றெடுத்த தாயால் சொந்த ஊரை மட்டும் அறிந்த நிலையில் இருந்த என்னை, வேடசந்தூர் தொகுதிக்கு வேட்பாளராக அடையாளம் காட்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் பேராதரவால் வெற்றியும் பெறச் செய்து, பேரறிஞர் பெருந்தகை அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., மாதர்குல மாணிக்கம் இதய

[திரு. ப. ஆண்டிவேல்] [2003 ஏப்ரல் 25

• தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரெல்லாம் அமர்ந்த இந்த மாமன்றத்தில், எனக்கு இந்த சமூக நலம் மற்றும் சத்துணவு மானியக் கோரிக்கையில் பேச அனுமதி வழங்கி, தமிழகத்திற்கே அடையாளம் காட்டிய மக்கள் தலைவி, எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு, மாண்புமிகு காவல் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி இன்றையதினம் என் உரையை தங்கள் பாதங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனை புரிந்திடும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1992 ஆம் ஆண்டில் தொடங்கிய தொட்டில் குழந்தைத் திட்டம் வரலாற்றின் மைல் கல்லாக விளங்குகிறது எனச் சொல்வதில் பெருமையடைகிறேன். இந்நிதியாண்டில் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.5.70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டை வரவேற்கிறேன்.

பெண் சிசுக் கொலையைத் தடுக்கும்பொருட்டு, பெண் குழந்தை ஒன்று மட்டும் இருந்தால் ரூ.22,200/-ம், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ. 15,200/-ம் வைப்பீடு செய்து, வைப்பீட்டின் வட்டியை குழந்தைகள் கல்விச் செலவிற்கென மாதம் ரூ.150/- பெறப்பட்டு, பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளித்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைப் பொதுமக்கள் பாராட்டுகிறார்கள்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் மேம்பாடு அடைந்திட மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரால் 1993 ஆம் ஆண்டு 15 அம்ச குழந்தைகள் திட்டம் தொடங்கி செயல்படுத்தப்பட்டு, அதன் வளர்ச்சி மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம் எனப் பெயர் மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் என்றென்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் காக்கும் தாயாக செயலாற்றுகிறார்கள் என்பதை நாடறியும்.

முற்பகல் 11-40

தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனம் சார்ந்த பிளஸ்-1, பிளஸ்-2 மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கி அரிய சாதனை படைத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களை மாணவச் சமுதாயமே பாராட்டுகிறது.



2003 ஏப்ரல் 25] [திரு. ப. ஆண்டிவேல்]

புரட்சித் தலைவரால் சத்துணவுத் திட்டம் நன்கு செயல்படுத்தப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் குழந்தைகளின் ஊட்டச்சத்து பெருகிட, குழந்தைகள் படிப்புத் திறன் விகிதம் அதிகரித்திட, பள்ளிக்கு குழந்தைகளை அதிக எண்ணிக்கையில் வரவழைத்திட, ஆற்றல்மிக்க இச்சத்துணவுத் திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கென ரூ. 659.39 கோடி மைய மற்றும் மாநில அரசுகளும், உலக வங்கியும் வழங்கி செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைக்குப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

குழந்தைகள் நல மையங்கள், பள்ளி சத்துணவு மையங்கள் மொத்தம் 71,757-ல் பயனடைவோர் எண்ணிக்கை 82,77,036 ஆகும். இதன்மூலம் குழந்தைகள் நலன் காக்கும் தாயாக எங்கள் அன்னை விளங்குகிறார் என்பதில் பெருமைகொள்வோம்.

இந்த நிதியாண்டில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மைய பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கிட ரூ.100 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டத்தில் 2003 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை கிராமப்புறங்களில் 1,01,883 சுய உதவிக் குழுக்கள் 17,42,414 உறுப்பினர்களைக் கொண்டும், நகரங்களில் 24,223 சுய உதவிக் குழுக்கள் 4,07,779 உறுப்பினர்களோடு மொத்தம் 1,26,106 சுய உதவிக் குழுக்கள் 21,50,193 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இக்குழுக்களின் சேமிப்பு ரூ.288 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டு வாழ்க்கைத் திறன் மற்றும் தொழிற் பயிற்சித் திட்டத்திற்கு ரூ.100 இலட்சமும், 25,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்க ரூ. 87.50 இலட்சமும், தேனி மாவட்டத்தில் முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு ரூ.55.30 இலட்சமும் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992-93-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஊனமுற்றோர் கல்வி உதவித் திட்டத்திற்காக இந்த நிதியாண்டில் ரூ.92.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத

உதவுபவர்களுக்கு உதவித் தொகை இவ்வாண்டில் ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடும், பார்வை உள்ளவர், பார்வையற்றோரைத் திருமணம் செய்தால், ஊனமுற்றவர்களை மணக்கும் ஊனமில்லாதவர்கள், காது கேளாத, வாய் பேசாதவரைத் திருமணம் செய்யும் ஊனமில்லாத நபர்களுக்கு இந்த நிதியாண்டில் ரூ.30.30 இலட்சம் ஒதுக்கீடும் செய்து, இதன்மூலம் 390 பயனாளிகள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

திக்கற்ற மகளிருக்காக 'அபய நிலையம்' என்ற இல்லம் இயங்கி வருகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு ஒரு பெண் இல்லவாசிக்கு ரூ.200/- வீதம் வழங்கப்படுவதும் இந்த நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.91.13 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதும், சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுக்கும்வகையில், அரசின் மானிய உதவியுடன் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் என்கிற தன்னார்வத் தொண்டு நிறுவனம் செயலபட்டு வருவதும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையைப் பறைசாற்றிடும் வகையில் அமைந்துள்ளது என்பதை இந்த மாமன்றம் அறியும்.

மகளிர் முன்னேற்றத்திற்காக, அரசு நலத் திட்டங்களை விளக்கவும், விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், சிறுதொழில் புரிய வங்கிக் கடன் பெற பலதரப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்திடவும் வழிகாட்டி மையம் அரசால் நடத்தப்பட்டு, இந்த நிதியாண்டில் இந்தத் திட்டத்திற்கு ரூ.59.76 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்காக குடிசைச் தொழில் பயிற்சி அளித்தும், இதற்கென இந்த நிதியாண்டில் ரூ.7.09 இலட்சமும், இவ்வகுப்பினருக்காக தையல் பயிற்சி மையங்களும் இந்த நிதி ஆண்டில் ரூ.10.83 இலட்சம் நிதியும் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கியுள்ளதை மனதாரப் பாராட்டுகிறார்கள்.

*முற்பகல்: 11-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் ஒருசில பணிகளை அம்மாவுடைய சீரிய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது தொகுதியில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஏழை மாணவர்கள் ப்ளஸ்-2 முடித்து கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால், தெற்கே என்றால் திண்டுக்கல், மேற்கே என்றால் பழனி, வடக்கே





என்றால் கரூர், கிழக்கே என்றால் திருச்சி என்று செல்ல வேண்டிய நிலை உள்ளது. அதிலும் சில நேரங்களில் கல்லூரியில் சேர அனுமதி கிடைக்க மறுக்கப்படுகிறது. இந்த நிலையைத் தீர்க்கும்வண்ணம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த ஏழை விவசாய மாணவச் செல்வங்கள் பயிலும் வகையில் அரசு கலைக் கல்லூரியை வேடசந்தூரில் அமைத்துக் கொடுத்து ஏழைகளுடைய வாழ்வில் ஒளிவிளக்கேற்ற வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்.

எனது வேடசந்தூர் தொகுதி, செண்டுவழி என்ற கிராமத்தில் கோயில் மானிய நிலம் தனி நபர் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்த ஊர் மக்களுக்குச் சாலை வசதியே கிடையாது. சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில், நமது பழனி பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலை அமைக்க அனுமதி வழங்கியும், ஆக்கிரமிப்புச் செய்த நபர் இந்த நிலம் தனக்குச் சொந்தம் என்று கூறி சாலை அமைக்கவிடாமல் தடுத்துவிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பலமுறை தெரிவித்தும் அந்த மக்களுக்குச் சாலை வசதி செய்து கொடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்டு தனி நபர் ஆக்கிரமிப்பை அகற்றி சாலை வசதி இல்லாத மக்களுக்குச் சாலை வசதி செய்து தர வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.

'கோயில் வளர்ந்தால் குடி வளரும்' என்பார்கள். எனது தொகுதி வடமதுரையில் பல நூற்றாண்டு சிறப்புமிக்க ஸ்ரீ சௌந்தரராஜ பெருமாள் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில் இந்து அறநிலையத் துறையின்கீழ் உள்ளது. இத்திருக்கோயில் திருப்பணி செய்து பல ஆண்டுகளாகி, கோயில் சிதைந்துவிடும் நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை ஆடிப்பெருந்திருவிழா நடைபெறும். பிரம்மாண்ட தேரில் 4 இரத வீதிகளிலும் சாமி ஊர்வலம் வருவதை மக்கள் தரிசிப்பார்கள். எனது தொகுதி முழுவதும் இருந்து பொதுமக்கள் வந்து தரிசனம் செய்வார்கள். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் இத்திருக்கோயிலில் திருப்பணி செய்து, தேரைப் புதுப்பித்து, குடமுழுக்கு விழா நடத்திட வேண்டுமாய் தொகுதி மக்கள் சார்பாகவும், பக்தர்கள் சார்பாகவும் அன்போடு வேண்டுகிறேன்.

வடமதுரை ஒன்றியம் தும்மலகுண்டு பெரிய குளத்தில் மழைநீர் தேங்கினால் 10,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். நிலத்தடி நீரும் பெருகும். அந்தப் பெரிய குளத்திற்கு வருகின்ற வாய்க்கால் பகுதியின் சிறு பகுதி தனி நபர் ஒருவரால் கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ள

ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி பொதுமக்கள் கோரிக்கை வைத்தும், கடந்த கால ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அதனைச் சரிசெய்து விவசாயிகளின் குறையைப் போக்கி நிலத்தடிநீர் பெருக, விவசாய நிலங்களுக்கு நீர் கிடைக்க அம்மா அவர்கள் உதவிட அன்போடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா, எனது தொகுதியில் கோவிலூர் அருகில் உள்ளது வறட்டாற்று. வறட்டாறு என்பது குடகனாறு அணைக்குச் சென்று, குடகனாறு அணையில் தண்ணீர் வீணாகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த வறட்டாற்றின் குறுக்கே Check Dam அமைத்தால் எனது தொகுதி குஜிலியம்பாறை ஒன்றியம் மிக வறண்ட பகுதியாக இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு, விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் பெருக வாய்ப்பாக இருக்கும். அதை அமைத்துத்தர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி விவசாயப் பெருமக்களும், விவசாயத்தை நம்பி இருக்கிற கூலித் தொழிலாளர்களும் அதிகம்பேர் வசிக்கின்ற தொகுதியாகும். பருவ மழை பெய்து பல ஆண்டுகளாகி விட்டதால் விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகளுக்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் வேலை இல்லாத சூழ்நிலை உள்ளது. வேடசந்தூர் ஒன்றியம் வெல்லம்பட்டியில் உள்ள கிணற்றில் இரும்புத்தாது பாறைகளாக உள்ளது. அதைக் கனிம வள அதிகாரிகள் சோதித்துப் பார்த்ததில், அந்த இரும்புக் கல்லில் மின்சாரம் பாயும் அளவுக்கு இரும்புத் தாது உள்ளது. விவசாயம் பாதித்த நிலையில் உள்ள விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் துயர் துடைக்க இரும்புத் தொழிற்சாலை அமைத்து, தொகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டுமாய் அம்மாவின் பாதம் தொட்டு வேண்டுகிறேன்.

மேலும் எனது தொகுதியில் (1) அய்யம்பாடி குளம், (2) நல்லூர்குளம், (3) கருப்பணம்பட்டி சங்க கவுண்டன் குளம், (4) தொட்டணம்பட்டி பெரிய குளம், (5) பெருமாபட்டி குளம், (6) பில்லமநாயக்கன்பட்டி குளம், (7) கருங்கல் குளம் இப்படி 7 குளங்களையும் தூர் வாரி விவசாயத்திற்குத் தண்ணீரைச் சேமிக்க வழிவகை செய்ய வேண்டும் என அம்மா அவர்களை அன்போடு வேண்டுகிறேன்.



முற்பகல் 11-50

எனது வேடசந்தூர் தொகுதி, எரியோடு அருகில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பல இலட்சம் ரூபாய் செலவில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் வெங்காய இருப்பு குடோன் கட்டப்பட்டது. அது இப்போது பயனற்ற நிலையில் செயல்படாமல் உள்ளது. பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் அல்லது ஏதாவது ஓர் அரசு அலுவலகத்திற்குப் பயன்படுத்துகிற வகையில் அந்தக் கட்டடத்தை மாற்றியமைக்க வேண்டுமாய் அம்மா அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நான் நித்தம் வணங்கும் எனது அன்னை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி மீண்டும் ஒருமுறை வணங்கி, என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. விதி 110—ன்கீழ் அறிக்கை

**தொழில் வளர்ச்சிக்கான முதலீட்டில் தமிழ்நாடு முதலிடம்—இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையத்தின், (C.M.I,E.) ஆய்வு அறிக்கை குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களுக்கிடையே தற்போது நிலவி வரும் போட்டி சூழ்நிலையை உணர்ந்து, இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் எய்துவதற்கு ஏதுவாக தொழில் வளர்ச்சியை நேயமிக்க சூழ்நிலையை உருவாக்கவும், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதனை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள்.

இந்திய பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy, (C.M.I.E.) என்ற நிறுவனம், பல்வேறு மாநிலங்களில் எந்த அளவிற்கு உற்பத்தித் துறையில் அதாவது Manufacturing Sector-ல் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பான ஓர் ஆய்வறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கையின்படி 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, பல்வேறு மாநிலங்களில் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று C.M.I.E. வெளியிட்டுள்ள செய்தியை இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடு 43,492 கோடி ரூபாய் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையில் முதலீடு 37,306 கோடி ரூபாயாகும். 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, உற்பத்தித் துறையில் இருந்த முதலீடு 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி இருந்த முதலீட்டைவிட 16.58 விழுக்காடுகள் அதிகமாகும்.

2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குட்பட்ட காலத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில்தான் உற்பத்தித் துறையில் முதலீடு வளர்ச்சி விகிதம், அதாவது growth rate அதிகமாக உள்ளது. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குட்பட்ட காலகட்டத்தில் பல மாநிலங்களின் உற்பத்தித் துறையில் முதலீட்டு வளர்ச்சி விகிதம், growth rate பின்னோக்கியே சென்றுள்ளது. அதாவது nagative trend-லேயே சென்றுள்ளது என இந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், அண்டை மாநிலங்களான கர்நாடகா 6-வது இடத்திலும், ஆந்திரப்பிரதேசம் 7-வது இடத்திலும், கேரளா 9-வது இடத்திலும் இருக்கின்றன என்று C.M.I.E. அறிக்கை கூறுகிறது.

அனைத்துத் துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழ்நாட்டைக் கொண்டு வருவேன் என்று ஏற்கெனவே இந்த அவையில் உறுதி அளித்திருந்தேன். அதனை உறுதி செய்யும் வகையில் இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy-C.M.I.E. வெளியிட்டுள்ள அறிக்கையில் உற்பத்தித்





துறையில் செய்யப்பட்டுள்ள முதலீட்டில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளதிலிருந்து, நம்முடைய சாதனை தெளிவாகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 7. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 43–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை—தொடர்ச்சி

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணினம் போற்றும் பெருந்தகை, எனது இனிய தெய்வம் புனிதப் போராளி டாக்டர் ஐயா அவர்களின் ஆசியினாலும், டாக்டர் சின்ன அய்யா அவர்களின் வாழ்த்துகளினாலும் கட்சியின் மாநிலத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களின் பேராதரவினாலும், இப்பேரவையில் உரையாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உன்னத மனித வளத்தை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு பெண்களையே சாரும் என மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் தனது கொள்கை விளக்கக் குறிப்பின் முன்னுரையில் கூறியுள்ளமைக்குப் பெருமைப்படுகிறேன், நன்றி கூறுகிறேன். நான் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களும் பெண் இனத்தைப் போற்றுபவர். ஒவ்வொரு நபரும், தன் பெயரில் முதலெழுத்தாக, தன் தாய்ப் பெயரை முதலெழுத்தாகப் போட வேண்டுமென்ற உன்னத கருத்தை இந்த உலகிற்குத் தந்தவர். ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்பார்கள். ஆக்கம் ஏன்பது வரவேற்கலாம்; பெண்களால் அழிவு என்ற அவப்பெயர்...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை அவர்கள், எடுத்த எடுப்பிலேயே எங்களுடைய அம்மா அவர்கள் தலைமையில்

இருக்கிற அரசைப் போற்றிப் பாராட்டிப் பேசினார். நன்றி! ஆனால், அடுத்து வருகின்ற வரிகளில் தாயின் பெயரை முன்னால் போடவேண்டுமென்று அவர்களுடைய கட்சித் தலைவர் சொல்லியிருப்பதாகச் சொன்னார்: தலைவருடைய பெயர், உங்களுடைய பாணியிலே சொல்லவேண்டுமென்றால் டாக்டர் அய்யா இராமதாஸ். அடுத்து, அவருடைய வாரிசு, ஆண் வாரிசு, அன்பு மணி அவர்கள், இரா. அன்பு மணி என்றுதான் போடுகிறார். அவருடைய தாயின் பெயரை முன்னாலே போடவில்லை. அவருடைய பெண் பிள்ளைகள்கூட தாயின் பெயரை முன்னாலே போடவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, தாயின் பெயரை முதலில் போட வேண்டுமென்ற கருத்தை முதன்முதலாக உலகிற்குத் தந்தவர் அவருடைய தலைவர் டாக்டர் இராமதாஸ் என்று குறிப்பிட்டார். அது உண்மையல்ல. காலங் காலமாக கேரளா மாநிலத்தில் தாயின் பெயரைத்தான் போட்டுக் கொள்கிறார்கள். அங்கே Matrilineal Society, Matriarchal Society தொன்றுதொட்டு இன்று வரை நிலவி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்படி போடுகின்றபோது இதுவரையில் போட்டவர்களுக்கு, அந்த இனிஷியலில் புதிதாகப் போடுவோம் என்று சொன்னால் அதில் மாற்றம் வரும் என்ற காரணத்தினாலே இனி பிறக்கக்கூடிய பிள்ளைகளுக்கு, பெயர் வைக்கக்கூடிய குழந்தைகளுக்கு தாயின் முதல் எழுத்தை இனிஷியலாகப் போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் டாக்டர் அய்யா அவர்கள் குடும்பமும், எங்கள் குடும்பங்கள் எல்லாம், எல்லாக் குழந்தைகளுக்கும் தாயின் முதல் எழுத்துதான் இனிஷியலாக முதலில் போடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி காசாம்பு பூமாலை:** விளக்கம் கொடுத்தமைக்கு நன்றி! 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' என்பார்கள். ஆக்கம் என்பதை வரவேற்கலாம். பெண்களால் அழிவு என்ற அவப்பெயர் இந்த அரசுக்கு வரக்கூடாது எனச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



தான் 10 மாதம் சுமந்து பெற்றெடுத்த பெண் சிசுவை வதை செய்வதும் ஒரு பெண் என நினைக்கையில் மனம் பதைப்பதைக்கிறது. அரசு உத்தியோகங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆகவே, பணிபுரிவோரில் பெண்கள் எண்ணிக்கை, போகப்போக, நாளுக்குநாள் கூடிக்கொண்டே இருக்கிறது. இவர்களில் திருமணமாகாத இளம் பெண்களுக்கு வேலை கிடைத்தாலும் பணிபுரியும் ஊர்களில் பாதுகாப்பான தங்கும் வசதி கொண்ட இடங்கள் இல்லாமல் அவதிக்கு உள்ளாகிறார்கள். இவர்களின் இடர்பாடுகளைக் குறைக்கும்பொருட்டு எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் வேலைக்காக செல்லும் பெண்கள் தங்குவதற்கேற்ற விடுதிகளை அரசு கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 1,50,000 பெண்கள் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் சுமார் 25,00,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மூலம் வருவாய், சம அந்தஸ்து, சுதந்திரம் ஏற்படுத்தித்தர, சமுதாயத்தில் நிலவி வரும் கள்ளச்சாராயம், சினிமா மோகம், பீடி, சிகரெட், கஞ்சா போன்ற நச்சுப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைக் குறைத்து ஒழித்திட இந்தச் சுய உதவிக் குழுக்களைப் பயன்படுத்திட வேண்டும். மற்றும் இவற்றால் சமுதாயம் சீர்கெடுவதோடு, ஈட்டிய வருவாய் தண்டச் செலவாக, விரயமாக வழிகோலுகிறது. மேலும், இப்பொருட்களின் பழக்கத்திற்கு அடிமையானவர்களைத் திருத்துவது மிகக் கடினம். ஆகையால், சாராயம், சினிமா, போதைப் பொருட்கள் சமூக விரோதமானவை என இக்குழுக்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்படுத்தப்படலாம். 31-3-2003 முடிய மொத்தம் 1,25,755 நபர்களில் எத்தனை நபர்கள் தாங்கள் பெற்ற பயிற்சியின் மூலம், சொந்தத் தொழில் செய்து வருகிறார்கள்? வெறும் பயிற்சி அளிப்பதோடு நிற்காமல் அவர்கள் சுயதொழில் தொடங்க வழிகாட்டுவதோடு அவர்களது தன்னிறைவு நிலையிலும் அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளித்து வெற்றி பெற்ற நபர்களை சமூகத்திற்கு முன்னோடிகளாய் விளம்பரப்படுத்துவதன் மூலம் பெண் இனம் மேலும் வலுப்பெறும்.

நண்பகல் 12-00

சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் மிக முக்கியமான கோரிக்கைகளான காலமுறை ஊதியம் வழங்குதல், பணியிடை ஆசிரியர்

பயிற்சி மூலம் ஆசிரியர்களாக பணி நியமனம் செய்தல், இளமைக் காலத்தைச் செலவழித்து இருபதாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்துவிட்டு, முதுமைக்காலத்தில் வாழ வழியின்றி தவிக்கவிடாமல் அவர்களுக்குப் பணிமுடித்து ஓய்வு பெற்றவர்களும் பயன்பெறும் வகையில் முன்தேதியிட்டு ஊதியம் வழங்கும்படியும், விலைவாசி உயர்வுக்கேற்ப சில்லரையை உயர்த்திக் கொடுக்கும்படியும், மைய செலவினங்களுக்கான முன் மானியத் தொகையை பின் மானியத் தொகையாக வழங்காமல் முன் மானியத் தொகையாக முன்கூட்டியே வழங்கும்படியும், மாத ஊதியத் தொகையை மாதத்தின் முதல் தேதியிலேயே வழங்கும்படியும் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுக் கூடம், அங்கன்வாடி பணியாளர்களுக்குக் கூடுதல் ஊதியம் தருவதோடு பட்டதாரிகள் மற்றும் தகுதிக்கேற்ப அவர்களை ஆசிரியர்கள், இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களில் பணியமர்த்தும்படியும் இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி, தமிழகத்தின் கடைக்கோடி கன்னியாகுமரியில் இருந்துகூட சங்கராபுரம் வழியாக திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் கிரிவலத்திற்கும், அங்கிருந்து திருப்பதிக்கும் அதிக அளவில் பக்தர்கள் கூட்டம் கூட்டமாக செல்கின்றனர். எனவே, கள்ளக்குறிச்சியில் இருந்து மூங்கில்துறைபட்டு வரையிலான 40 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இம்மாநில நெடுஞ்சாலையினை செப்பனிட்டுத் தரும்படி இவ்வரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சங்கராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். கல்வி, பொருளாதாரம், அரசியல் என எல்லா வகையிலும் முன்னேற்றமே இல்லை. அடிப்படை வசதியான போக்குவரத்து வசதியும் இல்லை. சங்காராபுரத்திலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் சாலையில்—E.B.Office—அலுவலகத்திற்கு முன்பு, அரசுப் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்காக 3 ஏக்கர் 30 செண்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சென்ற ஆண்டு பெயர்ப் பலகையும் வைத்து, விழாவும் எடுக்கப்பட்டது. ஆனால், இன்னும் பணிமனை அமைக்கப்படவில்லை. இந்தப் பணிமனை ஆரம்பிக்கப்பட்டால் இந்தப் பகுதியில் போக்குவரத்து வசதி சற்று கூடும். மக்களுக்குப் பயன்படும். ஆகவே இந்தப் பணியினை உடனடியாக தொடங்க இவ்வாசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.





சங்கராபுரம் தொகுதியில் உள்ள கொசப்பாடி கிராமம் மிகவும் வறட்சியான கிராமமாகும். கிராம மக்கள் விவசாயத்தையே நம்பி இருப்பவர்கள். கொசப்பாடி ஏரி வாய்க்கால் அகலப்படுத்தும் பணிக்கான திட்டம் இருக்கிறது. எனவே, வாய்க்கால் அகலப்படுத்தும் பணியைத் துரிதப்படுத்தி இவ்வாய்க்காலைச் செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை, திருக்கோவிலூர், கருமந்துறை, சேராப்பட்டு, கள்ளக்குறிச்சி என நான்கு புறத்திற்கும் மையப் பகுதியாக சங்கராபுரம் இருக்கிறது. திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோவிலின் கிரிவலம் பிரசித்தி பெற்று மக்களின் பக்தி பிரவாகத்தால் பக்தர்களின் பயணக் கூட்டம் அதிகரித்து கொண்டே செல்கிறது. பஸ் நிலையத்திற்கு பேரூராட்சியில் ரூ.22.5 இலட்சம் வழங்கியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. எனவே, பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்திக் கொடுக்கும்படி இவ்வாசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சார்ந்த சங்காராபுரத்தில் 15 ஆயிரம் பேர் பெண்கள். இவர்களுக்கு நிரந்தரமான வேலை இல்லாததால் வறுமையில் வாடுகிறார்கள். ஆகவே, இந்த மலைவாசி மக்களுக்கு, வெள்ளிமலையில் புதிய தையற் பயிற்சி மையம் ஒன்றை அமைக்க ஆவன செய்யுமாறு இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி காசாம்பு பூமாலை:** இதற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடான ரூபாய் 7.13 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சங்கராபுரம் தொகுதியில் இராவுத்தநல்லூர் என்ற கிராமத்தில் புகழ்வாய்ந்த அருள்மிகு ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. ஞாயிறுதோறும் நடைபெறும் சிறப்பு பூஜைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். கூடும் மக்களுக்கு போதுமான அடிப்படை வசதியோ, தங்கும் வசதியோ இல்லை. ஆகவே, இராவுத்தநல்லூர் அருள்மிகு ஆஞ்சநேயர் கோயில் வளாகத்தில் பயணியர் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டித் தருமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரத்தில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அரசாங்கம் நிர்ணயிக்கப்பட்ட I.T.I. வளாகத்தில் இடம் ஒதுக்கியுள்ளது. இவ்வாசு

எந்த ஆரம்ப நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதற்கு அட நடவடிக்கை எடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

சங்காரபுரத்தில் ஐந்து ரேஷன் கடைகள் தனியார் இடத்தில்தான் இயங்கிக்கொண்டு வருகின்றன. அந்த ரேஷன் கடைகளுக்கு அரசாங்கம் அரசு இடம் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சங்காரபுரத்தில் நீதிமன்றம் உள்ளது. மேலும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைத்துத்தரும்படி இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, வெள்ளிமலை, கருமந்துறை, பாப்பநாயக்கன்பட்டி வரை தார்ச் சாலை அமைத்தும், தடுப்புச் சுவர் இருந்தும் இவை மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. இத்தார்ச் சாலையைச் செப்பனிட்டுக் கொடுத்தால் மலைவாசி மக்கள், 700 கிராமங்கள் பயன் அடையும். மலைவாழ் மக்கள் விவசாயப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கும் வசதியாகவும் இருக்கும். ஆகையால் இந்த தார்ச் சாலையைச் செப்பனிட்டுத் தரும்படி இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வரசு பெண்களுக்கு முக்கியத்துவம், முன்னுரிமை தர வேண்டும் என்பதையும், வயதான தாய்மார்களைப் பாதுகாக்கவும் வேண்டுமென வலியுறுத்தி, ஆண்டுக்கு ஒரு நாள், விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையில் 'அன்னையர் தினம்' என்று கொண்டாட அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காசாம்பு பூமாலை, பெண்கள் தினம் என்றாலே அன்னையர் தினம்தான்.

**திருமதி காசாம்பு பூமாலை:** அவர்களுக்கு விழாக் கொண்டாடும்படிக் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செ. சுந்தராம்பாள்.

***திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவமே, ஆற்றலின் மறுஉருவமே, இந்தியாவின் இமயமே, ஈன்றெடுத்த அன்னை சந்தியாவின் அற்புதத் தென்றலே, நெருப்பாற்றில் நீந்தியவரே, தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் பொன்மனத் தலைவியே, சோதனைகளைச்



சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திர ஏடுகளாக்கிய எங்கள் இதய அன்னையே, அன்னை தெரசாவின் கனிவும், பெரியாரின் துணிவும், அண்ணாவின் அறிவும், வங்கக் கடற்கரையோரம் உறங்கிக் கொண்டிருக்கும் தங்கத் தலைவன், மனித நேயத் தென்றல் அவர்களின் மனித நேயமும் ஒருங்கே அமையப் பெற்ற தென்திசைத் தீபமே, நிலவுக்கு ஒரு தென்றலாய் வானத்தில் உதிக்கும் நட்சத்திரங்கள் போல இந்த மாமன்றத்திலே ஒரு பசுமைத் தென்றலாய், அடிமட்டத் தொண்டராகிய என் போன்றவர்களையும் அரண்மனையிலே அமரவைத்து, அழகுபார்க்கும் அருந்தவப் புதல்வியே; தாங்கள் இருக்கும் திசைநோக்கி கரம் கூப்பி, சிரம் தாழ்த்தி வணங்கி என் தாழ்மையான வணக்கங்களைத் தங்கள் பொற்பாதங்களில் செலுத்தி சமூக நலத் துறை என்னும் மானியக் கோரிக்கையின் மீது பேச விழைகின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ. 4,232.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததன் மூலம் தொட்டில் குழந்தை திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மேலும் 18 அம்ச திட்டத்தை வழிவகுத்து கடந்த 2 ஆண்டுகளைவிட இந்த ஆண்டு 2003-2004-ல் அதிக அளவில் நிதியை ஒதுக்கீடு செய்து எல்லாத் துறைகளிலும் மகளிருக்கு முக்கியத்துவம் கொடுத்துவரும் அம்மா அவர்கள் மகளிரின் தரத்தை மேன்மைப்படுத்தி சிறப்பு செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், அவர்களால் ஊன்றப்பட்ட ஒரு சிறு விதையே இன்று ஒரு பெரிய மரமாக காய் காய்த்து நல்ல முறையில் விற்பனையாகி கொண்டிருக்கிறது என்றால், அப்பெருமை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கே சேரும். ஆனால், இன்று தமிழகம் முழுவதும் 1,19,583 மகளிர் சுய உதவிக் குழுக்கள், 19,77,024 பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு தற்போது 277.54 கோடி ரூபாய் சேமிப்புடன் பெரிய மரமாக வளர்ந்துள்ளது என்றால் அதற்கு பெருமைக்குரியவர் எங்கள் பொன்மனத் தலைவியே ஆவார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. தற்போதுள்ள சூழ்நிலையில் பெண்கள் தன்னந்தனியாக தங்கள் சொந்தக் காலிலே நின்று, உலகமே பாராட்டும் வண்ணம் வியப்புடன் மகளிர் சுய உதவிக் குழுக்களில் செயல்பட்டு வருகின்றனர்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு அம்மா அவர்கள் 1991ஆம் ஆண்டு பதவி ஏற்றவுடன் பெண் சிசுவைத் தடுக்கும் முறையில் தொட்டில் குழந்தை திட்டம் என்ற ஓர் உன்னதமான திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இத்திட்டத்தின் மூலம் தமிழகம் எங்கும் அனைத்து மாவட்டங்களிலும் பெண் சிசுக்கொலை தடுக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆட்சியாளர்களின் ஆட்சியில் இத்திட்டம் கைவிடப்பட்டது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் சிசுக்கள் தடுக்கப்படவில்லை. பெண் சிசுக் கொலை தடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்..

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மன்னிக்கவேண்டும். பெண் சிசுக் கொலை தடுக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் மட்டும் 2001-2003 வரை, இன்று வரை, 251 பெண் குழந்தைகள் தொட்டிலில் இடப்பட்டு அம்மாவின் ஆட்சியில் நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நூற்றுக்கணக்கான பெண் குழந்தைகள் அரசுத் தொட்டிலில் இடப்பட்டு நல்லமுறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால், அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வாராமலிருந்திருந்தால் இன்று நூற்றுக்கணக்கான பெண் குழந்தைகள் கொலை செய்யப்பட்டிருப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

இன்று அம்மாவின் ஆட்சியில் ஒரு பெண் குழந்தை பிறந்து குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டவர்களுக்கு ரூ.20,650 என்றும், இரண்டு பெண் குழந்தைகள் பிறந்திருந்தால் ரூபாய் 14,450 என்றும், பிறந்த குழந்தைகளுக்கும் சிறந்த எதிர்காலம் என சீரிய திட்டம் வகுத்த சிந்தனைத் தலைவி அவர்கள் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார்கள்.

மேலும், பள்ளியில் படிக்கும் அருந்ததியர், ஆதிதிராவிட மாணவிகளுக்கு, அவர்கள் பள்ளிகளுக்கு உரிய நேரத்தில் செல்வதற்கு வசதியாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்களுக்கு மிதி வண்டிகள்



வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை தமிழக மக்கள் அனைவரும் வரவேற்கின்றார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கும் சத்துணவுத் திட்டச் செயல்பாடுகளில் சத்துணவின் தரத்தில் தக்க மேம்பாடு இருக்க வேண்டுமென்று கருதி, நிதி நெருக்கடியான இந்த நேரத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் ஒரு குழந்தைக்கு 0.23 பைசா என்று இருந்ததை இன்று 0.35 பைசாவாக அதிகரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20.98 கோடி கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் எவர்சில்வர் டம்ளர்கள் மற்றும் தட்டுக்களை வழங்குவதற்கு ரூபாய் ஒரு கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள், பள்ளி செல்லும் சிறார்கள், வளர் இளம் பெண்கள், வயது முதிர்ந்த பயனாளிகள் ஆகியோருக்கு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், தேசிய சத்துணவு இயக்கம் போன்ற உன்னதமான திட்டங்கள் இவற்றை மெய்ப்பித்துக் காட்டுவதாக உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு அளித்ததன் மூலம் வக்ஃபு வாரியத் தலைவராக ஜனாப் திருமதி பதர் சையத் என்ற ஒரு இஸ்லாமியப் பெண்ணையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவராக ஜனாப் திருமதி யாஸ்மின் அஹமத் என்பவரையும், மேலும், இந்தியாவிலேயே முதன்முதலாக பெண் தலைமைச் செயலாளராக திருமதி லட்சுமி பிரானேஷ் என்பவரையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நியமித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்ற மொழி மாறி இன்று அம்மா அவர்கள் பெண்களை அரண்மனையில் அமர வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஏற்றமிகு தலைவியே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் பற்றிய கோரிக்கை ஒன்றை இன்று வைக்க விரும்புகிறேன். மக்கள்

[திருமதி செ. சுந்தராம்பாள்] [2003 ஏப்ரல் 25

தொகைக் கணக்கெடுப்பை பள்ளி ஆசிரியர்கள்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே மிகவும் சிறப்புடன் விளங்கிக் கொண்டிருக்கும் மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த பெண்களும் படித்திருக்கின்றார்கள். அவர்களையும் இந்த வேலையில் ஈடுபடுத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் உள்ளது உள்ளவாறு எடுத்துரைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தினார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இந்த மகளிர் காவல் நிலையங்களை நன்கு செயல்படாமல் தடுத்து விட்டார்கள். ஆனால் தமிழக 6½ கோடி மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் மீண்டும் முதல்வராகப் பதவியேற்ற நமது அன்னை அவர்கள் இன்று தமிழகம் முழுவதும் மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தியதை தமிழக மக்கள் வரவேற்கின்றார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, பெண்களின் வாழ்வினை முன்னேறச் செய்வதற்காக பல திட்டங்களைத் தீட்டி வருவதை தமிழக மக்கள் இன்று வரவேற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னுடைய தொகுதியிலுள்ள சில பிரச்சினைகளைக் கூற விழைகிறேன். மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் சாம்பவர்பள்ளம் என்ற இடத்தில் புதிய செக் டேம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இன்று ரூபாய் 120 இலட்சங்களை அள்ளிக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). மேலும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

மேட்டூர் நகரமானது 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட நகரம். இங்கு மேட்டூர் அணை கட்டியபோது கட்டப்பட்ட ஒரேயொரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிதான் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களின் முக்கிய பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேட்டூர் நகரில்



2003 ஏப்ரல் 25] [திருமதி செ. சுந்தராம்பாள்]

குள்ளவீரன்பட்டி, காந்தி நகர், காவிரி நகர், தங்கம்மாள் புதுப்பட்டினம் ஆகிய இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்கென மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோன்று, மேட்டூர் நகரத்தில் 100-க்கு 80 சதவிகிதம் வீடுகள் பட்டா இல்லாமல் இருக்கின்றன. 50 வருடங்களுக்கு மேலாக மக்கள் பக்காவாக வீடு கட்டி, நில வரி, தண்ணீர் வரி, மின்சார வரி ஆகியவற்றை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பொது மக்களுக்கு ஏரியாவிற்குத் தகுந்தவாறு நிலத்தை விலை நிர்ணயம் செய்து பட்டா கொடுத்தால், பொது மக்கள் பணம் செலுத்துவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். இதனால், அரசுக்கு பல இலட்சங்கள் வருமானங்கள் கிடைக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

அதேபோன்று, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியாகும் சாம்பல் நீரானது மீண்டும் காவிரியில் கலக்கின்றது. மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி ஒன்றியத்திலுள்ள தென்னை மரங்கள், மா மரங்கள் தற்போது காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த சாம்பல் நீரை வனவாசி மலையின் பின்புறத்திற்கு பம்ப் செய்து விட்டால் மேட்டூர் தொகுதி மட்டும் அல்லாமல், எடப்பாடி தொகுதி, சங்ககிரி தொகுதி, திருச்செங்கோடு தொகுதி வரைக்கும் இந்த நீர் செல்லும். அப்போது, நிலத்தடி நீர் அதிகரிக்கும். கிணறுகளிலும் நீர் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காகும் செலவு மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தினை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, மேட்டூர் தொகுதியில் கொளத்தூர் ஒன்றியத்தில், தமிழ்நாட்டின் எல்லையாகவும், கர்நாடக எல்லையாகவும் உள்ள பாலாற்றில் அதிக அளவில் மணல் இருக்கின்றது. தினந்தோறும் தனிப்பட்ட நபர்கள் நூற்றுக்கணக்கான லாரிகளில் மணல் எடுத்துச் செல்கின்றனர். இந்த மணலை அம்மாவின் ஆட்சியில் ஏலம்விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொளத்தூர் ஒன்றியத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட லம்பாடி இன மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் தற்போது B.C. பிரிவில் இருக்கின்றார்கள். அவர்களை, S.C. அல்லது S.T. பிரிவில் சேர்த்துக்கொள்ளும்படி

கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் என்னுடைய தொகுதியின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தராம்பாள் பேசுகின்றபோது, ஜனாப் பதர் சையத், ஜனாப் யாஸ்மின் அஹமத் என்று குறிப்பிட்டார். பொதுவாக ஆண்களைத்தான் ஜனாப் என்று குறிப்பிடுவார்கள். பெண்களைச் சொல்ல வேண்டுமானால், ஜனாபா என்று சொல்ல வேண்டும். ஆகவே, அவைக் குறிப்பில் ஜனாபா என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவரம் இதுவரைக்கும் எங்களுக்குக்கூட தெரியாது. (சிரிப்பு) செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டு காலமாக சத்துணவுத் திட்டம் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. 70 இலட்சத்திற்கும் மேல் குழந்தைகள் உணவு உண்கிறார்கள். ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண் ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். இது போன்ற ஒரு திட்டம் 20 ஆண்டு காலம் செயல்படுவது ஒரு நல்ல அம்சம். அதே நேரத்தில் இத்திட்டத்தினுடைய ஊழியர்கள் 1,341 ரூபாயும், குறைந்தபட்சமாக 520 ரூபாயும்தான் ஊதியம் பெறுகிறார்கள். இவர்கள் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தனியார் துறைகளில் குறைந்த ஊதியம் கொடுக்கின்றபோது, அரசினுடைய தொழிலாளர் நிர்வாகம் தலையிடுகிறது. ஆனால், அரசாங்கமே மிகக் குறைந்த ஊதியம் கொடுத்தால் அது அந்த ஊழியர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக இருக்காது. ஆகவே, குறைந்தபட்சம் அவர்களுக்கு ஒரு 3,000 ரூபாயாவது ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இடைக்கால ஆசிரியர் பயிற்சி அளித்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அந்த வாக்குறுதியை மீண்டும் நான் நினைவுபடுத்தி நிறைவேற்ற முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில், இதே மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பட்டப் படிப்பு முடித்தவர்கள், ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு முறையாக தேர்வுகள் வைத்து அரசு ஊழியர்களாகவும், ஆசிரியர்களாகவும் நியமிப்போம்; 5,500 சத்துணவு ஊழியர்கள் பயன் அடைவார்கள் என்ற வாக்குறுதியை வழங்கினீர்கள். இப்போது இதற்கான...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையிலே விவரமாக நான் சொல்ல இருக்கின்றேன். சத்துணவுப் பணியாளர்கள் மொத்தமாக, சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், சமையல் உதவியாளர்கள், I.C.D.S. உதவியாளர்கள், சத்துணவுத் திட்ட உதவியாளர்கள், மொத்தம் சேர்த்து 2 இலட்சத்து 26 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். அது சம்பந்தமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கும் இந்திய நாட்டினுடைய பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தினுடைய குறிப்புகளையெல்லாம் என்னுடைய பதிலுரையிலே தெரிவிக்க இருக்கின்றேன். அதிலே நாம் படைத்திருக்கின்ற சாதனை பற்றியெல்லாம் சொல்ல இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் துறையினுடைய அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதியம்—அவர்கள் பணிக் காலம் முடிந்தவுடன், ஏதாவது ஒரு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும். ரூபாய் 20 ஊதியத்திலிருந்து பிடிக்கப்பட்டு, சிறப்பு சேமநல நிதி பணிக்கொடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், 10,000 ரூபாய் தருவதற்கு ஆங்காங்கே இருக்கிற கருவூலங்களிலும், ஒன்றிய ஆணையர்களால் பல மட்டங்களிலே மறுக்கப்பட்டு வருகிறது. இதுவரை அவர்களுடைய சேமிப்பு நிதிகூட கிடைக்காமல் இருப்பது வருத்தத்திற்குரியது. அதன்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு I.C.D.S. ஊழியர்களுக்கு மத்திய அரசாங்கம், 1-4-2002-ல் ரூபாய் 500-ம், உதவியாளர்களுக்கு ரூபாய் 240-ம் ஊதிய உயர்வு வழங்க அறிவித்திருக்கிறது. இது தமிழகத்திலும் அமல்படுத்தப்பட

வேண்டும் என்று அந்தப் பெண்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, தேசிய பெண்கள் ஆணையம் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 1990 இல் தேசியப் பெண்கள் ஆணையம் உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1993 இல் அ.தி.மு.க. அரசாங்கத்தால் தமிழகப் பெண்கள் ஆணையம் அன்றைக்கு உருவாக்கப்பட்டது. இதில் தேசியப் பெண்கள் ஆணையம் சட்ட அந்தஸ்த்தோடு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கேரளா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களிலும் பெண்கள் ஆணையம் உருவாக்கப்பட்டது. சட்டமன்றத்தில் அந்த ஆணையத்திற்கு என்ன அதிகாரம் கொடுக்கலாம், அந்த அதிகாரம் எந்த வரையறைக்குள் இருக்க வேண்டும் என்று ஒரு மசோதா கொண்டு வந்து, அது சட்டமாக்கப்பட்டு, சிவில் நீதிமன்ற அதிகாரத்தோடு இப்போது அங்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோதுகூட, அதிகாரம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் அதிகாரம் எதற்காகக் கேட்கிறீர்கள் என்றுகூட கேட்டார்கள். இது தனிப்பட்ட அந்த ஆணையத்தினுடைய தலைவருக்கான அதிகாரமாகவோ, உறுப்பினருக்கான அதிகாரமாகவோ இல்லை. அந்தக் குழுவிற்கே ஒரு அதிகாரம் என்பது, சிவில் நீதிமன்ற அதிகாரம் இருந்தால்தான் செயல்படுவதற்கு உதவியாக இருக்கும்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஆணையக் கூட்டம் நடத்தி, பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களை விசாரித்து, அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசுக்குப் பரிந்துரை செய்து, அதன் பிறகு அரசு நடவடிக்கை எடுத்ததற்குப் பிறகுதான், அதனுடைய நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியும். அதற்காக பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மகளிர் ஆணையத்தினுடைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எல்லாம் கொண்ட இந்த ஆணையத்தை உருவாக்கியதே, 1993 ஆம் ஆண்டு எங்களுடைய தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆணையத்தை உருவாக்கியவரே அவர்கள்தான். ஆகவே, இந்த ஆணையத்திற்கு இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் என்பதே,





சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களையெல்லாம், ஆணையத்திலே இருப்பவர்களே அழைத்து, புகார் கொடுத்திருக்கிற அந்தப் புகார்தாரர்களையும் அழைத்து, இரண்டு தரப்பினரையும் வைத்து, விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அப்படி விசாரித்ததனுடைய அடிப்படையில் பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி, அரசு அதன்மேல், மேல் நடவடிக்கை எடுப்பதற்கு இப்போதுதான், ஒவ்வொரு மாவட்டரீதியாக எங்களுக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களினுடைய அனுபவத்தையும் சேர்த்துக் கொண்டு, அங்கிருக்கக்கூடிய பெண்கள் ஆணையத்தினுடைய அதிகார வரம்பையும் சேர்த்துக்கொண்டு, எதிர்காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுப்பது உதவியாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், தேசிய மாதர் சம்மேளன அமைப்பின் சார்பாக மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்ததாக, மகளிருக்கான அரசின் மாநிலக் கொள்கை குறித்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிக்கப்பட்டிருக்கிறது. பாலினப் பாகுபாடுகளைத் தகர்த்து, சரிநிகர் நிலையை அடைந்து, சுயமாக...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம் வந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசுகின்றபோது, நான் சார்ந்திருக்கும் மாதர் சங்கம் என்று குறிப்பிட்டார். அனைத்திந்திய மாதர் சங்கம் என்றார். அப்படியானால், C.P.M. கட்சியினை விட்டு விலகிவிட்டாரா?

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் என்ற வெகு ஜன அமைப்பில் ஓர் ஊழியராக இருக்கிறேன். அரசியல்ரீதியாக அந்தக் கட்சியிலும் நான் உறுப்பினராக இருக்கிறேன். இது ஒரு வெகு ஜன அமைப்பு, பெண்களுக்கான அமைப்பு. அது ஓர் அரசியல் அமைப்பு. ஆகவே, அந்த அமைப்பிலிருந்து பணியாற்றுகிறேன்.

பிற்பகல் 12-25

மகளிருக்கான அரசின் மாநிலக் கொள்கை, 'பாலினப்

பாகுபாடுகளைத் தகர்த்து, சரிநிகர் நிலையை அடைந்து, சுயமாக திறம்பட முடிவு எடுக்க வழிவகுக்கும்' என்று கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1967-க்குமுன் சட்டமன்றத்தில் ஆண் சட்டமன்ற உறுப்பினர்களை 'ஸ்ரீ' என்றும், பெண்கள் 'ஸ்ரீமதி' என்றும் குறிக்கப்பட்டது. 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆன பிற்பாடு, தமிழ்ச்சொல் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக 'திரு.' என்றும் 'திருமதி' என்றும், 'குமாரி' என்றும், அழைக்க வேண்டும் என்று அவர்கள் உத்தரவு போட்டார்கள். இப்பொழுது 'திரு.' என்ற வார்த்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'குமாரி' இல்லை 'செல்வி'.

**செல்வி க. பாலபாரதி:** 'திரு'. என்ற வார்த்தை திருமணம் ஆன ஆணுக்கும் போடப்படுகிறது. திருமணம் ஆகாத சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரே வார்த்தைதான் போடப்படுகிறது. ஆனால் பெண் உறுப்பினர்களுக்கு மட்டும், திருமணம் ஆனவர்களுக்கு 'திருமதி' என்றும், திருமணம் ஆகாதவர்களுக்கு 'செல்வி' என்றும் போடப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் இனிமேல் திருமணம் ஆகாத ஆண்களுக்கு 'செல்வன்' என்று போட்டுவிடலாம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி).

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு 'செல்வன்' என்று போடவேண்டியிருக்கும் (சிரிப்பு). ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று சட்டமன்றத்திலே ஒரு பாலினப் பாகுபாடு இல்லாத பொதுச் சொல்லைப் பயன்படுத்தலாம். 'திருமிகு' என்ற வார்த்தை ஆண்களுக்கும் பொருந்துகிறது, பெண்களுக்கும் பொருந்துகிறது. அதில் திருமணம் ஆனவரா, ஆகாதவரா என்ற பாகுபாடு இல்லை. இப்பொழுது இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு ஜனநாயக ஸ்தாபனங்கள், சேவை அமைப்புகள் எல்லாம் 'திருமிகு' என்ற வார்த்தையையே பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அப்படி ஒரு புது தமிழ்ச் சொல்லை, இந்தச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவாகப் போட்டால், இது ஒரு புதிய தமிழ்ச் சொல்லாக பாலினப் பாகுபாடு இல்லாத தமிழ்ச் சொல்லாக எதிர்காலத்திலே விளங்கும் என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்று சொன்னால்,



60 வயதில் இருப்பவரை அரசியல் மேடையில் 'செல்வி' என்று அழைக்கும் போது, அதை உண்மையிலேயே கீழே இருப்பவர்கள் கேலியாகப் பார்க்கிறார்கள். ஆகவே, அது இந்தக் காலத்தில் மாற்றப் பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே, எல்லோருக்கும் 'திருமிகு' என்ற வார்த்தையையே பயன்படுத்துங்கள்.

அதேபோன்று, தீயணைப்புத் துறையில் ஒரு பெண்கூட பணியில் இல்லை. இதுபோன்ற அரசினுடைய துறைகளில் பெண்களை பணியில் அமர்த்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** அரசு அலுவலகங்களில் watch-manதான் இருக்கிறார்; women இல்லை. போக்குவரத்துத் துறையில், பெண்கள் அலுவலகங்களில்தான் இருக்கிறார்கள். அரசுப் போக்குவரத்து ஜீப்களில்கூட பெண்கள் ஓட்டுநர்களாக இல்லை. இன்றைக்கு நம்முடைய அண்ணா சாலையில் நின்று பார்த்தால் பெண்கள் Two-wheeler-களில் மிகச் சிறப்பாகச் செல்கிறார்கள். வாகனம் ஓட்டுகிறார்கள். ஆகவே, அரசுத் துறை வாகனங்களில் பெண்களை ஓட்டுநர்களாக நியமிப்பதற்கு முன்வர வேண்டும். தமிழ்நாடு 18 அம்ச...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் போக்குவரத்துக் கழகத்தில் 2 பெண்கள் ஓட்டுநர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இன்றைக்குகூட சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் இன்று முதல்—நேற்றுதான் அதற்குரிய பயிற்சிகளெல்லாம் முடிந்து உரிய ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது—சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்திலே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2 பெண்கள் பரிட்சார்த்தமாக ஓட்டுநர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல, அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை எல்லாம் பெண்

காவலர்கள்தான் ஓட்டுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இதை எல்லா துறைகளுக்கும் எல்லா அலுவலகங்களுக்கும் கொண்டுவர வேண்டும். பரவலாக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம், தமிழக அரசின் துறைகளான சமூக நலன், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, குடிநீர் போன்ற துறைகளோடு ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவதற்கு இந்தக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல வரவேற்கக்கூடிய ஆலோசனை என்று நான் பார்க்கின்றேன். ஏனென்றால் இதுவரை பேசிய எல்லா துறைகளிலும் பெண்களினுடைய கோரிக்கைகள், பிரச்சினைகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஆகவே, இதற்கு ஒரு ஒருங்கிணைப்பு ஏற்படுத்தினால், எல்லா துறை பெண்களுக்கும் இந்தத் துறையினுடைய ஆலோசனைகளைத் தெரியப்படுத்திக்கொள்ள முடியும்.

சென்னை மாநகராட்சியில் 31-12-2002-ல் இரவு நேரத்தில் பெண் துப்புரவுப் பணியாளர்கள் வேலை செய்யவேண்டும் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1948 ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்படி தொழிற்சாலைகளில்கூட இரவு நேரங்களில் பெண்களைப் பணியில் அமர்த்தவேண்டாம் என்று தடை இருக்கிறது. ஆகவே, அதுபற்றி பரிசீலனை செய்து, அவ்வாறு பயன்படுத்த வேண்டாம் என்று சொல்லவேண்டும்.

பிற்பகல் 12-30

இராமேஸ்வரம் மீனவப் பெண்கள் rough season-க்கு, ஆண் மீனவர்களுக்குத்தான் அரசு உதவி கிடைக்கிறது. மீனவப் பெண்கள் அங்கு கடலுக்குச் செல்கிறார்கள். மீன் பிடிக்கவில்லை என்று சொன்னாலும், மற்ற பணிகள் எல்லாம் செய்கிறார்கள். அவர்களுக்கும் அந்த rough season-க்கான அரசு உதவித் தொகை வழங்கவேண்டும்.

மயான வெட்டி பெண் தொழிலாளர்கள், நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்கள், சலவைத் துறைகளில் சென்னை போன்ற நகரங்களில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கான கோரிக்கைகள். சென்னையில் மிகப் பெரிய ஜவுளிக் கடைகள், தனியார் மருத்துவ நிலையங்களில் மிகக் குறைந்த ஊதியத்தில்



பெண்கள் பணிபுரிகிறார்கள். கட்டுமானத் துறைகளில் பெண்களுக்கான வேலைவாய்ப்பு இப்போது...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கச் செல்கின்ற அந்த ஆண் மீனவர்களுக்கு மட்டும்தான் அந்தத் தொகை வழங்கப்படுகிறது. மீனவ மகளிர் என்பவர்கள் மீன் பிடிக்கச் செல்வதில்லை. அதனால் அவர்களுக்கான அந்தத் தொகை வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனை யார் பிடிக்கிறார்கள் என்பதல்ல, அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய எல்லோரும் பயன்பெற வேண்டும் என்ற முறையிலேதான் அந்தக் கோரிக்கையை நான் வைத்தேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணம் கொடுக்கப்படுவதனுடைய நோக்கமே, 4 மாத காலம் இயற்கைச் சீற்றங்கள் மிகுந்த, அதாவது மழைக்காலம், காற்று மிகுந்த காலத்திலே மீன் பிடிக்கச்செல்ல முடியாது. அதற்காகத்தான் அந்தப் பணம் கொடுக்கப்படுகின்றது. மீன் பிடிக்கச் செல்பவர்கள் ஆடவர்கள்தான். பெண்டிர் யாரும் மீன் பிடிக்க அங்கு செல்வதில்லை. அதனால்தான் அந்தப் பணம் கொடுக்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** பெண்கள் மீன்கள் பிடித்தால் மீன கிடைக்காதா? (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் யாரும் மீன் பிடிக்கச் செல்வதில்லை. அம்மா அவர்கள் மீன் பிடிக்கச் சென்றால், நிச்சயமாக அதுபற்றி அம்மா அவர்களுடைய ஆலோசனையோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மீன் பிடிப்பதற்குப் பெண்கள் செல்ல முடியும். அதற்கான தொழிற் பயிற்சியை அவர்தான் ஏற்படுத்தவேண்டும். அதாவது, இதுபோன்ற கருத்து வேறுபாடுகளை பேசிக்கொள்வதற்கு சமூக நலத் துறையில் இந்த ஒருங்கிணைப்புக் குழுவை ஏற்படுத்தினால், இதுபோன்ற கருத்துகளைப் பேசி ஓர் இறுதி முடிவிற்குச் செல்வதற்கு உதவியாக இருக்கும். அதைத்தான் சொல்ல வந்தேன்.

திரைப்படத் துறையில் பெண்கள், அதேபோன்று garments-ல், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) உரையை முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** இருங்கள்; இரண்டு நிமிடங்கள் அனுமதி கொடுங்கள். பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தல்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தில், என்ற எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசுகிறார். அதை நான் வரவேற்கிறேன். பெண்கள் சென்றால் மீன் பிடிக்க முடியாதா என்று கேட்டார். பெண்கள் மீன் பிடிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை. பெண்களாகச் செல்வதில்லை. அப்படிப் பார்க்கப்போனால், நம்முடைய தமிழ் மொழியிலேயே ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் சாசனத்திலேயே ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால்கூட, 'இந்திய அரசியல் சட்டத்தின்மீது உண்மையான பற்றுள்ள குடிமகனாகிய நான்' என்றுதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் பலமுறை கேட்டிருக்கிறேன். ஏன், 'குடிமகளாகிய நான்' என்று சொல்லக்கூடாதா என்று கேட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட சொல் தமிழிலேயே இல்லை என்கிறார்கள். ஆகவே, இதுவே பெண் குலத்திற்கு இழைக்கப்பட்ட ஓர் அநீதி என்று நான் கருதுகிறேன். ஆகவே, 'குடிமகன்' என்பதைப்போல, 'குடிமகள்' என்ற சொல்லும் வழக்கத்திற்கு வரவேண்டும் என்பதற்காக, நான் ஓர் இயக்கமே நடத்த இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சருடைய அந்த இயக்கத்திற்கு நிச்சயமாக நான் சார்ந்திருக்கக்கூடிய பெண்கள் அமைப்பு தமிழகம் முழுவதும் உதவி செய்யும். இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நாம் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் என் கருத்து.

அடுத்ததாக, Eve-teasing-க்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. இதற்கு



மகாபாரதத்திலே குழந்தை கண்ணனிலிருந்து தொடங்கலாம். அவர் கோபியர்களோடு நடந்து கொண்டதுகூட Eve-teasing-முறைதான். (சிரிப்பு) அதை வளர்க்கக்கூடிய வகையில் இன்றைக்கு பாடல் வரிகள் தமிழ் சினிமாவிலே இருக்கிறது.

"பொண்ணு ஒருத்தி சும்மா, சும்மா,
பார்த்து சிரிச்சா, சும்மா, சும்மா,
அவளும், நானும், சும்மா, சும்மா,
அஞ்சு மணிக்கு சும்மா சும்மா,"

இன்னும் இந்தச் சட்டமன்றத்தில் சொல்லமுடியாத பல பாடல் வரிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

"ஐயர் பொண்ணு மீன் வாங்க வந்தா
லவ் மேரேஜ்-ன்னு தெரிஞ்சுக்கோ;
ஆர்.டி.ஓ. பொண்ணை லவ் பண்ணினாக்க
எட்டு போடணும் தெரிஞ்சுக்கோ;
காரமா பேசி, கோபமா பார்த்தால்
ஆந்திரா பொண்ணுன்னு தெரிஞ்சுக்கோ;
தாராளமாக மனசிருந்தாக்க
கேரளா என்று தெரிஞ்சுக்கோ".

இப்படிப்பட்ட பாடல்கள் Eve-teasing-க்கு உதவிகரமாக இருக்கிறது. 'ரெடி, ரெடி-யா' என்று ஒரு பாடல்; சொல்லவே முடியாது. ஆர்லிக்ஸ் பாட்டில், குட்நைட், லக்ஸ் சோப்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாலபாரதி, நீங்களே பாடலை எல்லாம் சொல்லிக் கொடுக்காதீர்கள். இந்தப் பாடல்கள் எல்லாம் தெரியாது எங்களுக்கு. (சிரிப்பு)

**செல்வி க. பாலபாரதி:** ஏற்கெனவே, இந்தச் சபையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களும்கூட திரைப்படப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரித்து உடனடியாக நீதி வழங்க வேண்டுமென்கிற உயரிய நோக்கத்தோடு—இந்தியாவிலே வேறு எங்கும் பெண்களுக்கு எதிரான குற்றங்களை

விசாரிப்பதற்கு பிரத்தியேக நீதிமன்றம் இல்லை—மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் தமிழ்நாட்டிலே சென்னையிலும், கோயம்புத்தூரிலும் இரண்டு நீதிமன்றங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு அவை செயல்பட்டு வருகின்றன. இதில் ஜனவரி 2003-லிருந்து மார்ச் 2003 வரை கிட்டத்தட்ட 575 வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 36 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதுபோன்று கோயம்புத்தூரில் 10 வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 15 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி பேசுகின்ற போது Eve-teasing என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார். இந்த Eve-teasing என்ற வார்த்தையே பெண் இனத்தைக் கேவலப்படுத்துவதுபோல் இருக்கிறது என்று கருதித்தான், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களின் கொடுமையை, கடுமையை அது குறைப்பதாக இருக்கிறது என்று கருதித்தான், அந்தப் பெயரையே மாற்றியமைக்க ஒரு சட்டத் திருத்தம் இந்தச் சட்டமன்றத்திலேயே கொண்டு வந்து, நிறைவேற்றப்பட்டு, இன்றைக்கு Eve-teasing-க்குப் பதிலாக harassment of women என்று மாற்றப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாவட்டத்தில் கூட்டுமாவைச் சேர்ந்த தலித் பெண் ஜீனா குமாரிமீது 14-1-2003-இல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரதி, உரையை முடித்துக்கொள்ளுங்கள். திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, (குறுக்கீடு) பாலபாரதி ஒரு வாக்கியத்தில் முடியுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** ஜீனா குமாரிமீது bleaching powder கரைசல்—மாணவியினுடைய முகத்தில்—வீசப்பட்டது. மீண்டும் ஆசிட் வீசியிருக்கிறார்கள். அந்த மாணவி புகார் கொடுத்தும், உரியவர்கள் மீது நடவடிக்கை இல்லை. அந்த மாணவியினுடைய மருத்துவ சிகிச்சைக்கு—ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் இதுபோன்று நடந்த சம்பவத்திற்குக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்திருந்தார்கள், கடந்த காலத்தில். அதுபோன்று இந்தப் பெண்ணுக்கு இப்போது மீண்டும் பாதிப்பு. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.



முதியோர் உதவித் தொகை பல மாதங்களாக வரவில்லை. முதியோர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1962-ல் சில விதிமுறைகளை உருவாக்கி, அரசாங்கம் அப்போது அரசாணை பிறப்பித்தது. அதில் 65 வயதாகி இருக்க வேண்டும்; வருமானம் ஈட்டக்கூடிய வழி இருக்ககூடாது; வாரிசு இருக்கக் கூடாது; பிச்சையும் எடுக்கக் கூடாது; உயிர்போகும் தருவாயிலும் இருக்கக் கூடாது. இப்படி இருக்கின்றவர்களுக்குத்தான் 200 ரூபாய் என்று—அன்றைக்கு 100 ரூபாய் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் சில பகுதிகளில் முதியோர் உதவித்தொகை காலத்தில் வரவில்லை என்ற குற்றச்சாட்டு அரசுக்கு வந்து, அந்த அடிப்படையிலே அதை ஆய்ந்து, எந்தப் பகுதியிலும் முதியோர் உதவித்தொகை தருவதை நிறுத்தக் கூடாது என்ற ஆணை மாண்புமிகு முதல்வர் அவர்களால் இடப்பட்டு, அனைத்துப் பகுதிகளிலும் தற்போது முதியோர் உதவித்தொகை நிலுவையும் சேர்த்து கொடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. ஆகவே, 1962-ல் உருவாக்கப்பட்ட விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு சமூக நலத் துறை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். சென்ற சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் நான் அந்த வருமான வரம்பை 1,000 ரூபாய் இருப்பதை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். 5,000 ரூபாயாக இன்றைக்கு உயர்த்தியிருக்கிறார்கள். இது காலத்திற்கேற்ற நடவடிக்கை. இதுபோன்று, மீதம் உள்ள அந்த நிபந்தனைகளையும் தளர்த்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி

தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதி குழந்தைகள். அந்தக் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், நல்ல மன திடத்துடனும் வளர்வது நல்ல சமூகத்தை உருவாக்கும். குறைந்த எடையுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை இல்லாமல் இருக்க வேண்டும். கிராமப்புறத்துத் தாய்மார்களும் நல்ல மருத்துவ வசதியும் சத்துணவும் கிடைத்து ஆரோக்கியமான குழந்தைகளை ஈன்று எடுக்கின்ற வாய்ப்பினைப் பெற வேண்டும். பள்ளிக்குச் செல்லும் பருவத்திலேயே வறுமையின் காரணமாக தாயை இழந்து, தந்தையை இழந்து, ஓட்டல் கடைகளில் எச்சிலைத் தூக்குவதும், மேசையைத் துடைப்பதும் போன்ற கொடுமைகள் இந்தத் தேசத்திலே நடைபெற்று வருகின்றன. குழந்தைகள் பிச்சை எடுக்கும் அவல நிலை ஒழிக்கப்பட வேண்டும். 'பிச்சை வாங்கி உயிர் பேணல் ஒழிய வேண்டும்' என்று பாரதி பாடினான். ஆனால் சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகளான இந்தியாவில் இந்தக் கொடுமைகள் தொடர்வது பெருமை சேர்க்காது. வறுமையின் காரணமாகவும், சமூக, அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாகவும், பெற்றோர்கள் வாங்கிய கடனுக்காக, பெற்றோர்களுடன் ஒன்றும் அறியாத குழந்தைகளும் கொத்தடிமைகளாக வாழும் கொடுமை அழித்து ஒழிக்கப்படவேண்டும்.

நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனம் மகிழும் ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். தினமும் என்னைப் பார்த்து கையசைத்த குழந்தைகளை கல்வி கற்க அனுப்பினேன் என்று சொன்னார்கள். அப்படி இந்த மாநிலத்திலே இருக்கிற அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். போதிய ஆசிரியர்களும், பள்ளிக் கட்டட வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

The New Indian Express, November 17, 2001-ல் ஓர் ஆய்வறிக்கையினை வெளியிட்டுள்ளது. மறைந்த, மரியாதைக்குரிய முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் அமைந்துள்ள அனைத்து மையங்களிலும், 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு தற்போது வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டுவரும் முட்டைக்கு மாற்றுத் திட்டமாக வாரத்தில் ஒருநாள் ஒருவருக்கு 20 கிராம் உருளைக் கிழங்கும், மற்றொரு நாள் 20 கிராம் முழு அளவிலான கொண்டைக் கடலையும், பிரிதொருநாள் 20 கிராம் பச்சைப்



பயறும் வழங்கும் திட்டம் 1-11-2001-ல் 18 மாவட்டங்களுக்கு அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. உருளைக் கிழங்கு வழங்க ஆண்டிற்கு 58 கோடி ரூபாய் செலவாகும். வாரம் ஒருமுறை சத்துணவுடன் முட்டையும் சேர்த்து வழங்கும் திட்டத்தில் 47,000 கோடி ரூபாய் செலவானது. தற்போது கூடுதலாக 11,000 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. ஒரு முட்டையில் 79.6 கிராம் கலோரி சத்தும்....

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 11,000 கோடி அல்ல. 11 கோடி ரூபாய் என்று திருத்திக் கொள்ளவும். முட்டையைப் பற்றி ஏற்கெனவே, போனமுறை நடந்த மானியக் கோரிக்கையின்போது பதிலுரையிலேயே விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதே அவையிலே, கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் முட்டை போடுகிற திட்டத்தின் குறைபாடுகளை, கடந்த கால ஆட்சியிலே முதல்வராக வீற்றிருந்த மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அவர் அந்த நேரத்தில் அதைக் கைவிடுவதைத் தவிர்த்து விட்டார். அதற்குப் பிறகு, குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட முட்டையினால் ஏற்பட்ட சுகாதாரக் கேடுகளையெல்லாம் பலமுறை இந்த அவையில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அழுகிய முட்டைகள் வழங்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர்கள்மீதுகூட நடவடிக்கை எடுக்கச் சொல்லி, அவர்கள் அரசுக்குக் கடிதம் எழுதி, அந்தப் புகார் கடிதங்களையெல்லாம்கூட நான் கடந்த முறை இந்த அவையிலே சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆகவே, முட்டை போடுகிற திட்டம் என்பது, எந்தச் சூழ்நிலையிலேயும், குழந்தைகள் சுகாதாரத்தைக் கவனிக்கக்கூடிய திட்டம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உருளைக் கிழங்கு, கொண்டைக் கடலை, பச்சைப் பயறு என்பவை, குழந்தைகளுக்குத் தேவையான புரதச் சத்து அதிகமாக இருக்கக்கூடியவை. மாண்புமிகு அம்மா அவர்கள், அந்தப் பொருட்களை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, மிகச் சிறப்பான முறையிலே, இன்றைக்கு குழந்தைகள் விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சத்துணவுப் பணியாளர்களும் குறித்த காலத்திலே, எந்த முறையிலே, அந்தக் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்கிற விதிமுறைகளைக்கூட அரசு நிர்ணயித்து, அதன் மூலம் வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** விளக்கத்திற்கு நன்றி. குழந்தையின் ஊட்டச்சத்து இன்மையைக் குறைப்பது மற்றும் கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களின் 6 வயது வரையிலான குழந்தைகளின் ஆரோக்கிய நிலையை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 35 பைசா வழங்கப்படுகிறது. காய்கறி 15 பைசா, விறகு 11 பைசா, மசாலா 8.5 பைசா, உப்பு 0.5 பைசாவாக வழங்கப்படுகிறது. இதனால், சத்துணவு தரம் நிர்ணயிக்கப்பட்ட அளவில் கிடைப்பதில்லை. இன்றைய விலைவாசியில் 15 பைசாவில் குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க எந்தக் காய்கறியும் வாங்க முடியாது. எனவே, அதை ஒரு ரூபாயாக மாற்றி வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகள் மற்றும் கருவுற்ற மகளிர், பாலூட்டும் தாய்மார்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இணை உணவு, அந்த மையங்களிலேயே தயார் செய்து வழங்கப்பட வேண்டும். தற்போது இணை உணவு மகளிர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில், 26 தனியார் நிறுவனங்கள் மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. முன்பு வழங்கியதைப்போலவே, அந்த ஊரிலேயே கிடைக்கும் பொருள்களை வைத்து, இந்த உணவு தயாரித்து வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிரந்தாமாக சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லாமல் உள்ளார்கள். சத்துணவு மையங்களிலோ அல்லது ஊட்டச் சத்து மையங்களிலோ பணிபுரியும் பொறுப்பாளர்களுக்குப் பதவி உயர்வோ, சம்பள உயர்வோ இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பள உயர்வும், பதவி உயர்வும், வாரிசு அடிப்படையில் பணி வழங்குதலும் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி கொடுத்து ஆசிரியர் பணியிடம் காலியுள்ள இடங்களில் பூர்த்தி செய்ய வேண்டுமெனறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டச்சத்து மையங்களில் காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை பணிபுரியும் இவர்கள், எப்படி பகுதிநேர ஊழியர்களாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, அவர்களை முழு நேரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும். இல்லையென்றால், இவர்களின் பணியை முறைப்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. சத்துணவு மற்றும் ஊட்டச்சத்து, எதுவாக இருந்தாலும் இதில் பணிபுரியும் ஆயாக்களின் பணி ஒரே மாதிரியானது. ஆனால், இவர்களுக்கு வழங்கப்படும்



சம்பளம் வித்தியாசமானது. அதைச் சமப்படுத்தும் வகையில் சம்பள உயர்வு செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மையத்தில் இரண்டு ஆயாக்கள் பணிபுரிந்தால்தான் அந்தப் பணிகளை முழுமையாக சரிவரச் செய்து முடிக்க முடியும். பதிலாக, தற்போது ஒருவரை மாற்றியுள்ளார்கள். மாற்றப்பட்டவர் 60 ரூபாய்க்கு ஏறத்தாழ 20 கி.மீ. தூரம் சென்று வேலை பார்க்க வேண்டுமென்பது கொடுமையானது. அதை மாற்றி உள்ளூரிலேயே பணி புரியவும், காலியிடங்களுக்கு புதிய ஆயாக்களை நியமனம் செய்யவும் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

ஊட்டச் சத்துப் பணியாளர்களை நீக்கிவிட்டு, அந்தப் பணியைச் சேர்த்து சத்துணவுப் பணியாளர்கள் தலையில் சுமத்திவிட்டதால், சக்தி மீறிய பணியாக உள்ளது. இதை மாற்றி, ஊட்டச் சத்துப் பணிகளுக்குப் புதிய பொறுப்பாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் ஒட்டுமொத்தத் தரத்தை உயர்த்த வேண்டும். குழந்தைக் காப்பகங்களில், முக்கியமாக சுகாதாரமான முறையில், குழந்தைகளைப் பராமரிக்கத் தேவையான கழிவறைகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படைத் தேவைகள் இருக்க வேண்டும்.

தரமான முன்பருவக் கல்வி மையங்களில் நடத்தப்பட வேண்டும். பணி நேரத்தை மாற்றி, அதற்குத் தேவையான உபகரணங்கள், குழந்தைக் காப்பகங்கள், பயனாளிகளின் சூழலுக்கு ஏற்ற இடம் அதற்கு அமைத்துக் கொடுப்பதுடன், உணவுப் பொருட்களை மையங்களில் பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள இடவசதிகள் போன்றவை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் நலனுக்கென 25 அரசு குழந்தைகள் காப்பகங்கள் கொண்டு வருவதைப் பாராட்டி வரவேற்கிறோம். அதேபோல பெண் குழந்தைகளைப் பாதுகாக்கும் திட்டம். இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது. இன்றைக்கு, பெண் சிசு கொலை, கருவிலேயே சிதைக்கப்படுவது போன்றவை, உத்தரவாதம் இல்லாத, வாழ்க்கையின்மீது எழுந்துள்ள அதீதமான பயத்தாலேயே, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. எனவே, இவற்றைப்

போக்குகின்ற முறையில், ஏழைப் பெண் குழந்தைகள் அனைவருக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது, மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டு வந்த இந்தச் சத்துணவுத் திட்டம், அப்பொழுது, 1982 ஆம் ஆண்டு அவர்கள் காலத்தில் வழங்கிய பித்தளைத் தட்டு, டம்ளர், இவை பல இடங்களில் திருடு போய்விட்டன. பல இடங்களில் உடைந்து, ஓட்டை விழுந்து அழிந்துவிட்டன. அவற்றுக்குப் பதிலாக தற்போது சில்வர் தட்டுக்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இப்போது மீண்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை உடனடியாக வழங்கி உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீருடை வழங்குவது என்பது ஒரு சிறப்பு அம்சம். ஆனால், மழலை பேசும் கண்மணிகளுக்கு அரசு வழங்கும் உடையானது டெண்டர் என்பதன் பெயரால், தரமான துணியாக இல்லாமல், நல்ல முறையில் தைக்கப்படாமல், அரசு வழங்கும் துணி என்றாலே, இப்படி அருவறுப்பாகக் காட்சித் தரும் என்ற நிலையை மாற்றி, தரமான, நல்ல தையல் கலைஞர்களை...

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம்போக்கிலே, மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கின்றார். தரமான உடையாகத்தான் இலவசமாக சீருடையை நாங்கள் தைத்துத் தருகிறோம். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திலேயிருந்துதான் அந்த இலவச சீருடை வாங்கப்படுகிறது. அதைப் பெண்களே தயாரிக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் நாங்கள் பிரித்துத் தருகிறோம். அப்படிப் பிரித்துத் தருகிறபோது, வயதின் அடிப்படையிலே சில அளவுகளை வைத்து, 1-லிருந்து 5 வயது என்றால் ஒரு அளவு, 5-லிருந்து 10 வயது என்றால் ஒரு அளவு, இப்படி ஒரு பொதுவான அளவை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையிலேதான் தைத்துத் தருகின்றோம். இப்பொழுது குழந்தைகளின் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் துணியையும்கூட, நீங்கள் சொல்லக்கூடிய கோ-ஆப்டெக்ஸ்ஸிலிருந்து வாங்கப்படுகின்ற துணியைக்கூட மாற்றி, அவர்களுடைய நேரடிப் பார்வையிலே, எங்கள் அம்மாவின் நேரடிப் பார்வையிலே, பாலியஸ்டர் துணி இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு அதை



கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமே எங்களுக்குத் துணியாகத் தந்து, பெண்களே தயாரித்து, கொஞ்சம் காலதாமதமானால்கூட, உடனடியாக, ஜூன், ஜூலை மாதங்களில் நாங்கள் தைத்துத் தர இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொத்தாம்போக்கிலே தரமானதாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடாது என்பதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** பேசி முடித்து விடுகிறேன். சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, சோப்பு தயாரிப்பு, மெழுகுவர்த்தி தயாரிப்பு, பனியன் தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, இசைக் கருவி பயிற்சி, மாட்டுப் பண்ணை, உலோகப் பணி, தையல் தொழிற்பயிற்சி, விசைத்தறி நெசவு, மின்பற்றவைப்பு, பாய் நெசவு, சுகாதாரத் துண்டுகள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது எங்கெங்கு எவ்வளவு பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஏனென்றால், தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மட்டும் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட படித்தவர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களுக்கு எல்லாம் இந்தப் பயிற்சி பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்தப் பள்ளிகளில் தொழிற்கல்வி ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்ற சூழ்நிலையில் அவர்கள் அனைவரையும் பயன்படுத்தி இப்படிப்பட்ட பயிற்சியைக் கொடுத்து அவர்களுக்குப் பணியை ஏற்படுத்திக் கொடுப்பது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வயதானவர்களுக்கும், கணவனை இழந்தவர்களுக்கும், சமூகத்தில் நலிவுற்றப் பகுதியினர்களுக்கு வழங்கி வந்த உதவித்தொகை பற்றி இப்போதுதான் விளக்கம் சொன்னார்கள்; இருந்தாலும், அதிலேயிருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், பல பேர்களுக்கு

அந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குச் சொல்கிற காரணம, ஒரு சிறிய வீடு இருக்கிறது. அந்த வீட்டிற்காக நிறுத்திவிட்டோம் என்று சொல்கிறார்கள். கணவனை இழந்தவர்களுக்கு, மீண்டும் வயது சான்றிதழ் வாங்கி வரவேண்டும் என்று இப்படியெல்லாம் சொல்லி நிறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி நிறுத்திவிட்ட அவர்களுக்கு வழங்கவேண்டும். அனைவருக்கும் அதனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இருந்தாலும், அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இன்றைக்கு சுயமாக....

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்து விடுகிறேன்; முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** எனது தொகுதிப் பிரச்சினை. வாணியம்பாடியிலிருந்து, சேலம் வரையிலான ரோடும், திருப்பத்தூரிலிருந்து சிங்காரப்பேட்டை வரையிலான ரோடும், அனுமந்ததீர்த்தத்திலிருந்து தீர்த்தமலை வரையிலான ரோடும், வேப்பம்பட்டி வழியாகச் செல்லும் தீர்த்தமலை ரோடும், அம்மாப்பேட்டை வரையிலான ரோடும், அரூர் நகர மையப் பகுதியிலே இருக்கிற ரோடும், அதேபோன்று, கோட்டப்பட்டு, சிட்லிங், பெரியாம்பட்டி போன்ற பகுதிகளிலுள்ள ரோடுகளும் செப்பனிடப்பட வேண்டும். அனுமந்ததீர்த்த பாலம், பாவக்கல் அருகே உடைந்து கிடக்கும் பாலம் மற்றும் வறட்டாற்றின் குறுக்கே ஒரு பாலமும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே, ஆரம்பத்திலே அறிவிக்கப்பட்ட ஜவ்வாது மலை அடிவாரத்தில், ரூ.66 இலட்சத்தில் நீர்த்தேக்கம் கட்டுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்றையதினம் வரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை. எனவே, இந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும். சிங்காரப்பேட்டையின் அருகே, ஜவ்வாது மலை அடிவாரத்தில், கடப்பாரை ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பாம்பாற்றிலும், அனுமந்ததீர்த்தம், தென்பெண்ணை ஆற்றிலும், அதுபோன்று வறட்டாற்றின் குறுக்கேயும் நீர்த் தேக்கங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையிலே, பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, எனது கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

நாட்டினுடைய most productive asset என்று சொன்னால், அது human resources தான். ஆகவே, மனிதவளத்திலே, உள்ளம் ஊனமுள்ளவர்கள், உடல் ஊனமுற்றவர்களின் முன்னேற்றத்திற்கானத் திட்டங்களை குறிப்பாக, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை ஓர் அரசாங்கமானது ஏற்று நடத்த வேண்டியது, ஒரு Welfare State-னுடைய கடமையாக இருக்கிறது. இதிலே மகளிர் மேம்பாட்டைப் பற்றிப் பேசும்போது, ஏற்கெனவே சில உறுப்பினர்கள், தாயினுடைய பெயரைப் பெயருக்கு முன்பாக போட்டுக் கொள்ள வேண்டுமென்றக் கருத்தைத் தெரிவித்தார்கள்; வரவேற்கிறேன். குஜராத்திலே சென்ற மாதம் அது சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாலபாரதி அவர்கள் (குறுக்கீடு) செல்வி பாலபாரதி அவர்கள், இங்கே பேசும்போது, கண்ணனுடைய லீலையைப் பற்றிச் சொல்லி Eve-teasing போல இருப்பதாகக்கூட, இங்கே குறிப்பிட்டார்கள். கண்ணன், ஏழாண்டுகளிலே துவாரகைக்குச் சென்றுவிட்டான். ஆகவே, அவன் 7 ஆண்டுகள் வரையில்தான் மதுராவிலே இருந்தான். அங்கு ஒரு குழந்தையாக தாயோடும், மற்றவர்களோடும், அவன் விளையாடிய விளையாட்டுகளை, தாயுள்ளத்தோடு வருணித்த கவிஞர்கள், அதை கிருஷ்ணா லீலையாக வருணித்திருக்கிறார்கள். அதை நாம் ஒரு தாயுள்ளத்தோடு பார்க்கும்போது, அது ஒரு குழந்தையின் விளையாட்டு; அதைத் தவறாகப் பலரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். 7 வயதுக்குக் குறைவாக அவன் இருந்த காலம்தான், மதுராவிலே அவன் இருந்தது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கு கொள்கைக் குறிப்பிலே முதன்முதலாக, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்கின்ற திட்டமானது அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, பாலபாரதி? (குறுக்கீடு) பாலபாரதி, எதற்கு மகாபாரதத்தை வம்புக்கு இழுக்கிறீர்கள்?

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசவில்லை. மனுவின் குரலாக அவர் பேசிக்கொண்டிருக்கிறார். (சிரிப்பு) ஏனென்றால், மனுதான் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று அடிமைக் கருத்தைச் சொன்னது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; புதிது புதிதாகச் சொல்லாதீர்கள். திரு. ராஜா, பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தகப்பன் என்ற முறையிலே, வீட்டிலே பெண் குழந்தைகளை எப்படி நாம் வைத்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து, குடும்பத்திலே குழந்தைகள் விளையாடும்போது, அதை வருணிப்பது என்பதைக்கூட ஒரு இரசனையோடு இருக்க வேண்டும். ஆகவே, அங்கு இதிலே மனு எங்கே வந்தான்? மகாபாரதத்திலே கண்ணன் 7 வயதுக்கு முன்பாக விளையாடிய விளையாட்டுதான் கிருஷ்ண லீலா என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பெண் சிசுக் கொலையைப்பற்றி இங்கே..... (குறுக்கீடு)

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம்; வேண்டாம். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** பெண் சிசுக்கள்... (குறுக்கீடு) கண்ணனைப் பற்றிச் சொல்லவில்லை என்றால், நான் பேசியிருக்கப் போவதில்லையே? அவர் நிறுத்தியிருந்தால் நான் பேசப் போவதில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ராஜா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** இங்கே பெண் சிசுக் கொலையைப் பற்றியும் அதைத் தடுப்பதற்கான பல நடவடிக்கைகளைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



"மாதர் தம்மை இழிவு செய்யு
மடமை யைக்கொ ளுத்துவோம்"

என்று பாரதி பாடினான். இன்று மாதரையே கொளுத்துகின்ற மடமையானது சமுதாயத்திலே வளர்ந்திருக்கிறது துரதிருஷ்டவசமானது. அதிலும் பெண் குழந்தைகள், பல்வேறு காரணங்களுக்காக கொல்லப்படுகிறார்கள். கருவிலேயே பெண் சிசுக்கள் கொல்லப்படுகின்றன. ஆகவே, Infanticide - foeticide-இம்மாதிரியான பல்வேறு நடவடிக்கைகள் இருப்பதற்கு, வறுமை, வரதட்சணை, ஆண் குழந்தைகள் அதிகமாகப் பிறக்க வேண்டுமென்ற எண்ணம், ஆண் குழந்தைகள் பற்றிய எதிர்பார்ப்பு ஆகியவை எல்லாம் இதற்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. அதிலும் பல்வேறுவிதமான கொடூரமான முறைகளிலே இந்தப் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றன. சமீபத்திலே ஒரு செய்தி படித்தேன். பிறந்த ஒரு பெண் குழந்தையை அரிவாள்மனையை வைத்து அறுத்துக் கொலை செய்ததாக. மிகக் கொடூரமான முறையிலே பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றன.

பிற்பகல் *12-55*

அதிலே குறிப்பாகப் பார்க்கப்போனால், இதுபற்றிய ஆய்வு தமிழகத்திலே தருமபுரி, சேலம், மதுரை, தேனி உள்ளிட்ட பழைய மதுரை மாவட்டங்களிலே இது பரவலாக இருப்பதாகச் சொல்கிறது. அதிலும் சில ஆய்வுகள் குறிப்பிட்ட சமுதாயத்தினர் மத்தியில் மாத்திரம் இது இருக்கிறது என்றுகூட சொல்கின்றன. ஆகவே, அதனுடைய உண்மையான காரணங்களைக்கூட நாம் ஆய்ந்து அறிய வேண்டும். ஏனென்றால், இப்போது நம்முடைய நாட்டிலே பெண்களுடைய எண்ணிக்கைப் பற்றிப் பார்க்கும்போது, தமிழகத்தில் 1991-ஆண்டினுடைய கணக்கெடுப்பின்படி, 1,000 ஆண்களுக்கு 1,044 பெண்கள் இருந்தார்கள். ஆனால், 2001-ஆம் ஆண்டினுடைய கணக்கெடுப்பின்படி 1,000 ஆண்களுக்கு 986 பெண்கள்தான் இருக்கிறார்கள். இதிலேயும் child sex ratio-ஐப் பார்க்கும்பொழுது, அதாவது பிறந்த குழந்தையிலிருந்து 5 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது, தமிழகத்தில் இப்போது 1,000 ஆண் குழந்தைகளுக்கு 939 பெண் குழந்தைகள்தான் இருக்கின்றன. அதுவும்கூட தருமபுரி மாவட்டத்திலே 1,000 ஆண் குழந்தைகளுக்கு 877 பெண் குழந்தைகள்தான் என்கின்ற ஒரு சூழ்நிலையானது இருக்கிறது. ஆகவே, the men have to be very vigilant. நாளைக்கு இவர்களுக்கு bride

கிடைக்காமல் போய்விடலாம். ஆகவே, பெண் குழந்தைகள் பிறப்பதை ஊக்கப்படுத்த வேண்டும்; அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தமாதிரி பெண் கொலைகள் அதிகரிப்பது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்காகப் பல்வேறு திட்டங்கள் மத்திய, மாநில அரசுகளால் அறிமுகப்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் இருக்கின்றன. மத்திய அரசாங்கத்தினுடைய சிறுமிகள் முன்னேற்றத் திட்டம், பாக்கியஸ்ரீ இன்சூரன்ஸ் திட்டம். இராஜ இராஜேஸ்வரி இன்சூரன்ஸ் திட்டம். போன்ற திட்டங்களும், தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இங்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், தொட்டில் குழந்தைத் திட்டமானது இன்னமும்கூட வெற்றிகரமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், இந்தத் தொட்டிலில் சேர்க்கப்படுகின்ற பெண் குழந்தைகள் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன; அவர்கள் எப்படி காப்பகங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள், குழந்தையற்ற பெற்றோர்கள் அதை எப்படி சுவீகாரம் எடுத்துக்கொள்கிறார்கள்; அங்கே சுவீகாரம் கொடுக்கப்பட்ட இடத்திலே அந்தக் குழந்தைகள் எப்படி வளர்க்கப்படுகின்றன என்பதுபற்றி ஒரு குறும் படமாக எடுத்து சினிமா தியேட்டர்களிலும் T.V.-களிலும் நாம் விளம்பரமாகப் போட்டுக் காட்டுவோமேயானால், அது பெண் குழந்தை பெற்றவர்களுக்கு, அது தேவை இல்லை என்று நினைப்பவர்களுக்கு நிச்சயமாக, ஏதோ என்னுடைய குழந்தை எங்காவது நன்றாக வளரும் என்கின்ற எண்ணத்தைக் கொடுக்கும்; ஆகவே, இந்தத் திட்டமானது வெற்றிகரமாக இருக்கும் என்று நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இந்தத் தொட்டிலில் குழந்தைகளைக் கொண்டுவந்து போட வரும்போது, என்னதான் வேண்டாத குழந்தை என்று நினைத்தாலும்கூட வெளிப்படையாக பகலில் கொண்டு வந்து போடுவதற்கு கூச்சப்படுகின்ற மக்கள் இருக்கிறார்கள்; ஆகவே, இரவு நேரத்திலே குழந்தைகளைப் போடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் 24 மணி நேரமும் அந்தத் தொட்டில் குழந்தைகள் இருக்கின்ற இடத்திலே அதற்கான ஊழியர்கள் இருக்க வேண்டும்'; மேலும் இது ஏதோ, நாம் தூக்கி போடுகிற குழந்தை என்று எண்ணி உணவு கொடுக்காமல்கூட கொண்டு வருகிறார்கள்; அங்கே குழந்தைகளை கொண்டு வரும்போது அந்தக் குழந்தைக்கு உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனையை மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே தொட்டில் குழந்தை திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக ஆரம்பித்து தொடங்கி வைத்தவர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி, சேலம், உசிலம்பட்டி, நாமக்கல் இதுபோன்ற இடங்களில் வரவேற்பு மையங்கள் தொடங்கப்பட்டு, அங்கே கொண்டுவந்து விடப்படுகிற குழந்தைகளை பாதுகாக்க 24 மணி நேரமும் ஆயாக்களுக்கு அரசின் சார்பிலே சம்பளத்தைத் தந்து, அவர்கள் கவனித்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையை, திட்டத்தைத் தொடங்கும்போதே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது தவிர, தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அரசுத் தொட்டிலை வைக்க வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு சமூக நலத் துறையின் சார்பில் அறிவுறுத்தி, அதன் மூலமும் குழந்தைகள் பெறப்பட்டு, திரும்ப வரவேற்பு மையத்திற்கு எடுத்துக் கொண்டுபோய் வைத்து, தொண்டு நிறுவனங்களிலே ஒப்படைக்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள் அந்தக் குழந்தைகளை எந்த முறையிலே, யாரிடத்திலே ஒப்படைக்கிறார்கள் என்பது முதல், அந்தக் குழந்தைகள் வளருகிற வரை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே இருக்கிற அரசு கண்காணித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதுபோல உடல் ஊனமுற்றவர்களுக்கு, அவர்கள் வாழ்க்கையைத் தொடங்கும்போதே, ஏதோ ஒரு குறைபாட்டோடுத் தொடங்குகிறார்கள் என்ற காரணத்தாலே, அந்தக் குறைபாட்டைச் சரி செய்வதற்காக, அவர்களுக்கு சிறப்பான கல்வி அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

பிற்பகல் 1-00

பல்வேறு இடங்களில் ஊனமுற்றோருக்கான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. காரைக்குடியிலே 1937-லிருந்து Deaf and Dumb School நடந்துகொண்டு இருக்கிறது. ஆனால் அது உருவாக்கப்பட்டபோது அந்தப் பள்ளிக் கூடத்தினுடையச் செலவை நகராட்சியே ஏற்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அங்கே 1956-57—லிருந்து அந்தப் பள்ளிக்கூடத்திற்கு நிரந்தர அங்கீகாரம் அளிக்கப்பட்டு அங்கு 1 முதல் 5 வரை வகுப்புகள் நடந்துகொண்டு இருக்கின்றன. பள்ளிக்கூடம் சிறப்பாக நடைபெறுகிறது. அங்கு இப்போது அனுசுயா என்ற ஆசிரியர் 1976-லிருந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார். ஓர் ஆசிரியர் மாத்திரமே அங்கு இருக்கிறார். நகராட்சிப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்ட சமயத்திலே இந்தப் பள்ளி விடுபட்டுப் போனது. இன்னும் நகராட்சியிலேதான் இருந்துகொண்டு இருக்கிறது. ஆனால் தற்போது நகராட்சி, இப்பள்ளிக்கூடத்தை நடத்துவதில் சிரமம் இருக்கிற காரணத்தினால்—இருந்த ஓர் ஆசிரியையும் இந்த ஆண்டு ஓய்வு பெறும்போது—பள்ளிக்கூடத்தை மூடிவிடுவார்கள் என்கிற தகவல் இருக்கிறது. 30-க்கும் மேற்பட்ட குழந்தைகள் படித்துக்கொண்டு இருக்கின்றனர். எனவே, தமிழக அரசு உடனடியாக இந்தப் பள்ளிக்கூடத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஆசிரியரை நியமிப்பதோடு, நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கமே மேற்கொண்டதைப்போல இந்தப் பள்ளிக்கூடத்தையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் கிராமப்புறங்களிலே ஒரு மிகப் பெரிய மௌனப் புரட்சியானது ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. பல்வேறு கிராமங்களுக்கும் சென்று பார்க்கும்போது, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக மகளிருக்கான சமூகப் பாதுகாப்பு மாத்திரம் அல்லாமல், பொருளாதார ரீதியாக மகளிர் தங்கள் கால்களிலே நிற்கின்ற அளவிற்கு இருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. சென்றஆண்டு மட்டும் மத்திய அரசாங்கம் 1,75,000 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக அனுமதியைத் தந்து 540 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே இதுவரை 1,26,106 சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன என்றும், அதிலே 21,50,193 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றும் இதுவரை இதற்காக 288 கோடி ரூபாய் அவர்கள் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்றெல்லாம் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கின்றது. நான் பல்வேறு கிராமங்களிலும் உள்ள இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் சென்று, அவர்களுடைய நடவடிக்கைகளை நெருக்கமாகப் பார்த்து இருக்கிற காரணத்தால் வெறும் 5 ஆயிரம் ரூபாய் வங்கிகளிலே கடன் உதவி பெற்று இன்றைக்கு 4 இலட்சம், 5 இலட்சம் என்று வங்கிகளே தானே வந்து நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்று வற்புறுத்துகின்ற அளவிற்கு மிகச் சிறப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்கள்



செயலாற்றிக்கொண்டு இருக்கின்றன. அதற்கு இன்னொரு காரணம் என்னவென்றால், பெண்கள் மிகவும் பொறுப்பு உள்ளவர்களாக நடந்துகொள்கிறார்கள். ஏனென்றால் recovery of debt rate-ல் 99.9 சதவிகிதம் இருக்கிறது என்று வங்கிகளினுடைய மேலாளர்கள் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு இது செயலாற்றிக்கொண்டு இருக்கிற சமயத்தில்...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மத்திய அரசு மூலம் 540 கோடி ரூபாய் கொடுத்ததாக இங்கே தகவல் சொன்னார்கள். (குறுக்கீடு) அதைச் சொல்லுங்கள். தேசிய அளவில் என்று சொல்லுங்கள்

**திரு. எச். ராஜா:** இல்லை, நான் தேசிய அளவில் 1,75,000 குழுக்களும், அதற்கான தொகையும் என்றுதான் சொன்னேன். தமிழகத்திற்கு மாத்திரம் என்று நான் சொல்லவில்லை. சொல்லும்போதே சொன்னேன், தேசிய அளவில் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று.

அதேபோல இங்கு இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிலே ஒன்றை நான் பார்க்க முடிந்தது. ஒரு சில குழுக்களிலே, எவ்வாறு இருக்கிறது என்று சொன்னால், இந்தப் பணத்தை வாங்கி அவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பட்டுவாடா செய்துகொண்டு, லேவாதேவியோ, செலவோ செய்துவிடுகிறார்கள். ஆனால் பல சுய உதவிக் குழுக்களிலே அதற்காக அவர்கள் தொழிலிலும் ஈடுபட்டு, கைத்தொழில் பயிற்சியும் கொடுக்கப்பட்டு அதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவிற்கு ஒரு constructive-ஆகச் செயலாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களிலும், அவர்களுக்குத் தொழில்கள் தொடங்குவதற்காகப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் சேமித்ததற்குப் பிறகுதான் வங்கிக் கடன் கொடுக்கிறது. ஆகவே, வங்கியில் இருந்து பெறுகின்ற கடனை, productive-ஆக உபயோகப்படுத்துவதற்கு அவர்களுக்குப் பயிற்சிகள் அளிப்பதிலும் அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகத் தான் பல்வேறு வகையான அரசாங்கத்தின் திட்டங்களும் செயலாக்கம் செய்யப்படுகின்றன. அது மத்திய அரசினுடையத் திட்டமாக இருந்தாலும் சரி, மாநில அரசினுடையத் திட்டமாக இருந்தாலும் சரி, இரண்டு அரசுகளும் இணைந்து செயலாற்றுகின்றத்

திட்டமாக இருந்தாலும் சரி, பல இடங்களிலே மதம் சார்ந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இந்தப் பணமானது மத்திய, மாநில அரசுகள் தருகிறது என்பதை மறைத்து, அவர்கள் தருவதாகச் சொல்லி, இதை மத மாற்றத்திற்குக்கூட பயன்படுத்துகின்ற நிகழ்ச்சிகள் கவனத்திற்கு வந்து இருக்கின்ற காரணத்தினால், எந்த ஒரு திட்டத்தையும் செயல்படுத்தும்போது, மத்திய, மாநில அரசினுடைய நிதியின் மூலமாக செயலாக்கம் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடப்பட வேண்டும் என்று அரசு குறிப்பாணை அனுப்புவது நல்லது. மேலும் அவர்கள் எந்தத் திட்டத்திற்காக நாம் நிதி கொடுக்கிறோமோ, நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு அவர்கள் செய்ய வேண்டும். 80 சதவீதம் அரசு கொடுக்கிறது என்று சொன்னால், அந்த அளவிற்கு அவர்கள் செய்து இருக்கிறார்களா என்று பார்க்க Performance Audit-க்கு ஒரு சிஸ்டம் இருந்தால் நல்லது. எல்லா நோமும் எல்லா அமைப்புகளுக்கும் கொடுக்க முடியாது. *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எச். ராஜா:** இல்லை, இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். ஏனென்றால், அன்றைக்குச் சொல்ல வேண்டிய சில கோரிக்கைகள் இருக்கின்றன. அதைச் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். ஆகவே, அதற்கான ஒரு Performance Audit-க்கான ஒரு வழிவகையையும் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையிலே அன்று நேரமின்மை காரணமாகப் பேச முடியவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒருசில கோரிக்கைகளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

விஸ்வகர்மா சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லு வேலை, தச்சு வேலை, பாத்திர வேலை, சிற்ப வேலை, நகை வேலை போன்ற ஐந்து தொழில்களைச் செய்து வருகிறார்கள். இதிலே பெரும்பாலானவர்கள், நகை வேலை செய்பவர்களாக இருக்கலாம். ஆனால் வீட்டிலே நகை இருக்காது. ஏழ்மையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வி, தொழில், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தினாலே ஐந்தொழில் விஸ்வகர்மா சமுதாயத்ினரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேச் சேர்க்க



வேண்டுமென நான் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மருத்துவ சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தமிழகம் முழுவதும் 30 இலட்சம் பேர்களுக்கு மேலே இருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழக அரசு ஏற்படுத்திய A.N. சட்டநாதன், அம்பாசங்கர் குழுக்களும் சரி, மத்திய அரசு ஏற்படுத்திய டாக்டர் காக்கா காலேக்கர் குழு, மண்டல் கமிஷன் ஆகியவையும், மருத்துவ இனத்தைச் சேர்ந்தவர்கள் தீண்டத்தகாதவர்களாகவும், கல்வி, பொருளாதார, சமூக நிலைகளிலே மிகவும் பிற்பட்டவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால், இந்தச் சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமெனப் பரிந்துரை செய்திருக்கின்றன. எனவே, தமிழக அரசும் கருணைகூர்ந்து இவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலேச் சேர்க்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1995 தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தினுடைய அறிக்கை எண் 7/93-ன் பரிந்துரையின் மூலமாக குமரி மாவட்டத்தில் இருக்கின்ற இந்து அரையர் சமுதாயத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. பரிந்துரை செய்யப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆனபிறகும்கூட அது இன்னும் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, அதையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம், பரமக்குடி, திருப்புல்லாணி, தேவிப்பட்டினம், இராமேஸ்வரம் ஆகிய பகுதிகளிலே குருவிக்காரன் காட்டு நாயக்கர் இன மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் காடுகளிலே பறவைகளை வேட்டையாடி பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிற, மிகவும் ஏழ்மை நிலையிலே இருக்கக்கூடிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அங்கு கல்வி, வேலைவாய்ப்புகளுக்காக இவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஆனால் இந்தச் சமுதாயம் ஜாதிப் பட்டியலிலே இல்லை என்று சொல்லி, அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, தமிழக அரசாங்கம் இவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றுமொரு anomaly ஒன்று இருக்கிறது. மலையாளி இன மக்கள் சேலம், நாமக்கல் மாவட்டங்களிலே இந்தியப் பழங்குடியினர் பட்டியலிலே இருக்கின்றார்கள். ஆனால், ஈரோட்டில் இருக்கின்ற

[திரு. எச். ராஜா] [2003 ஏப்ரல் 25

இதே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரம், அந்த இந்தியப் பழங்குடியினர் பட்டியலிலே சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள். இதற்காக அவர்கள் தமிழக அரசுக்கும், அதிகாரிகளுக்கும் பலமுறை மனு போட்டிருக்கிறார்கள் எனவே, மலையாளி இன மக்கள், ஈரோடு மாவட்டத்தில் வசிக்கின்றவர்களும்கூட இந்தியப் பழங்குடியினர் பட்டியலிலே இணைக்கப்பட வேண்டும்.

அதுபோல, அனைவருக்குமே 'நல்ல காலம் பிறக்குது, நல்ல காலம் பிறக்குது' என காலையிலே வந்து சொல்லக்கூடிய கணிக்கர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், அவர்கள் நல்ல காலம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் செங்கோட்டை, கன்னியாகுமரி தாலுகாக்களில் இருப்பவர்களுக்கு மாத்திரமே இந்தியப் பழங்குடியினர் Certificate கொடுக்கிறார்கள். ஆனால், இப்போது நவீன வளர்ச்சியின் காரணமாக மதுரை, சென்னை போன்ற பகுதிகளுக்கெல்லாம் இவர்கள் migrate—ஆகி வந்திருக்கின்ற காரணத்திலே, இங்கே இருப்பவர்களுக்கு அந்த Certificate கொடுக்க மறுக்கிறார்கள், எனவே, அவர்களுக்கும் இந்துப் பழங்குடியினர் Certificate—தமிழகம் முழுவதும் அவர்களை ஒரே இனமாக பாவித்து—அவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) பழங்குடியினருக்கான சான்றிதழ் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**•மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுட்டுவிரல் நீட்டிச் சூரியனைக் கருக வைத்துப்
பட்டுப் போகாத பாண்டியனின் தமிழ் மனமே,
ஈட்டி முனையாய் எதிர்ப்பை வீழ்த்தி
சட்டமன்றம் நிமிர்ந்த சரித்திரத்துப் பொன் யாழே!
எதிர்வந்த தீப்பகையை பந்தாய் உருட்டும்
பாவேந்தன் கவி வரியே!
தேனைச் சுமந்த தென்னன் புகழே,
தேரில் வந்த தெய்வ வடிவே!

உங்களை வணங்கி உரையைத் தொடங்குகிறேன்.

ஆறு கோடி தமிழ் மக்களின் அசைக்க முடியாத தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக இந்த இராஜ சிம்மாசனத்தில்



2003 ஏப்ரல் 25] [திருமதி பா. வளர்மதி]

எங்கள் அம்மா அமர்ந்திருக்கிறார். இந்தச் சிகரம் தொட அவர் சிந்திய வியர்வையும், செய்த தியாகமும் ஏராளம். எங்கள் அம்மாவே ஒருமுறை குறிப்பிட்டதைப் போல, அவர் நடந்து வந்த பாதை மலர்ப்பாதை அல்ல, கல்லிலும் முள்ளிலும் நடந்து, காட்டாற்றை கடந்து, நெருப்பாற்றை நீந்திதான் எங்கள் அம்மா இங்கே வந்திருக்கிறார்.

*1989, மார்ச் 25— 14* ஆண்டுகள் ஓடிவிட்டன, பழையதைக் கிளற வேண்டுமா என்றார்கள். *50* ஆண்டுகள் ஆகிவிட்டதால், காந்தியை கோட்ஸே கொன்றதை மறந்துவிட வேண்டுமா? கட்டபொம்மனை எட்டப்பன் காட்டிக்கொடுத்ததை மறந்துவிட வேண்டுமா? ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், அந்த பாரதச் சபையில் எங்கள் பாஞ்சாலி பட்ட துயரை நினைக்கக் கூடாதா? ஆண்டு தோறும் நரகாசூரனை வதம் செய்த தீபாவளியைக் கொண்டாடுகிறோமே, எதற்காக? முருகன் ஆலயங்களில் ஆண்டுக்கொரு முறை சூரசம்ஹாரம் நடைபெறுகிறதே, எதனால்? அறுவடை முடிந்த வயல்வெளிகளிலும், களத்துமேடுகளிலும் நடத்தப்படும் கூத்துகளில் வரும் சீதையையும், பாஞ்சாலியையும் பார்த்து எங்கள் கிராமத்துப் பெண்கள் இன்னமும் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தில் இன்னமும் இராவணன்கள் இருக்கிறார்கள். இரணியன்கள் இருக்கிறார்கள். துரியோதனனும், துச்சாதனனும் இருக்கிறார்கள். இவர்களிடத்திலேயிருந்து பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பு, கலாச்சாரப் பாதுகாப்பு, அரசியல் பாதுகாப்பு வேண்டுமென்பதற்குத்தான் அப்படிப்பட்ட அநியாயங்களைத் திரும்பத் திரும்ப நினைக்கிறோம், பேசுகிறோம்.

*பிற்பகல் 1-10*

எங்களைக் குறை சொல்பவர்களைக் கேட்கிறேன். *40, 50* ஆண்டுகளுக்கு முன்னால் பாளையங்கோட்டையில் வாழ்ந்த அந்தப் பாம்பையும், பல்லியையும்கூட இன்னமும் அவர்கள் விடவில்லையே! இரயில் ஓடாத தண்டவாளத்தில் உயிர் பயத்தோடு அவர்கள் படுத்துக் கிடந்ததை இன்னமும் அவர்கள் மேடைதோறும் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். சிவந்த கண்களோடும் அவிழ்ந்த கூந்தலோடும் எங்கள் அம்மா இந்த அவையைவிட்டு வெளியேறியதை நாங்கள் மறக்க வேண்டுமா? இத்தனை கொடுமைகளையும் தாங்கிக் கொண்டுதான் எங்கள் அம்மா பல்வேறு

சீர்திருத்தங்களை, நலத்திட்டப் பணிகளை இன்றைக்கு வரைக்கும் நாட்டுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் எடுத்துக்காட்டான தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கிறார். இந்த உயரத்தை எட்டி வருவதற்கு எங்கள் அம்மா ஏறி வந்த படிக்கட்டுகள் ஒவ்வொன்றும் அவரே உருவாக்கியவைதான். வேறு எந்தக் கட்சியோ, வேறு எந்தத் தலைவரோ, வேறு யாருடைய உழைப்போ அவரின் இந்த வெற்றிக்குக் காரணம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் அம்மாவின் இராஜதந்திரமும், எங்கள் அம்மாவின் துணிவும், எங்கள் அம்மாவின் உழைப்பும்தான் அவருடைய வெற்றிகளுக்கெல்லாம் காரணம். இத்தனை ஆண்களுக்கு மத்தியிலே ஒரு பெண்ணாக, தன்னந்தனியாக நின்று சாதித்துக் காட்டியிருக்கிறார் என்றால், வெற்றி மேல் வெற்றி பெற்று வருகிறார் என்றால், இது புரட்சி இல்லையா? புரட்சித் தலைவி என்று எங்கள் அம்மாவை நாங்கள் அழைக்கக் கூடாதா? புரட்சித் தலைவி என்றால் எந்த நாட்டிலே போய் புரட்சி செய்தார் என்கிறார்கள். புரட்சி என்றால் போர் என்றோ, கலகம் என்றோ எந்த அகராதி உங்களுக்குச் சொல்லித் தந்தது? புரட்சி என்றால் புரட்டுதல். தலைகீழாய் மாற்றுதல் என்றுதான் பொருள். ஆணாதிக்க அரசியலை புரட்டிப்போட்டு, தலைகீழாய் மாற்றிக் காட்டி, ஓர் ஆட்சிக்கு தலைமை தாங்கி சரித்திரம் படைத்திருக்கிறாரே எங்கள் தலைவி, புரட்சித் தலைவி இல்லையா? நினைவிலே வையுங்கள். எங்கள் ஜான்சி இராணிக்கு, சரஸ்வதியைப் போல வீணை வாசிக்கவும் தெரியும். பராசக்தியைப் போல வாளை சுழற்றவும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

தாய் முகம் பாராமல், தந்தையின் கரம் தொடாமல், அறுந்த தொப்புள் கொடியோடும், அழுது அழுது சிவந்த கண்களோடும் குப்பை மேடுகளில் விழுந்து கிடந்த அனாதைப் பிள்ளைகளுக்கு தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்தாரே எங்கள் அம்மா, இந்த மகத்தான மனித நேயத்தை உங்கள் மனம் பார்ப்பதற்கு மறுப்பதேன்? இது புரட்சி இல்லையா? வரதட்சணை என்ற பெயரே இல்லாமல் செய்து காட்டுவேன் என்று செயல்படுத்திக் காட்டி வந்து கொண்டிருக்கிறாரே, இது புரட்சி இல்லையா? கருவறை தொடங்கி, மணவறை முடிய பெண்களுக்கு 18 அம்ச திட்டம் கொண்டு வந்திருக்கிறாரே, இது புரட்சி இல்லையா?



கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் மட்டுமே சொந்தமான அடிமைகள் என்று கருதப்பட்ட பெண்களுக்குக் கைகள் உண்டு உழைப்பதற்கு, கால்கள் உண்டு நடப்பதற்கு என்ற நம்பிக்கையைத் தந்து, 1,22,000 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் 22 இலட்சம் பெண்கள் வாழ வழிகாட்டியிருக்கிறாரே, இது புரட்சி இல்லையா? பெண் சிசுக்கொலை என்ற காரணத்தால், மதி முகம் பாராமல், மழலை சொல் கேளாமல் எத்தனையோ மாணிக்கங்கள் கள்ளிப் பாலையே தங்கள் கடைசிப் பாலாக அருந்தி, இந்த மண்ணுக்குள்ளே மடிந்துபோன கொடுமை எங்கள் அம்மா அவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இன்னமும் இந்தச் சமுதாயத்திலே பெண் குழந்தைகள் இரண்டாம்பட்சமாகவேதான் கருதப்படுகிறார்கள்.

பிற்பகல் 1-15

உண்மையிலேயே ஆண் பிள்ளைகளான அண்ணன் தம்பிகள்தான் வாரிசுப் போர் நடத்தி, வயதான காலத்திலே தந்தைகளை வதைப்பட வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய வரலாற்றிலே, முதல் முறையாக பெண்களுக்குக் கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி, அதிக அளவு பிரதிநிதித்துவம் தந்த பெருமை எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற 1991-1996 ஆட்சிக் காலத்திலும் சரி, இப்போதும் சரி, வரலாற்றில் முதல்முறையாக பெரும்பான்மையான பெண்களைச் சட்டமன்ற உறுப்பினர்களாக்கிய பெருமை எங்கள் அம்மாவைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய வரலாற்றிலேயே முதல் முறையாகப் பெண்களுக்கு அதிக அளவு பிரதிநிதித்துவம் கொடுத்ததோடுமட்டுமல்லாமல், அரசாங்கத்திலேயும் அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் சிறுபான்மையின நல ஆணையத்தின் தலைவராக அப்போதும் ஒரு பெண்ணையே நியமித்தார். இப்போதும் டாக்டர் அன்னம்மா பிலிப்பை நியமனம் செய்திருக்கிறார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக யாஸ்மின் அகமது நியமிக்கப்பட்டார். தலைமைச் செயலாளராக லட்சுமி பிரானேஷ் நியமிக்கப்பட்டார். வஃபு வாரியத்தின் தலைவராக பதர் சையத் நியமிக்கப்பட்டார். இந்தியாவிற்கு முன்னோடியாக தமிழகத்தில் 1,217 பொதுக் காவல் நிலையங்களிலும் ஒரு பெண் சார்பு ஆய்வாளர், இரண்டு பெண் காவலர்கள்; காவல் துறையில் ஆண்களைப் போலவே பெண்களுக்கு ஆயுதங்கள், வாகனங்கள் போன்ற வசதிகளை வழங்கி, தமிழகக் காவல் துறையில் பெண்களை கமாண்டோ படைப்பிரிவிலே

பயிற்சியளித்து, பெண்களுக்கும் ஆயுதப் பயிற்சிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு, வீரத்தை ஊட்டி, பெண்களுக்குப பெருமை தேடித் தந்து கொண்டிருப்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கொடுப்பதே அறம் என்ற குறிக்கோள் கொண்ட அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இருக்கிற திருக்கோயில்களில் ஆண்களே நிர்வகித்து வந்த செயல் அலுவலர் பதவிகளுக்கு பெண்களை நியமனம் செய்து பெருமைத் தேடி தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துப் பொறுப்புகளிலும் பெண்களுக்கு அனைத்துத் துறைகளிலேயும் முன்னுரிமை தந்து எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கி, இந்தியாவிலே முதல் மாநிலமாக இந்த மாநிலத்தைச் செயல்படுத்துவதற்கு இந்தத் துறை புரட்சித் தலைவி அமமா அவர்களுக்கு துணையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சமூக நலத் துறை என்பது, மனித நேயம் மிக்க துறை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏழையெளிய மக்களுக்கு செயல்படுத்தக்கூடிய திட்டங்களை, அவர்களுக்குச் செய்யக்கூடிய நலப் பணிகளை நிறைவேற்றக்கூடிய துறை. சமூக நலத் துறையின் சார்பில் செயல்படுத்துகிற திட்டங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற கருவுற்ற தாய்மார்கள், முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள், ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள், முதியோர்கள், ஏழை விதவைகள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்கள், தவறிழைத்த சிறார்கள், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் போக்கைக் கட்டுப்படுத்த பெண் சிசுக் கொலையைத் தவிர்க்க பெண் குழநதைப பாதுகாபபுத் திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் பசிப் பிணியால் கல்வியின்பால் நாட்டம் செலுத்தாமல் இருந்துவிடக் கூடாது என்பதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், குழந்தைகள் வளர்ச்சி நிலையைக் கண்காணித்தல், புரதச் சத்து மிகுந்த இணை உணவு வழங்குதல், நோய்த் தடுப்பு சுகாதாரப் பணிகள், மருத்துவப் பரிந்துரைகள், ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, முறைசாரா முன்பருவக் கல்வி, வளர் இளம் பெண்களுக்கான முன்னூட்டச் சத்து, இரத்த சோகைத் தடுப்புப் பயிற்சிகள் ஆகிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மிகச் சிறப்போடு இந்தத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.



வேலைக்குச் செல்கிற நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள், பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள், தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு மானிய உதவி, சிறப்பான மகளிர் மன்றங்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல், வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்குதல், முதியோர் இல்லங்கள், சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்கம் அளித்தல், மகளிருக்கு அதிகாரப் பகிர்வு அளித்தல், ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி அனைத்துத் தரப்பினருக்கும் வாழ்நாள் முழுமைக்கும் பாதுகாப்பு தரக்கூடிய துறை இந்த சமூக நலத் துறை.

தொட்டில் குழந்தைத் திட்டத்தைப்பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். தொட்டில் குழந்தைத் திட்டம், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையிலே உதித்த திட்டம். இந்த உன்னதமானத் திட்டம் 1992 அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்ட உடனே பாராட்டாதவர்கள் யாருமில்லை. அன்னை தெரசா அவர்கள் எங்களுடைய அன்னையாரின் இல்லத்திற்கே வந்து, "நான் நினைத்த திட்டத்தை, நான் செயல்படுத்த வேண்டுமென்று நினைத்த திட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தன்னுடைய மகளாகப் பாவித்து பாராட்டிவிட்டுப் போனதை நீங்கள் பத்திரிகைச் செய்திகளில் (மேசையைத் தட்டும் ஒலி) பார்த்திருப்பீர்கள். ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் வந்தவுடனே இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொச்சைப்படுத்தி, இதைக் கேவலப்படுத்தி, இந்தக் குழந்தைகளை ஒரு துச்சமாக மதித்து, இந்தத் திட்டத்தின் செயல்பாடுகளையே அப்படியே முடக்கி வைத்து விட்டுப் போய்விட்டார்கள்.

பிற்பகல் 1-20

மீண்டும் அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்தார்கள். அந்தத் திட்டத்திற்கு உயிரூட்டம் தரப்பட்டது; புதுப் பொலிவு தரப்பட்டது. மதுரை, திண்டுக்கல், தேனி, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள்—நான் ஏற்கெனவே சொன்னதைப் போல—ஆரம்ப சுகாதார மையங்களிலே எல்லாம் அரசுத் தொட்டில்களை வைத்து, இதுபோன்று பெண் குழந்தைகளைக் கொல்லக் கூடாது; நான் இருக்கிறேன் உங்களுடைய தாயாக என்று சொல்லி எங்கள் அம்மா அவர்கள் அனைத்துச் சுகாதார நிலையங்களிலேயும் ஒரு தொட்டிலை வைத்து, அப்படி வரப்பெற்றக் குழந்தைகள்—மொத்தக் குழந்தைகள் 745

குழந்தைகள். அதிலே பெண் குழந்தைகள் 700 குழந்தைகள். ஆண் குழந்தைகள் 45 குழந்தைகள். ஆண் குழந்தைகளுக்கும், எங்கள் அம்மா அவர்கள் பாதுகாப்புத் தருவார்கள் என்கிற நம்பிக்கையிலே, அந்தக் குழந்தைகளையும் கொண்டு வந்து தொட்டிலிலே போட்டு விட்டுப் போனார்கள். அதிலே பெற்றோர் வசம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் 28 குழந்தைகள். சிலபேர் மருத்துவமனையிலே சமுதாயத்திலே சீரழிக்கப்பட்ட பெண்கள் பிரசவத்திற்கு வருகிற போது பெயரைத் தந்துவிட்டு, அதற்குப் பிறகு இந்தச் சமுதாயத்திலே ஏற்படக்கூடிய சீரழிவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாது என்கிற காரணத்தால் அந்தப் பிள்ளைகளை அங்கேயே விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அதற்குப் பிறகு சமூக நலத் துறையினுடைய அலுவலர்களால், காவல் துறை அலுவலர்களால், அந்தப் பெற்றவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, இதுபோன்று குழந்தைகளை நீங்கள் விட்டுவிட்டுப் போகக் கூடாது; நீங்கள்தான் அந்தக் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தி அதன்மூலம் பெற்றோர்வசம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் 28 குழந்தைகள்.

உடல் நலக் குறைவால் குறைந்த மாதத்திலேயே குழந்தைகள் பிறந்துவிடுகிற நேரத்திலே, ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் அந்தக் குழந்தைகளைத் தெருவிலேயும், முள் புதரிலேயும் வீசுகிற நிலையில், கவனிப்பாரற்றுக் கிடக்கின்ற காரணங்களால் இறந்த குழந்தைகள் 5 குழந்தைகள். மீதி இருக்கிற குழந்தைகளை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வெளிநாட்டிற்கும், வெளி மாநிலத்திற்கும், சில பிள்ளைகளைத் தத்துக் கொடுத்து, உள்நாட்டிலே இருக்கிற தத்து நிறுவனங்களுக்கு பிள்ளைகளைப் பகிர்ந்தளித்து, தொண்டு நிறுவனங்கள் மூலமாக தத்துக் கொடுக்கப்பட்டு வளர்ந்து வருகிறார்கள்.

இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தத்து கொடுக்கின்றபோது நிறைய விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்பா, அம்மா இல்லாமல் அனாதையாக தெருவிலே வீசப்பட்ட குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தான் தத்து கொடுப்பதிலேகூட சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு என்று ஏதாவது— குழந்தைகள் பிறந்துவிடக்கூடிய வாய்ப்பு ஏற்படுமேயானால், தத்து எடுக்கப்பட்ட குழந்தைகளின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை வந்துவிடும் என்கிற காரணத்தால், அந்தக் குழந்தைகளைத் தத்து கொடுக்கிறபோதே அந்தக்



குழந்தைகளுக்குப் பாதுகாப்புத் தருகிற அடிப்படையிலே தத்து கொடுக்க வேண்டும் என்று கொஞ்சம் கடுமையான விதிமுறைகளை அரசு வகுத்திருக்கிறது.

அது மட்டுமல்ல. பெண் சிசு கொலையைத் தடுப்பதற்காக எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பெண் சிசு கொலையைத் தடுப்பதற்காகவும், ஆண் குழந்தை வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றவும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளிக்கக்கூடிய விதத்திலே, இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. பெண் குழந்தைகளின் கல்வித் தரத்தை பற்றி இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். பெண்களுக்குக் கல்வி போதிக்க வேண்டும், விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். அதற்காகத்தான் 1992-லேயே எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்கள் கட்டாயமாக கல்வி கற்க வேண்டும் என்கிற ஒரு விதியை அந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திலேயே, நேரடிப் பார்வையிலேயே சில விதிமுறைகளை அம்மா அவர்கள் வகுத்துத் தந்தார்கள். உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை எங்கள் அம்மா கொண்டு வந்தார் என்கிற காரணத்திற்காகவே, அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட சரியான முறையிலே அந்தப் பெண் பிள்ளைகளுக்கு வழங்காமல் அந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தையே கவனிக்காமல் அப்படியே கிடப்பிலே போட்டார்கள் என்று சொன்னார்கள்.

*பிற்பகல் 1-25*

அப்போது வழங்கப்பட்ட தொகை ஒரு பெண் குழந்தைக்கு 3 ஆயிரம் ரூபாய். இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் 1,500, 1,500 என்று பிரித்துக் கொடுத்து, ஒரு ஒப்புக்காக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஆனால், அம்மா அவர்கள் மறுபடியும் முதலமைச்சராக வந்தார்கள். வந்ததற்குப் பிறகு ஆய்வு செய்கிறபோது இந்தத் திட்டத்தின் செயல்பாடுகளையே முழுக்க முழுக்க மாற்றி, 2001-லே அம்மா அவர்கள் ஒரு பெண் குழந்தை பிறந்து குடும்பத்தில் ஆணோ, பெண்ணோ கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால், 22,200 ரூபாய்; இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால்

*15,200* ரூபாய்; அதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் கேள்வி நேரத்தின்போது இந்த அவையிலே கேட்டார்கள். இரண்டாவது பிரசவம் வருகிறபோது, இரட்டை பெண் பிள்ளைகளாகப் பிறந்துவிடுகிறதே, அதற்கும் நிதி தருவீர்களா என்று கேட்டார்கள். இந்த அவையிலே உட்கார்ந்து கொண்டிருந்த அம்மா அவர்கள் இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால்கூட நிதி வழங்கப்படும் என்று சொல்லி, முதல் பிரசவத்திலோ இரண்டாவது பிரசவத்திலோ இரட்டைக் குழந்தைகள் பெண் பிள்ளைகளாகப் பிறந்தால் அவர்களுக்கும் திருமணத்திற்கு உதவி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*10*-ஆம் வகுப்பு படித்து முடித்துவிட்டு வெளியே வருகிறபோது அவர்களுக்கு *80* ஆயிரம் ரூபாய் அது படிப்பிற்கோ அல்லது திருமணச் செலவிற்கோ போய்ச் சேரக்கூடிய விதத்திலே இந்தத் திட்டத்தை முழுமையாக அம்மா அவர்கள் மாற்றித் தந்து, *2002-2003* ஆம் ஆண்டிலே மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கித் தந்தார்களோ, அந்த நிதியை இன்றைக்குப் பெண் பிள்ளைகள் பெற்றிருக்கிறார்கள்.

அடுத்து *18* அம்ச திட்டம். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதமான திட்டம் *15* அம்ச திட்டம். இத்திட்டம் *1993* ஆம் ஆண்டிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்து மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் திட்டத்திற்கு அம்மா அவர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது, அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்கிற காரணத்திற்காகவே இந்த *15* அம்சத் திட்டத்தை எந்த முறையிலே கவனிப்பது என்றுகூட இல்லாமல், அதையும் கிடப்பிலேப் போட்டார்கள். அதற்குப் பிறகு மீண்டும் அம்மா அவர்கள் வந்து எங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வந்த *15* அம்ச திட்டத்தின் செயல்பாடுகள் என்ன ஆயிற்று என்று ஆய்வு செய்த நேரத்தில், இந்தத் திட்டத்தினுடையச் செயல்பாடுகள் மந்தமாக நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தெரிந்து *3* அம்சங்களை சேர்த்துக்கொண்டு, *18* அம்சங்களாக்கி அதிலே பல்வேறு துறைகளை உள்ளடக்கி கருவிலே குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கிற கர்ப்பிணித் தாய்மார்களின் வளர்ச்சியிலேயிருந்து அந்தக் குழந்தை படித்து முடித்து, திருமண வயது வரை அரசாங்கமே



பொறுப்பேற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பல்வேறு சலுகைகளை இந்த *18* அம்ச திட்டத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள்.

பல பேருக்குத் தெரியாது. *18* அம்ச திட்டம் என்றால், அதனுடைய செயல்பாடுகள் என்ன என்பது குறித்து பல பேருக்குக்கூட இன்றைக்கு கேள்வி எழலாம். ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியிலேயும், அம்மா அவர்கள் அக்கறை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு பெண்ணின் வளர்ச்சியிலேயும், அம்மா அவர்கள் அக்கறை வைத்திருக்கிறார்கள். வளர் இளம் பெண் பருவத்தினரின் வளர்ச்சி, சிறு வயதிலேயே குழந்தைகளைக் கருவிலே சுமக்கக்கூடிய இளம் வயது திருமணத்தைத் தடுத்தல், பெண் குழந்தைகளை சிறு வயதிலேயே இன்னும் சொன்னால் கருவிலேயே கொன்று விடுவதைத் தடுத்தல், எடை குறைவான குழந்தைகள் பிறப்பைக் குறைத்தல், நோய்த் தடுப்பு மருந்துகளால் தடுக்கத்தக்க நோய்களை ஒழித்தல், பச்சிளம் குழந்தைப் பருவத்திலேயே இயலாமையைத் தடுத்தல், அதை முன்கூட்டியே கண்டுபிடித்து தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு, குழந்தை இறப்பு விகிதத்தைக் குறைத்தல், மூன்று வயது வரையிலான குழந்தைகளுக்கிடையே கடுமையான ஊட்டச் சத்துக் குறைவைக் குறைத்தல், ஊட்டச் சத்து குறைபாடுகளைக் களைதல், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தைப் பிரபலப்படுத்துவது, அனைத்து மருத்துவமனைகளிலும் மகப்பேறு நிலையங்களிலும் தாய் மற்றும் குழந்தைகளை அன்புடன் நடத்துதல், இருதய நோய்களை முன்கூட்டியே கண்டறிதல், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல், ஒவ்வொரு குழந்தையும் குறைந்தது *8* ஆண்டுகளுக்குப் பள்ளிக்குச் செல்வதை உறுதி செய்தல், அனைத்துப் பள்ளிகளுக்கும், குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல், மகளிரின் எழுத்தறிவை உயர்த்துதல், சுய உதவிக் குழுக்கள் மூலம் மகளிருக்கு அதிகாரம் அளித்தல் ஆகிய இத்தனை பணிகளையும் பெண்களுடைய வளர்ச்சியிலே அரசு அக்கறை எடுத்துக்கொண்டு, *18* அம்ச திட்டம் என்று அம்மா அவர்கள் பெயர் சூட்டி, சமூக நலம், உயர்க் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, சுகாதாரத் துறை, உள் துறை, தொழிலாளர் நலத் துறை.....

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை இந்தத் துறைகளையெல்லாம் உள்ளடக்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் 18 அம்ச திட்டத்தைக் கவனிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

அடுத்தது சத்துணவு. இன்றைக்கும் சத்துணவைப்பற்றி சிலபேர் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய காலத்திலேதான் நாங்கள் சத்துணவை, மதிய உணவைக் கொண்டு வந்தோமென்று இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சத்துணவுத் திட்டம் என்பதைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1982, செப்டம்பர் 15-ஆம் தேதியன்று அண்ணா அவர்கள் பிறந்த நாளின்போது கொண்டு வந்தார்கள். ஆனால், இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவுடனேயே பல பேர் கேலி பேசினார்கள். அந்தக் கதை எல்லாம் உங்களுக்குத் தெரியும். ஆனால், இந்தத் திட்டத்தை இன்றைக்கும் பெருமையாக நாங்கள்தான் மதிய உணவு திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் அப்போதைய நீதிக் கட்சியால் ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் நடைமுறை மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டு ஆங்காங்கே செயல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக செல்வந்தர்களால், ஆங்காங்கே சிற்சில இடங்களில் ஏழை பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. 1950-க்குப் பிறகு, ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கும், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த பள்ளிகளுக்கும், மேற்படி திட்டம் விரிவாக்கப்பட்டு, செயலாக்கத்தில் இருந்து வந்தது. மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் காமராஜர் அவர்களால் 1956 ஆம் ஆண்டு முதல் தேர்வு செய்யப்பட்ட சில பள்ளிகளில் மட்டும் அரசின் செலவினம் ஏதுமின்றி இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. பின்னர் 1957-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் அரசு மானியத்துடன் இந்தத் திட்டம் விரிவாக செயல்படுத்தப்பட்டது. அப்போது ஒரு மாணவனுக்கான உணவுச் செலவினம் 10 பைசாவாக நிர்ணயிக்கப்பட்டு, அதில் 6 பைசா அரசால் மானியமாக வழங்கப்பட்டது. 2 பைசா செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரால் திரட்டப்பட்டது.



அந்தச் சமயம் இந்தத் திட்டம் 8,270 மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, 2,28,844 மாணவர்களுக்கு மட்டும்தான் மதிய உணவு வழங்கப்பட்டது. இதன் பொருட்டு அரசுக்கு மொத்தம் 7 கோடியே 32 இலட்சம்தான் செலவு ஏற்பட்டது. சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 293 பள்ளிகளிலேயும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, அதற்குப் பிறகு "கேர்" நிறுவனம் மூலம் 1961-ஆம் ஆண்டு கோதுமை, சோயா, எண்ணெய், பால் மாவு போன்ற உணவுப் பொருட்கள் "கேர்" நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்தது. இதுமாதிரி ஏழைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று இன்றைக்கும் பேசிக் கொண்டிருப்பவர்கள், குறிப்பிட்ட பகுதியிலே மாநகரப் பகுதிகளிலே மட்டும்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவர்களால் முடிந்தது. ஆனால், 1982-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகுதான் தன்னுடைய இளம் வயது காலத்திலே பட்ட துயரத்தை எண்ணி அரசின் திட்டமாக முழுமையாக மாற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இந்த சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு உணவீட்டுச் செலவினத்திற்கான செலவை உயர்த்தித் தரவேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கையை தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடுமையான நிதி நெருக்கடியான இந்த நிலையிலும்கூட உணவீட்டுச் செலவினம் 23 பைசாவாக இருந்ததை 35 பைசாவாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டு, இன்றைக்கு இத்திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் சத்துணவுக் கூடங்களைப் பழுது நீக்க வேண்டுமென்று சொல்லி, அதையும் கோரிக்கையாகத் தந்தார்கள். 25 கோடி ரூபாயை ஒதுக்கி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழுதடைந்த சத்துணவுக் கூடங்களையெல்லாம் சரி செய்து தர வேண்டுமென்று சொல்லி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்துக் கொடுத்து அந்த வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-35

எவர்சில்வர் டம்ளர், தட்டைப் பற்றிச் சொன்னார்கள். ஒரு கோடி ரூபாய் சென்ற ஆண்டும் ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு, இப்போது அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சம்பள உயர்வைப் பற்றி இங்கே சொன்னார்கள். எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்திய நாட்டின் பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு சத்துணவுத் திட்டம் குறித்து ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே இரண்டு முதல் ஐந்து வயது வரை முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் ஆறு வயது முதல் பதினைந்து வயது வரை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கப்படும் திட்டத்திற்காக இந்த அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 645.76 கோடி ரூபாய் செலவு ஆகிறது. கடும் நிதி நெருக்கடி காரணமாக இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு ஆகும் முழு செலவினத்தையுமே மைய அரசு மானியமாகத் தரவேண்டும் என்ற ஒரு புதிய முறையைத் தோற்றுவிக்கலாம் என்கிற ஒரு கருத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். மாண்புமிகு இந்திய நாட்டினுடைய பாரதப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, முன் பருவக் கல்வியினை பயிற்றுவிக்கும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில் பணிபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தில் ஓரளவு ஈடுசெய்யும் வகையில் இந்த அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 27.33 கோடி ரூபாயை வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசுகின்றபோது மத்திய அரசு அங்கன்வாடிப் பணியாளர்களுக்குப் பிரித்துத் தரவேண்டும் என்று சொல்லியிருப்பதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே, தமிழக அரசு செலவு செய்து கொண்டிருக்கின்ற, சத்துணவுக்காக இன்றைக்கு இவ்வளவு நிதி நெருக்கடியிலும்கூட, இந்தியாவிற்கே முன்மாதிரியாக இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டுதான், இந்திய



நாட்டினுடைய பாரதப் பிரதமர் அவர்கள் இந்த ஊதியத்தை சரிக்கட்டுவதற்காக வழங்கிய தொகைதான் 27.33 கோடி ரூபாய் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்த மாநிலத்திற்கு....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான தகவலை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு முக்கியமான தகவலைத் தெரிவிக்கும்போது, சரியான ஆதாரத்தோடு அதைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்ல இவ்வளவு நேரம் நான் காத்திருந்தேன்.

மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை அவர்கள் பேசுகின்ற போது, முதன்முதலாக அவருடைய கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள்தான் கடந்த ஆண்டு, தந்தையின் பெயருக்குப் பதிலாக தாயின் பெயரை முதலில் போட்டுக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தை இந்த உலகிற்கே அறிமுகப்படுத்தினார் என்று குறிப்பிட்டார். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பேசுகின்றபோதும், அண்மையில்தான் குஜராத் மாநில அரசு தாயின் பெயரை, தந்தையின் பெயருக்குப் பதிலாக தன்னுடைய பெயரோடு ஒருவர் சேர்த்துப் போட்டுக்கொள்ளலாம் என்ற அரசாணை வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். குஜராத் மாநிலம்தான் முதன்முதலாக இந்த அரசாணையை வெளியிட்டிருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் தெரிவித்திருக்கிறார். ஆனால், அது உண்மை அல்ல. 1993-94 ஆம் ஆண்டிலேயே, எனது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, தந்தையின் பெயருக்குப் பதிலாக தாயின் பெயரைப் போட்டுக்கொள்ளலாம் என்ற அரசாணையை என்னுடைய அரசு வெளியிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உண்மையான தகவலை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1993 ஆம் ஆண்டில், இதே மாதிரியான பட்ஜெட் கூட்டத் தொடர் இந்தச் சட்டப் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, சில உறுப்பினர்கள் இங்கே ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அன்றைக்கு பேசுகின்றபோது, குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கின்றபோது சில பிரச்சினைகள் எழுகின்றன; சில குடும்பங்களில் தந்தை இருப்பது இல்லை; அதுவரை இருந்து வந்த வழக்கம்

குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது அந்தப் படிவங்களில் fill up செய்ய வேண்டிய பாரங்களில் குழந்தையின் பெயரோடு தந்தையின் பெயரை குறிப்பிட்டாக வேண்டும் என்ற விதிதான் நடைமுறையில் இருந்து வந்தது; ஆகவே, சில குடும்பங்களில் அசாதாரணமான சூழ்நிலை நிலவுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

*பிற்பகல் 1-40*

சில குடும்பங்களில் தந்தை இருப்பதில்லை. தந்தை மரணம் அடைந்திருப்பார். தாயார் மட்டுமே இருப்பார்; அல்லது தாயும், தந்தையும் பிரிந்து வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கக் கூடும்; அல்லது கணவனுக்கும் மனைவிக்கும் விவாகரத்து நடைபெற்றிருக்கக் கூடும். ஆகவே, தந்தையே அங்கே வந்து, அவர் கையெழுத்து இடக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாமல் இருக்கலாம். ஆகவே, அதற்குப் பதிலாக, அத்தகைய சூழ்நிலைகளில் தாயின் பெயரைப் போட்டுக் கொள்ளலாம். தேவைப்பட்டால் தாயே வந்து கையெழுத்துப் போடலாம் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்று கோரிக்கையை வைத்தார்கள். அதனை உடனடியாக நான் ஏற்றுக்கொண்டு, அப்போது 28-3-1994 அன்று அரசாணை (நிலை) எண் 246 என்ற G.O. வெளியிடப்பட்டது. அந்த அரசாணையை நான் இங்கே வாசித்துக் காட்டுகிறேன்.

1993-94 ஆம் ஆண்டில் கல்வி மானியக் கோரிக்கையின்போது குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது, தாயின் பெயரையும் முதல் எழுத்தாகச் சேர்க்கவேண்டும் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டு இருப்பதைத் தொடர்ந்து, தொடக்கக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பை அரசு கவனித்து பரிசீலித்தது. ஒரு மாணவனின் அல்லது மாணவியின் பொது நலனிலும், பிரத்தியேகமாக அவர்கள் கல்வி நலனிலும், தாய் தந்தை ஆகிய இருவருமே பொறுப்பாக இருப்பதால், மாணவரின் வாழ்க்கைக்கு மிக முக்கியமான அவர்களுடைய கல்விச் சான்றிதழ்களில் தாய், தந்தையர் இருவருடைய பெயரின் முதல் எழுத்துகளும் மாணவ, மாணவியரின் பெயருக்கு முன்னால் இடம் பெறுவது தகுதி உடையதாக இருக்கும். தற்போது மாணவர்கள் முதலாம் வகுப்பிலே சேரும்போது, அவர்களுடைய தந்தையின் பெயரின் முதல் எழுத்தே மாணவரின், மாணவியரின் பெயருக்கு முன்பாகக் குறிப்பிட்டு எழுதப்படுகிறது. இந்த முறையில் எவ்வித குறைபாடும் ஏற்படவில்லை. ஆதலால் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும்போது இந்த முறையையே தொடர்ந்து கடைப்பிடிக்கலாம். ஆயினும், குழந்தைக்கு தந்தை இல்லாதிருக்கும் பட்சத்தில், குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது, அக்குழந்தையின் தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை குழந்தையின் பெயருக்கு முன்னால் முதல் எழுத்தாக எழுதி பள்ளியில் சேர்க்கலாம் என்று ஆணை வெளியிடப்படுகிறது என்று 28-3-1994 ஆம் நாளிலேயே இந்த அரசு இந்த ஆணையை வெளியிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதிலேயும் இந்த அரசுதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், இந்த நாட்டுக்கே முன்னோடியாக இருந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அப்படி ஒரு ஆணை வெளியிட்டிருக்கிறது என்று சொன்னால், அந்த ஆணையை நாங்கள் வரவேற்கிறோம். எங்கள் கட்சியின் சார்பிலே, கட்சி துவக்கிய காலத்திலேயிருந்து அதைச் சொல்லி, வலியுறுத்தி வரக்கூடிய ஒரு கொள்கை என்ற அடிப்படையிலே எங்கள் உறுப்பினர் பேசுகின்ற நேரத்திலே அதை வெளியிட்டாரே தவிர ஏதோ நாங்கள் பிரனகடனப்படுத்திக்கொண்டோம் என்ற பொருள் அல்ல. அதே நேரத்திலே 1994-லே ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை அமலாக்க வேண்டுமா, வேண்டாமா? அதை அரசு இதுவரையிலும் வலியுறுத்தவில்லையா, கிடப்பிலே போட்டு விட்டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதைக் கிடப்பில் போடவில்லை. 1994-ஆம் ஆண்டில் இந்த அரசு ஆணை வெளியிடப்பட்டது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். 1996-ஆம் ஆண்டு வரை, எங்களுடைய அரசு இருந்தவரை, இது அமலில்தான் இருந்தது. அதன் பின்னர் 1996-ல் இருந்து 2001 வரை இது கடைப்பிடிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. இதில் ஒரு மர்மமான சூழ்நிலை இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

நான் இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ஞானசேகரன் அவர்கள் என்னிடம் வந்து நீங்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு அரசு ஆணை வெளியிட்டீர்களே என்று எனக்கு நினைவூட்டினார்கள். அப்போது எனக்கு நினைவு இருந்தது. ஆனால் ஆதாரத்தோடு பேசவேண்டும் என்று அரசாணையின் நகல்

வேண்டும் என்று அதிகாரிகளிடம் கேட்டேன். வெகுநேரம் ஆயிற்று அந்த அரசாணையின் நகல் பெறப்படவில்லை. எனக்குக் கிடைக்கவில்லை. என்ன ஆயிற்று என்று பார்ப்பதற்காகத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் செம்மலையே சென்றார். Department of School Education கல்வித் துறையின் கோப்புகளில் அவர்கள் துருவித் துருவித் தேடிப் பார்த்தும், இவ்வளவு நேரமாகத் தேடிப் பார்த்தும் அந்த அரசாணையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. Department of School Education பள்ளிக் கல்வித் துறையின் கோப்புகளில் இந்த அரசாணை இருந்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை, இந்த நிமிடம் வரை அது கிடைக்கவில்லை. அது என்ன ஆயிற்று? இதற்கு ஒரு விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது இவ்வளவு தாமதம் ஆனதற்கு இதுதான் காரணம்.

பிற்பகல் 1-45

இப்படி ஏற்கெனவே எனது ஆட்சிக் காலத்தில் 1994-ல் ஒரு அரசாணையை நான் வெளியிட்டேன் என்று சொல்கிறபோது அதற்கு ஆதாரம் வேண்டாமா? அதற்காகத்தான் இவ்வளவு நேரம் காத்திருந்தேன். இதோ அப்போது வெளியிடப்பட்ட அந்த அரசாணை, அது எப்படிக் கிடைத்தது என்று சொன்னால், இப்படி ஒரு அரசாணை வெளியிட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லி, ஒரு பள்ளிக்கூடத்தில் கேட்டு, அந்தப் பள்ளிக்கூட அலுவலகத்திலிருந்து இந்த அரசாணையின் நகலை இப்போது பெற்று இந்த அவைக்கு நான் தெரிவித்திருக்கிறேன். ஆகவே, வேண்டுமென்றே முந்தைய தி.மு.க. ஆட்சியில் நான் செய்த நல்ல காரியத்தை இருட்டடிப்புச் செய்ய வேண்டும் என்பதற்காக அரசாங்கக் கோப்புகளில் இருந்தே இந்த அரசாணையை எடுத்துவிட்டார்களா என்பதை விசாரித்த பிறகுதான் உண்மை தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விசாரணைக்கு உடனடியாக உத்தரவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையை வெளியிட்டு ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். இந்த முதல் எழுத்து சேர்த்துக்கொள்ளப்படுவது தாயின் முதல் எழுத்து மட்டுமா அல்லது தாயின் பெயரின் முதல் எழுத்து முதலாவதாக அமைத்து, தந்தையின் பெயரின் முதல் எழுத்து இரண்டாவதாக அமையலாமா?



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசாணையை வாசித்துக் காண்பித்தேன். தெளிவாக இருக்கிறது. ஏற்கெனவே நடைமுறையில் இருந்தபடி குழந்தைகள் வேண்டுமானால் தந்தைப் பெயரின் முதல் எழுத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் தந்தை இல்லை என்ற ஒரு சூழ்நிலை இருந்தால் அத்தகைய குழந்தைகள் தாயாரின் பெயரின் முதல் எழுத்தையே அதற்குப் பதிலாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெளிவாக இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பார்க்கும்போது தாயின் பெயர் முதல் எழுத்தாகக் கட்டாயம் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே முதலமைச்சர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ஒரு பெரிய மகத்தான சமுதாயப் புரட்சி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் காலத்திலே இட்ட அந்த ஆணை என்பது மிக மகத்தான சமுதாயப் புரட்சி. உங்களுடைய உறுப்பினர் பேசிய காரணத்தால்தான் இதைத் தோண்டித் துருவ வேண்டிய நிலைமை வந்திருக்கிறது. இதுபோன்ற நல்ல காரியங்களுக்கு திரு. ஞானசேகரன் எப்போதும் துணை நின்றால் நல்லது. சிக்கலுக்குள் மாட்டாமல் இப்படித் துணை நின்றால் நல்லது. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர், பதிலைத் தொடருங்கள். (குறுக்கீடு) இதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) இன்னொரு தடவை வைத்துக்கொள்ளலாம். சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடு) சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து இந்த அவையிலே சுய உதவிக் குழுக்களுடைய செயல்பாடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்த சுய உதவிக் குழுக்கள் என்பது 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைக்கு அம்மா அவர்கள் இட்ட விதை இன்றைக்கு பரந்து, விரிந்து ஆலமரமாய் பல இலட்சக்கணக்கான பெண்களுக்கு நிழல் தருகின்ற மரமாய் உருவாகி வந்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த மாவட்டத்திலும் ஒரு அரசு நிகழ்ச்சிக்குச் சென்றாலும்கூட அவர்கள் பேசுகின்ற பேச்சின்

சாராம்சம், அம்மா அவர்கள் பெருமையோடு குறிப்பிடுவார்கள். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வங்கிகளை அணுகி கடன் பெறும் நிலை மாறி, வங்கிகளே சுய உதவிக் குழுக்களைத் தேடிச் சென்று கடன் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பெண்கள் சுய உதவிக் குழுக்களிலே அதிகம் இடம் பெற வேண்டுமென்று எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும் வேண்டுகோள் விடுத்துவிட்டு வருவார்கள்.

அதுமட்டுல்ல, இதே அவையிலே் மாண்புமிகு உறுப்பினர் மகேஸ்வரி அவர்கள் கடந்த மானியக் கோரிக்கையின்போது ஒரு வினாவைக் கேட்டார்கள். கிராமப்புறங்களிலே மட்டும் உருவாக்கப்படுகிற குழுக்கள் நகர்ப்புறங்களிலே விரிவுபடுத்தப்படுமா என்று கேட்டார்கள். உடனே மாண்புமிகு அம்மா அவர்கள் நகர்ப்புறத்திலே இருக்கிற பெண்களும் சுய உதவிக் குழுக்களிலே இடம்பெற்று, அவர்களுடைய வாழ்க்கைத் தாத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இப்போது நகர்ப்புறங்களிலேயும் சுய உதவிக் குழுக்கள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-50*

அது மட்டுமல்ல, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டிற்கு முதலாவது முறையாக வந்தபோது, மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்து, சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை பத்திரிகை மூலமாக கேட்டறிந்தவர், அம்மா அவர்களை நேரிலேயே சந்தித்து, அந்தச் செயல்பாடுகளைப் பார்க்க வேண்டும் என்று சொன்னவுடன் மாண்புமிகு அம்மா அவர்களே முயற்சி எடுத்தார் சுய உதவிக் குழுக்களிலே இடம்பெற்ற பெண்களை அழைத்து பேச வேண்டும் என்று அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன் அடிப்படையிலே ஆலந்தூரிலே உள்ள சுய உதவிக் குழுப் பெண்களை எல்லாம் அழைத்து வைத்து, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அந்த சுய உதவிக் குழு பெண்களிடத்திலே கிட்டத்தட்ட 45 நிமிடம் நேரம் கலந்து பேசினார். அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், பெருமையாகச் சொன்னார்கள். இது ஒரு மௌனப் புரட்சி என்று. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். சுய உதவிக் குழு என்பது இன்றைக்குப் பெருகி வருகிறது. மிக அமைதியாக மௌனமாக நடந்து வருகிற புரட்சி என்று சொன்னார்கள். இந்தப் புரட்சிக்கு வித்திட்டிருப்பவர்



எங்களுடைய தமிழகத்தின் முதலமைச்சர் எங்களின் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்வதில் நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன். இந்த சுய உதவிக் குழுக்கள்...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டு ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். அதிலே நாங்கள் அவர்களைப் பாராட்டிச் சொல்ல விரும்புவது என்ன என்று சொன்னால், முதலிலே தாயினுடைய பெயரின் முதல் எழுத்தை முதலாவது எழுத்தாகவும், தந்தையினுடைய பெயரின் முதல் எழுத்தை இரண்டாவது முதல் எழுத்தாகவும் வைத்து குழந்தையினுடைய பெயரை எழுதுவது பொருத்தமாக இருக்கும். அப்படி யாராவது விரும்பாத பட்சத்தில், தாயின் பெயரின் முதல் எழுத்தை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலா்ம், தந்தையின் பெயரின் முதல் எழுத்தை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அல்லது கட்டாயம் விரும்பினால் தாயின் பெயரை முதல் எழுத்தாகவும், தந்தையின் பெயரை இரண்டாவது எழுத்தாகவும் பயன்படுத்தி இந்தப் பெயரைச் சொல்லிக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை ஏற்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கோரியபடியே புதிய அரசாணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இனிமேல் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கும்போது, அவர்கள் விரும்பினால், முதலில் தாயின் பெயரையும், பின்னர் தந்தையின் பெயரையும் குறிப்பிட்டு, அவர்கள் அந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்யலாம். சில குடும்பங்களில் தாயின் பெயரை மட்டும் போட்டுக்கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம். சில குடும்பங்களில் தந்தையின் பெயரை மட்டும் போட்டுக்கொள்ள விரும்பினால், அதையும் செய்யலாம் என்று அரசாணை வெளியிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றி

மிகவும் பெருமையோடு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். ஆனால், இந்த சுய உதவிக் குழுக்கள் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 4 ஆண்டு காலத்தில், 1997 ஆம் வருடம் முதல் 2001 வரை, ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள் 75,247. சேர்க்கப்பட்ட மகளிரின் எண்ணிக்கை 13,01,587 (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காசாம்பு பூமாலையா? (குறுக்கீடு) காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிய கோரிக்கைக்கு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியதற்கு நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறிக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப் போய் உங்கள் தலைவரிடத்திலே அவசியம் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** கேட்டதை கொடுப்பவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏற்கெனவே கொடுத்ததை மறந்து, மறைத்து விட்டவர்களுக்கும் இது ஒரு பாடமாக அமைய வேண்டும். அவர்களும் உங்களோடு உறவோடு இருக்கிறார்கள். அவர்களைச் சந்திக்கிறபோதும் இந்த அரசாணையை ஏன் மறைத்தீர்கள் என்று கேட்டு, அதற்குரிய விளக்கத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 1997 முதல் 2001 வரை ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள் 75,247. சேர்க்கப்பட்ட மகளிரின் எண்ணிக்கை 13,01,587. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பெண்களுடைய வளர்ச்சியிலே அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள் 50,859. சேர்க்கப்பட்ட மகளிரின் எண்ணிக்கை 8,48,596.

பிற்பகல் 1-55

இன்றைக்கு வழங்கப்படுகிற பயிற்சிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். சுய உதவிக் குழுப் பெண்களுக்குப் பயிற்சிகள் தரவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் காசாம்பு பூமாலை, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதியைப் போன்றவர்கள் சொன்னார்கள்.





அவர்களுக்கு பயிற்சிகள் தரப்படுகின்றன. ஒப்பனைக் கலைப் பயிற்சி, கணினிப் பயிற்சி, ஆயத்த ஆடை தயாரிப்புப் பயிற்சி, வாகனப் பழுது பார்க்கும் பயிற்சி, ரொட்டி செய்யும் பயிற்சி, மூலிகைப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி, தோல் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி, இரசாயனப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி, உணவுப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி, உணவுப் பொருள்கள் பதப்படுத்தும் பயிற்சி, காகிதப் பொருள்கள் செய்யும் பயிற்சி, புத்தகம் பைண்டிங் பயிற்சி, ஸ்கிரீன் பிரிண்டிங் பயிற்சி, வாழ்த்து அட்டைகள் தயாரிக்கும் பயிற்சி, அலங்காரப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி, தேங்காய் நார்ப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி, புகைப்படமெடுக்கும் கலையில் பயிற்சி, உயிரியல் கலையில் பயிற்சி, காளான் வளர்ப்புப் பயிற்சி, விவசாயம் சார்ந்த தொழில் பயிற்சி, ஜீப் ஓட்டுதல் பயிற்சி, போன்ற பயிற்சிகள் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, பயிற்சிக் காலத்திற்கான ஊதியத்தோடு தரப்படுகின்றன.

அப்படி பயிற்சிகள் தருகிறபோது, அவர்களே எந்தவிதமான பயிற்சியை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக்கொண்டால் அது அவர்களின் சொந்தக் காலிலே நிற்பதற்கு ஒரு அடிப்படையாக அமையும் என்கிற காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த சுய உதவிக் குழு பெண்களுடைய வளர்ச்சியை தன்னுடைய நேரடிப் பார்வையிலே திட்டமிட்டு மிகச் சிறப்போடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஊனமுற்றோர் நலன். நேற்றைக்கு விரிவாக இந்த அவையிலே ஊனமுற்றோர் நலனைக் குறித்து பேசப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். உடல் ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பைப் பற்றி அனைவருமே சொன்னார்கள். உடல் ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பு 3 சதவீத இட ஒதுக்கீடு. காது கேளாதோருக்கு, வாய் பேசாதோருக்கு, கண் பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, 3,486 பேர் அரசுத் துறைகளிலே தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடையாள அட்டையைப் பற்றி நேற்றைக்குக்கூடச் சொன்னார்கள். அடையாள அட்டைகள் 6,00,817 பேருக்கு உடல் ஊனமுற்றோருக்கு, ஊனமுற்றோர் நலத் துறையால்

வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையைக் கவனிப்பதற்காகவே 1992-1993 ஆம் ஆண்டிலேயே, உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வு இயக்ககம் என்பதை எங்களுடைய அம்மா அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தத் துறைக்கு தனியாக ஒரு கமிஷனரை நியமித்ததும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான்; அப்படி நியமனம் செய்து இன்றைக்கு மிகச் சிறப்போடு ஊனமுற்றவர்களை மனித நேயத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறது அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, எங்கள் அம்மா அவர்கள் உடல் ஊனமுற்றவர்களைக் கவனிக்கிறபோது மிகவும் பரிவோடு, கனிவோடு, பாசத்தோடு அவர் கவனிப்பதைப் பார்க்கிறபோது நெஞ்சுருகக்கூடிய சம்பவங்களை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். ஒரு இரண்டு அடி உயரமான பெண் திருச்சியிலே வந்து மனுச் செய்தார். அந்த மனுவை அவர் சென்றிருக்கிற நேரத்தில் பரிசீலனை செய்து, பார்த்த உடனேயே உத்தரவிட்டார். எங்கள் அம்மா அவர்கள் தங்கியிருந்தது ஐந்தே நாட்கள்தான். இரண்டு அடி உயரமான ஊனமுற்றோர் பட்டியலிலே இடம் பெற்ற அந்தப் பெண்ணின் பெயர் அறிவுக்கண். உடனடியாக அந்தப் பிள்ளையை, எந்த நிலையிலே அந்தப் பிள்ளை வேலை செய்ய முடியும் என்றுகூட எண்ணிப்பார்க்காத அளவிற்கு, ஒரு மனித நேயத்தோடு சமூக நலத் துறையிலே பணி தர வேண்டுமென்று சொல்லி மேடையிலேயே உத்தரவிட்டு, 5 நாட்களுக்குள்ளாக, திருச்சிக்கு வந்து சென்னைக்கு திரும்புவதற்குள்ளாகவே அந்த வேலைக்கான உத்தரவைப் போட்டுத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுல்ல, பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே ஒரு பட்டமளிப்பு விழா. அந்தப் பட்டமளிப்பு விழாவுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்திருந்தார்கள். தமிழகத்தினுடைய மேதகு ஆளுநர் அவர்களும் வந்திருந்தார்கள். அனைத்து பிள்ளைகளுக்கும், பட்டம் பெற்ற பிள்ளைகளுக்கெல்லாம் மேதகு ஆளுநர் அவர்கள் பட்டமளித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியாக ஒரு பெண்—இரண்டு கண் பார்வையும் இல்லாத ஒரு பெண் பட்டம் பெறுவதற்கு வந்தார். அப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தப் பெண்ணை, தாய் தன்னுடைய பிள்ளை பட்டம் பெற்று வருகிறபோது எந்தப் பரிவோடு,





கனிவோடு அரவணைப்பாரோ அதேபோல அந்தப் பிள்ளையை அரவணைத்து, வாழ்த்துச் சொன்ன செய்தி இன்றைக்கும் எங்கள் கண் முன்னே நிற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உடல் ஊனமுற்றவர்களை மனித நேயத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிற உன்னதத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை சொல்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

*பிற்பகல் 2-00*

அடுத்து, சமூகப் பாதுகாப்பு. சமுதாயத்திலே பெற்றோர், உற்றார், உறவினர் யாருமே இல்லாமல் அனாதையாக விடப்பட்டிருக்கிற சிறுவர், சிறுமியரை கவனிக்கக்கூடியத் துறை சமூகப் பாதுகாப்புத் துறை. சிறுவர்கள் பிச்சையெடுப்பதை பற்றியெல்லாம் பேசினார்கள். நான் ஏற்கெனவே கடந்த மானியக் கோரிக்கையின்போதே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போதுகூட இரண்டு நாட்களுக்கு முன்னால் அதே கருத்தை இங்கு சொன்னார்கள். அம்மா அவர்கள் வருகிறபோது, போகிறபோதுகூட, நடுகுப்பம் என்கிற பகுதியிலே கையை ஆட்டிச் சென்ற சிறுவர்களைப் பார்த்துவிட்டு, தன்னைப் பார்க்கிறார்கள் என்கிற பெருமைகூட இல்லாமல், இந்தப் பிள்ளைகள் படிப்பை தவற விட்டுவிட்டு நின்று கொண்டிருக்கிறார்களே என்பதை எண்ணிக் கொண்டு, அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு அறிவுறுத்தி, உடனடியாக அந்தப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதன்படி அந்தப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பக்கூடிய பணிகளை சமூக நலத் துறை செய்து, இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; பிச்சை எடுக்கக்கூடிய செயலை தடுப்பதற்காக இந்திய குழந்தைகள் நலச் சங்கத்திற்கு நாங்கள் அறிவுறுத்தி. நம்முடைய சென்னை மாநகரத்திலே பிச்சை எடுக்கக்கூடிய பிள்ளைகள் எங்கிருந்தாலும் உடனடியாக காவல் துறைக்கு தகவல் சொல்லி, அவர்களை சமூகப் பாதுகாப்புத் துறை நடத்தக் கூடிய இல்லங்களிலே கொண்டு வந்து, காவல் துறையின் மூலம் விட வேண்டும் என்றுகூட நாங்கள் அறிவுறுத்தி இருக்கிறோம். அதற்கும் மேலாக, காவலர்களுக்கு அந்தப் பிள்ளைகளை பிடித்துக் கொண்டு வந்து திரும்பப் பெற்றோரிடத்திலே சேர்க்கக்கூடிய நடைமுறைகளைக்கூட சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலமாக நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல; புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சமூகப் பாதுகாப்புத் துறையிலே படிக்கக்கூடிய பிள்ளைகளுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீட்டை இன்ஜினியரிங் கல்லூரியிலே செய்து தர வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவு போட்டு, அதன் அடிப்படையிலே அங்கே படிக்கக்கூடிய பிள்ளைகள், மருத்துவக் கல்லூரியிலே ஒரு மாணவன் படித்துக்கொண்டிருக்கிறான்; பொறியியல் கல்லூரியிலே 5 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; தொழில்நுட்பக் கல்லூரியிலே 15 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். தொழில் சார்ந்த பட்டயக் கல்லூரியிலே 40 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அம்மா அவர்கள் சொன்னது, பிச்சை எடுக்கக்கூடிய பிள்ளைகள், வாழ்க்கையிலே சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணத்தால் தவறு இழைத்தப் பிள்ளைகள், சமூகப் பாதுகாப்புத் துறையின் பள்ளிக்கூடத்திலே படித்துக் கொண்டிருக்கிற பிள்ளைகள் இன்றைக்கு உயர் கல்விக்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஊட்டச் சத்து. இந்த ஊட்டச் சத்து என்பது மிக மிக அவசியம். தமிழ்நாட்டை ஊட்டச் சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்ற வேண்டும் என்பது எங்கள் அம்மா அவர்களின் இலட்சியக் கனவுகளிலே ஒன்று. சத்துணவு மையம் இல்லாத ஊர்களில் ஊட்டச் சத்து சுகாதாரப் பணிகளை மேம்படுத்திட முடிவு எடுத்து ஊட்டச் சத்து குறைபாடற்ற மாநிலமாக ஆக்குவதற்குரிய முயற்சிகளை இன்றைக்கு சமூக நலத் துறை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆறு மாதம் முதல் 24 மாத குழந்தைகளின் ஊட்டச் சத்து குறைபாட்டை தடுப்பதற்காகவும், தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து வழங்குவதற்குப் பயிற்சி தருவதற்காகவும், குழந்தைகளின் எடையை கால முறைப்படி எடுக்க அங்கன்வாடி பணியாளர்களைப் பயன்படுத்தக்கூடிய பணிகளிலே மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த முயற்சிகளின் காரணமாக கடந்த 2 ஆண்டுகளில் கடுமையான ஊட்டச் சத்துப் பற்றாக்குறை 0.9 சதவீதத்திலிருந்து 0.2 சதவீதமாக குறைந்துள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மிதமான ஊட்டச் சத்துப் பற்றாக்குறை 7.4 சதவீதத்திலிருந்து 5.1 சதவீதமாக குறைந்துள்ளது. இயல்பான நிலையிலுள்ள குழந்தைகளின் சதவீதம்



55-லிருந்து 58.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலேதான் அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் குழந்தைகளின் எடை மாதந்தோறும் எடுக்கும் முறை பின்பற்றப்படுகிறது. அதன் அடிப்படையிலே குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டு ஊட்டச் சத்து உணவு வழங்கப்படுகிறது. கருவுற்ற தாய்மார்களின் எடை பார்க்கும் அளவுகோல்கள் நம் தமிழகத்தில்தான் அனைத்து மையங்களிலும் வழங்கப்படுகிறது. ஊட்டச் சத்து பற்றாக்குறை இல்லாத மாநிலமாக இந்த மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலட்சியக் கனவை நிறைவேற்றுகிற விதத்திலே இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2003-2004 ஆம் ஆண்டிற்குரிய புதிய அறிவிப்புகளை வெளியிடச் சொல்லி சமூக நலத் துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே 78 அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் உண்மையிலேயே அம்மா அவர்களின் பாதந்தொட்டு பணிவோடு இந்தத் துறையின் சார்பிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2-05*

அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் அனைத்து சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 10,060 ஊனமுற்ற மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் ரூபாய் 8 இலட்சத்து 33 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

ஊனமுற்றோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 2,071 மாணவர்களுக்கு, சோப்பு, பற்பொடி, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றிற்காக தற்போது வழங்கப்படும் சில்லரைச் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.20/-லிருந்து ரூ.30/-ஆக உயர்த்தப்படும்.

பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் 40 பார்வையற்ற மகளிருக்கு அவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு தற்போது வழங்கப்படும் செய்கூலியினை ரூ.20/-லிருந்து ரூ30/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

கடும் ஊனமுற்றோருக்கான தற்போதைய மாதாந்திர பராமரிப்புத் தொகை ரூபாய் 150/-லிருந்து ரூபாய் 200/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இதன் மூலம் 8,400 பேர் பயன் பெறுவர். இதற்காகும் செலவு ரூபாய் 52 இலட்சத்து 42 ஆயிரம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 13,700-லிருந்து 15,000 ஆக உயர்த்தப்படும்.

தொழு நோயாளிகள் மற்றும் பிச்சைக்காரர்கள் தங்கியுள்ள மறுவாழ்வு இல்லங்களுக்கு, தலா ரூபாய் 10,000 வீதம் 11 அமரர் தள்ளு வண்டிகள் வாங்கி வழங்கப்படும்.

அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லவாசிகளுக்கு, உணவீட்டுச் செலவினம் பெரியவர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு தற்போது வழங்கப்படும் ரூபாய் 15-லிருந்து ரூபாய் 20 ஆகவும், சிறியவர் ஒருவருக்கு நாளொன்றுக்கு தற்போது வழங்கப்படும் உணவீட்டுச் செலவினம் ரூபாய் 10-லிருந்து ரூபாய் 15-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 2,405 பெரியவர்களும், 130 சிறார்களும் பயன்பெறுவர். இதற்காகும் செலவு ரூபாய் 47 இலட்சம் ஆகும்.

அரசு மறு வாழ்வு இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கு (தொழுநோயாளிகள் மற்றும் பிச்சைக்காரர்கள்) அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு செய்கூலியாக தற்போது நாளொன்றுக்கு 10 பைசா வழங்கப்பட்டு வருகிறது. இதனை உயர்த்தி மறுவாழ்வு இல்லவாசிகளுக்கு செய்கூலியாக நாளொன்றுக்கு ஐந்து (ரூ.5/-) ரூபாய் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம் ரூபாய் 2 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் கணினிமயமாக்கப்படும்.

அரசு காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு குழுக் காதொலிக் கருவிகள் ரூபாய் 12 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

சென்னை மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு தொலைபேசித் தொடர்பு ரூபாய் 24 ஆயிரம் செலவில் அளிக்கப்படும்.

ஊனமுற்ற நபர்களுக்கு ரூபாய் 20 இலட்சம் செலவில் பல்வேறு வாழ்க்கை தொழில் பயிற்சிகள் வழங்கப்படும்.



உடல் ஊனமுற்ற நபர்கள் மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி உபகரணங்கள் வாங்கி வழங்க ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கை, கால் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோருக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ரூபாய் 5 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

தேனி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஊனமுற்றோருக்குச் சிறப்புப் பள்ளி ஒன்று ரூபாய் 1 இலட்சத்து 99 ஆயிரம் செலவில் தொடங்கப்படும்.

தேனி மாவட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் மூலம் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 2 பகல் நேர சிறப்பு காப்பு மையங்கள் ரூபாய் 10 இலட்சம் செலவில் தொடங்கப்படும். 25 அரசு காப்பகங்களிலுள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவீட்டுச் செலவினத்தை ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 200-லிருந்து ரூபாய் 225-ஆக அதிகரிக்கப்படும். இதன்மூலம் சுமார் 5,500 குழந்தைகள் பயன்பெறுவர்.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தற்போது வழங்கப்படும், தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை ரூபாய் 200 இலட்சம் செலவில் 5,500-லிருந்து 10,000 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு நடத்தும் 6 சேவை இல்லங்களில் தங்கும் நலிவடைந்த, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தற்போது 2 செட் சீருடைகளுக்கு ஆண்டிற்கு ரூபாய் 400/-என வழங்கப்பட்டு வருவதை ரூபாய் 500/- ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன்மூலம் 1,125 நபர்கள் பயனடைவர். இந்தத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூபாய் 1 இலட்சத்து 12 ஆயிரம் கூடுதல் செலவு ஏற்படும்.

அரசு நடத்தி வரும் 25 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் பயனடையும் வகையில், தற்போது வழங்கப்படும் 2 செட் சீருடைக்கான தொகை, சல்வார் கமீஸ் வழங்குவதற்கு ரூபாய் 300/-ஐ ரூபாய் 400/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த சல்வார் கமீஸ் பற்றிச் சொல்லும்போது, ஒரு விஷயத்தை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும். அங்கே படிக்கக்கூடிய பிள்ளைகள் எல்லாம் சுரிதார் கேட்டிருந்தார்கள். அம்மா அவர்களின் ஆய்வின்போது, சுரிதார் கேட்கிறார்கள் அம்மா, அவர்களுக்கு கண்டிப்பாக வாங்கித் தரவேண்டுமென்று அம்மா அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தபோது, அது என்ன சுரிதார், சல்வார் கமீஸ், கொஞ்சம் அதிகமானால்கூட பரவாயில்லை, பெண் பிள்ளைகள்தானே, போட்டுக் கொள்ளட்டும் என்று சொல்லி, மிகவும் தாராளமாக (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதி வழங்கினார்கள்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுக்கே நான் இப்போது ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். பொதுவாக இந்த சல்வார் கமீஸ் உடையைச் சுரிதார் என்று சொல்வது ஒரு வழக்கமாகி விட்டது. சுரிதார் என்றால் என்ன? அதை முதலில் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். வட நாட்டு ஆண்கள் அணியும் கால்சட்டைக்குப் பெயர்தான் சுரிதார். குழாய் மாதிரி மிகவும் டைட்டாக இருக்கும். அப்படி மிகவும் டைட்டாக அணியும் முழுக் கால்சட்டைக்குப் பெயர்தான் சுரிதார். அப்படியானால் மேலே அணியும் அந்த உடை என்ன ஆயிற்று? அதற்கு மேலே வரும் போர்வை என்ன ஆயிற்று? ஆகவே, வெறும் சுரிதாரைக் கொடுத்தால் மாணவிகள் வெளியே வர முடியுமா? ஆகவே, அந்த உடையின் பெயர் சுரிதார் அல்ல. அந்த உடையின் பெயர் சல்வார் கமீஸ். மேலே அணிகின்ற ஆடைக்குப் பெயர் கமீஸ். கீழே அணிகின்ற அந்த கால் சட்டைக்குப் பெயர்தான் சல்வார். அதற்கு மேலே அணிகின்ற போர்வைக்குப் பெயர் துப்பட்டா. ஆனால் சொல்கின்றபோது, சல்வார் கமீஸ் என்று சொல்வதுதான் சரியானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு அம்மா அவர்களே, இப்பொழுதுதான் தெரிகிறது; எதிர் வரிசையிலே இருக்கிற ஒரு பிளாக் ஏன் காலியாக இருக்கிறது என்பது இப்பொழுதுதான் புரிகிறது. இவ்வளவு விஷயங்களைத் தாங்கள் எப்படித் தெரிந்து, இவ்வளவு தூரம் சொல்கிறீர்கள்? ஒரு சல்வார் கமீஸ்-லேகூட இவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்கிற விஷயம் எங்களுக்கு இப்பொழுதுதான் புரிய வருகிறது.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்களுக்குத் தற்போது வழங்கப்படும், மன்னிக்கவும்.

அரசு நடத்தி வரும் 25 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு ரூ.300/-ஐ ரூபாய் 400/-ஆக உயர்த்தி சல்வார் கமீஸ் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். 8 ஆம் வகுப்பிற்கு மேல் பயிலும் பெண்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை ரூபாய் 400/-ஐ ரூபாய் 500/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 2,300 பெண் குழந்தைகள் பயனடைவர். இந்தத் திட்டத்திற்கு நடப்பு ஆண்டில் ரூபாய் 2 இலட்சத்து 30 ஆயிரம் செலவு ஏற்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உன்னதமான தொட்டில் குழந்தைத் திட்டம் விரிவாக செயல்படுத்துவதற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூபாய் 5 இலட்சத்து 70 ஆயிரத்தை ரூபாய் 40 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த ரூபாய் 40 இலட்சம் மூலம் வரவேற்பு மையங்களிலே நல்ல முறையில் குழந்தைகளைப் பராமரிக்க உதவும். ஆம்புலன்ஸ் வண்டிகளின் 7 ஓட்டுநர்களுக்கு தொகுப்பூதியம், செவிலியருக்கு தொகுப்பூதியம், பெட்ரோல் செலவினம், மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், உணவீட்டுச் செலவினம், துணிகள், சீருடை மற்றும் மருந்துகள் வாங்கவும், குளிர்சாதனப்பெட்டி, மருத்துவ உபகரணங்கள், ஆம்புலன்ஸ் வண்டிகள், தளவாடச் சாமான்கள், விளம்பரம் மற்றும் கருத்தரங்கு ஆகியவற்றிற்கும் செலவிடப்படும்.

சமூக நலத் துறையில் 6 சேவை இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு ரூபாய் 9 இலட்சம் செலவில் கீழ்க்கண்ட தொழில்கள் நடத்துவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

1. ஹாலோ பிளாக் தயாரித்தல்

2. உணவகம் நடத்துதல்

3. மசாலாப் பொடி தயாரித்தல்

4. மலிவு விலையில் நாப்கின் தயாரித்தல்

5. ஆவின் பாலகம் அமைத்தல்

இவற்றிற்கு ரூபாய் 9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மத்திய /மாநில அரசின் உதவி பெறாத முதியோர் இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு அன்னபூர்ணா திட்டம் மூலம் ரூபாய் 49 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் 6,800 பயனாளிகள் மாதமொன்றிற்கு தலா 10 கிலோ அரிசி பெற்று பயன் பெறுவர்.

சமூக நல இயக்ககத்திற்கு கணினி வாங்குவதற்கு ரூபாய் 4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சமூக நல இயக்குநர் அலுவலகத்தைப் புதுப்பிக்க ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கு 25 குழந்தைகள் காப்பகங்கள் தொடங்குவதற்கு ரூபாய் 6 இலட்சத்து 54 ஆயிரம் நிதி ஒதுக்கப்படும்.

மதுரை மற்றும் தருமபுரியில் ஆதரவற்றோர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10 அனாதை இல்லங்களுக்கு படிப்பெருக்கிக் கருவிகள் வாங்குவதற்கு ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மதுரை மாவட்டத்தில் புதிய சேவை இல்லம் தொடங்குவதற்கு ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

தொண்டு நிறுவனங்கள் மூலம் 4 புதிய முதியோர் இல்லங்கள் தொடங்குவதற்கு ரூபாய் 6 இலட்சத்து 60 ஆயிரம் நிதி ஒதுக்கப்படும்

சமூக நல இயக்குநரகத்தில் குழந்தைகளைத் தத்து எடுக்கும் பிரிவு ஏற்படுத்துவதற்கு ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

அனாதை இல்லப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ரூபாய் இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.



தாம்பரம் சேவை இல்லத்தில் ஆதரவற்ற பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்க ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்படும்.

பிற்பகல் 2-15

சுமார் 3 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு படிப்பறிவு புகட்டுவதற்கென ரூ. 1 கோடி வழங்கப்படும்.

1,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, அவர்கள் பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும்வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் திறன் வளர்ப்புப் பயிற்சி மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினால் ரூ. 1 கோடி செலவில் அளிக்கப்படும். அவர்கள் சுயமாக தொழில் தொடங்க, வேண்டிய அளவு வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்.

ஊனமுற்றோர், ஊனமுற்ற குழந்தைகளின் தாய்மார்கள், பாலியியல் தொழில் செய்வோர், அரவாணிகள், கள்ளச்சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண்களிடையே 1,000 சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு, அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு ரூ. 1 கோடி செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படும். மேலும், இவர்கள் சுயமாகத் தொழில் தொடங்க வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால், தேனி மாவட்டத்தில் ஊரக மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 1,000 மகளிருக்கு டான்வா மூலம் ரூ. 3 இலட்சம் செலவில் 2002-2003 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியினை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ரூ. 3 இலட்சம் செலவில், 1,000 மகளிருக்கு விவசாயம், அதன் தொடர்புடைய நடவடிக்கைகள், சிறுதொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் உவர் நிலப் பண்ணை, தரிசு நிலப் பண்ணை, தோட்டக்கலை, மலர் வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், பிராணிகள் வளர்ப்பு, கோழிப் பண்ணை, பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு, காளான் வளர்ப்பு போன்ற பயிற்சிகள் வழங்குவதற்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்படும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக பஞ்சாயத்து ராஜ் அமைப்பின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, அதாவது, 12,619 கூட்டமைப்புகளுக்கு ரூ. 50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை நல்ல இலாபத்துடன் விற்பனை செய்ய மாநில அளவிலான விற்பனை மையம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்துவதற்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்படும். இதுதவிர, சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை வாரச் சந்தை மூலமாக விற்பனை செய்வதற்கு வாரச் சந்தையில் இலவசமாக இடமளிக்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணை வழங்கப்படும்.

பொன்விழா கிராமிய சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கட்டமைப்பினைப் பயன்படுத்தி சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய மாவட்டந்தோறும் மகளிர் அங்காடிகள் (சந்தைகள்) அமைக்கப்படும்.

கைவினைக் கலைஞர்களுக்காக 1,000 சுய உதவிக் குழுக்கள் ரூ. 1 கோடி செலவில் தொடங்கப்படும்.

தேனி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் பரிட்சார்த்த முறையில் முழு வறுமை ஒழிப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் தேனி மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் பெண்களை ஒருங்கிணைத்து, சுய உதவிக் குழுக்களை அமைத்து, அவர்கள் சுயதொழில் தொடங்கி, சுயமாக வருமானம் ஈட்டத் தேவையான தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் திறன் வளர்ச்சிப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்காக ரூ. 87 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்படும்.

சுய உதவிக் குழு மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பதற்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கப்படும்.

வளர் இளம் பெண்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எடை எடுப்பதற்காக ரூ. 24 இலட்சத்து 96 ஆயிரம் செலவில் தேவையான கருவிகள் வாங்கப்படும்.



தமிழ்நாட்டில் குழந்தைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்க மொத்தமுள்ள 29 மாவட்டங்களில், இதுவரை 18 மாவட்டங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த 10,869 குழந்தைகள் எடை அளவுகோல்களை மாற்றி புதியதாக வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 மாவட்டங்களுக்குத் தேவையான 3,136 எடை அளவுகோல்கள் நடப்பாண்டில் வாங்குவதற்கு ரூ. 13 இலட்சத்து 99 ஆயிரம் செலவிடப்படும்.

ஆபத்தான மற்றும் சிக்கலான பிரசவ நிலையில் உள்ள தாய்மார்களை உரிய நேரத்தில் மேல் மருத்துவச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல அங்கன்வாடி மையங்கள் மூலமாக வாகன வசதி செய்து தரப்படும்.

தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா (MMR) நோய்களைத் தடுக்க 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கு தடுப்பூசி மற்றும் 10 முதல் 15 வரை உள்ள வளர் இளம் பெண்களுக்கு ரூபெல்லா நோயைத் தடுக்க, தடுப்பூசி போட ஒரு முன்னோடித் திட்டமாக தேனி, திருவண்ணாமலை, கடலூர், பெரம்பலூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு திட்டப் பகுதியில் ரூ.5 இலட்சம் வீதம் 5 திட்டப் பகுதிகளில் ரூ. 25 இலட்சம் செலவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மேற்கண்ட 5 மாவட்டங்களிலுள்ள, மீதமுள்ள 70 திட்டப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்தத் திட்டம் தகவல், கல்வி தொடர்புப் பணிகள் மற்றும் பயிற்சியை உள்ளடக்கியது.

பிற்பகல் 2-20

இதைத் தொடர்ந்து, மீதமுள்ள 24 மாவட்டங்களில் 359 திட்டப் பகுதிகளுக்கும் தட்டம்மை, புட்டாலம்மை, ரூபெல்லா நோய்கள் தடுப்பு அவசியம் குறித்து பொது மக்களிடையே பிரச்சாரங்கள் வாயிலாக, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். ஒரு திட்டப் பகுதி பிரச்சாரத்திற்காக ரூ. 5,000/- செலவினம் மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூபாய் 3 கோடியே 67 இலட்சத்து 95 ஆயிரம்.

தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடில்லாத மாநிலமாக மாற்ற தீவிர தகவல், கல்வி மற்றும் விளம்பர பணிகள் ரூபாய் 77 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்படும்.

அங்கன்வாடி பணியாளர்களின் அறிவாற்றலையும் செயல் திறனையும் மேம்படுத்த ரூபாய் 63 இலட்சத்து 57 ஆயிரம் செலவில் உதவிச் சாதனங்கள் வழங்கப்படும்.

அங்கன்வாடி மையக் குழந்தைகளின் முன்பருவக் கல்வியினை மேம்படுத்தும்பொருட்டு இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, கடலூர், பெரம்பலூர், தேனி, விருதுநகர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் களப்பணியாளர்களுக்கான பயிற்சியும், மேலும் 1,120 மக்கள் விழிப்புணர்வு முகாம்களும் ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

வளர் இளம் பெண்களிடையே சுகாதாரம், ஊட்டச்சத்து, தன்சுத்தம் மற்றும் வாழ்வியல் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு முகாம், மதுரை, திருவண்ணாமலை, விழுப்புரம், திண்டுக்கல், தேனி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் 1,41,650 வளர் இளம் பெண்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் செலவில் 2,833 முகாம்கள் நடத்தப்படும்.

கிராம அளவில் பணிபுரியும் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு ஒருங்கிணைப்புப் பயிற்சி சென்னை மாவட்டம் தவிர்த்த 28 மாவட்டங்களிலும் நடத்தப்படும். மேலும் இவ்விரு வகைப் பணியாளர்களும் இணைந்து செயல்படும் நுட்பம் பற்றி அரசு சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களுக்கு 18 மாவட்டங்களிலும் பயிற்சி நடத்தப்படும். இதற்கு ஆகும் செலவினம் ரூபாய் 1 கோடியே 89 இலட்சமாகும்.

கிஷோரி சக்தி யோஜனா (வளர் இளம் பெண்களுக்கான திட்டம்) தேனி, பெரம்பலூர், திருவண்ணாமலை, கடலூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 100 வட்டாரங்களில் வட்டாரம் ஒன்றுக்கு தலா ரூபாய் 1 இலட்சத்து 10 ஆயிரம் செலவில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும். இதற்காகும் மொத்தச் செலவினம் ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் ஆகும்.

குழந்தைகளிடையே ஏற்படும் வைட்டமின் 'ஏ' குறைவினைப் போக்கிட, காஞ்சிபுரம், வேலூர், கடலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டங்களில் பரிட்சார்த்தமாக தலா ஒரு மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரம் வீதம், அதில் ஒரு வட்டாரத்திற்கு சுமார் 2,650 குழந்தைகள் பயன்பெறும் வகையில் மொத்தம் 32,000 குழந்தைகளுக்கு முருங்கைக்கீரைப் பொடி அல்லது கருவேப்பிலைப் பொடியினை



சத்துணவு மையங்களில் பயன்பெறும் ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 2 கிராம் வீதம் 20 பைசா செலவில் வாரத்தில் 5 நாட்களுக்கு ஏற்கெனவே வழங்கப்படும் இதர காய்கறிகளுடன் சேர்த்து வழங்கப்படும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்கும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மேற்கண்ட பொடியினை தயாரித்து சத்துணவு மையங்களுக்கு வழங்கப் பயிற்சி அளிப்பதன் மூலம், சுய உதவிக் குழுக்களுக்கு வருவாயைப் பெருக்க வழிவகை ஏற்படும். இதற்காகும் மொத்தச் செலவினம் ரூபாய் 25 இலட்சமாகும்.

இந்தக் கருவேப்பிலைப் பொடி, முருங்கைக்கீரைப் பொடியை சத்துணவு சாப்பிடும் பிள்ளைகளுக்குத் தரவேண்டும் என்கிற திட்டம் எங்களுடைய இதயதெய்வம் அம்மா அவர்களின் இதயத்திலே உதித்த உன்னதமான உயரிய திட்டம். அம்மா அவர்கள் சிந்தித்து, அம்மா அவர்களே அறிமுகப்படுத்திய திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இரும்புச் சத்து அதிகமாக இருக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தரக்கூடிய ஊட்டச் சத்துக்கு மேல், சத்துணவுக்கு மேல், இரும்புச் சத்தும் அதிகமாக இருக்க வேண்டும் என்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு அம்மா அவர்களே கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தை வளர் இளம் பெண்களுக்கும் சேர்த்து வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

கல்வித் துறையுடன் இணைந்து 5,000 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களை முழுமையான மழலையர் பள்ளிகளாக மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி, உள் கட்டமைப்பு வசதி, உள் மற்றும் வெளிப்புற விளையாட்டுச் சாதனங்கள், சமுதாய விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பு அளிப்பதன் மூலம் இம்மையங்கள் சிறந்த மழலையர் மையங்களாக மாற்றப்படும். இதற்காகும் மொத்தச் செலவினம் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் ஆகும்.

பிற்பகல் 2-25

இதுகூட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையிலே உதித்த திட்டம்தான். அங்கன்வாடி பள்ளிக்கூடங்களிலே படிக்க வருகிற பிள்ளைகள் தமிழோடு ஆங்கிலத்தையும் சேர்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். இன்றைக்கு ஆங்கிலப் பள்ளியிலே, வெளியிலே போய் அதிகமான பணத்தைக் கொடுத்து படிக்கக்கூடிய நிலை மாறுவதற்கு அரசே நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களிலே இதுபோன்ற செயல்முறைகளை, அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும் என்கிற

அடிப்படையிலே அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிற உன்னதமான திட்டம், இந்தத் திட்டம்.

மதுரை, தேனி, கரூர், பெரம்பலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர்களுக்கு முன்னோடித் திட்டமாக ரூ. 20 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட 71,243 மையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தத்தம் இருக்கையிலே அமர்ந்து பணிபுரிய ரூ. 2 கோடியே 85 இலட்சம் செலவில் மேசை, நாற்காலிகள் வாங்கி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது நீண்ட நாள் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்றுக்கொண்டு, இன்று வரை அவர்களுக்கு உட்காருவதற்குகூட நாற்காலி இல்லை என்று சொன்னவுடன், உடனடியாக தரவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இந்தக் கடுமையான நிதி நெருக்கடியிலேகூட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் சத்துணவுப் பணியாளர்களுக்காகச் செலவிட்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆகியோரின் பிறந்த நாளன்று சத்துணவுப் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டு வந்தது. சென்ற ஆட்சியில் அம்மா அவர்களின் பிறந்த நாளிலே மட்டும் அந்த இனிப்பு, சர்க்கரைப் பொங்கல் வழங்குவது நிறுத்தப்பட்டது. இப்போது நடப்பு ஆண்டிலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையும் சேர்த்து சத்துணவுப் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்சி (பி.எட்.) படித்த பட்டதாரிப் பணியாளர்கள் சிறப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு பட்டதாரி ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட உள்ளனர் என்கிற உத்தரவை ஒரு வார காலத்திற்கு முன்னால் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அரசாணையை உடனே வெளியிட வேண்டுமென்று எங்களுக்குத் துரிதமாக ஆணையிட்டு, அரசாணையும் நேற்றையதினம் வெளியிடப்பட்டுவிட்டது என்பதை நான்



மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் பட்டதாரி ஆசிரியர்களின் சிறப்புத் தேர்வு எழுதக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகி, அரசுத் துறையிலே வேலைக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு ரூ. 1 கோடி செலவில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழியங்கும் 2 கூர்நோக்கு இல்லங்கள், 20 சிறுவர் இல்லங்கள், பெண்களுக்கான 2 குறுகிய கால தங்குமிடங்கள் மற்றும் பெண்களுக்கான 2 இடைவழி இல்லங்கள் ஆகியவற்றில் பயனடையும் 1,080 நபர்களுக்கு தற்போது நபர் ஒன்றுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகை ரூ. 200-லிருந்து ரூ. 225/- ஆக உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதற்கிணங்க, இங்கு அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்சி படித்த பட்டதாரிப் பணியாளர்கள் சிறப்புத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டு பட்டதாரி ஆசிரியர்களாகத் தேர்வு செய்யப்பட உள்ளனர் என்று அறிவித்ததற்காக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** நேற்றைய தினமே அரசாணையும் வெளியிடப்பட்டுவிட்டது. சென்னை அரசினர் பெண்களுக்கான சிறப்பு குழந்தைகள் இல்லம் மற்றும் செங்கல்பட்டு அரசினர் சிறுவர் இல்லத்தில் தலா ரூபாய் 6 இலட்சத்து 25 ஆயிரம் செலவில் "கணினி கல்வி" தொடங்கப்படும். இரண்டு மையங்களுக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 12 இலட்சத்து 50 ஆயிரம் ஆகும். இதன்மூலம் சுமார் 200 சிறுவர் சிறுமியர் பயன்பெறுவர்.

நான்கு அரசினர் குழந்தைகள் இல்லங்களில் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பழுதுபார்க்கும் பணி ரூ. 34 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்துவதற்கு எதிரான முனைப்புத் திட்டங்கள் ரூ. 31 இலட்சத்து 69 ஆயிரம் செலவில் சென்னை, சேலம் மற்றும் மதுரையில் தொடங்கப்படும்.

அரசினர் கூர்நோக்கு இல்லங்கள்/சிறப்பு இல்லங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள உணவு/உடைகள் மற்றும் சுகாதார வசதிகளின் விகிதம் உயர்த்தி வழங்கப்படும்.

எட்டு அரசினர் சிறார் இல்லங்களுக்கு பேண்டு வாத்தியக் கருவிகள் ரூ. 4 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லம் ஒன்று தொண்டு நிறுவனம் மூலம் திருநெல்வேலியில் ரூ. 10 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறை இயக்கக மேம்பாட்டிற்காக கணிப்பொறி வாங்கப்படும். கணிப்பொறி இயக்குபவர் தொகுப்பு ஊதியத்தில் நியமிக்கப்படுவர். இது ரூ. 1 இலட்சத்து 81 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 2-30

அரசு குழந்தைகள்/சிறப்பு/கண்காணிப்பு/பாதுகாப்பு மற்றும் பிற்காப்பு நிறுவனங்களில் சமையல் பாத்திரங்கள் ரூபாய் 3 இலட்சத்து 70 ஆயிரம் செலவில் புதுப்பிக்கப்படும்.

மதுரை மண்டல துணை இயக்குனர் (D.D.) அலுவலகத்திற்கு ரூபாய் 80 ஆயிரம் செலவில் நிகரி வசதி ஏற்படுத்தப்படும்.

சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்திற்கு ரூ. 1 இலட்சத்து 45 ஆயிரம் செலவில் மும்முனை மின்சார இணைப்பு வசதி செய்து தரப்படும்.

செங்கற்பட்டு சிறுவர் இல்லம், சென்னை இராயபுரம் சிறுவர் இல்லம் மற்றும் வேலூரில் உள்ள அரசினர் பிற்காப்பு இல்லம் ஆகியவற்றிற்கு மின் இணைப்பு புதுப்பிக்கவும் மற்றும் துயிற்கூடங்களில் மின் விசிறி வழங்கவும் ரூபாய் 5 இலட்சம் செலவு மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 6 இலட்சம் செலவில் தட்டப்பாறை அரசு குழந்தைகள் இல்லக் குடியிருப்புக்களுக்கு தனி மின் இணைப்பு வழங்கப்படும்.



ரூபாய் 6 இலட்சத்து 24 ஆயிரம் செலவில் அரசினர் குழந்தைகள் இல்லம், செங்கற்பட்டு, அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர், அரசினர் கூர்நோக்கு இல்லம், திருச்சி, அரசினர் பெண்கள் பாதுகாப்பு இல்லம், திருச்சி மற்றும் அரசினர் சிறப்பு / பெண் குழந்தைகள் இல்லம், சென்னை ஆகியவற்றிற்கு தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும்.

ரூபாய் 5 இலட்சத்து 76 ஆயிரம் செலவில் மல்லிப்புதூர் மற்றும் தட்டப்பாறையில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்லங்களில் உணவு அறைகள் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 3 இலட்சத்து 33 ஆயிரம் செலவில் ஈரோட்டில் உள்ள அரசு குழந்தைகள் இல்லத்தைச் சுற்றி தொடர் கம்பி வேலி அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொட்டில் குழந்தைகள் திட்டம் பற்றிய அரசின் செயலாக்கங்களை விளம்பரப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பேசினார்கள். அந்தக் கருத்தை அரசு நடைமுறைப்படுத்தும் என்கின்ற தகவலை அவைக்குச் சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்களுடைய கருத்தை அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** இந்த அளவிற்கு திட்டங்களை வகுத்து, சிறப்பாகச் செயல்பட்டு வருகிற அம்மாவின் ஆட்சியைப் பார்த்து, சில பேர் மிரட்டத் தொடங்கியிருக்கிறார்கள். எங்கள் அம்மாவால் பல் பிடுங்கப்பட்ட அந்தப் பாம்பு, 356 என்ற இன்னொரு பாம்பைக் காட்டி பயமுறுத்துகிறது. நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 356 என்கின்ற பாம்பு உங்களிடம் இருக்குமானால், 234 என்ற கீரிப்பிள்ளை எங்கள் அம்மாவிடம் இருக்கிறது. 356 சட்டப்பிரிவை எதிர்க்கட்சிகள் காட்ட முடியுமென்றால், 234 சட்டமன்றத் தொகுதிகளும் எங்கள் அம்மாவிற்குச் சொந்தமாகும். படம் எடுக்கும் பாம்பு எங்கள் அம்மாவின் கால்தடம் பார்த்தாலே சுருண்டுவிடும். தீவிரவாதம் பேசி, திடீர் தலைவர் ஆகிவிடலாம் என்று திட்டம் போட்டால், பொடா,

தடா எல்லாமும்தான் வரும். இப்போது புலம்பி பயன் என்ன? அவருக்காக இவர் சிறைக்குப் போவாராம். இவருக்காக அவர் சிறைக்குப் போவாராம். இவரைக் கைது செய்யப் போன போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் குடும்பத்தோடு உட்கார்ந்து புலம்புவாராம். ஓடி ஒளிந்துகொண்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்வாராம்.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. "Never let a fox into a hen's house." குள்ள நரியைக் கோழிக் கூண்டிற்குள் விட்டால், நரி வெளியே வரும்போது ஒரு கோழிகூட உயிரோடு இருக்காது. இப்போது நடக்கப்போவதும் அதுதான். பாசம் கண்ணை மறைத்ததால் கொலைப்பழி சுமத்தியவர் ஒருவர். பயம் கண்ணை மறைப்பதால் அண்ணன்-தம்பி, அப்பா-பிள்ளை என்கிற உறவுப்பாலம் கட்டுபவர் இன்னொருவர். நரி விரித்து வைத்திருக்கிற நயவஞ்சக வலை, பாவம் ஆடுகள் சிக்கிப் பலியாகப் போகின்றன. சொந்தப் பிள்ளைக்கே சோறு போடாதவர். எங்கள் அம்மா போட்டுக் கொண்டு இருக்கிறார். வந்த பிள்ளைக்கா விருந்து வைக்கப் போகிறார்? பகையாளியானாலும் பசியாறிப் போக வேண்டுமென்று நினைத்த ஈர இதயங்கள் இந்த உலகத்திலேயே இரண்டே பேர்தான். ஒருவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், சத்துணவு போட்டார். இன்னொருவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்னதானம் போட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவதாக, சொல்லிக் காட்ட, உவமை சொல்ல, ஒப்பிட, இன்னொருவரை இந்த உலகத்தில் யாரையும் காட்ட முடியாது. கேட்டால் தேன்கூட்டில் கை வைக்காதே என்கிறார்கள். தேனை எடுக்க தீதான் வைப்பார்கள். கை வைக்க மாட்டார்கள். கை வைப்பவன் பைத்தியக்காரன். தீ வைப்பவன் புத்திசாலி. எங்கள் அம்மா புத்திசாலி மட்டும் அல்ல. அதற்கும் மேலே, எங்கே அடித்தால் எங்கே வலிக்கும் என்பது எங்கள் அம்மாவுக்கு மட்டும்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, எங்கள் முகத்திற்கு முகவரி தந்த முத்தமிழே, நீங்கள நின்றால் கவிதை, நிமிர்ந்தால் கவிதை, பார்த்தால் கவிதை, படித்தால் கவிதை, சிரித்தால் கவிதை, நீங்களே ஒரு கவிதை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-35

இந்தச் சபையில் சொல்லை நெல்லாக விதைக்கிறீர்கள். வில்லாகவும் வளைக்கிறீர்கள்.



வாதத் திறமையிலே வரலாறு படைத்துவரும் உறையிடா போர் வாளே! முதல்வர் இருக்கையிலே, நீங்கள் அறம் தரும் திருக்குறள். மூவேந்தர் வீரத்திலே நீங்கள் புறந்தரும் நானூறு. நா முழக்கம் செய்யும்போது, வரம் தரும் நீதிநூல். பகை முடிக்கும்போது, நீங்கள் கலிங்கத்துப் பரணி. பண்பாட்டு வரியெல்லாம் உங்கள் பத்துப்பாட்டு! தமிழர் பயன்பாட்டு வாழ்வுக்கு நீங்கள் எட்டுத் தொகை. பிள்ளைத்தமிழே! பீடு திருவாசகமே! பிரபந்த வரியெல்லாம் பிழிந்த கனிச்சாறே! சொல்லெல்லாம் காப்பியமாய் சுவைகூட்டும் பைந்தமிழே! எங்கள் ஐம்பெரும் காப்பியத்தின் அறமழையே! நீங்கள்தான் அம்மா தமிழர்க்கு பல்காப்பியப் பூங்கா! என்று சொல்வதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் 173 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள். நான் அளித்திருக்கின்ற பதில் உங்களுக்கு ஓரளவுக்குத் திருப்தியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** ஒரு சின்ன திருத்தம், அரசாணையில். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிடுவதாகச் சொன்னார்கள். அதில் ஒரு சின்ன திருத்தம் என்னவென்று சொன்னால், பெண்கள் திருமணமாகி, கணவன் வீட்டிற்குச் சென்று விடுகிறார்கள். அப்போது, கணவர் பெயரை முதல் எழுத்தாகப் போட வேண்டுமென்று விரும்புகின்றபட்சத்தில், அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு திருத்தம் -- விரும்பினால், யாராவது விரும்பினால், தாய் எழுத்து முதல், தந்தை. இரண்டாவது, (குறுக்கீடு) இல்லை, அப்போது மாற்றிக்கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 43, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது

திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு.எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை. திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை. செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கை எண்43-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.444,82,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

85. 2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) விதிகள் இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் 17-01-2002-ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2000-ஆம் ஆண்டு இளைஞர் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 56/2000) 68(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]..



### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

201. மானியக் கோரிக்கை எண்.43- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004 (தமிழ், ஆங்கிலம்)

202. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் செயல்முறைத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

203. "விரிவான தரிசு நிலத் திட்டம்" என்ற புத்தகம், 2003. (தமிழ்)

204. "வணிக மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் சாகுபடி" என்ற புத்தகம், 2003 (தமிழ்)

205. "வெப்ப மண்டல பழப் பயிர்கள் சாகுபடி" என்ற புத்தகம், 2003. (தமிழ்)

206. "வெப்ப மண்டல காய்கறி பயிர்கள் சாகுபடி கையேடு" என்ற புத்தகம் (தமிழ்)

207. "மலர்கள் சாகுபடி" என்ற புத்தகம். (தமிழ்)

208. வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

209. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2003)

210. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து நான்காவது அறிக்கை. (2001-2003)

211. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2003)

212. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை. (2001-2003)

213. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

# இணைப்பு

*(96ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கோரிக்கை எண் 43

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2003-2004

## அத்தியாயம் 1

**முன்னுரை**

கோரிக்கை எண் 43-ன்கீழ் 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.44,82,78,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

ஒரு நாட்டின் செல்வம் என்பது அதன் பொருளாதார வளம் மட்டுமன்று. அதன் செல்வம் என்பது மறைந்து கிடக்கிற கனிம வளமோ, உயர்ந்து நிற்கும் மலையோ, ஓடும் நதியோ, ஒலியெழுப்பும் கடலோ அல்ல!

ஒரு சமுதாயத்தின் உண்மையான செல்வம் என்பது உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் ஒருங்கே பெற்ற மக்களும், அவர்களின் உழைப்புத் திறனும் அடங்கிய மனித வளமே ஆகும்.

அந்த மனித வளத்தை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு பெண்களையே சாரும்.

வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே!

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

மனித குலம் வாழ வேண்டும் என்றால் மகளிர் நலம், குழந்தைகள் நலம் பேணப்பட வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவியின் தலைமையின்கீழ் இயங்கும் அரசு, பெண்கள் நலம், குழந்தைகள் நலம், என்பதைப் பேச்சோடு நிறுத்திவிடாமல் தன் உயிர் மூச்சாகவே கொண்டிருக்கிறது.

[2003 ஏப்ரல் 25

குழந்தை பிறப்பு முதல் முதியோர் நிலை எய்தி வாழ்வின் இறுதிக் கட்டம் வரை பல்வேறு நிலைகளில் வாழ்வில் ஒரு பிடிப்பினை ஏற்படுத்திட பல சிறந்த திட்டங்களை இத்துறை நடைமுறைப்படுத்தி வருகிறது. குழந்தை பிறந்த 6 மாதம் முதல் 3 வயது வரை குழந்தைகளுக்குப் புரதச் சத்து மிகுந்த ஊட்டச் சத்துணவு வழங்குதல், அதன் பின்னர் 15 வயது வரை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுகக்கு சத்தான உணவு வழங்குதல், உணவு மட்டுமின்றி உடுத்த பாலியெஸ்டர் துணியால் ஆன சீருடைகள் வழங்குதல், படிக்க பாடப் புத்தகங்கள் வழங்குதல் வளர் இளம் பெண்களுக்கு பிரச்சினைகள் மிகுந்த இந்த வாழ்க்கையை எதிர்கொள்ள வாழ்க்கைக் கல்வி மற்றும் புத்தாக்கப் பயிற்சி, வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகங்கள், பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள், மகளிர் மன்றங்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோருக்கு இலவச தையல் இயந்திரங்கள் வழங்குதல், தம்பதிகள் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழ குடும்ப ஆலோசனை மையங்கள், முதியோர்கள் கண்ணியத்துடன் வாழ முதியோர் இல்லங்கள், மகளிர், சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைய சுயவேலை வாய்ப்பு ஏற்படுத்தி தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்த ஊக்கமும் உற்சாகமும் அளித்தல், அனைத்து குழுக்களிலும் பெண்களுக்கு 30 விழுக்காடு பிரதிநிதித்துவம் செயல்படுத்துதலை கண்காணித்தல், ஊனமுற்றோருக்கு உதவும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள், ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களுக்கு பாதுகாப்பு அளித்தல், பெண் சிசுவதையைத் தடுக்க தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், முதியோர்களுக்கு ஓய்வூதியம் அளித்தல் ஓய்வூதியம் பெறும் ஆதாவற்ற மூத்த குடிமக்களுக்கு இலவச அரிசி வழங்குதல் மற்றும் முதியோர்களுக்குச் சத்துணவு வழங்குதல் போன்ற பல அரிய திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

இவற்றைச் செயல்படுத்தும் இயக்கங்கள் ஆற்றும் பணிகள், பயனாளிகள் விவரம் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டிற்கு



2003 ஏப்ரல் 25]

ஒதுக்கப்பட்டுள்ள நிதி விவரங்கள் ஆகியவைபற்றி பல்வேறு தலைப்புகளின்கீழ் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-2

### மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

**2.1** குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களது நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அவர்களின் உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பெண் குழந்தைகளின் சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும், பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிடவும், பாலியல் வேறுபாட்டினை ஒழிக்கவும், வளர் இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தவும், பெண்களின் ஆரோக்கியமான உடல் நலத்தைப் பேணுவதற்கும் அரசு கொள்கைகளை உருவாக்கி, முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### 2.2 பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

பெண்கள் இச்சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக பீடுநடை போடுவதை உறுதிப்படுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரட்சிகரமானதொரு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளிப்பதற்காகவும், பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காகவும், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இத்திட்டத்தினை அறிமுகப்படுத்தினார்கள்.

தற்பொழுது இத்திட்டம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண் குழந்தைகளுக்கு அதிக நிதி கிடைக்கும் வகையில் முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஒரு முன்னோடி திட்டமாக அமல்படுத்தப்படுவதோடு ஏழைப் பெண் குழந்தைகளின் கல்விக்கு உறுதுணையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2001-ல் இத்திட்டம் மறுவடிவாக்கம் செய்யப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து

வேறு குழந்தைகள் எவரும் இல்லாத குடும்பங்களில் பெற்றோர் எவரேனும் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருந்தால், அரசு அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200/- செலுத்துகிறது. இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தை ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புக் கல்வியை முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வழங்கப்படும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக வழங்கப்படும். அப்பெண், தொடர்ந்து மேற்கல்வி பயிலவோ அல்லது அப்பெண்ணின் திருமணச் செலவிற்கோ இத்தொகை உதவும். இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து, ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில், பெற்றோரில் எவரேனும் ஒருவர் கருத்தடை அறுவை சிகிசசை செய்து கொண்டு இருந்தால், அரசு, அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின்வள நிதி நிறுவனத்தில் ரூ.15,200/-ஐத் தொடக்க வைப்பீடாகச் செலுத்தும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் முன்னர் தெரிவித்துள்ளபடி மாதம் ஒன்றுக்கு ரூ. 150/- வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக வழங்கப்படும். இத்திட்டம், பெண் குழந்தைகள் மட்டும் உள்ள பெற்றோருக்கு புதிய நம்பிக்கை கொடுப்பதோடு ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் கல்வி அளிப்பதை உறுதிப்படுத்தும்.

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கான ரூ. 14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள விண்ணப்பங்களுக்கென ரூ. 6.17 கோடி 2003-2004 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3 தொட்டில் குழந்தைத் திட்டம்

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் கொடுஞ்செயலாக நடைபெற்று வரும் பெண் சிசுவதையைத் தடுக்கும் நோக்கத்துடன் 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் "தொட்டில் குழந்தைத் திட்டம்" எனும் தன்னிகரில்லாத திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, சமூகச் சூழ்நிலை காரணங்களினால் பெற்றோர்களால் நிராகரிக்கப்படும் பெண் குழந்தைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வண்ணம் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம்,





குழந்தைகள் இல்லம் மற்றும் காப்பகங்கள் ஆகிய இடங்களில் தொட்டில்கள் வைக்கப்பட்டன. சேலத்தில் ஒரு வரவேற்பு மையமும் தொடங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் புத்துயிர் அளிக்கப்பட்டு, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் ரூ. 12.96 இலட்சம் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய வரவேற்பு மையங்கள் தொடங்க அரசு அனுமதி அளித்து தொடங்கப்பட்டு விட்டது. மேலும், சேலத்தில் தற்பொழுது உள்ள மையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பெண் சிசுக்களைப் பெற, அம்மையங்களின் வசதிகள் மேம்படுத்தப்படும். மாவட்ட சமூக நல அலுவலகங்களிலும், ஆரம்ப சுகாதார/ துணை ஆரம்ப சுகாதார மையங்களிலும் மொத்தம் 188 இடங்களில் தொட்டில்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொட்டில் மையங்களில் பெறப்படும் குழந்தைகள் வரவேற்பு மையங்களுக்கு அனுப்பப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்படும். பெண் சிசுவதை செய்யும் கொடுஞ்செயலுக்கு எதிராக மாநில அரசு, பரந்த அளவில் பிரச்சாரம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கல்வி சுய வேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பதன் மூலமாக பெண்களுக்கு சமூகப் பொருளாதார உரிமைகளை வழங்குவதில் அரசு தனிக் கவனம் செலுத்தும். சிறப்பு வாய்ந்த தொட்டில் குழந்தைத் திட்டம் நாடெங்கிலும் பெருவாரியான ஆதரவைப் பெற்றுள்ளது.

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 5.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

### 2.4 தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்

குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டினை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டுள்ள இவ்வரசு, 1993 ஆம் ஆண்டு **"டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தினை"** ஆரம்பித்து செயலாக்கியது. இத்திட்டத்தின் சமீபத்திய வளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு, தொடர் நடவடிக்கையாக 2001-2002 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேம்படுத்தப்பட்டு "தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டம்" என மாற்றம் செய்யப்பட்டது.

இத்திட்டம் தமிழக அரசின் துறைகளான சமூக நலம், கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

[2003 ஏப்ரல் 25

வழங்கல் துறை, தொழிலாளர் நலன் மற்றும் இதர சம்பந்தப்பட்ட துறைகளின் பணிகளை ஒருங்கிணைந்து மகளிர் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கான இத்திட்டத்தின் குறிக்கோள்களை அடையச் செய்வது ஆகும.

இத்திட்டத்தில் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டு 2003 ஆம் ஆண்டு மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கென இடைக்கால இலக்குகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு 18 அம்ச மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான குழு, துறைத் தலைவர்கள் அளவிலான குழு மற்றும் மாவட்ட அளவிலான குழு என குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

## 2.5 அரசு குழந்தைகள் காப்பகங்கள்

தமிழக அரசு, சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின நலனுக்கென 25 அரசு குழந்தைகள் காப்பகங்களை நடத்தி வருகிறது.

இக்காப்பகங்களில் சேருவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள்:

* பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்
* குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கும் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சார்ந்த தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட நிலையிலுள்ள குழந்தைகள், கணவனோ அல்லது மனைவியோ நீண்ட நாள் கைதியாக இருப்பின் மனைவியால் அல்லது கணவனால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள், கணவனாலோ அல்லது மனைவியாலோ கைவிடப்பட்ட குழந்தைகள்.
* தொழுநோய் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

சத்யா அம்மையார் நினைவு குழந்தைகள் காப்பகங்கள் என அழைக்கப்படும் அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட வசதிகளை அரசு அளித்து வருகின்றது.



2003 ஏப்ரல் 25]

ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 200/-வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது. காப்பகத்திலேயே 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் வெளிபள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு தொழிற் கல்வியும் அளிக்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயிலத் தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் கழகம் மூலம் வாங்கி வழங்கப்படுகிறது. அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்குப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் வெளிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு ஆண்டு தோறும் முறையே ரூ. 300/- மற்றும் ரூ. 400/- மதிப்பீட்டில், இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன. அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.150/- வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு மட்டும் ஒரு குழந்தைக்கு ரூ.250/-வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது.

அரசு குழந்தைகள் காப்பக குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 50/-மதிப்புள்ள காலணிகள் வழங்கப்படுகிறது.

250 குழந்தைகள் வீதம் உள்ள 20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000/-வீதமும், 100 குழந்தைகள் வீதம் உள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 500/- வீதமும் மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காப்பகங்களை அவ்வப்போது ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்குச் சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. இக்காப்பகங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

இக்காப்பகங்கள் நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தி உள்ளது:-

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | —தலைவர் |
| 2. | மாவட்ட கல்வி அதிகாரி | —உறுப்பினர் |
| 3. | பகுதி நேர மருத்துவ அலுவலர் | —உறுப்பினர் |
| 4. | மாவட்ட சமூக நல அலுவலர் | —உறுப்பினர் |
| 5. | மாநில சமூக நல வாரிய உறுப்பினர் | —அலுவல் சாரா உறுப்பினர். |
| 6. | மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப் படும் சமூகப் பணியில் முன்னணியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள். | —அலுவல் சாரா உறுப்பினர்கள். |

இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்து கண்காணிக்கும். காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு இக்குழு உதவும்.

அன்றாட வாழ்க்கையினைத் தொடர்வதற்குத் தேவையான வெளி உலகத் தொடர்புக்கு வாய்ப்பு நல்கும் பொருட்டும், குழந்தைகளை ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தும் பொருட்டும் அவர்கள் அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டிற்கொருமுறை சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அரசு குழந்தைகள் காப்பகங்களை நல்ல முறையில் செயல்படுத்த ஏதுவாக 25 அரசு குழந்தைகள். காப்பகங்களுக்கும் தொலைபேசி இணைப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது.

அரசு குழந்தைகள் காப்பகத்தில் 10, +1, +2 வகுப்பு பயிலும் மாணவிகள் 372 பேருக்கு இலவசமாக மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 5.37 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**2003–2004 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**





## 2.6 குழந்தைகளின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

தமிழக அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும். பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் நலத் திட்டத்தில் குழந்தைகளை பராமரிப்பதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. இதில் 80 சதவீதம் மானியமாக 1-4-1992 முதல் மாநில அரசு வழங்குகிறது. 20 சதவீதம் தொண்டு நிறுவனம் ஏற்றுக்கொள்கிறது. இம்மானியம் தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றிற்கு, ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.250/- வீதம் வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களை மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர்களும் சமூக நல இயக்கத்தில் உள்ள அலுவலர்களும் முறையாக பார்வையிடுகிறார்கள். இவ்வில்லங்களில் பராமரிக்கப்படும் 14,377 குழந்தைகளுக்காக 183 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிடம் மானியம் பெறுகின்றன.

**இத்திட்டத்திற்கு 2003–2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 3.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.7 தத்து எடுத்தல்

அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதாவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து, அதன் மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும் கிடைக்கவும். அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் தத்து திட்டம் ஒரு முக்கியமான வாயிலாக உள்ளது. மேலும், குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும், இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலை வளர்க்கவும், பொருளாதார நிலையை உயர்த்தவும் தத்தெடுத்தல் உதவுகிறது. அத்துடன், இக்குழந்தைகள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தத்தெடுத்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

உள்நாட்டில் தத்து கொடுக்க 23 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், கடலூர், நாமக்கல், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற 23 நிறுவனங்களில், 7 நிறுவனங்களுக்கு வெளிநாட்டில் தத்து கொடுக்கவும் உரிமம்

[2003 ஏப்ரல் 25

அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு ஒரு தத்து நிறுவனம் செயல்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பொது மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கி, தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. தத்து திட்டத்திற்கென மாவட்ட சமூக நல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர். புதிதாக உரிமம் பெற்ற நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 23 தத்து நிறுவனங்களின் சமூகப் பணியாளர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நிறுவனங்கள் **தத்து கொடுத்தலை** சட்ட பூர்வமாக்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

**2.8 ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்**

ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு குறைவாகப் பெறும் விதவைத் தாய்மார்களின் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின் மூலம் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்குக் கீழ்க்கண்டவாறு இலவச பாடபுத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகிறது.

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50/- |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125/- |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175/- |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300/- |
| +1 மற்றும் +2 வகுப்பு | ரூ.600/- |

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 குழந்தைகள் பயனடைகின்றனர்.

**2003–2004ஆம் நிதியாண்டிற்கு ரூ.10.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2003 ஏப்ரல் 25]

**2.9 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்.**

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள். பெரும்பாலும் அக்குழந்தைகளுக்குப் பின் பிறந்துள்ள மழலையர்களைப் பார்த்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவதாலும் அல்லது சமூக விரோதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதாலும், பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. அரசு இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 150 குழந்தைகள் காப்பகங்களுக்குக் காப்பகம் ஒன்றிற்கு ரூ.25,410/- வீதம் தொடர் செலவினமாக வழங்கி வருகிறது.

**2003-2004ஆம் ஆண்டிற்கு ரூ.52.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.10 திருமண நிதியுதவித் திட்டங்கள்**

தமிழ்நாடு அரசு பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் |
|---|---|---|
| 1. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டம் | ரூ.10,000 (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். |
| 2. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் | ரூ.10,000/- (கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | ஆண்டு வருமானம் ரூ12,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின வயது 20-30-க்குள இருத்தல் வேண்டும். |

[2003 ஏப்ரல் 25

| | | |
|---|---|---|
| 3. டாக்டர் தாமாம்பாள அம்மையார் நினைவு விதவை மறுமண நிதி உதவித் திட்டம் | ரூ.10,000/- (ரூ.7,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை). | மணப்பெண்ணின் வயது 20-30- க்குள் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு இல்லை. |
| 4. தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் | (அ) ரூ.20,000/- (ரூ.10,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.10,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | (அ)ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முற்பட்ட வகுப்பினரை அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும் வருமான வரம்பு இல்லை. |
| | (ஆ)ரூ.10,000/- (ரூ.7,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000/- கேட்பு வரைவோலை அல்லது காசோலை) | (ஆ) முற்பட்ட வகுப்பினர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை திருமணம் செய்தல். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும் வருமான வரம்பு இல்லை. |

**2003-2004 ஆம் ஆண்டிற்கு அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களுக்கென ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.11 சேவை இல்லங்கள்**

விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமில்லாத பெண்களுக்குப் பாதுபாப்பு தேவைப்படுகிறது. அத்தகைய பாதுகாப்பு அளித்திடவும் பெண்கள் மீண்டும் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவவும், தமிழக அரசு சேவை இல்லங்களை உருவாக்கியுள்ளது. இத்துறையின் மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய 6 இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்கள் பெண்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழில் கல்வி ஆகியவற்றை அளித்து வருகிறது. பெண்களுடன் அவர்களது குழந்தைகளும் இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவதுடன், அக்குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்து தரப்படுகிறது.



2003 ஏப்ரல் 25]

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப் பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடத்தில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு தலா ரூ.300/- வீதமும், சிறியவர்களுக்கு தலா ரூ.200-வீதமும் வழங்கப்படுகிறது. இச்சேவை பெரியவர்களுக்கு ரூ.400/- மதிப்பில் சீருடை வழங்கப்படுகிறது. இல்லச் சிறுவர்களுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் இவ்வில்லங்களில் பயிலும் மாணவிகளுக்குத் தேவையான பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோருக்கென தனியாக ஒரு பிரிவு தாம்பாம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பாடங்களில் பயிற்சி வழங்கும் செயலகப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. ஆண்டொன்றிற்கு 65 மாணவிகளுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது. ஓராண்டு பயிற்சிக்குப் பின் அவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வு எழுதத் தகுதியுடையவராகின்றனர். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி போன்றவை திருநெல்வேலி, கடலூர், சேலம், காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றது. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவை இல்ல மாணவிகளுக்கு நவீன தொழில் நுட்பத்தில் ஈடுபாடு கொள்ளும் வகையில் கணிப்பொறி பயிற்சி அளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கென ரூ.2.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.12 தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி**

அரசு நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும்,

[2003 ஏப்ரல் 25

சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திரிலும் இரண்டு சேவை இல்லங்கள் நடத்தபபட்டு வருகின்றன.

1. உள்ளுறைவோர்களுக்குப் பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கு ஊதியமும் மானியமாக வழங்கப்படுகிறது.

2. சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக ஸ்திரி சேவா மந்திரால் நடத்தப்படும் சேவை இல்லத்தில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தொழிற் பயிற்சி மற்றும் செயலக வகுப்பு நடத்தப்படுகின்றன.

3. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு நிலையில் குறுகிய காலப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகின்றது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கென இத்திட்டத்திற்கு ரூ. 12.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.13 பணிபுரியும் பெண்கள் விடுதிகள்**

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது சுற்றுப்புறத்தில் தங்குவதற்கு தக்கவாறு இடவசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே, இப்பெண்களுக்கு உதவும் வகையில், சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரிலும் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகிறது. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்ச வரம்பு ரூ. 10,000/- ஆகும். வாடகையாக மாதமொன்றுக்கு சென்னையில் ரூ. 200/-ம், இதர மாவட்டங்களில் ரூ. 150/- வீதமும் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதரப் பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

**2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ.34.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2003 ஏப்ரல் 25]

**2.14 வழிகாட்டி மையம்.**

வழிகாட்டி மையம் 1979 ஆம் ஆண்டு முதல் 20 மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் மகளிர் முன்னேற்றத்திற்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை பெண்களிடையே விளக்கியும், அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியும் வருவதாகும். மேலும் சுயமாக சிறுதொழில் புரிய வங்கிக் கடன் பெற அரசு மானியமின்றி பலதரப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரையும் செய்து வருகிறது. ஆகவே, இம்மையங்கள் அரசுக்கும், மக்களுக்கும் ஒரு பாலமாக அமைந்துள்ளது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 59.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.15 இலவச தையல் இயந்திரம் வழங்குதல்**

வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் வேலைவாய்ப்பினைப் பெருக்கும் நோக்கத்துடனும், அவர்கள் சமூகத்தில் நற்பாங்கான வாழ்க்கையினைத் தொடரவும், சத்யவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.16 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் மானியம்**

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காக உண்மையிலேயே செயல்படும் தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றன. குழந்தைகளின் விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை வாங்குவதற்கு ஒவ்வொரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கும் ரூ.5,000/- மானியமாக வழங்கப்படுகிறது. 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றன.

[2003 ஏப்ரல் 25

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.17 குடும்ப ஆலோசனை மையம்

குடும்பங்களில் ஏற்படும் கருந்து வேறுபாடுகள் காரணமாக பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கவும், தம்பதிகள் இருவரும் இணைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவும் குடும்ப ஆலோசனை மையம் ஒன்று உருவாக்கப்பட்டது. இம்மையம் வரதட்சணைக் கொடுமை, குடிப்பழக்கம் ஆகியவற்றை நீக்கவும், எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் வாயிலாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம், 6 குடும்ப ஆலோசனை மையங்கள் நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 5.04 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## 2.18 பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்.

(i) மகளிருக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலமாக மகளிருக்கான அதிகாரப் பகிர்வு சமூக, பொருளாதார ரீதியாக உறுதி செய்யப்படுகிறது. மகளிர் சமுதாயத்தின் உயர்வினைக் கூட்டுறவு முறையில் எய்துவதற்கும், இதன் வாயிலாக குறிப்பாக மகளிர், சமூக மற்றும் பொருளாதார அமைப்புகளின் நிர்வாகத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(ii) அரசின் மேற்கண்ட நோக்கத்தைச் செயல்படுத்தும் வகையில் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மகளிர் மட்டுமே அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். இந்த வகையில் 104 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளரின் கீழும் இயங்கி வருகின்றன. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும்



2003 ஏப்ரல் 25]

திட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொள்ளவும் ஈடுபடுத்தப்படுகின்றன.

| வ. எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தையல் கூட்டுறவுச் சங்கங்கள் | 78 | 40,500 |
| 2. | இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 25 | 1,631 |
| 3. | எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் | 17 | 959 |
| 4. | இதர சங்கங்கள் | 9 | 991 |
| | மொத்தம் .. | 129 | 44,081 |

78 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் சீருடை தைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு 2002-2003 ஆம் ஆண்டில் 1,20,21,267 எண்ணிக்கை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு 2,40,458 சீருடைகளும், பிற்பட்டோர் நலத் துறைக்கு 80,916 சீருடைகளும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 14,19,146 சீருடைகளும் மேற்கண்ட சங்கங்களின் அங்கத்தினர்கள் மூலம் தைத்து வழங்கப்பட்டுள்ளன.

25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், 116 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களிலும், 318 உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்—3-லும் உள்ள 6 மாதம் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் தேவையான அமிலேசு செயல்பாட்டுடன்கூடிய உயிர்ச்சத்துக்கள் சேர்க்கப்பட்ட இணை உணவினை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

[2003 ஏப்ரல் 25

17 எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணி மேற்கொள்வதன் மூலம் சங்க அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு அனைத்து மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகச் செலவிற்காக ரூ.96.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

அரசு, 44 தையல் பயிற்சி மையங்களையும் 5 உற்பத்தி நிலையங்களையும் செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்களில் ஆண்டொன்றுக்கு 985 மகளிர், பல்வேறு வகையான தொழிற் கல்வியினைப் பெற்று பயனடைகிறார்கள்.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.1.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மலைவாழ் மகளிர் பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் 2-ம், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, 4 தையற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் 65 மலைவாழ் மகளிர் பயிற்சி பெற்று பயனடைகின்றார்கள்.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.7.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினருக்கான குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் ரூ.7.09 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 4 தையற் பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டில் ரூ.10.83 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**2.19 முதியோர் இல்லங்கள்**

மாறி வரும் குடும்பச் சூழ்நிலை, பழக்கவழக்கங்கள் இவற்றின் காரணமாக கூட்டு குடும்பச் சூழ்நிலை மாறி வருகிறது. இதன் காரணமாக முதியோர்களின் நலனைக் காப்பதில் தேக்கம் ஏற்பட்டு



2003 ஏப்ரல் 25]

முதியோர்கள் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களின் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். முதியோர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு அரசு நிதியுதவி அளித்து வருகிறது. தற்போது 9 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முதியோர் இல்லம் நடத்துவதற்காக மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் 340 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர். இவற்றுள் பழைய 6 முதியோர் இல்லங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.250/- வீதமும், புதிய 3 முதியோர் இல்லங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.500/- வீதமும் மானியம் அளிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் மாவட்ட சமூக நல அலுவலர்களும், சமூக நல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அந்நிறுவனங்களுக்குச் சென்று இத்திட்டம் சரிவர செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்து வருகின்றனர்.

தமிழக அரசு, சமுதாயத்தில் உள்ள முதியோர்கள் பெருமையுடனும், மரியாதையுடனும் வாழ முதியோர்கள் மாநில கொள்கை ஒன்றினை தயார் செய்துள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினராக உள்ள குழந்தைகள், உடலாலும் மனதாலும் ஊனமுற்ற நபர்கள் மற்றும் முதியோர்களின் நல்வாழ்விற்காக சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதனால், தனியார் தொண்டு நிறுவனங்களால் அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், ஊனமுற்றோர்களுக்கான இல்லங்கள், ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள், ஆதரவற்ற தெருக் குழந்தைகளுக்கான இரவு பாதுகாப்பு விடுதிகள் முதலியவைகளை ஆரம்பிக்க அரசு ஊக்குவித்துள்ளது. மேலும், இத்திட்டத்தை இலாப நோக்கில்லாமல் செயல்படுத்த முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கவும் உத்தேசித்துள்ளது.

**2003-2004 ஆம் நிதியாண்டிற்கு ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**2.20 தமிழ்நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாடு சமூக நல வாரியம், தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக தொண்டு நிறுவனங்கள்

மூலம் சேவை அளிக்கும் நோக்கத்தில் 1954 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:-

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்பம், நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.

3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூக நல வாரியம் மாநில அரசிடமிருந்தும், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்தும் நிதியுதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், மகளிர் மற்றும் ஊனமுற்றோரின் நலனுக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காவும் பணியாற்றுகிறது. நிதியுதவி 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவிகூட வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் மூலம் 593 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1093 அலகுகளுக்கு (Units) ஏப்ரல் 2002 முதல் மார்ச் 2003 வரை ரூ.3.15 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.9.50 இலட்சம் 190 தன்னார்வ அலகுகளைக் கொண்ட 391 தொண்டு மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

போதை மருந்து பயன்படுத்துதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் வகையில் தொண்டு நிறுவனங்களுக்கும் அரசுத் துறையினருக்கும் ஒருங்கிணைப்பைத் தமிழ்நாடு சமூக நல வாரியம் ஏற்படுத்தி வருகிறது.

எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்கவும், பகல் நேர தங்கும் இல்லங்கள் அமைக்கவும், வாரியத்தால் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.21 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993-ல் பெண்களின் நலனுக்காகவும் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும்





தொடங்கப்பட்டது. 08-03-2002-ல் ஒரு ஓய்வு பெற்ற துணை வேந்தர் தலைவியாகவும் மற்றும் 9 பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்டும் திருத்தியமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து மனுக்கள் பெறப்படுகின்றன. கடந்த ஓர் ஆண்டில் மனுக்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. மனுக்கள் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும், பாதுகாப்பும் கிடைக்குமாறு மேல் நடவடிக்கை எடுக்க வேண்டப்படுகிறது. பல பெண்களுக்கு இதன் மூலம் உதவி கிடைத்துள்ளது.

கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் சென்ற ஆண்டில் நடத்தப்பட்டிருக்கின்றன:-

1. பெண் சிசுக்கொலை, கருக்கொலை தொடர்பான பொது விசாரணை.

2. சென்னை நகரில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக தேசிய மகளிர் ஆணையத்துடன் இணைந்து நடத்திய கலந்துரையாடல்.

3. வேலையிடங்களில் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பாக தேசிய மகளிர் ஆணையத்துடன் இணைந்து நடத்திய கலந்துரையாடல்.

வேலூர் பெண்கள் சிறப்பு சிறையைப் பார்வையிட்டு, பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் உள்ள பெண் சிறைக் கைதிகள் குறித்த விரிவான ஆய்வு நடத்துவதற்கான விவரம் கேட்கும் வினாப் பட்டியல் சிறைத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வறிக்கை, இந்தியாவிலேயே முதன் முறையாக தயாரிக்கப்படுகிறது.

**2003-2004ஆம் ஆண்டுக்கு ரூ.2.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.22 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

ஈ.வெ.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா ஆதரவற்ற மகளிர் திருமண உதவித் திட்டம்,

[2003 ஏப்ரல் 25

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், அன்னை சத்யா அரசு குழந்தைகள் காப்பகம், தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், சத்தியவாணிமுத்து அம்மையார் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகளில் 20.21 விழுக்காட்டிற்குக் குறையாமல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் 2003-2004ஆம் ஆண்டு நிதி மற்றும் செயல் பயன் அளிக்கப்படும்.

### 2003-2004-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சமூக நல இயக்ககத்திற்கு கணினி வாங்குதல் | 4.00 |
| 2. | சமூக நல இயக்குநர் அலுவலகத்தைப் புதுப்பித்தல் | 25.00 |
| 3. | பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கு 25 குழந்தைகள காப்பகங்கள் தொடங்குதல் | 6.54 |
| 4 | மதுரை மற்றும் தருமபுரியில் அனாதை இல்லக் கட்டடங்கள் கட்டுதல் | 10.00 |
| 5. | 10 அனாதை இல்லங்களுக்கு படிப்பெருக்கிக் கருவிகள் வாங்குதல் | 2.00 |
| 6. | மதுரை மாவட்டத்தில் புதிய சேவை இல்லம் தொடங்குதல் | 5.00 |
| 7. | தொண்டு நிறுவனங்கள் மூலம் 4 புதிய முதியோர் இல்லங்கள் தொடங்குதல் | 6.60 |
| 8. | சமூக நல இயக்குநரகத்தில் குழந்தைகளைத் தத்து எடுக்கும் பிரிவு ஏற்படுத்துதல் | 5.00 |
| 9. | அனாதை இல்லப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் | 4.00 |
| 10. | தாம்பரம் சேவை இல்லத்தில் ஆதரவற்ற பெண்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளித்தல் | 4.50 |



2003 ஏப்ரல் 25]

## அத்தியாயம் 3

## சத்துணவு

### 3.1 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

தமிழக அரசு குழந்தைகளின் உடல் நலத்தையும் அவர்கள் சத்துணவு பெறும் நிலைமையையும் நன்கு பாதுகாத்து, அவர்களின் ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1-7-1982 முதல் ஊரகப் பகுதியிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கும், 5 வயது முதல் 9 வயது முடிய உள்ள ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 15-9-1982 முதல் இத்திட்டம் நகர்ப்பகுதிகளில் அமல்படுத்தப்பட்டது. மேலும் இத்திட்டம் 15-9-1984 முதல் 10 வயது முதல் 15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 15-1-1983 முதல் ஓய்வூதியம் பெறும் முதியோர்களும் 07-12-1995 முதல் கருவுற்ற தாய்மார்களும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி அதன்மூலம்

1. குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச்சத்து குறைவினை அகற்றவும்
2. குழந்தைகளின் படிப்புத்திறன் விகிதத்தினை அதிகரிக்கவும்
3. பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பள்ளிக்குச் செல்லாமல் இடையில் அகல்வதைக் குறைக்கவும், ஒரு ஆற்றல் மிக்க ஊக்கியாக செயல்படுகிறது.

[2003 ஏப்ரல் 25

**2003-2004-ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | துறையின் பெயர் | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் * | உலக வங்கி உதவி பெறும் ஒ.கு.வ.தி-3 ** | உதிஷா |
|---|---|---|---|---|---|
| 1 | உலக வங்கி உதவிபெறும் ஒ.கு.வ.தி.-3 | 71.17 | 240.25 | 8.91 | 7.21 |
| 2 | ஊரக வளர்ச்சி இயக்குநரகம் | 191.63 | - | - | - |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 10.66 | - | - | - |
| 4 | நுகர் பொருள் ஆணையரகம் (அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை) | 129.56 | - | - | - |
| | **மொத்தம்** | **403.02** | **240.25** | **8.91** | **7.21** |

**மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.659.39 கோடி.**

*நிதி ஒதுக்கீடு மைய அரசு மற்றும் மாநில அரசு அளிக்கிறது.

**நிதி ஒதுக்கீடு உலக வங்கியிடம் பெறப்படுகிறது.



2003 ஏப்ரல் 25]

ஒவ்வொரு திட்டத்திலும் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயனடைவோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

**1. குழந்தைகள் நல மையங்கள்**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை: குழந்தைகள் — 6 முதல் 24 மாதம் வரை | குழந்தைகள் — 2 வயது முதல் 5 வயது வரை | கருவுற்ற தாய்மார்கள் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 10,625 (அங்கன்வாடி மையங்கள்) | 1,74,051 | 2,95,850 | 1,20,212 (தாய்மார்கள்) | 5,90,113 |
| 2. | உலக வங்கி உதவி பெறும் ஒகுவப-3 திட்டம் | 19,500 (சமுதாய ஊட்டச்சத்து மையங்கள் மற்றும் குழந்தைகள் நல மையங்கள்) | 2,95,182 (6 மாதம் முதல் 36 மாதம் வரை) | 5,42,045 (37 மாதம் முதல் 60 மாதம் வரை) | 48,284 (மு.உ.தொ. பெறுவோர்) 2,75,210 (தாய்மார்கள்) | 11,60,721 |
| 3. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகராட்சிப் பகுதி) | 514 குழந்தைகள் நல மையங்கள் | — | 18,852 | 2,708 (மு.உ.தொ. பெறுவோர்) | 21,560 |
| | **மொத்தம்** | **30,639** | **4,69,233** | **8,36,747** | **4,46,414** | **17,72,394** |

**2. பள்ளி சத்துணவு மையங்கள்.**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 39,036 | 60,29,035 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 2,082 | 4,75,607 |
| | **மொத்தம்** | **41,118** | **65,04,642** |

**மொத்த பயனாளிகள் எண்ணிக்கை 17,72,394+65,04,642=82,77,036.**

சத்துணவிற்குத் தேவையான உணவுப் பொருட்கள் பின்வருமாறு கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்களின் விவரம் | 2-5 வயது | வயது | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 5-9 | 10-15 | | |
| | | | 1-முதல் 5-ஆம் வகுப்பு வரை | 6-முதல் 8-ஆம் வகுப்பு வரை | 9- மற்றும் 10-ஆம் வகுப்பு | கருவுற்ற தாய்மார்கள் ஓய்தியம் பெறுவோர் |
| 1 | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120 கிராம் | 200 கிராம் |
| 2 | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4 | காய்கறி தாளிதம் மற்றும் எரிபொருள் | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா |

*காய்கறி 15 பைசா, தாளிதம் மற்றும் உப்பு 9 பைசா, எரிபொருள் 11 பைசா.

இணை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் சத்துமாவு விகிதம் பின்வருமாறு:

| ஊட்டச்சத்து நிலை | சத்துமாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6-24 மாதங்கள்) | குழந்தைகள் (25-36 மாதங்கள்) | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை* | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | .. |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | .. |

*ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) அனைவருக்கும் ஊட்டச்சத்து

*உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்-3 தேர்தெடுக்கப்பட்டோருக்கு ஊட்டச்சத்து (இயல்பான நிலை - வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்)



சத்துணவு மையத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படுகிறது. நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு 23 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்த உணவீட்டுச் செலவினம் 35 பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளதால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.20.98 கோடி ஆகும்.

மேலும், புரதச் சத்து மிகுந்ததாக ஒரு பயனாளிக்கு வாரத்தில் ஏதேனும் மூன்று நாட்கள், முறையே, ஒரு நாள் 20 கிராம் உருளைக் கிழங்கு, மற்றொரு நாள் 20 கிராம் முழுக் கொண்டைக் கடலை, பிறிதொரு நாள் 20 கிராம் முழு பச்சைப் பயறு ஆகியவற்றை சமைத்து, சத்துணவுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இதனால் ஒரு பயனாளிக்கு சத்துணவுடன் 8.54 கிராம் புரதச் சத்தும் 158.2 கலோரி சக்தியும் கூடுதலாக ஒவ்வொரு வாரமும் கிடைக்கிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை சீர்படுத்தி அதன் தரத்தை மேம்படுத்தி செவ்வனே வடிவமைத்து திருத்தியமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை மேம்படுத்தும்வகையில், அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுவரையில் சத்துணவு மையங்களைச் செப்பனிட ரூ.13 கோடி ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பு நிதியாண்டான 2003-2004-ல் சத்துணவு மையங்களைச் செப்பனிட மேலும் ரூ.12.10 கோடி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டில், சத்துணவு மையங்களுக்குத் தேவையான அலுமினியப் பாத்திரங்கள் வாங்குவதற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2002-2003ஆம் நிதியாண்டில் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவதற்கு ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 25

**பெண்களுக்கு வேலை வாய்ப்பு:**

இத்திட்டத்தின்மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகம் கிடைக்கின்றன. விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும், கீழே குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்கள் உள்ளனர். 500-க்கு மேற்பட்ட பயனாளிகள் உள்ள மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் நியமிக்கப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 | சத்துணவு அமைப்பாளர் | 1 |
| 2 | சமையலர் | 1 |
| 3 | உதவியாளர் | 1 |

### 3.2 ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு தேசிய திட்டத்தின் கீழ் இலவச அரிசி வழங்குதல்

மத்திய அரசு 15-8-1995 முதல் மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறையின்மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளி குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசி வருடத்தில் 10 மாதத்திற்கு அளித்து வருகிறது.

தமிழகத்தில் ஏற்கெனவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அளித்த சத்துணவுத் திட்டத்தில் உள்ளமைப்பு வசதிகள் உள்ளதால், இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, சமைத்து குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

### 3.3 கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் மாணவர்களின் வருகைக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு குழுவும், பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் நல மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட/ வட்டார/ மாநகராட்சி/நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு செயலாற்றி வருகின்றன. இக்குழுக்களில் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர்.



2003 ஏப்ரல் 25]

**உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப பணிகள் 3—வது திட்டம் மற்றும் பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்**

### 3.4 முன்னுரை

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டத்திற்குப்பின் வந்த திட்டமாகும். இத்திட்டம் மாநிலத்தில் 318 கிராம வட்டாரங்களில் 19,500 அங்கன்வாடி. மையங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் 116 நகர மற்றும் கிராம திட்டப் பகுதிகளில் 10,025 அங்கன்வாடி மையங்கள் மூலம் செயல்பட்டு வருகின்றது. அரசாணை எண் 147 சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 8-10-2002-ன்படி பொது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்தோடு இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இதே போன்று சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த 71த நகராட்சி குழந்தைகள் நல மையங்கள் தற்போது திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்-3-வது திட்டம் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றில் 2002-2003ஆம் ஆண்டு முதல் திருவண்ணாமலை, நாமக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படும் 204 நகராட்சி குழந்தை நல மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் 6-36 மாத வயதுள்ள குழந்தைகளிடையே ஏற்படும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கி, இயல்பு நிலையை உயர்த்துவது. கடந்த 2000 ஆம் ஆண்டு கணக்கின்படி, குறிப்பாக கிராமங்களில் 1000-க்கு 50 ஆக இருந்த சிசு மரண விகிதத்தைக் குறைப்பதுடன், குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் தற்போதைய நிலையை மேலும் குறைப்பதாகும்.

[2003 ஏப்ரல் 25

**குறிக்கோள்கள்:**

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்(பொது)—திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்:—

(அ) 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதாரம், சமூக, மன வளர்ச்சியினை மேம்படுத்தி, குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துதல்.

(ஆ) பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.

(இ) குடும்பத்தின் ஊட்டச்சத்து சுகாதார பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது, அதன்மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துதல்.

(ஈ) வாழ்க்கை சுழற்சி முறையிலான சத்துணவு பாதுகாப்பு திட்டத்தினை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள தகுதியான தாய்மார்கள், குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் முதியோர் ஆகியோருக்கு அளிப்பதன்மூலம் ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்றுவது.

**திட்டத்தின் பயனாளிகள்**

*0-3 வயது குழந்தைகள்

*3-6 வயது குழந்தைகள்

*கர்ப்பிணித் தாய்மார்கள்

*பாலூட்டும் தாய்மார்கள்

*வளர் இளம் பெண்கள்

*சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்



2003 ஏப்ரல் 25]

**அங்கன்வாடி மையத்தில் அளிக்கப்படும் திட்டப் பணிகள்**

* எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல்
* தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல்
* குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி
* ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
* சுகாதாரப் பணியாளர்கள் மூலம் (கிராம நல செவிலியர்/ மருத்துவ அலுவலர்) சுகாதாரப் பணிகள் அளிப்பது
* மேல் மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்

**திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள்**

* அங்கன்வாடி மையங்கள் மூலமாக திட்டப் பணிகளை செயல்படுத்துதல்
* தொடர்புள்ள துறைகளை இணைத்து ஊட்டச்சத்து, சுகாதாரப் பணிகளை ஒருங்கிணைத்து பயனாளிக்கு வழங்குதல்
* ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணியாளர்களை ஒருங்கிணைத்து திட்டப் பணிகளை செயல்படுத்துதல்
* சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து மேற்பார்வையாளர்களை ஒருங்கிணைத்து இத்திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல்
* வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், மாவட்ட அளவிலும் திட்டம் பற்றி ஒருங்கிணைந்து ஆய்வு செய்தல்
* பயிற்சி மற்றும் தகவல் தொடர்புப் பணிகள் மூலம் திட்டத்திற்கு உறுதுணை செய்தல்

**2003-2004 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்**

கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டு நிலையைக் குறைப்பதற்கு பதிலாக, ஊட்டச்சத்து குறைபாடு வராமல் தடுக்க திட்டச் செயல்பாட்டு வழிமுறைகளில் ஒரு முக்கிய மாற்றம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக வளர் இளம் பெண்களின்

ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துதல். இதன்மூலம் அவர்கள் திருமணமாகி, குழந்தை பெறும் நிலை வரும்போது சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடானது, தாய், சேய்க்கு ஏற்படா வண்ணம் தடுக்கப்படுகிறது.

பல்வேறு துறைகள் தனித்தனியே வழங்கும் பணிகளை ஒருமுகப்படுத்தி, சிறந்த ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி,

1. குழந்தைகளிடையே காணப்படும் குறைபாடுகளை ஆரம்பக் காலததிலேயே கண்டறிந்து அதற்குத் தக்க சிகிச்சை அளிக்கும் தொடர்பு மையங்களாக அங்கன்வாடி முன்பருவக் கல்வி மையங்கள் செயல்படும்.

2. ஏழை குடும்பங்களில் உள்ள குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தும் நோக்கோடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக வருமானமும் உணவுப் பாதுகாப்பு நிலையும் உயர பொருளாதார மேம்பாட்டுப் பணிகள் மேம்படுத்தப்படும்.

3. சுகாதாரத் துறையினருடன் ஒருங்கிணைந்து வளர் இளம் பெண்களின் நலத்தை மேம்படுத்தும் விதமாக இரும்புச் சத்து போலிக் அமில மாத்திரைகள், வயிற்றுப் பூச்சி நீக்க மாத்திரைகள் மற்றும் ரூபெல்லா தடுப்பூசி வழங்கப்படும்.

**3.5 உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் செயல்படும் முக்கிய பிரிவுகளின் திட்டப் பணிகள் பின்வருமாறு:—**

**(அ) ஊட்டச்சத்துப் பிரிவு:—**

இத்திட்டத்தின்மூலம், 6-36 மாத வயதுள்ள இளம் சிறார்கள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு ஊட்டச்சத்து மாவு வழங்கும்பொருட்டு மாநில வரவு-செலவு திட்டத்தின்கீழ், ரூ.37 கோடி அளவிற்கு செலவு மேற்கொள்ளப்படும்.

உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்திற்கு ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.86.95 கோடி உலக வங்கி நிதி உதவி அளித்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிற்கு பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:—



1. ஏற்கெனவே ரூ.4.15 கோடி செலவில், 159 குழநதைகள் வளர்சசி திட்ட அலுவலகம் கட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பணிகள் 2003-2004 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

2. இத்திட்டத்தின்கீழ் வரும் மாவட்டங்களில் உள்ள 19,500 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.3.90 கோடி செலவில் பாத்திரங்கள் வாங்குதல்.

3. இத்திட்ட மொத்த சேமிப்பு நிதியிலிருந்து ரூ.1.03 கோடி செலவில் 82 அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட உள்ளன.

**(ஆ) சுகாதாரப் பிரிவு**

இத்திட்டத்தில் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கான சுகாதாரப் பணிகள், பொதுச் சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகின்றது. 2003-2004 ஆம் ஆண்டிற்காக ரூ.7.42 கோடி கீழ்க்கண்ட பணிகளுக்காக செலவிடப்பட உள்ளது:—

*தாய்மார்களை எடை பார்க்கும் 5,200 கருவிகள் ரூ.24.96 இலட்சம் செலவில் அங்கன்வாடி மையங்களுக்கு வாங்கி வழங்குதல்.

*24 மாதம் முதல் 60 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு முத்தடுப்பு மருந்துகளும் 10 முதல் 15 வயது வரையிலான வளர் இளம் பெண்களுக்கான ரூபெல்லா நோய் தடுப்பு மருந்தும் வாங்கி (முன்னோடி திட்டமாக 5 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்) 5 மாவட்டங்களில் (தேனி, கடலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், வேலூர்) செயல்படுத்துவது.

*குழந்தைகளுக்கான வைட்டமின் 'ஏ' திரவம், இரும்புச்சத்து மாத்திரைகள், தாய், சேய் நல மருந்துகள் வாங்கி வழங்குவது.

*1,575 குழந்தை நேய கழிப்பிடங்களை கட்டி முடிப்பதற்காக 50 சதவிகித் தொகையை விடுவித்தல்.

*5,139 அங்கன்வாடி மையங்களில் பழுது நீக்கம் செய்தல்.

*தாய், சேய் சம்பந்தப்பட்ட சத்துணவு மற்றும் நல வாழ்வு பிரச்சினைகளை வாழ்க்கை சுழற்சி அணுகுமுறையில்

மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி நிலைகளில் மாநிலம் தழுவிய அளவில் பயிற்சி அளிப்பது.

### (இ) முறைப்படுத்தும் பிரிவு

கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுத்து, ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும்வகையில் சிறப்பு ஆய்வுகள் மேற்கொண்டு அதன்மூலம் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். 7-10-2002 ஆம் நாளிட்ட சமூக நலத் துறை அரசாணை எண் 146-ன்படி, எல்லா மாவட்டங்களிலும் குடும்ப விவரம் பற்றிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து பற்றாக்குறையுள்ள குழந்தைகள் உள்ள 1.26 இலட்சம் குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை இதன்மூலம் அறியப்பட்டுள்ளது. கிராம அளவிலான அக்குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்த 15 உறுப்பினர்களைக் கொண்டு கிராம செயல் குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கிராம அளவில் அங்கன்வாடி மையங்களில் அங்கன்வாடி பணியாளர்களால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை செம்மையாக செயல்பட கண்காணிப்பதோடு, மைய அளவில் பயனாளிகளை வரவழைத்தல் மற்றும் மையத்தைப் பழுதுபார்த்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்வார்கள். இக்குழுவானது மாதத்திற்கு ஒரு முறை கூடி, அக்கிராமத்தின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகளின் நிலையைப் பற்றி ஆராயும். இந்தக் கிராம அளவிலான செயற்குழுவானது தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த உறுப்பினர்களுக்குத் திட்டம்பற்றி பயிற்சி அளிப்பதற்காக ரூ.1.96 கோடி ஒதுக்கீடு செய்து பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

திட்டம் சார்ந்த பல்வேறு பொருள் குறித்து 13 வகையான ஆய்வுகள், 29 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2 மாவட்டத்திற்கு ஒரு பொருள் குறித்து ஆய்வு என்ற அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வின் முடிவைப் பொறுத்து தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்றுவதற்குத் தேவையான உத்திகள் மேற்கொள்ளப்படும். கடல் சார்ந்த மாவட்டங்கள் மற்றும் பழங்குடியினர் பகுதிகளின் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டை அறிவதற்காக கள ஆய்வு நிலையங்கள் நிறுவி, அவர்களின் சமூக நிலை தொடர்ந்து ஆய்வு செய்யப்படும்.





### (ஈ) நிர்வாகப் பிரிவு

1. திட்டப் பணிகளை செயல்படுத்துவதில் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கும்பொருட்டு சிறப்பான முறையில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய 1,005 நபர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகை ரூ.3 இலட்சம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. சென்னை, தரமணியில் தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் தற்சமயம் திட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலகம் மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், ஆண்டிற்கு ரூ.9.00 இலட்சம் அரசிற்கு வாடகை சேமிப்பாக ஏற்பட்டுள்ளது. சென்னை, தரமணியில் தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மைய வளாகத்தில் புதிய திட்ட அலுவலகக் கட்டடம் கட்ட உலக வங்கி ரூ.50.00 இலட்சம் செலவிற்கு நிதி உதவி அளித்துள்ளது.

### (உ) மக்கள் பங்கேற்பு மற்றும் தகவல் கல்வி தொடர்புப் பணிகள்

திட்டப் பணிகளை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும்வகையில் பல்வேறு தகவல் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊட்டச்சத்து பற்றாக்குறையைத் தடுத்து, தமிழகத்தை ஊட்டச்சத்து பற்றாக்குறை இல்லாத மாநிலமாக உருவாக்க தீவிர தகவல் கல்வித் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் திட்டப் பணிகளுக்கான தேவையுணர்வை ஏற்படுத்த பற்பல தகவல் தொடர்பு மற்றும் மக்கள் பங்கேற்பு பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, திட்டப் பணிகளை கேட்டுப் பெறும் நிலையை உருவாக்கி, பயனாளிகளிடையே நாம் எதிர்பார்க்கும் பழக்கவழக்கங்களில் நல்ல மாறுதல்களை ஏற்படுத்த முடியும். ஒரு இலட்சம் படிக்காத ஏழை எளிய பெண்களுக்கு எழுத்தறிவும், ஊட்டச்சத்து கல்வியும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியானது 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டிலும் தொடரும். தமிழகத்தில் சில மாவட்டங்களில் ஆங்காங்கே காணப்படும் பெண் சிசுக் கொலை மற்றும் இளம் வயது திருமணம் ஆகிய கொடுஞ்செயல்களைத் தடுக்க,

[2003 ஏப்ரல் 25

சேலம், நாமக்கல், மதுரை, தேனி, கரூர் போன்ற மாவட்டங்களில் பல வகையான விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிலும் புதுமணத் தம்பதியருக்கான பணியரங்கு நடத்தப்படும். இப்பணியரங்கின் மூலம் தாய் சேய் நலம், கர்ப்ப கால பாராமரிப்பு, குழந்தை நல பராமரிப்பு மற்றும் திட்டமிட்ட குடும்பம் போன்ற முக்கிய கருத்துகளைப்பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வட்டார அளவில் பணி புரிவோருக்காக சமுதாய பங்கேற்பு மற்றும் சமுதாயத்தை ஒருமுகப்படுத்துதல் போன்றவை பற்றிய பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின்மூலம் சமுதாயத்தின் ஒத்துழைப்பு உறுதி செய்யப்பட்டு, அதன்மூலம் அங்கன்வாடி மையம் செயல்பட தேவையான அனைத்து உதவிகளையும் பெறுவதோடு, சமுதாயத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோரை இத்திட்டப் பணிகளில் முழுமையாக பங்கெடுக்கச் செய்யலாம். மையத்தைப் பாராமரிக்கவும் மற்றும் அதன் வளர்ச்சியை உறுதி செய்யவும் வழிவகை செய்யப்படும். மேற்கூறிய அனைத்து தகவல், கல்வித் தொடர்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.1.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(எ) பயிற்சி பிரிவு**

**(1) உள்ளரங்கம் மற்றும் வெளியரங்க விளையாட்டுச் சாமான்கள் வாங்குதல்**

ஆரம்ப கால குழந்தை வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் முன்னேற்றம் சார்ந்த புது மாதிரியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அதன்படி குழந்தைகள் விளையாட உள்ளரங்கம் மற்றும் வெளியரங்க விளையாட்டுச் சாமான்கள் வாங்கி அங்கன்வாடி மையங்களுக்கு கொடுப்பதற்கு ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.2,000/- வீதம் மொத்தம் ரூ.58.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) பள்ளி முன்பருவக் கல்வி உபகரணங்கள்**

இத்திட்டத்தில் செயல்பட்டு வரும் 19,500 அங்கன்வாடி மையங்கள் ஒவ்வொன்றிற்கும் பள்ளி முன்பருவக் கல்வி உபகரணங்கள் அடங்கிய கருவிப்பெட்டி ரூ.97.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.



2003 ஏப்ரல் 25]

**(3) தரம் உயர சுதந்திர கருத்து வெளிப்பாடு (FREQI)**

திட்டப் பணிகளின் செயல்பாடுகளில் தரம் உயரும் வகையில் சுதந்திர கருத்துப் பரிமாற்றம் அவசியம். இதன்படி சுதந்திர கருத்து வெளிப்பாடு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், புதிய கருத்துக்களை பெறவும், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கூட்டங்கள் நடத்துவதற்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(4) கல்விச் சுற்றுலா**

களப்பணியாளர்களின் செயல்பாடுகளை மேம்படுத்தி அதன்மூலம் திட்டப் பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்தும் வகையில், அவர்கள் கல்விச் சுற்றுலா செல்ல வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்டத்திற்கு மாவட்டம், வட்டாரத்திற்கு வட்டாரம் கல்விச் சுற்றுலா சென்று திட்டப் பணிகள் சிறப்பாக செயல்படும் விதத்தைக் கண்டறிந்து அதைத் தங்கள் பகுதியில் செயல்படுத்துவதற்கு இக்கல்விச் சுற்றுலா வழி வகுக்கிறது. இதற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.6 உதிஷா பயிற்சி**

உலக வங்கி மைய அரசின் மூலம் அளிக்கும் நிதி ஒதுக்கீட்டில் உதிஷா பயிற்சியானது திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதிஷா பயிற்சி திட்டத்தின்படி 5 ஆண்டுகளுக்கு பயிற்சி அளிக்க ரூ.25.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.8.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் பயிற்சிகள் தற்சமயம் நடத்தப்பட்டு வருகின்றன:—

1. திட்டத்தில் பணி புரிவோர் மற்றும் சமுதாயத்தில் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கு ஊட்டச்சத்து கொள்கை பற்றிய பயிற்சி.
2. மேற்பார்வையாளர்களுக்கு குழந்தைகளுக்கு ஆரம்ப காலத்தில் ஏற்படும் ஊன குறைபாடுகளைக் கண்டறிவதற்கான பயிற்சி.
3. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துவதற்கான பயிற்சி.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் துறை சார்ந்த அலுவலர்களுக்கான / பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி.

[2003 ஏப்ரல் 25

5. வளர் இளம் பெண்களுக்கான பயிற்சி.

6. திட்டத்தில் பணிபுரிவோர் மற்றும் சமுதாயத்தில் உள்ளோருக்கான பாலின பாகுபாடு பற்றிய பயிற்சி.

7. மருத்துவ அலுவலர்களுக்கான வாழ்க்கை சுழற்சி முறை சார்ந்த நோய் பாதுகாப்பு பற்றிய பயிற்சி

உதிஷா திட்டத்தின் பல்வேறு வகையான பயிற்சிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.9.04 கோடி நிதி ஒதுக்கீடு வேண்டி மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**3.7 தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுதல்**

அங்கன்வாடி மையங்களின்மூலம் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்ற. அரசாணை (நிலை) எண்.55, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 8-4-2002-ல் ஆணையிடப்பட்டது. அங்கன்வாடி மையங்கள்மூலம் சிறார்கள், வளர் இளம் பெண்கள், மகளிர் மற்றும் குடும்பத்தினர் பயன்பெற முடியும். மாநிலம் முழுவதும், தகவல், கல்வி மற்றும் தொடர்பு முகாம்களை நடத்தி மக்கள் இயக்கத்தின் மூலம் குறிப்பாக, பஞ்சாயத்து உறுப்பினர் மற்றும் தலைவர்கள் மூலம், ஊட்டச்சத்துக் குறைவினை அடியோடு போக்கலாம். சுகாதாரம்/மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை ஒருங்கிணைத்து பயிற்சி அளிப்பதன்மூலம், அவர்களுடைய அனைத்து ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து, ஊட்டச்சத்து குறைபாடற்ற நிலையை அடைய இணைந்து செயலாற்ற இயலும். தகவல் மற்றும் பயிற்சிகளை ஒருங்கிணைக்க சுகாதாரத் துறை ஈடுபடுத்தப்படும். மேற்படி நோக்கத்தினை அடைய ஏனைய தொடர்புடைய துறைகளும் ஈடுபடுத்தப்படும். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் மற்றும் சுகாதாரத் துறைகளின் களப்பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தேவையான தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த அக்டோபர் 2002-ல் இத்திட்டத்தின் மிக முக்கியமான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள **தமிழ்நாட்டை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுவதற்கான** மாநில வரைவு கொள்கையை வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 25]

**3.8 பிரதம மந்திரியின் கிராமோதய யோஜனா திட்டம்**

மத்திய அரசின், பிரதம மந்திரியின் **கிராமோதய யோஜனா** திட்டம் கடந்த 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து துவங்கப்பட்டு, கிராம மக்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், இணை உணவு 6 மாத குழந்தைகள் முதல் 36 மாத குழந்தைகளுக்கு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் செயல்படும் 30,125 அங்கன்வாடி மையங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாத/சென்றடையாத குக்கிராமங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

**மேற்படி திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**3.9 ஊட்டச்சத்து குறைபாடுள்ள கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு 6 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம்**

திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊட்டச்சத்து குறைபாடுள்ள, 40 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மற்றும் 35 கிலோ எடைக்கும் குறைவாக உள்ள வளர் இளம் பெண்களுக்கு 6 கிலோ அரிசி மாதமொன்றிற்கு இலவசமாக வழங்கும் முன்னோடித் திட்டம் 25-11-2002 முதல் ரூ. 1.18 கோடி செலவில் மத்திய அரசின் வழிமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் 45,760 பயனாளிகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில், 32,656 பயனாளிகளும் பயன் பெறுகின்றனர். மேற்சொன்ன திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**3.10 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது)**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது) 1975 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. தற்போது இத்திட்டம் 116 திட்டங்களாக விரிவாக்கப்பட்டு, 67 திட்டங்கள் கிராமப்புறங்களிலும் 47 திட்டங்கள் நகர்ப்புறங்களிலும், 2 திட்டங்கள் மலைவாழ் பகுதிகளிலும் 10,625 அங்கன்வாடி மையங்கள் மூலமாக செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டம், மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பணியாளர் செலவினம் உட்பட அனைத்து செலவுகளும் மத்திய அரசின் நிதியின்மூலம் ஈடுகட்டப்படுகிறது. இணை உணவு தொடர்பான செலவினம், மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில், கீழ்க்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்குதல்.
* அங்கன்வாடி மையங்களுக்கு முன்பருவக் கல்விக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்.
* வளர் இளம் பெண்களுக்கான திட்டத்தில், இரத்த சோகையினை கட்டுப்படுத்த, இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், குடல் புழு நீக்க மாத்திரைகள் வழங்குதல், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல், குழந்தை பராமரிப்பில் விழிப்புணர்வு பயிற்சி அளித்தல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

சமுதாய பங்கேற்பினை மேம்படுத்த தொடர்பு முகாம்கள், கிராமம், வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுவதுடன், தேசிய நாட்களான குழந்தைகள் தினம், தேசிய ஊட்டச்சத்து வார விழா போன்ற விழாக்கள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் பணியாற்றும் களப்பணியாளர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும்பொருட்டு அங்கன்வாடி பணியாளர்களுக்கு மாநில அளவில் 26 விருதுகளும், தேசிய அளவில் ஒரு விருதும் வழங்கப்படுகின்றன.

### 3.11 கிஷோரி சக்தி யோஜனா (வளர் இளம் பெண்களுக்கான திட்டம்)

வளர் இளம் பெண்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி முகாம் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து கிஷோரி சக்தி யோஜனா என்ற புதிய திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் புதுக்கோட்டை, தர்மபுரி, மதுரை, விழுப்புரம், தஞ்சாவூர், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் ரூ.40.15



இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, சட்ட உரிமை, வீட்டைப் பராமரித்தல், குழந்தைகள் பராமரிப்பில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 11 முதல் 15 வயதுள்ள வளர் இளம் பெண்களுக்கு 2 நாள் பயிற்சி முகாம் மற்றும் 16 முதல் 18 வயது வரையுள்ள வளர் இளம் பெண்களுக்கு தொழிற் கல்வி பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டிலும், முந்தைய ஆண்டு நடைமுறைப்படுத்தியது போன்றே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காடு ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் வகுப்பினராக இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வழங்கு | 100.00 |

## அத்தியாயம்-4

### மகளிர் நல மேம்பாடு

4.1 தமிழக அரசால் மகளிரது சமூகம், பொருளாதாரம், மற்றும் அதிகாரப் பகிர்வு உயர்விற்காக 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் துவக்கப்பட்டது. இந்நிறுவனம், மகளிர் திட்டம், வாழ்க்கை பயிற்சித் திட்டம், தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம், மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையம் மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரி வாயு இணைப்புத் திட்டம் ஆகிய 5 திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

[2003 ஏப்ரல் 25

**4.2 மகளிர் திட்டம்**

(i) பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவன நிதியுதவியுடன் துவங்கப்பட்ட தமிழ் நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரீட்சார்த்த முறையில் தர்மபுரியில் துவங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டு முதல் சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கும், அதனைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டு மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. 1995-96ஆம் ஆண்டு முதலாக இத்திட்டம் மிகவும் சிறப்பாகவும் பயனுள்ளவகையிலும் செயல்படுத்தப்பட்டதால், மாநில வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இது கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து, தற்போது அனைத்து ஊரக மற்றும் சென்னை நகரம் உட்பட அனைத்து நகர்ப்புற பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இத்திட்டம் "பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்" என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவற்றின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு முதற்கொண்டு இத்திட்டம் நிலைத்த தன்மையை அடையவும் மற்றும் குடியிருப்புகள் மற்றும் நகர்ப்புறத்திலும் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்கள் எண்ணிக்கை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 2003ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை, கிராமப்புறங்களில் 1,01,883 சுய உதவிக் குழுக்கள் (17,42,414 உறுப்பினர்கள்) மற்றும் நகர்பபுறங்களில் 24,223 சுய உதவிக் குழுக்கள் (4,07,779 உறுப்பினர்கள்) ஆக மொத்தம் 1,26,106 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 21,50,193 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சுய உதவிக் குழுக்கள் இதுவரை ரூ.288 கோடி சேமிப்பு செய்துள்ளது.

கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்காக மகளிர் திட்டமும், ஊரக வளர்ச்சித் துறையின் பொன் விழா கிராமப்புற சுய வேலை வாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 25]

இதேபோன்று நகர்ப்புற சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் மகளிர் திட்டமும் பொன்விழா நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டமும் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வசதி, வங்கிகள் மூலம் அதிகரித்துள்ளது. மகளிர் திட்ட வரைமுறைப்படி, வணிக வங்கிகளில் மட்டுமல்லாது, தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் சுய உதவிக் குழுக்கள் கணக்குகள் தொடங்கி, கடன் பெற்று வருகின்றன.

தற்காலத்தில், பெண்கள் தங்களின் பலம், குடும்பத்தின் நிதி ஆதாரம் மற்றும் அவற்றைச் சமாளிக்கும் திறமை ஆகியவற்றை நன்கு அறிந்தவர்களாக உள்ளனர். மேலும் வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, குழு மற்றும் மகளிருடையதாகும். ஆகையால் எந்தத் தொழில்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதையும், பெறும் கடனின் அளவையும் குழு உறுப்பினர்களே நல்ல முறையில் தீர்மானிப்பர். திட்ட அமலாக்க அலுவலகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆலோசகர்களாகவும் வழி நடத்துனர்களாகவும் மட்டுமே செயல்படுவர். முடிவு எடுக்கும் உரிமை குழுக்களிடமே விடப்படும்.

ஒரு சுய உதவிக் குழு கடன் பெறத் தகுதியுடையதாக இருந்தால், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுத் தரப்படுகிறது. 31-03-2003 நிலவரப்படி, வேளாண்மை, தோட்டக் கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, குடிசை மற்றும் கிராமத் தொழில் மற்றும் இதர சிறிய தொழில்கள் மேற்கொள்ள 79,675 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு ரூ.402.86 கோடி வங்கிக் கடன் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளில், 35 இலட்சம் மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைக்க தமிழ்நாடு அரசு ஆதரவும் ஊக்கமும் அளிக்கும். 2003-2004ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் பயிற்சியைத் தொடர்ந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களின் நன்மைக்காக வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும், அவர்கள் திறம்பட வாழ்க்கையை நடத்தவும் 2003-2004ஆம் ஆண்டிற்கு மகளிர் திட்டத்திற்காக ரூ.22.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2003-2004ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:**

* பழங்குடியினர் மற்றும் மலைவாழ் இன மகளிர், சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையவும், வன்கொடுமைகளில் இருந்து பாதுகாக்கப்படவும், சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்.

* சேமிப்புகூட செய்ய இயலாத ஏழ்மையிலுள்ள மகளிருக்கு, அவர்கள் பயன்பெறும் வகையில் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்.

* சுய உதவிக் குழுக்கள் மூலமாகக் கிராமங்களில் உள்ள சில தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சமுதாய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

**(2) 25 ஆயிரம் புதிய குழுக்களை 2003-2004 ஆம் ஆண்டில் உருவாக்குதல்**

இந்த ஆண்டில் 5 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு, 25 ஆயிரம் புதிய குழுக்கள் அமைக்கப்படும். இப்புதிய குழுக்கள், நகர்ப்புறங்களிலும், பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளிலும், மீனவப் பெண்கள் வசிக்கும் இடங்களிலும் அமைக்கப்படும்.

**(3) சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக்காக ஆண்டு செயல் திட்டம் தயாரித்தல்**

சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் விற்பனையில் சந்திக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, விற்பனை வாய்ப்பு இருந்தும் போதிய சந்தைத் தொடர்புகள் இல்லாதது புலனாகிறது. மேலும், பெண்கள் அதிக வருவாய் ஈட்டிட, செய்யும் தொழில்களை விரிவுபடுத்திட அவர்களுக்குத் தகவல் நுட்ப வசதிகள் கிடைப்பதில்லை இதனைச் சரிசெய்ய, இந்த அரசு சுய உதவிக் குழுக்களுக்காக மாவட்டந்தோறும், மாவட்டத்தின் ஆதாரங்களின் அடிப்படையில், மாதிரித் திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கும். தொழில் செய்யும் குழு உறுப்பினர்கள் அதிக வருமானம் ஈட்டிட சந்தை ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறது. இதனை நடைமுறைப்படுத்த, இந்த ஆண்டு 'ஒரு செயல்முறைத் திட்டம் தயாரிக்கப்படும். ஆரம்ப நாட்களில் இத்திட்டத்திற்கு ஆதரவும், வழிகாட்டுதலும் வழங்கப்படும். காலப்போக்கில் சுய உதவிக் குழுக்கள் தாமாகவே தாங்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்யக் கற்றுக்கொள்வார்கள்.





**(4) தரிசு நில மேம்பாடு மற்றும் நீர்வள ஆதாரங்களை வளப்படுத்துதல்**

உணவு உற்பத்தியை மேம்படுத்த மற்றும் விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்த அரசு தரிசு நிலங்கள் மேம்பாட்டுத் திட்டம், நீர் வளம் மற்றும் மண் வளம் அதிகரிக்கும் திட்டம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நடப்பு ஆண்டில் குறைந்தபட்சம் ஒரு வட்டாரத்தில் ஒரு பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பிற்கு/சுய உதவிக் குழுவிற்கு தரிசு நிலங்களை வழங்க பிற அரசு நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒருங்கிணைந்து செயல்படும். தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், நபார்டு நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் நிலங்களைச் செப்பனிட பாடுபடும்.

**(5) தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் (TAP) மற்றும் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டத்துடன் (TANWA) ஒருங்கிணைந்து செயல்படுதல்**

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் ஆகிய இவ்விரு திட்டங்கள், உள்ளூர் மக்களை, தரம் குன்றிய காடுகளில் மறு உற்பத்தி மற்றும் பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்காகவும், தொடரும் பயன்களைப் பங்கிடு செய்து கொள்வதற்கும் வழிவகுக்கிறது. தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் நிர்வாகப் பகுதியில் உள்ள தரம் குன்றிய காடுகள், அரசு நிலங்கள் மற்றும் சமுதாய நிலங்கள் ஆகியவற்றில் விளையும் பயிர்களை கிராம வனக் குழு உறுப்பினர்களுக்குப் பங்கீடு செய்தல் கூட்டு நிர்வாகத் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இதுவரை இயங்கி வரும் தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டக் குழுக்கள் மகளிர் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளுடன் இணைக்கப்படும். இதன்மூலம் வன வளர்ப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டக் குழுக்கள் தொழில் முனைவோர் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, வங்கிக் கடன் மற்றும் சந்தை முறை ஆகியவற்றால் பயன் பெறுவர். வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் குழுக்களுக்கு தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

**(6) மகளிருக்கு கல்வியறிவு**

மூன்று இலட்சம் சுய உதவிக் குழு மகளிருக்கு இந்த ஆண்டு எழுத்தறிவு அளிக்கப்படும். இது உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3 மற்றும் மரபு சாரா கல்வி இயக்ககத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். இந்நிறுவனம் படித்த சுய உதவிக் குழு உறுப்பினரை முழு எழுத்தறிவுத் திட்டத்தின்கீழ் பயிற்சியாளராக நியமனம் செய்யப்படுவதைக் கண்காணிக்கும்.

**(7) சுய உதவிக் குழுக்கள் மூலம் கள்ளச்சாராயம் ஒழிப்பு.**

படித்தவர்கள் மற்றும் நடுத்தரக் குடும்பங்களில் வசிக்கும் பெண்கள் இன்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகளைச் சந்தித்து வருகின்றனர். தமிழநாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்படும் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்களின் நிலையை ஆராயும்போது, அவர்களின் வருமானம் அதிகரித்தபோதிலும், அவர்கள் தொடர்ந்து ஏழ்மை நிலையில் இருப்பதற்கு அவர்கள் குடும்பத்தினருடைய குடிப்பழக்கமே முக்கியக் காரணமாக அமைகிறது. இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியபோதிலும் குடிகாரக் கணவர்களால் பெண்கள் சித்ரவதைப்படுவது கவலைக்குரியதாக இருக்கிறது. சுய உதவிக் குழுக்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் சாராய ஒழிப்புக்கு எதிரான உறுதிமொழியை எடுப்பதால், காலப்போக்கில் அவ்வுறுதிமொழிக்கு அவர்கள் கட்டுப்படுகின்றனர். சில கிராமங்களில் அனைத்து சுய உதவிக் குழு பெண்கள் ஒன்றுசேர்ந்து கள்ளச் சாராயத்தினை ஒழித்துள்ளனர். ஆகையால் சுய உதவிக் குழுப் பெண்களை "காவலர்களின் நண்பர்களாக" நியமித்து அதன்மூலம் கள்ளச்சாராயம் ஒழிபபு மறறும் அதனால் ஏற்படும் கொடுமைகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4.3 தொழில் முனைவோர் பயிற்சி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொழில் முனைவோர் பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து 5 ஆண்டுகளில் (2001–2006 வரை) 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார்கள். தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மட்டும் 20,373 பெண்களுக்குப் பயிற்சி அளித்து, தாட்கோ, ஊரக வளர்ச்சி முகமை, குடிசைப் பகுதி மாற்று





வாரியம், வேளாண் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை, பட்டுப் புழு வளர்ச்சித் துறை ஆகிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து மொத்தம் 31-03-2003 முடிய 1,25,755 பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளித்துள்ளது. இத்திட்டத்தினை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் முன்னோடி நிறுவனமான மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இந்த ஆண்டில் (2003-2004) ரூ. 1.67 கோடி செலவில் 20,000 மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஏனைய நிறுவனங்களின் மூலம் 1,05,000 மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

**4.4 வாழ்க்கைத் தொழில் பயிற்சி**

வாழ்க்கைத் தொழில் பயிற்சியை மகளிர் திட்டத்துடன் ஒருங்கிணைத்து சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளித்தல். மத்திய அரசு செயல்படுத்தும் நொராடு/ஸ்டெப் திட்டங்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு அதன் உதவியுடன் சுய உதவிக் குழுவில் உள்ள மகளிருக்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு, சுய தொழில் தொடங்க வழி செய்யப்படும். இதன் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 1 கோடி நிதியில் 50 ஆயிரம் மகளிர் பயன் பெறுவர்.

**4.5 தேனி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கான முழுமையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் பல்வேறு அரசு நிறுவனங்களின் திட்டங்களை ஒருங்கிணைத்து ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ளார்கள். தேனி மாவட்டத்தில் ரூ. 1.79 கோடியிலும், பொம்பலூர் மாவட்டத்தில் ரூ. 2.09 கோடியிலும் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் மூலம் தேனி மாவட்டத்தில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் 84,912 குடும்பங்களும், பெரம்பலூர் மாவட்டத்தில் 81,328 குடும்பங்களும் மேம்பாடு அடைய ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள தகுதியுடைய அனைத்துக் குழுக்களுக்கும் கடன் வசதி பெற்றுத் தருதல், தொழில் முனைவோர் பயிற்சி, தொழிற் பயிற்சி, தொழில் மேம்பாட்டுப் பயிற்சி, சுகாதாரம் மற்றும் சத்துணவுப் பயிற்சி, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் கிராமப்புற செவிலியர்கள் மூலம் சத்துணவு குறைபாடில்லாத மாவட்டங்களாக உருவாக்குவதற்கான பயிற்சி, சுய உதவிக் குழு

உறுப்பினர்களுக்கு எழுத்தறிவுப் பயிற்சி ஆகியவை இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

### 4.6 மாவட்ட அளவிலான பயிற்சி மற்றும் விற்பனை மையங்கள் அமைத்தல்

தகவல் தொழில்நுட்பங்களில் சுய உதவிக் குழுப் பெண்களை ஈடுபடுத்த, பங்குபெறச் செய்ய நடப்பு ஆண்டான 2003-2004-ல் 6 இணையதள வசதியுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப மையங்கள் ரூ. 7.5 இலட்சம் செலவில் நிறுவப்படும். அந்தந்த இடங்களில் உள்ள சுய உதவிக் குழு அல்லது குழுக் கூட்டமைப்பு இதனை நிர்வாகம் செய்யும்.

### 4.7 புதுமணத் தம்பதியினருக்கு இலவச எரிவாயு இணைப்பு அளித்தல்

ஏழ்மை நிலையில் உள்ள மகளிர் வீட்டில் மாசு ஏற்படுவதைத் தவிர்க்கவும் மற்றும் வேலைப்பளுவைக் குறைக்கவும் அவர்களுக்கு இலவச எரிவாயுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டான 2003-2004-ல ரூ. 50 இலட்சம் செலவில் 5,000 பெண்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும் வகையில் அதிக முனைப்புடன் செயல்படுத்தப்படும். இதுவரை இத்திட்டத்தின் மூலம் ரூ. 19.32 இலட்சம் செலவில் 2,362 மகளிர் பயன அடைந்துள்ளனர்.

### 4.8 மகளிருக்கான அரசின் மாநிலக் கொள்கை

இந்த அரசு மகளிருக்கான மாநிலக் கொள்கையினை நற்பயன் அளிக்கத்தக்க வகையில் செயல்படுத்தும். இதனை அனைத்துத் துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளும் அமல்படுத்தும். இதன்மூலம் பெண்கள் தங்கள் பாலினப் பாகுபாடுகளைத் தகர்த்து, சரிநிகர் நிலையை அடைந்து, சுயமாக திறம்பட முடிவெடுக்க வழிவகுக்கும். இதன் மூலம் பெண்களின் வாழ்க்கை நிலை உயரும்.

மகளிர் மேம்பாட்டு அறிக்கை ஆண்டுதோறும் தயாரிக்கப்படும். இதில், மகளிர் மேம்பாட்டு நிலை மற்றும் பெண்கள் உரிமைக்கான குறியீடுகள் வரையறுக்கப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்படும். மேலும் அரசாங்கத்தில் பெண்களுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளும் மதிப்பீடு செய்யப்படும்.



### 4.9 சமூக நலத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் பணிபுரிபவர்களுக்குப் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இயங்கும் அரசு சாரா தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் சமூக நலத் துறை ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கும். இப்பயிற்சியின் மூலம் அவர்களுடைய திறன் வளர்ப்பு மற்றும் மகளிர் நல நிறுவனத்தினுடைய செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படும். இதன்மூலம் இரு நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட உதவும்.

### 4.10 பஞ்சாயத்து அளவிலான குழுக் கூட்டமைப்பு உருவாக்குதல்

2003-2004 ஆம் ஆண்டுக்குள் 12,619 ஊராட்சிகளில் குழுக் கூட்டமைப்புகள் உருவாக்கப்படும். சுய உதவிக் குழுக்கள் நிலையான தன்மை அடைவதற்கு குழுக் கூட்டமைப்பு வழிவகுக்கும். இதுவரை 7 ஆயிரம் குழுக் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குழுக் கூட்டமைப்புகள் இந்த ஆண்டு உருவாக்கப்படும். மேலும் நகர்ப்புறங்களிலும் குழுக் கூட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

மகளிர் மன்றங்கள்/மாதர் சங்கங்கள் சுய உதவிக் குழுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

### 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1 | வாழ்க்கைத் திறன் மற்றும் தொழிற் பயிற்சித் திட்டம் | 100.00 |
| 2 | 25,000 சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 87.50 |
| 3 | தேனி மாவட்டத்தில் முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டம் | 55.30 |

[2003 ஏப்ரல் 25

## அத்தியாயம் 5

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

### 5.1 ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம்

ஊனமுற்றோருக்கான நல்வாழ்விற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மாநில அரசால் கடந்த 1992-93-ல் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ன்கீழ் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்துப் பிரிவு மக்களின் நல்வாழ்விற்குப் பொறுப்பேற்றிருப்பதே ஒரு நல்லரசின் கடமையாகும். அரசின் உதவிக்கரம் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களையும் ஊனமுற்றோரையும் சென்றடைதல் வேண்டும். பல்வேறு நவீனத் திட்டங்கள் பொதுவாக இந்நோக்கத்தைச் சார்ந்தே உள்ளன.

ஊனமுற்றோருக்கான அரசின் கொள்கை, ஊனத்தைத் தடுத்தல், உரிய நோத்தில் அவர்களுக்கு உதவுதல் என்னும் நோக்கத்துடனும், சாதாரண மனிதர்களைப் போல அவர்களும் சமுதாயத்திலும் குடும்பத்திலும் வாழ்க்கை நடத்த பிரதானமாக வகுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த கொள்கை, ஊனத்தை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தேவையான மருத்துவ வசதி மற்றும் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக அளவில் அவர்களைச் சுயசார்பு குடிமக்களாக முன்னேற்றி, சமுதாயத்தில் அவர்களையும் மற்றவர்களோடு ஒன்றிணைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் அரசு, தொழில் முனைவோர், தயாள மனம் கொண்டோர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்துச் சமுதாயத்தினருக்கும் ஒருங்கிணைந்த பொறுப்புணர்ச்சி உண்டு.

மேற்காணும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் பின்வரும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

* ஊனமுற்றோர் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சிரமமின்றி சென்று வர வழிவகை செய்தல், அவர்கள் உடல் தகுதிக்கு ஏற்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் உட்பட ஊனத்தின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றைக் கண்டறிதல், ஊனத்தின் காரணத்தை ஆரம்பத்திலேயே



2003 ஏப்ரல் 25]

கண்டுபிடித்து நிவர்த்தி செய்தல், அதற்கான தடுப்பு நடவடிக்கையாக போலியோ, அம்மை, ருபெல்லா, பொன்னுக்குவீங்கி போன்ற நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி போடுதல்.

மேலும், ஒவ்வொரு ஊனமுற்ற குழந்தையும் இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறவும், ஊனத்தின் அளவுக்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ அல்லது ஒருங்கிணைந்த கல்வியோ பெறவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

* ஊனமுற்றோரின் தகுதி, தேவை, அளவுக்கேற்ப அவர்களைச் சாதாரணமானவர்களோடு ஒன்றிணைந்து வாழும் அளவுக்கு உயர்த்துதல்.
* ஊனமுற்றோரின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்க உரிய ஆசிரியர் பயிற்சி மையங்கள் அமைத்தல்.
* ஊனமுற்றோர்களுக்கு உதவிடும் வகையில் கல்வி உதவித் தொகை, இலவசப் பயணச் சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதி ஆகியவற்றை அளித்து உயர் கல்வி பெற தேவையான உதவிகள் செய்தல்.
* ஊனமுற்றோருக்கான உரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய நிறுவனத்தில் பயிற்சி அளிக்க பயிற்சி மையங்களை நடத்துதல்.
* இவர்கள் செய்யும் தொழிலுக்கேற்ற தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
* சுயதொழில் செய்திட கடன் பெறும் வகையில் வங்கி மற்றும் இதர நிறுவனங்களின் மூலமாக உதவிடல்.
* அனைத்து பொதுக் கட்டடங்களிலும் ஊனமுற்றோருக்கு கட்டட அமைப்பில் தடையற்ற சூழலை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு ஏற்படும் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

[2003 ஏப்ரல் 25

* சாதாரணமானவர்களைப் போல ஊனமுற்றவர்களும் சமூக, கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும்வண்ணம் வழிவகைகள் செய்தல்.

### 5.2 ஊனமுற்றோருக்கான சட்டம், 1995-ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோருக்கு சமவாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் சமுதாயத்தினரோடு இணைந்து அவர்கள் முழுவதுமாகப் பங்குபெறும் வகையில் கடந்த 1995-ல் ஊனமுற்றோருக்கான சட்டம் இயற்றப்பட்டது. தமிழ்நாட்டில் இச்சட்டம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்கக இயக்குநரை ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமித்து துறைத் தலைமைப் பதவியோடு இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 5.3 மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை

தேசிய மாதிரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் மொத்த மக்கட்தொகையில் 1.9 சதவிகிதம் ஊனமுற்றவர்கள். 1991ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கட்தொகையின் 1.9 சதவிகிதம் என்பது 10,61,320 பேர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் கடந்த 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஊனமுற்ற மக்கட்தொகைக் கணக்கெடுக்கப்பட்டு அதன் விவரம் எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.4 ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்குச் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:



2003 ஏப்ரல் 25]

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 5 | — | 27 |
| 2 | அ) பேச்சுத்திறன் குறைந்து செவித்திறன் இழந்தோர் பள்ளி | 10 | 20 | 39 | 2 | 73 |
| | ஆ) முன் பருவப் பள்ளி | 2 | — | — | — | — |
| 3 | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 78 | — | 91 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 14 | 41 | — | 56 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | — | 1 | — | — | 1 |
| | மொத்தம் | 25 | 58 | 163 | 2 | 248 |

அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித்திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கடலூர் | மதுரை | சென்னை (தாம்பரம்) |
| கடலூர் | தருமபுரி | | |
| தருமபுரி | ஈரோடு | | |
| மதுரை | காஞ்சிபுரம் | | |
| நாகர்கோவில் | தாம்பரம் | | |
| பூவிருந்தவல்லி | உதகமண்டலம் | | |

[2003 ஏப்ரல் 25

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | | |
| சேலம் | சேலம் | | |
| சிவகங்கை | தஞ்சாவூர் | | |
| தஞ்சாவூர் | விருதுநகர் | | |
| திருச்சிராப்பள்ளி | இராமநாதபுரம் (முன் பருவப் பள்ளி மட்டும்) | | |

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன:

(அ) இலவசக் கல்வி, உணவு மற்றும் உறைவிடம்

(ஆ) ஆண்டிற்கு இரண்டு இணை இலவசச் சீருடை

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிப் பிரிவுகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், வேலூர் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் உள்ள அரசு அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும் கோயம்புத்தூரில் உள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

**5.5 ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை**

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்கு படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்திட கீழ்க்கண்டவாறு வழிவகை செய்யப்பட்டுள்ளது:—

(அ) 1-5 ஆம் வகுப்பு வரை :ரூ.25/-(மாதம் ஒன்றுக்கு) (10 மாதம்)

(ஆ) 6-8 ஆம் வகுப்பு வரை :ரூ.75/-(மாதம் ஒன்றுக்கு) (10 மாதம்)

(இ) 9-12 ஆம் வகுப்பு வரை :ரூ.110/-(மாதம் ஒன்றுக்கு) (10 மாதம்)



2003 ஏப்ரல் 25]

(ஈ) பட்டப் படிப்பு :ரூ.150/-(மாதம் ஒன்றுக்கு) (10 மாதம்)

(உ) தொழில் மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு :ரூ.195/-(மாதம் ஒன்றுக்கு) (10 மாதம்)

**2003-2004-ல் இதற்கென ரூ.92.45 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**5.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இதற்கு உதவிபுரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.30/- வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடையும் 200 பார்வையற்ற மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
4. புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

**5.7 அரசு மண்டல பிரெய்லி அச்சகம்**

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளி, பூவிருந்தவல்லியில் இயங்கிவரும் மண்டல பிரெய்லி அச்சகம் நவீனமயமாக்கப்பட்டு இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இந்த இரண்டு அலகுகளும் கடந்த 4-8-2001 முதல் இயங்கி வருகின்றன.

[2003 ஏப்ரல் 25

**2003-2004ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.9.94 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.8 சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரத்தியேகப் பயிற்சி தேவைப்படுகிறது. இந்தச் சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள் கீழ்வருமாறு:-

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை, | பார்வையற்றோருக்கு போதிக்கும் இளநிலைப் பட்டயம். | 20 |
| 2 | பாலவிகார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம் சென்னை. | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிக்கும் இளநிலை/முதுநிலைப் பட்டயம். | 25 |
| 3 | சிறுமலர் காதுகேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை. | காதுகேளாதோருக்கு போதிக்கும் இளநிலை/ முதுநிலைப் பட்டயம் | 50 |

### 5.9 ஊனமுற்றோருக்கான பயிற்சி

பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்குக் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)
3. வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (ஓராண்டு காலம்)

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவுடன் இரண்டு இணை சீருடைகளும் வழங்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 25]

கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பேசும் திறன் இழந்து, காது கேளாத 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 5.10 நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம்

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தற்போது கிண்டி தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. இந்த உற்பத்திக் கூடத்தில் ஆண்டுதோறும் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**2003-2004ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.10.96 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது**

### 5.11 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு இவர்களுக்கு சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் தங்கிப் பயனடைந்து வருகிறார்கள்.

### 5.12 ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் மூன்று சதவீதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவீதம் கை, கால்

[2003 ஏப்ரல் 25

ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத பேசும் திறனற்றவர்களுக்கு இரண்டு சதவீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.13 வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை**

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது:

**(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் பின்வருமாறு:**

1. பட்டதாரிகள் முதுநிலைப் பட்டதாரிகள் ரூ.300/- (மாதம் ஒன்றிற்கு)
2. புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/ பட்டப் படிப்பிற்குகீழ் ரூ.250/- (மாதம் ஒன்றிற்கு)
3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ் ரூ.200/- (மாதம் ஒன்றிற்கு)

**(ஆ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.**

**(இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்த அளவு ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.**

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின்கீழ் 1,200 பார்வையற்ற நபர்கள் பயனடைகிறார்கள்.

**2003–2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.30.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.14 சுய வேலை வாய்ப்பு**

ஊனமுற்றோருக்கு உதவும்பொருட்டு அவர்கள் சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக்கொள்ளவும், பெட்டிக் கடை அமைத்துக்கொள்ளவும் இத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. ரூ.2,000/- அல்லது மொத்தக்



2003 ஏப்ரல் 25]

கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ, அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 2003-2004-ல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 1,000 பேர்கள் பயனடையும் வண்ணம் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோருக்கான சுய வேலைவாய்ப்புக்கு மேலும் உந்துதல் அளிக்கும்பொருட்டு, தேசிய ஊனமுற்றோர் நிதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெறப்படும் கடன்களுக்கு அரசு உத்ரவாதம் அளித்துள்ளது.

**5.15 ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், கருப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள், பிரெய்லி கை கடிகாரங்கள், சூரிய ஒளியினால் இயங்கும் பேட்டரிகள் வழங்கப்படுகின்றன.

**5.16 ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கான சலுகைகள்**

ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகின்றன:—

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி. | பயனாளிகள் எண்ணிக்கை. | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம். | 100 | 10.00 |
| 2. | ஒரு கை அல்லது கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவர்களுக்கான சலுகைகள். | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம். | 14.5 | 10.15 |
| 3. | காது கேளாத வாய் பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கு சலுகைகள். | 1. திருமணச் செலவிற்கு ரொக்க தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7,000/-க்கு தேசிய சேமிப்பு பத்திரம். | 14.5 | 10.15 |

[2003 ஏப்ரல் 25

**5.17 உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்**

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக்கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவரும், கால் முடமானோரும், விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை அவர்கள் சொந்த ஊருக்குச் சென்று வர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன வளர்ச்சி குன்றியவர்களைப் பொறுத்தமட்டில் ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையினை அரசு விலக்கி ஆணையிட்டுள்ளது. இதனால் அனைத்து மன வளர்ச்சி குன்றியவரும் உதவியாளர் ஒருவருடன் இலவசப் பேருந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 61.82 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.18 கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையான ஊனமுற்றோர்களுக்கு மாதம் ரூ.150/- வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. 1-1-2003 முதல் பராமரிப்பு உதவித் தொகை பயனாளிகளுக்கு பண அஞ்சல் (Money Order) வாயிலாக மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 8,400 கடும் ஊனமுற்ற நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 1.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



2003 ஏப்ரல் 25]

**5.19 மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்**

14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும் வண்ணம் ஆண்டுதோறும் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 15.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.20 சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த 10 உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்துகொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொருக்கும் ரூ.3,000/- உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.21 செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை**

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. இது தற்போது மதுரையிலுள்ள கடுமையான கை, கால் ஊனமுற்ற சிறப்புப் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**5.22 மாநில விருதுகள்**

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு

கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் வழங்கப்படுகின்றன:

* ஊனமுற்றோருக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது.
* அதிக அளவில் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்கியமைக்காக சிறந்த தொழிலதிபர் விருது.
* சிறப்பாகப் பணி செய்தமைக்காக சிறந்த ஊனமுற்ற பணியாளர் விருது.
* ஊனமுற்றவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி மற்றும் பயிற்சி அளித்தமைக்காக சிறந்த ஆசிரியர் விருது.
* ஊனமுற்றோருக்குச் சிறப்பாகச் சேவை புரிந்தமைக்காக சமூகப் பணியாளர் விருது.
* ஊனமுற்றோருக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளித்தமைக்காக சிறந்த மருத்துவர் விருது.
* ஊனமுற்றோர், மகளிர் மற்றும் குழந்தைகள் நலனிற்காக சிறப்பாகச் சேவை செய்தமைக்காக சிறந்த நிறுவனங்கள் விருது.
* பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவர்களுக்கு விருதுகள்.

### 5.23 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

இந்திய அரசின் உதவியுடன் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று பலவகைப்பட்ட ஊனமுற்றவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகிறது. சுமார் 2,000 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள்.

**2003-2004 ஆம் ஆண்டின் இதற்கென ரூ. 35.93 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மாநிலத்தின் இதர 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின்





ஊனத் தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டில் இதற்கென ரூ.2.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.24 மத்திய அரசின் நிதியுதவியுடன் ஊனமுற்றோருக்காகச் செயல்படுத்தப்படும் திட்டம் —

**ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities)**

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசியத் திட்டம் தேனி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.1.78 கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்டங்களில் மறுவாழ்வுப் பணிகள் ஒன்றியம் மற்றும் ஊராட்சியளவில் செயல்படுத்தப்படுகின்றன. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியாளர்கள் 2,200 பேர் மற்றும் 60 பல்நோக்கு மறுவாழ்வுப் பணியாளர்கள் இதற்கென நியமனம் செய்யப்பட்டு மறுவாழ்வுப் பணியில் பயிற்சி முறையே ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்கள் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐம்பது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு மறுவாழ்வு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினை மேற்கண்ட நான்கு மாவட்டங்களில் 2003-2004 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கான தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையில் ரூ. 39.63 இலட்சம் செலவில் மாநில அளவிலான ஊனமுற்றோருக்கான வளம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.

### 5.25 அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளுக்குப் புனர் வாழ்வு அளித்திட 10 அரசு மறுவாழ்வு இல்லங்களை தமிழ்நாடு அரசு கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துள்ளது:

[2003 ஏப்ரல் 25

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | |
|---|---|---|
| 1. | பரனூர் | காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் மாவட்டம் |
| 3. | பர்கூர் | தருமபுரி மாவட்டம் |
| 4. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5. | வின்னப்பள்ளி | ஈரோடு மாவட்டம் |
| 6. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் மாவட்டம் |
| 7. | யா. புதுப்பட்டி | மதுரை மாவட்டம் |
| 8. | மல்லவாடி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 9. | செல்லியம்பட்டி | தருமபுரி மாவட்டம் |
| 10. | தேவியாக்குறிச்சி | சேலம் மாவட்டம் |

ஒவ்வொரு அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்கப்படுகின்றனர். தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாகச் சேர முன்வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் கணவனோ அல்லது மனைவியோ எவரேனும் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் இருவரும் குழந்தைகளுடன் இல்லத்தில் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இல்லங்களில் தங்கும் இல்லவாசிகள் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்தைவிட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி, இவற்றுடன் வெவ்வேறு தொழில்களில் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. திரைப்படம், வண்ணத் தொலைக்காட்சி, நூலகம், விளையாட்டு போன்ற பொழுதுபோக்கு வசதிகளும் அளிக்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 25]

இல்லத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 15/- மதிப்பீட்டிலும், அவர்களைச் சார்ந்திருப்போர் மற்றும் குழந்தைகளுக்கு ரூ.10/- மதிப்பீட்டிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களில் சிறப்பு உணவு கூடுதலாக ரூ.5/- மதிப்பீட்டில் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன் பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக பாய்கள் மற்றும் நுண்ணிய துளை இரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் முழுமையான மருத்துவ வசதிகளுடன் மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்க்கண்டவாறு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு இல்லவாசிகளுக்கு வழங்கப்படுகிறது:-

| வ. எண் | செலவினம் (ஆண்டொன்றுக்கு) | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செயற்கை காலணிகள் மற்றும் செயற்கை கால் அவயவங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | 1000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | 2000/- |
| 3. | பற்பொடி மற்றும் பல்துலக்கும் புருசு வழங்குவதற்கு (வருடமொன்றுக்கு) | 2000/- |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் வாங்கிட | 1200/- |
| 5. | இசைக் கருவிகள் வாங்கிட | 400/- |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ. 500/- வழங்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 25

1-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் இல்லவாசிகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுகள் வழங்கிட ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. உடல் தகுதியுள்ள இல்லவாசிகளுக்கு பாய், துணி நெய்தல், தையல், காலணிகள் உற்பத்திப் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவர்களின் உடல் உழைப்பிற்கு ஏற்றவாறு போதுமான கூலி வழங்கப்படுகிறது. பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் விசைத்தறி ஒன்று இயங்கி வருகிறது.

**2003-2004ஆம் நிதியாண்டிற்கு ரூ. 4.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.26 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்

1945ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சைக்காரர்கள் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்து நீதிமன்றங்கள் மூலமாகத் தண்டிக்கப்பட்டவர்கள், சென்னை மாநகரில் மேல்பாக்கம் ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் பாதுகாப்புடன் ஓராண்டு முதல் மூன்று ஆண்டு வரையிலான தண்டனைக் காலம் வரை அவர்கள் பராமரிக்கப்படுவதற்காக 1954 ஆம் ஆண்டு மார்ச் முதல் நாள் முதல் 950 (ஆண்கள் 770 + பெண்கள் 180) என்று நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்டது. நீதிமன்றங்கள் வாயிலாக தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு நெசவு, தச்சு, மண்பாண்டம் மற்றும் தையல் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், இல்லத்திலுள்ள ஆண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டு, இரண்டு இணை சட்டைகள் மற்றும் கால் சட்டைகளும், பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணை சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகளும் வழங்கப்படுகின்றன. மேலும் பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள்



2003 ஏப்ரல் 25]

தண்டனைக் காலம் முடிந்தவுடன் சேர்ந்த ஊருக்குச் செல்வதற்கு இருப்பூர்தி பயணச்சீட்டு / பேருந்துக் கட்டணங்கள் வழங்கப்படுகின்றன.

**இவ்வில்லத்திற்கு 2003-2004ஆம் ஆண்டிற்கு ரூ. 41.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஊன்முற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகத்தை கணினிமயமாக்குதல் | 2.25 |
| 2 | அரசு காதுகேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளுக்கு குழுக் காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டம் | 12.90 |
| 3 | சென்னை மாவட்ட மறுவாழ்வு மையத்திற்கு தொலைபேசித் தொடர்பு அளிப்பது | 0.24 |
| 4 | ஊனமுற்ற நபர்களுக்கு பல்வேறு தொழிற் பயிற்சி வழங்குதல் | 20.00 |
| 5 | உடல் ஊனமுற்ற நபர்கள் மற்றும் முதுகுத் தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வது. | 5.00 |
| 6 | உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குதல் | 75.00 |
| 7 | உடல் ஊனமுற்றவர்களுக்கு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் | 5.00 |
| 8 | உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோருக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவக்குதல் | [illegible] |
| 9 | தேனி மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள் துவக்குதல். | [illegible] |
| 10 | தேனி மாவட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் மூலம் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக 2 பகல் நேர சிறப்பு காப்பு மையங்கள் தொடங்குதல் | 10.00 |

[2003 ஏப்ரல் 25

## அத்தியாயம்-6

### சமூகப் பாதுகாப்பு

6.1 துயருறும் சூழலில் உள்ள சிறார்களுக்குச் சேவை புரிவதில் தமிழ்நாடு முதல் இடம் வகிக்கிறது. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக முதல் சீர்திருத்த இல்லம் 1887ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் செங்கற்பட்டில் தொடங்கப்பட்டது.

சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இளைஞர் நீதிச் சட்டம், 1986 (மத்திய சட்டம்) 02-10-1987 முதல் அமலாக்கம் செய்யப்பட்டது. குழந்தை உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சாற்றுரையின் அடிப்படையில், மத்திய அரசு 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தை மறு ஆய்வு செய்து, 2000 ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) என்ற புதிய சட்டம் இயற்றி உள்ளது. இப்புதிய சட்டத்தின் விரிவான விதிமுறைகளை தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழில் 14-02-2002-ல் அறிவிக்கை செய்துள்ளது. இச்சட்டத்தினை அமல்படுத்தியதில் தமிழக அரசு முதன்மையாகத் திகழ்கிறது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி தற்போது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய இளைஞர் நலக் குழுமம் குழந்தைகள் நலக் குழுவாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் நீதிமன்றங்கள் இளைஞர் நீதிக் குழுமமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பல்வேறு சிறார்கள் கவனிப்பு நிறுவனங்கள், இச்சட்டத்தின்கீழ் பெயர் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

### (அ) கூர்நோக்கு இல்லங்கள்

தவறிழைத்த சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமம் மூலமாக கூர்நோக்கு இல்லங்களிலும், புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறார்கள் குழந்தைகள் நலக் குழு மூலமாக குழந்தைகள் இல்லங்களிலும் சேர்க்கப்பட்டு வருகின்றனர். அரசு சாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்களுக்கு பராமரிப்பு மானியமாக, அரசு மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ. 200/- வீதம் வழங்குகிறது.



2003 ஏப்ரல் 25]

தற்போது, திருத்திய சட்டத்தின்படி, சட்டத்திற்குப் புறம்பாக (தவறிழைத்த) செயல்பட்ட சிறார்கள் மட்டுமே கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள். தற்போதுள்ள 8 கூர்நோக்கு இல்லங்களின் விவரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர்) | 6 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (மதுரை மற்றும் கோயம்புத்தூர்) | 2 |
| | மொத்தம் | 8 |

**2003-2004 ஆம் ஆண்டிற்கு கூர்நோக்கு இல்லங்களை பராமரிக்க ரூ.1.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### (ஆ) சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் அமையப்பெற்ற 31 சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இல்லங்களில் முறையே குழந்தைகள் நலக் குழு மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் மூலம் அனுமதிக்கப்படும் சிறார்களுக்குப் பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுவர், சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள் வேலூர் (சிறுவர்), சென்னை (சிறுமியர்) | 2 |
| 2 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், சென்னை-13, மல்லிப்புதூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) சிறுமியர்-1 (சென்னை) | 11 |
| 3 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை-21, சென்னை-113, சென்னை-8, சென்னை-13, சென்னை-17, சென்னை-39, சென்னை-10 (2 நிறுவனங்கள்), காந்திகிராம், சென்னை-107, கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 33 |

[2003 ஏப்ரல் 25

திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்கீழ், குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களிலும், இளைஞர் நீதிக் குழுமத்தின் ஆணைப்படி சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதாகக் கருதப்படும் சிறார்கள், சிறப்பு இல்லங்களிலும் அனுமதித்து பராமரிக்கப்படுகின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.200/- என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு, சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ. 5.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(இ) பிற்காப்பு இல்லங்கள்**

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு இல்லம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை | 2 |
| 2 | அரசினர் மகளிர் பிற்காப்பு இல்லம் (வேலூர்) | 1 |
| | மொத்தம் | 3 |

**2003-2004 ஆம் ஆண்டிற்கு பிற்காப்பு இல்லங்களைப் பராமரிக்க ரூ.41.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

பிற்காப்பு நிறுவன இல்லவாசிகளுக்கு, வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சிகள் கற்பிக்கப்படுகின்றன.



2003 ஏப்ரல் 25]

மேலும் இல்லவாசிகளுக்கு பின்வரும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன:—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
2. மின்சாரம் தடைபடாமல் இருப்பதற்காக, அனைத்து இல்லங்களுக்கும் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
3. சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் உள்ள இல்லவாசிகளுக்கு ஆண்டுதோறும் ஒரு இணை உள்ளாடைகள் வழங்கப்படுகின்றன.

**(ஈ) குழந்தைகள் நலக் குழு**

புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற சிறார்களின் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்டு (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) குழந்தை நலக் குழுக்கள் 18 இடங்களில் தோற்றுவிக்கப்பட உள்ளன.

**(உ) இளைஞர் நீதிக் குழுமங்கள்**

சென்னை மாநகரில் 12-வது பெருநகர நீதிமன்றம், தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை இதுவரை விசாரித்து வந்தது. மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர் / உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர் / குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் ஆகியோர் வழக்குகளை விசாரித்து வந்தனர்.

திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் சட்டத்தின்படி 8 இடங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளன (சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர்) இளைஞர் நீதிமன்றத்திற்குப் பதிலாக இந்த இளைஞர் நீதிக் குழுமங்களே சட்டத்திற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் சிறார்களின் வழக்குகளை இனி விசாரிக்கும்.

[2003 ஏப்ரல் 25

**6.2 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் இவர்களுக்கு பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர், பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு, இயக்குநர் அனுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

**(அ) 6 மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:**

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

**(ஆ) மீட்புப் புகலிடங்கள்**

(இ) இச்சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கென 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன.

**(இ) மணமாகாத தாய்மார்கள் இல்லம்**

பாலியல் கொடுமைகளால் பாதிப்புக்குள்ளாகி மகப்பேறடைந்த பெண்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:—

1. அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்ரீசதனா, சென்னை-4.



2003 ஏப்ரல் 25]

2. புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்).

**(ஈ) குறுகிய கால இல்லம்.**

மேற்குறிப்பிட்டவை தவிர, திக்கற்ற மகளிருக்கென சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் "அபய நிலையம்" என்ற இல்லம் இயங்கி வருகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு பராமரிப்புத் தொகையாக ஒரு பெண் இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.200/- வீதம் வழங்கப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு மேற்குறிப்பிட்ட இல்லங்களைப் பராமரிக்க ரூ. 91.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(உ) இடைவழி இல்லம்**

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்கு புகலிடம், கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் விதத்தில் உளுந்தூர்பேட்டையில் 1999-2000 ஆம் ஆண்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஓர் இடைவழி இல்லம் 25 பெண்களைப் பராமரிக்கும் வகையில் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில், இடைவழி இல்லம் பராமரிக்க ரூ. 0.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.3 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்**

சென்னை (2 இடங்கள்), மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர், மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு இடங்களில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு இளைஞர் வழிகாட்டி நிலையங்களைப் பராமரிக்க ரூ. 4.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.4 கல்விப் பயிற்சி**

அனைத்து அரசு சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் / சிறப்பு இல்லங்களில் 8-ம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லத்தில் 10-ம் வகுப்பு வரை கல்வியுடன், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 25

மேலும் சிறார்களின் உயர்கல்வி தொடரும் பொருட்டு, வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில் சார்ந்த பட்டக் கல்வி ஆகியவற்றில் கீழ்க்குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

**பயன்பெறுவோர்-(2002-2003)**

| | |
|---|---|
| மருத்துவ பட்டப் படிப்பு | 1 |
| பொறியியல் பட்டப் படிப்பு | 5 |
| இளங்கலை பட்டப் படிப்பு | 1 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 33 |
| பல்தொழில் நுட்பக் கல்வி | 15 |
| உயர்நிலைக் கல்வி | 50 |

**2003-2004 ஆம் ஆண்டில் உயர் கல்விச் செலவினங்களுக்காக ரூ.6.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.5 குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி**

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் பின் குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியர் மற்றும் தொழில் ஆசிரியர்கள் மூலம் தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, சோப்பு தயாரிப்பு, மெழுகுவர்த்தி தயாரிப்பு, பனியன் தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, இசைக் கருவி பயிற்சி, மாட்டுப் பண்ணை, உலோகப் பணி, தையல் தொழிற் பயிற்சி, விசைத்தறி நெசவு, மின்பற்றவைப்பு, பாய் நெசவு, பூ வேலை, மனையியல் பயிற்சி, வெற்றிட தின்காரை கற்கள் தயாரிப்பு மற்றும் சுகாதாரத் துண்டுகள் தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய கால தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன:

(1) மாவு அரைத்தல்



2003 ஏப்ரல் 25]

(2) தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு

(3) வீடு மற்றும் வர்த்தக மின் அலகு பணி

(4) தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பு

(5) திரை அச்சுக் கலை மற்றும்

(6) கணினி பயிற்சி

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.27.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1 | முழுத் திறன் பெற்ற சிறார்கள் | ரூ.70/-மாதந்தோறும் |
| 2 | பாதி திறன் பெற்ற சிறார்கள் | ரூ.50/-மாதந்தோறும் |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகை சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைச்செலவுக் கணக்கில் மாதந்தோறும் வரவு வைக்கப்படுகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.99 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.6 வெளியேறும் இல்லவாசிகளுக்கான தொழிற் பயிற்சிகள்**

காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு நோக்குடன் ஏழு தொழிற் பிரிவுகளில் இல்ல நீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகளுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆத்தூர், அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில் தானியங்கி இயந்திரங்கள் பழுதுபார்த்தல், பொது இயந்திரங்கள் பழுதுபார்த்தல், மின் இணைப்பு / குழாய் இணைப்பு, திரை அச்சுக்கலை, குளிர்சாதனம் மற்றும் காற்றுப்பதனம் (Fridge and Air-conditioner), டி.டி.பி. (கணினி) மற்றும் மின்பணியாளர் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 145 மாணவர்கள் பயிற்சி முடித்து பயன் அடைந்துள்ளனர்.

[2003 ஏப்ரல் 25

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.2.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் இணைந்த தொழிற் கூடத்தில் சிறுமியர் மற்றும் மகளிருக்கு உள்ளடக்கிகள் (Holdall), தோல்பொருட்கள் தைப்பு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.15.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 6.7 மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3,000/-மும் திருமண நாள் செலவாக ரூ.2,000/-மும் வழங்கப்படுகிறது. இதுவரை 19 பெண் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி, இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும் 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் வீடேகும் இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வீடேகும் பெண்களுக்கு சிறு கடைகள், தையற் கடை மற்றும் கறவை மாடுகள்/ஆடுகள் போன்றவை வைத்து சொந்தமாகத் தொழில் செய்ய ரூ.5,000/- வரை நிதி உதவி அளித்தும், அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் தங்கும் இல்லவாசிகளின் நலனை மேம்படுத்தவும் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 151 முன்னாள் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

3. மேலும் அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் கீழ்க்கண்ட பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க



2003 ஏப்ரல் 25]

உதவுவதற்காக கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

| வ. எண் | தொழிற் பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| | | 3 | 1000 |
| 1 | தச்சு | 2 | 1000 |
| 2 | நெசவு | 3 | 1000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 4 | 500 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 2 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 10 | 2,500 |
| 6 | தையல் | 2 | 1000 |
| 7 | பூத்தையல் | 4 | 1000 |
| 8 | உலோக வேலை | 4 | 1000 |
| 9 | பாய் நெசவு | | |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பிச் சுருள் சுற்றுதல் மற்றும் குழாய் பணிகள் | 2 | 1000 |
| | | 2 | 1000 |
| 11 | மின் பற்றவைப்பு | | |
| 12 | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் | 2 | 2000 |

**2003-2004 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ.0.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 6.8 குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி, குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்ல நீக்கம் செய்யப்பட்டு, குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும்பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம், சிறார்கள் கண்டறியப்பட்டு அவர்கள்

[2003 ஏப்ரல் 25

பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/- வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. ஆண்டொன்றிற்கு 100 சிறார்கள் இதன்மூலம் பயன்பெறுகின்றனர். இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், தாமாகவே பயிலும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.9 சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு சிறார்களுக்கும்/ பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில் சென்னை சென்னை நகரில் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றது.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.0.71 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.10 சிறப்பு பராமரிப்பு மையங்கள்**

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளிக்கும் வகையில் ஒரு சிறப்பு பராமரிப்பு மையம் (சிறுமியர்1) தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 50 சிறுமியர் பயன்பெறுகிறார்கள்.

**2003-2004 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.0.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.11 ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்பாடுகள் தலையிட்டு மையம்**

குழந்தைகள் முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்த வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம்



2003 ஏப்ரல் 25]

அளிப்பதுடன், குழந்தைகளுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.0.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.12 மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடத் திட்டம்**

சாலைகளில் வாழும் சிறார்கள் மற்றும் நடைபாதைகளில் வசிக்கும் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள் அளிக்கும் விதமாக ஒரு திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 8 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் மானிய உதவியுடன் (ரூ.65,500/- ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு) இயங்கி வருகின்றன. ஒவ்வொரு புகலிடத்திலும் 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் ஒரு வேளை உணவு, முறைசாராக் கல்வி, தொழிற் பயிற்சி மற்றும் இதர செலவினங்கள் வழங்கப்படுகின்றன.

கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இரவுப் புகலிடங்கள் செயல்பட்டுவருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 2 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | திண்டுக்கல் | 1 |
| சேலம் | 1 | திருச்சி | 1 |

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் பாதுகாப்பு அளிக்கவும், தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி வழங்கும் வகையில் இப்புகலிடங்கள் அமைந்துள்ளன. 400 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றனர்.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.5.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.13 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (CHILDLINE)**

துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு உதவிபுரியும் நோக்கில் '1098' என்ற தொலைபேசி எண்ணைக் கொண்ட "குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம்" (கட்டணமில்லாத சேவை) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைந்த கூட்டு நிறுவனங்களின் இணையம் மூலம் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநரைத் தலைவராகக்

[2003 ஏப்ரல் 25

கொண்டு மத்திய அரசின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**6.14 காணமற்போன சிறார்களுக்கான தகவல் மையம்**

காணமற்போன சிறுவர்களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவும் வகையில் உயர் தொழில்நுட்ப தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 1.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**6.15 சமூகப் பாதுகாப்புத் துறை இணையதளம்**

இத்துறை செயல்படுத்தும் குழந்தைகள் தொலைபேசி உதவித் திட்டம், காணாமற்போன சிறார்கள் தகவல் மையம், சாலையோரச் சிறார்கள் நலத் திட்டம் மற்றும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து பொது மக்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த இத்துறைக்கென இணையதளம் மார்ச் 2002-ல் துவக்கப்பட்டது. இந்த இணையதளம் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தின் முகவரி:www.tn.nic.in/Social Defence. மேலும் இன்டர்நெட் இணைப்பு ஜனவரி 2002-ல் பெறப்பட்டுள்ளது.

எளிய மற்றும் துரித தகவலுக்காக இயக்குநர் அலுவலகத்தில் மின் அஞ்சல் இயங்கி வருகிறது.

மின் அஞ்சல் முகவரி : dsd @ vsnl. net

**6.16 திட்ட முன்னேற்றம் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு**

சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991-ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு



2003 ஏப்ரல் 25]

நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோரச் சிறார்களுக்கான நலத் திட்டங்களை இப்பிரிவு ஆய்வு செய்து வருகிறது.

**2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 6.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சமூகப் பாதுகாப்புத் துறை இயக்கக மேம்பாட்டிற்காக கணிப்பொறி வாங்குதல்/கணிப்பொறி இயக்குபவரை தொகுப்பு ஊதியத்தில் நியமித்தல். | 1.81 |
| 2. | அரசு குழந்தைகள்/ சிறப்பு / கண்காணிப்பு/ பாதுகாப்பு மற்றும் பிற்காப்பு நிறுவனங்கள் சமையல் பாத்திரங்கள் புதுப்பித்தல். | 3.70 |
| 3. | மதுரை மண்டல துணை இயக்குநர் அலுவலகத்திற்கு நிகரி வசதி ஏற்படுத்துதல். | 0.80 |
| 4 | சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்திற்கு மும்முனை மின்சார இணைப்பு வசதி செய்தல். | 1.45 |
| 5 | எட்டு அரசு குழந்தைகள் இல்லங்களுக்கு பேண்டு வாத்தியக் கருவிகள் வழங்குதல். | 4.00 |
| 6 | மூன்று அரசு நிறுவனங்களிலுள்ள துயில் கூடங்களில் மின் இணைப்பு புதுப்பித்தல் மற்றும் மின் விசிறி வழங்குதல். | 5.00 |
| 7 | தட்டப்பாறை. அரசு குழந்தைகள் இல்லக் குடியிருப்புகளுக்கு தனி மின் இணைப்பு வழங்குதல். | 6.00 |
| 8 | திருநெல்வேலியில் மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக, தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலமாக குழந்தைகள் இல்லம் ஒன்றை ஏற்படுத்துதல். | 16.00 |
| 9 | 5 இல்லங்களில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழிப்பறைகள் கட்டுதல் | 6.24 |
| 10 | இரண்டு அரசினர் குழந்தைகள் இல்லங்களில் உணவு அறைகள் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல். | 5.76 |
| 11 | ஈரோட்டில் உள்ள அரசு குழந்தைகள் இல்லத்தைச் சுற்றி தொடர் கம்பி வேலி அமைத்தல். | 3.33 |

[2003 ஏப்ரல் 25

## அத்தியாயம் - 7

## முதியோர் பாதுகாப்பு

7.1 இத்திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய சீரிய திட்டமாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:—

1. முதியோர் ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் செயல்படுத்தப்படுகிறது)
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1-11-1974 முதல்)
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் (1-6-1975 முதல்)
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981 முதல்)
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986 முதல்)

இத்திட்டத்தில் அனைத்து இனங்களின்கீழ் பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/- வழங்கப்பட்டு வருகிறது.

### 7.2 முதியோர் ஓய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் ஓய்வூதிய (சாதாரணம்)த் திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும், ஆதரிப்பவர்கள் யாரும் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு, 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்பார்வையற்றோர், தொழு நோய், மன நோய், பாரிச வாயு மற்றும் அவயங்கள் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். இதர ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது 65 ஆகும். இத்திட்டத்தில் பயன் பெறுபவர்கள் வருமானம் ஏதும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். பிச்சை எடுப்பது தொழிலாக இருக்கக்கூடாது. 20 வயதிற்கு மேற்பட்ட மகன் அல்லது மகனின் மகன் ஆதரவு அளிக்கக்



2003 ஏப்ரல் 25]

கூடியவராக இருக்கக்கூடாது. ரூ.5,000/- மதிப்பிற்கு மேல் சொத்து இருக்கக்கூடாது. இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 4,72,066 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

முதியோர் ஓய்வூதிய (சாதாரணம்)த் திட்டத்தின்கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த மாத ஓய்வூதியத் தொகை ரூ.200/-ல் மைய அரசின் பங்களிப்பாக மாதம் ரூ.75/- வழங்கப்படுகிறது.

### (ஆ) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

உடல் ஊனம் 50 சதவீதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவதற்குரிய குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைவராகவும், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் உறுப்பினர்களாக அடங்கிய குழு, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து தனியர்களின் ஊனத்தின் தன்மைக்கேற்ப அவர்களுக்கு வயதுவரம்பின்றி ஓய்வூதியம் வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 50,819 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

### (இ) ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம்

முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெற வயது வரம்பு ஏதும் இல்லை. 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற தகுதியுள்ளவர்களாவர். திருமணமாகி கணவனை இழந்து விதவையான, மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதி பெற்றவர்கள் ஆவர். முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

[2003 ஏப்ரல் 25

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 4,85,881 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

**(ஈ) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்**

முதியோர் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய குறைந்த பட்ச வயது 60 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 1,00,133, பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

**(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்**

இத்திட்டம் 30 வயதுக்கு மேல் கணவனால் கைவிடப்பட்டு நீதிமன்றத்தில் விவாகரத்து சான்று பெற்றவர் அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேல் கணவனைப் பிரிந்து வாழும் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டது. 18 வயது நிரம்பிய, வாரிசு இருந்தாலும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற தகுதியுள்ளவர்களாவர். முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்ட மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 76,982 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

**7.3 பிற உதவிகள்**

**(1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு, ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும், ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைக்கு வழங்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 25]

**(2) முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல்**

முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்து பயனாளிகளும் கீழ்க்கண்ட நிலைகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது:—

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 4 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 2 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின்கீழ் 31-03-2003 தேதியில் 11,85,881 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.**

**7.4 அன்னபூர்ணா திட்டம்**

அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் உதவிபெறும் ஆதரவற்ற/மூத்த குடிமக்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு, தமிழ்நாட்டில் உள்ள தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களில் 71,974 பேர் மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளனர்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத்திட்டத்திற்கான பயனீட்டாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். மற்ற உணவுப் பங்கீட்டு அட்டைகளிலிருந்து மாறுபட்ட நிறத்தில் "அன்னபூர்ணா" அட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தயார் செய்யப்பட்டு, பொது விநியோக முறை கடைகளின் மூலம் 10 கிலோ இலவச அரிசி வினியோகிப்பதற்கென பயனீட்டாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்திற்கு 2003-2004ஆம் ஆண்டில் ரூ.7.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

[2003 ஏப்ரல் 25

**7.5 தேசிய குடும்ப நலத் திட்டம்.**

இத்திட்டம் தமிழ்நாட்டில் 2-10-1995 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்குகீழ் வாழும் குடும்பங்களில் குடும்பத் தலைவர் இயற்கை அல்லது விபத்து மூலம் இறந்துவிட்டால் அக்குடும்பத்தின் காப்பாளருக்கு ரூ.10,000/- நிவாரணத் தொகையாக மத்திய அரசு மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் வரும் பயனாளிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ரூ.15,000/- நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது. மேற்காணும் தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.10,000/-மும், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.5,000/-மும் ஆகும். இத்திட்டம் 2002-2003 முதல் மத்திய அரசிடமிருந்து [illegible] அரசு திட்டத்தின்கீழ் மாற்றப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் விபத்து நிவாரணத் திட்டத்திற்கு ரூ.160 கோடியும், நலிந்தோர் நிவாரணத் திட்டத்திற்கு ரூ.15 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

இப்பேரவையில் இந்த ஆண்டு [illegible] திங்களில், மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தமுடைய [illegible] உரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான [illegible] அடிப்பு மிக்க தலைமையின்கீழ், இந்த அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு மிகச் சிறந்தவைகள் அனைத்தும் கிடைக்கச் செய்வதில் வெற்றி பெறும் என வாழ்த்தியுள்ளார். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இத்தரணியிலேயே தமிழகத்தை தலை நிமிரச் செய்து, இவர்களின் தலைமை நமக்கும் கிட்டாதா என பிற மாநிலத்தவர் ஏங்குமளவுக்குச் செய்துவரும் சாதனைகள் தொடர்கின்றன. அச்சாதனைப் பட்டியல்களில் பெரும்பாலானவற்றில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் இடம் பெற்றுள்ளது என்றால் அனைவருக்கும் பெருமை அன்றோ'

நாம் அனைவரும் கடமை, கட்டுப்பாட்டோடு உறுதியோடு, கருத்தொருமித்து அம்மா அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றிட அயராது உழைப்போம் என உறுதி மேற்கொள்வோம்.

185079
V2n,3'03 ρ03.45.1

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.